சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவரகசியம்

கிரியாங்கிசை.

திருவாரூர்

ஸ்ரீலஸ்ரீ

ஒப்பிலாமணிதேசிகரவர்கள்

அருளிச்செய்தது.

இஃது,

சேற்றூர்ச்சமஸ்தான்வித்துவான்

அருணாசலக்கவிராயரால்

பரிசோதித்து

திருச்செங்கோடு

அ. முத்துசாமிக்கோனாரது

“சுப்பராயக்கவுண்டர்” அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூபா-௩.

ஜெய-ஞு ஆனி-மீ கஉ-உ.

[Copyright Registered.]

சென்னை - 600 028

உ

சிவமயம்.

Dr. U. V. S. IYER LIBRARY
22599
MADRAS-90

முகவுரை.

சிவரகசியம் என்பது இலட்சங் கிரந்தமுடைய பரமேதிகாசம் எனப்பெயர்பெறும். இதிகாசம் பாரதராமாயணங்களாம். இதிகாசங்களினும் பரமேதிகாசம் உயர்ந்ததென்பது சொல்லாமே யமையினும், இந்தப்பரமேதிகாசம் பரமபதியாகிய ஸ்ரீசிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தருளிய மகிமையை மேற்கொண்டதென்பது விசேடமாம். காந்தபுராணத்துள் சிவரகசியமென்பதொன்றுளது. அது சிவரகசிய கண்டமெனப்பெயர்பெறும். புராணாந்தர்க்கதமாகியசிவரகசியத்துக்குக்கும், இதிகாசமாகிய சிவரகசியத்துக்கும் பேதமுணராது பெரும்பாலார் மயங்குகின்றனர். ஈண்டியானுணர்த்தப் புகுந்த இதிகாசமாகிய சிவரகசியம் பன்னிரண்டு அமிசங்களை யுடையது. இவற்றுள், மூன்றாவது அமிசமே தமிழில் பத்தியரூபமாக மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கு ஆக்கியோர் சிவானுபூதிச்செல்வராய்த் திருவாரூரி லெழுந்தருளியிருந்த ஸ்ரீ ஒப்பிலாமணி தேசிகரவர்களென்றறிக. இப்பெருந்திருவாளர் - ௪௦௭௦ - பாடலிலமைத்த சிவரகசியப்பெருநூல் இரண்டுகாண்டங்களாக வகுக்கப்பட்டுத் திரியாங்கிசை என்று பிரசித்தியடைந்திருக்கின்றது. இந்தநூல் தஞ்சையில் ஸ்ரீ சரபோஜிமகாராஜா அவர்களது திவ்யசமுகத்தில் அரங்கேற்றப்பட்டது. நிற்க.

இதில், ஸ்ரீ சிவபெருமானது பரமகாரணத்வமும், அவர் ஆன்மாக்களிடத்தில் நடத்தும் பஞ்சகிருத்யப் பிரசங்கமும், அவரை மெய்யடியார்கள் வழிபட்டுய்யு மார்க்கங்களாகிய சரியை கிரியை யோக ஞான விவரணமும், அவற்றுள், சிவபூஜை-சிவனடியார்சேவை-பிரதோஷமகிமை-பஞ்சாக்கரமகிமை - வில்வமகிமை சிவநாமவைபவம்-ஸ்ரீருத்ரமான்மியம்-நமகசமகப் பிரபாவம்-வேதாகமவைபவம்-பக்திவைராக்கியவிசேடம்-மகேசுவரபூஜாபத்ததி-சிவார்ச்சனாவிகிதபுஷ்பவிதி-சிவவிரதம்-ஜெபம்-தபம்-மந்திரம்-கிரியை-பாவனை-தியானம்-தீர்த்தம்-தலம்-மூர்த்தி-திரிபதார்த்தபோத சங்கிரகம் முதலிய பலவிஷயங்களும், இவ்வழிநின்று சிவப்பிரசாத மெய்தினோ ரின்னாரென்பதும், இவைகளை அனுட்டிக்கத் தக்கவர் இவர் அனுட்டிக்கத்தகாதவர் இவர் என்னும்வியவஸ்தையும் அடங்கியுள்ளன.

இவ்வரிய சைவநூலை அச்சிட்டு வெளிப்படுத்துதல் சிவபுண்ணியமெனக்கருதி ஏட்டுப்பிரதிகளுக்கு அடியேன் முயற்சித்து வருகையில், திருநெல்வேலியில் ஸ்ரீ அனவரததானநாதர் வாயில் வித்வானவர்களாகிய தெற்குப்புதுத்தெரு கனந்தங்கிய ம-ா-ா-ஸ்ரீ, நெல்லையப்பன்கவிராஜரவர்கள் நான்கு பிரதிகள் சம்பாதித்துக்கொடுத்தார்கள். அவைகளையும், அடியேனிடத்தில் முன்பேயுள்ள திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறை யாதீனத்துச் சுத்தப்பிரதியையும் வைத்துக்கொண்டு மேற்படி கவிராஜரவர்களது சமுகத்திலேதானே ஒப்புமைநோக்கிப் பரிசோதித்து ஒழுங்குசெய்தேன். இவ்வாறு பரிசோதித்து ஒழுங்கு செய்கையில் மேற்படி தெற்குப் புதுத்தெருவில், கல்வியறி வொழுக்கங்களான் மாட்சிமைதங்கிய ம-ா-ா-ஸ்ரீ, பால்வண்ணமுதலியாரவர்களும், அடியேனோடு கல்விபயின்ற துணைவரும், திருநெல்வேலி இந்துகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, அநந்தகிருஷ்ணகவிராயரவர்களும் தக்கவாறு உதவிசெய்தார்கள்.

பின்னர் இந்த நூலை அச்சிடுவதற்குத் திரவியோபகரணமுண்டாகும் விதமெப்படியென்று யோசித்துக் கொண்டிருக்கையில், உடுமலைப்பேட்டை போர்டுஸ்கூலில் தமிழ்ப்பண்டிதராயிருக்கும் என்னுடைய கனிஷ்ட சகோதரர் சிரஞ்

சிவ கந்தசாமிக்கவிராயரது நன்முயற்சியால் சேலம்ஜில்லா காட்டுப்பாளையம் மிட்டாதார் ம-ா-ா-ஸ்ரீ, இராஜாக்கவுண்டரவர்களும், ஷை ஜில்லா சங்ககிரி மிட்டாதார் ம-ா-ா-ஸ்ரீ, சுப்பராயக்கவுண்டரவர்களும் தக்கவாறுபொருளுதவி செய்தார்கள். இவ்வுதவி கிடைத்தவுடனே அடியேனது குலகுருவாகிய திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிகசுவாமிகள் சந்நிதிக்கு விண்ணப்பஞ்செய்தேன். அன்றியும், அடியேனையும் அடியேனது முன்னோரையும்பின்னோரையும் தமது சமஸ்தானத்துப் பிரதமவித்வான்களாகவைத்து ஆதரிக்கின்ற சேற்றூர்மகாகனந்தங்கிய ஸ்ரீசுந்தரதாசபாண்டிய மகாராஜா அவர்கள சமூகத்துக்குந்தெரியப்படுத்திக் கொண்டேன். இந்த இரண்டிடங்களி லிருந்துங்கூடியவுதவி கிடைத்தது. மேலும், எளியேன் எடுத்துக்கொண்ட நன்முயற்சிகளெல்லாம் இனிதுமுடியும் வண்ணம் அவ்வக்காலங்களில் தக்கவுதவிசெய்துவரும்சிவகாசி ம-ா-ா-ஸ்ரீ, அ. சு. வேலாயுதம்பிள்ளையவர்களும், ஷையூர் ம-ா-ா-ஸ்ரீ, வெண்டர் ஆறுமுகம்பிள்ளையவர்களும், ஷையூர் ம-ா-ா-ஸ்ரீ, சிவஞானவுபாத்தியாயரவர்களும், திருச்செங்கோடு "விவேகதிவாகரப்" பத்திராதிபர் மகா-ா-ா-ஸ்ரீ, அ. முத்துசாமிக்கோனாரவர்களும், தங்கள் தங்களாலியன்றவளவில்பொருளுதவிசெய்தார்கள் இவ்வாறுகிடைத்த பேருதவியால் முன்பு பரிசோதித்து ஒழுங்குசெய்துவைத்த இச்சிவரகசியப் பெருநூலை அச்சிற்பதிப்பித்து முடித்தேன். இங்ஙனம் அச்சிற்பதிப்பித்துவருகின்றது திருவிடைமருதூர் ம-ா-ா-ஸ்ரீ, கோவிந்தசாமி யுபாத்தியாயரவர்களாலேமதுரைச்சில்லா கொத்தமங்கலத்தில் சிவபத்தி குருபத்தி அடியார்பத்திகளிற்சிறந்து விளங்கும் ம-ா-ா-ஸ்ரீ, சி. ரா. ம. அ. இராமன்செட்டியாரவர்கள் தெரிந்து சிவரகசியம் சீக்கிரம்பதிப்பித்து வெளியேற்றினால் பரமசாதுக்களுக்குத் தானஞ்செய்யும்பொருட்டு 70-புத்தகம் விலைக்கு வாங்கிக்கொள்கிறேனென்று ஒரு ஆப்தவாக்கியபாசுரமெழுதியனுப்பினார்கள். இன்னோரன்னவர்களன்றோ சிவபுண்ணியசீலத்திற்சிறந்தவர்கள். நிற்க. சைவசித்தாந்தவுண்மைநூலுணர்ச்சியிற்றெளிந்தபுலவர் பெருமான்களாற்பரிசோதித்து அச்சிற்பதிப்பித்தற்குரிய இந்நூலைக் கல்லாதவரிற்கடையனாகிய அடியேன் சிவத்தொண்டாகக்கருதி அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தினேனாகையால் இதனைப் பேரதிகாரங்களைப் பெரிதுமுணர்ந்த பெரியோர்கள் குறைகூறாரென்க. இந்நூலில்வெளியேறல் விடுபட்டுப்போன பிழைகளையும், அவற்றின்றிருத்தங்களையும் பெரியோர்கள் கருணையோடு தெரிவிப்பார்களாயின், அவர்களாஞ்ஞையைச் சிரமேற்றாங்கி இரண்டாம் பதிப்பிலெல்லாருக்கும் பயன்படும்படி பதிப்பித்து விடுகிறேன்.

இச்சிவரகசிய நூலைப் பிறர்க்குத்தானமாக ஈந்தோருந் தம்மிடத்துச்சேமித்துவைத்துப் பூசித்தோரும், எழுதிவைப்பதற்கு ஏற்ற சாதனமாகிய சிற்சிலகருவி கொடுத்தோரும் சிவலோகத்திற்சென்று பன்னெடுங்காலம் சகலபோகத்துடனுங்கூடி வாழ்ந்திருப்பார்களென்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

இங்ஙனம்,

மு. ரா. ம. அருணாசலக்கவிராயன்.

சருக்க அகராதி

பக்கம்.	சருக்கங்களின்பெயர்.	பாடற்றொகை.
௧௧௪	அபுத்திபூருவசிவபுண்ணியச்சருக்கம்	௨௬
௨௩௫	ஆயுத்தேவச்சருக்கம்	௨௨
௧௯௫	இராசேந்திரச்சருக்கம்	௩௯
௮௮	உருத்திரவீணைவரலாற்றுச்சருக்கம்	௩௪
௬௧௧	உருத்திராத்தியாயவியாக்கியானச்சருக்கம்	௬௮
௧௭௦	உற்பத்திகாரணச்சருக்கம்	௯௨
௫௧	கணபதிகுமரன்றேவியைக்கண்டசருக்கம்...	௧௭
௬௩	கணபதிமறுத்துரைத்தசருக்கம்	௧௭
௬௯	கணபதியுடன்கடவுளுத்தரச்சருக்கம்	௧௫
௬௦	கணபதிவந்தனைச்சருக்கம்	௨௯
௯௭	கத்தரிப்பூவருச்சனைச்சருக்கம்...	௬௧
௧௯	காயத்திரிவரம்பெற்றசருக்கம்	௩௦
௩௮௪	காலாக்கினிச்சருக்கம்	௯௨
௨௬௦	கீர்த்திகேதுச்சருக்கம்	௯௭
௧௪௫	கும்பமுனியுத்தரச்சருக்கம்	௨௭
௩௯௧	கூர்மச்சருக்கம்	௬௯
௧௭௭	சதானந்தச்சருக்கம்	௬௮
௯௨	சத்தியலோகச்சருக்கம்	௨௭
௬௪௭	சத்தியவிரதருத்தரச்சருக்கம்	௫௩
௧௭௪	சனகன் மனைவிசாரச்சருக்கம்	௨௮
௬௬௪	சாம்பவவிரதச்சருக்கம்	௧௨௭
௬௬௦	சாம்பவவிரதவுத்தியாபனச்சருக்கம்	௯௩
௩௭௦	சாரணைசொற்பனபூசைச்சருக்கம்	௬௫
௨௬௫	சித்திரகுத்தர்பிரலாபச்சருக்கம்	௩௧
௩௧௩	சித்திரகேதுநாட்டுச்சருக்கம்	௩௯
௩௨௭	சித்திரகேதுமகிமைச்சருக்கம்	௨௯
௧௨௫	சிவதரன்சமகவரங்கேட்டசருக்கம்	௬௯
௫௩	சிவகணவுத்தரச்சருக்கம்	௨௨
௬௯௪	சிகண்டிவனபாலன்முத்திபெற்றசருக்கம்	௭௮
௯௨	சிவதன்மாதன்மச்சருக்கம்	௩௪
௧௯௬	சிவபத்தர்மகிமைச்சருக்கம்	௨௰
௫௨௮	சிவாகசியமான்மியச்சருக்கம்	௧௨௪
௧௧	சிவரகசியவரலாற்றுச்சருக்கம்...	௬௩
௮௨	சிவனடியார்தரிசனமகிமைச்சருக்கம்	௬௪
௨௯௯	சிவனுமமகிமைச்சருக்கம்	௯௪
௫௯	சுகமுனிச்சருக்கம்	௬௭
௧௯௧	சூரசேனச்சருக்கம்	௨௨
௩௩௧	சோடன்வந்தசருக்கம்	௬௧
௭௭	சைவர்பரிகலப்பிரசாதமகிமைச்சருக்கம்	௩௮
௨௫௫	ஞானவாலனுற்பத்திச்சருக்கம்	௫௦
௨௭௯	ஞானவாலன்கல்யாணச்சருக்கம்	௫௯
௨௭௩	ஞானவாலன்கல்யாணகிராசைச்சருக்கம்	௩௮
௯௭	ஞானவாலன்வயிரீக்கியச்சருக்கம்	௯௫

பக்கம்.	சருக்கங்களின்பெயர்.	பாடற்றொகை.
௧௪௯	தக்கன்மகமழித்தசருக்கம்	௪௧
௧௪௨	தக்கன்வேள்விச்சருக்கம்	௨௭
௭௧	தண்டிகணுதிபன்வந்தனைச்சருக்கம்	௩௩
௪௫	தாருகன்கதையுரைத்தசருக்கம்	௩௫
௱௨	தேவர்முறையிசெருக்கம்	௨௩
௩௰	தேவர்முனிவர்காட்சிச்சருக்கம்	௰
௭௫	தேவிசிவனைப்பொருந்தினசருக்கம்	௧௫
௩௪	தேவிநாட்டியம்பார்த்தசருக்கம்	௨௪
௩௩	தேவிமேருகயிலையுற்றசருக்கம்	௨௩
௨௮	தேவிமேருவரையைச்சார்ந்தசருக்கம்	௧௬
௨௫	தேவியிமயம்விட்டெழுந்தருளியசருக்கம்	௨௯
௫௩	தேவியுடன்குமாரருத்தரச்சருக்கம்	௨௪
௨௬௧	நதிகள்வரம்பெற்றசருக்கம்	௪௪
௩௮	நந்திகணங்களாலோசனைச்சருக்கம்	௧௪
௱௪	நந்திகேசுரர்தேவர்க்கருள்புரிசருக்கம்	௧௮
௧௧௨	நந்திகேசுரர்மனுக்குப்புத்திசொன்னசருக்கம்	௨௧
௨௨௪	நாரதருபதேசச்சருக்கம்	௧௫
௫	நைமிசாரணியச்சருக்கம்	௫௧
௱௭	பசாசுமோசனச்சருக்கம்	௪௩
௧[illegible]	பலிபீடமென்னமகிமைச்சருக்கம்	௨௪
௩௫௬	பற்மாவதிச்சருக்கம்	௨௩
௧௧௯	பாக்கியதேவதைச்சருக்கம்	௨௧
௧	பாயிரம்	௧
௨௨௬	பாவநாசச்சருக்கம்	௪௬
௨௩௧	பாவரூபமோசனச்சருக்கம்	௩௪
௧௩௪	பாவலிங்கச்சருக்கம்	௬௪
௪௬௬	பிரவஞ்சவுற்பத்திச்சருக்கம்	௬௧
௩௬௫	பிருங்கியுத்தரச்சருக்கம்	௪௬
௪௮௪	புலோமைச்சருக்கம்	௬௯
௨௱௭	பூசாயோக்கியவனச்சருக்கம்	௨௪
௩௱௮	பெண்மணிசிவபூசைச்சருக்கம்	௪௧
௩௪௯	பெண்மணியுபதேசம்பெற்றசருக்கம்	௪௮
௨௮௮	பெண்மணிவயிராக்கியச்சருக்கம்	௩௭
௩௨௩	மந்திரமூர்த்திகள்பூசைச்சருக்கம்	௨௰
௩௧௮	மந்திரமூர்த்திச்சருக்கம்	௩௰
௨௧௭	மரலியுத்தரச்சருக்கம்	௨௩
௩௯௮	மன்மதவதைச்சருக்கம்	௫௩
௫௱௪	மாரதன்பூசைச்சருக்கம்	௯௰
௯௫	மானதபூசைச்சருக்கம்	௧௪
௧௯௮	மிருலைச்சைவநெறிவிளக்கச்சருக்கம்	௨௧
௧௯	மேருச்சருக்கம்	௪௫
௧௫௩	வசிட்டருத்தரச்சருக்கம்	௪௪
௫௧௪	வருணச்சருக்கம்	௯௪

பக்கம்.	சருக்கங்களின்பெயர்.	பாடற்றொகை.
௬௱௪	வருணராசச்சருக்கம்	௩௬
௧௯௰	வாரீசலோசனைச்சருக்கம்	௩௰
௪௫௭	வானரங்கள்பூசைச்சருக்கம்	௬௰
௩௪௩	விசுவாசிபூசைச்சருக்கம்	௪௮
௨௯௪	1விசுவாவசுச்சருக்கம்	௩௮
௩௭௬	2விசுவாவசுச்சருக்கம்	௬௯
௬௭	விசையைசெயையுத்தரச்சருக்கம்	௩௬
௩௩௭	விட்டுணுவந்தனைச்சருக்கம்	௫௪
௨௪௯	விந்தமன்னவன்சருக்கம்	௨௩
௪௪௯	வியாக்கிரச்சருக்கம்	௬௨
௪௭௪	வில்வவனச்சருக்கம்	௭௮
௨௱	வீரசித்துச்சருக்கம்	௪௩
௨௧௧	வீரசித்துவிரத்தவயிராக்கியச்சருக்கம்	௪௯
௨௨௧	வீரசித்துவுற்பத்திச்சருக்கம்	௨௪
௧௮௫	வீரேசுரச்சருக்கம்	௫௨
௧௩௧	வேதபாதச்சருக்கம்	௨௰

நைமிசாரணியச்சருக்கத்துடன் சருக்கம்-௧௦௧-க்குத்
திருவிருத்தம். ஆ ௪௦௮௯-காப்பு-௧-ஆ ௪௦௯௦.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

கையொப்பஞ்செய்தகனவான்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர்த்தாலூக்கா குன்னூர்

ம-ா-ா-ஸ்ரீ, வித்துவான் குமாரசுவாமிமுதலியாரவர்கள்.

சிவகாசி.

,, சப்ரிஜிஸ்தரார் கணபதி அய்யரவர்கள்.

,, ரிவினியூஇனிஸ்பெக்டர் சுப்பிரமணிய அய்யரவர்கள்.

,, கிராமமுனிசீபு சண்முகசுந்தரமுதலியாரவர்கள்.

,, போஸ்டுமாஸ்டர் சுப்பிரமணியபிள்ளையவர்கள்.

,, பிரமநாயகம்பிள்ளையவர்கள்.

,, வீரபத்திரபிள்ளையவர்கள்.

,, அ. குழந்தைவேலும்பிள்ளையவர்கள்.

,, மீ. வேலாயுதம்பிள்ளையவர்கள்.

,, செகநாத இராஜா அவர்கள்.

,, புட்பவனம்பிள்ளையவர்கள்.

கோயமுத்தூர்ஜில்லா புரவிபாளையம ஜமீன்தார

,, செகமண்டலாதிபதி சந்திரகோப்பணமன்றாடியாரவர்கள்,

ஷை ஜில்லா மாதம்பட்டி

,, ஆண்டியப்பக் கவுண்டரவர்கள்.

பாலக்காடு முனிசிபல் சேர்மேன்

,, சின்னச்சாமிபிள்ளையவர்கள்.

நத்தம்பட்டி.

,, கணக்கு சோமசுந்தரம்பிள்ளையவர்கள்.

அருணாசலபுரம்.

,, பொன்னுச்சாமிபிள்ளையவர்கள்.

எட்டயபுரம்.

,, க. ஆண்டியப்பபிள்ளையவர்கள்.

,, ,, இராக்கப்பபிள்ளையவர்கள்.

குருவிகுளம்.

,, பழனிச்சாமிநாயுடு அவர்கள்.

உடுமலைப்பேட்டை.

,, வைக்கீல் பழனியாண்டிப்பிள்ளையவர்கள்.

,, ,, இராமசாமிப்பிள்ளையவர்கள்.

,, ,, மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்.

,, ,, வேங்கடசுப்பய்யரவர்கள்.

,, சீனிவாசய்யரவர்கள்.

,, சோழியக்கவுண்டரவர்கள்.

,, குப்பாண்டக்கவுண்டரவர்கள்.

,, கந்தசாமிசெட்டியாரவர்கள்.

தூத்துக்குடி.

,, ரா. ஆ. ப. வ. ஏஜண்டு பாடலிலிங்கம்பிள்ளையவர்கள்

திருச்செங்கோடு.

,, மாணிக்கவேலுவாரவர்கள்.

,, அப்பாவுசெட்டியாரவர்கள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவாரகசியம்

த்ரியாங்கிஸ்ச

முதற்காண்டம்.

பாயிரம்.

விநாயகர்வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னிமயப்பிடியானைதருமானைமுகத்தானைப்பொருவிலானைச்
சொன்னயஞ்சேர்தாரகத்தினுருவானையன்பருளச்சோதியானைச்
சென்னியிலாறுடையானைத்தந்தையெனப்படைத்தானைத்திகழோரா.
மன்னுமுகன்றுணையானைவல்லபையின்பத்தானைவணங்கிவாழ்வாம்.

பரசிவம்.

உலகனைத்துமுளனாகியிலனாகியுண்மையாயுலப்பிலாஞ
யலகிலுயிர்க்குயிராகியற்புதமாயாரமுதாயறிவுற்றோர்பா
ளிலவியமர்ந்தனுபூதிநெறிவிளங்கவிளங்கவவர்நேயத்துள்ளே [ம்.
குலவியபேரொளியாகுங்கோமானைக்குணக்குன்றைக்குறித்துவாழ்வா

நடேசர்.

அருமறையதனுலளப்பதற்கரிதாயகண்டிதானந்தநல்வடிவாய்
மருவுபேரொளியாய்மதிப்பதொன்றாகாமனமணிவிளக்கதாய்மயறீர்ந்
தருகுமெய்யன்பருளநடம்புரிந்தேயொழிவறுதெங்கணுமேவித்
தெருளதாயருளம்பலத்தினின்றடுஞ்சேவடிசென்னிசேர்த்திடுவாம். ()

உமையவள்.

உருவமாயருவாயுணர்வுமாயொழியாதொளிருநல்வியோமமுமாகி
மருவுமாமாயைபரையுமாயுலகின்மதிக்குமெய்ப்பொருளுமாயகண்ட
சொரூபமாயொன்றாயறிவுற்றொளிருஞ்சுயம்பிரகாசமாயடியார்
கருவுறுதருளாற்காத்தருள்புரியுங்கவுரிதன்கருணையேபணிவாம். (௩)

விநாயகர்.

பவளவரைச்சிகரமதிற்பயிறருவெண்பிறைபோலப்பணைகோடோ
ங்கத், தவழருவியெனக்கன்னமததாரைபொழிந்திழியத்தாமமோலி, யு

வமையில்சூரியருதித்தாலெனவொளிரவீற்றிருக்குமொருசெஞ்சோதிக்
கவளயானையின்முகத்துக்கணபதிசேவடிக்கமலங்கருத்துட்கொள்வாம்.

வேறு-சுப்பிரமணியர்.

அரவணையவனுமன்னவூர்தியுமறிகிலாத
பரவரும்பொருட்குவேதப்பழம்பொருள்பகர்ந்தகோமான்
குரவணிகுழலாள்வள்ளிக்கொடிபடர்குவவுத்திண்டோட்
சரவணபவன்பொற்பாததாமரைதலைமேற்கொள்வாம். (௫)

வேறு-திருநந்திதேவர்.

சிலையுடைச்சிலையெம்பிரான்றிகழ்கயிலைக்கண்
ணிலைமைபெற்றிடுங்கணங்களின்முதன்மையுநிகரில்
புலமைபெற்றிடுஞ்சைவதேசிகர்க்கெலாம்பொருவி
றலைமையும்பெற்றநந்திதாடலைமிசைக்கொள்வாம். (௬)

தண்டியடிகள்.

பேதையாகியபிள்ளைநம்பிள்ளைசெய்பூசை
யீதையேதெனவியம்புகேமெனமனத்தெண்ணான்
கோதையேபுரிகுணத்தொடுங்குடப்பயமுடைத்த
தாதைதாளறத்தண்டித்ததண்டிதாள்பணிவாம். (௭)

திருஞானசம்பந்தர்.

குவிகையேறியமணிமுடிப்பாண்டியன்கூன்போய்க்
கவிகையேறுசிங்காதனத்தேறிடக்கழுவி
லவிகையேறுறவமணர்களேறவெண்டாளச்
சிவிகையேறியகவிஞன்றாள்சென்னியிற்சேர்ப்பாம். (௮)

வாகீசர்.

கதிருலாவியசடைதொறுங்காலொன்றுதூக்கி
யதிரவீசிநின்றாடியதாண்டவத்தவர்க்கே
மதுரமாதிருத்தாண்டகச்செந்தமிழ்வகுத்த
சதுரனாவினுக்கரையன்றன்சரணமேசரணம். (௯)

திருநாவலூரர்.

சேனைமேற்கொண்டுசேரனார்தூசிமுன்செல்ல
வானைமேற்கொண்டதேவர்கள்வணங்கிடக்கயிலைக்
கானைமேற்கொண்டுசென்றவனமுதமாங்கவிதைச்
சோனைமேற்கொண்டசுந்தரமுகில்பதந்தொழுவாம். (௧௦)

திருவாதவூரர்.

எம்பிரான்வெள்ளையிபநடத்திந்திரன்முதலோ
ரம்பிரானெனத்திரிபுரத்தலத்தேர்நடத்து

நம்பிரானரிப்பரிநடத்திடத்தமிழ்நடத்துந்
தம்பிரான்றிருவாதவூரான்சரண்சரணம். (கக)

வேறு-அறுபத்துமூவர்.

குழிதரும்பவப்பவ்வத்தைக்குருலிங்கசங்கமத்தின்
மொழிதிடபத்தியாகுமுதியநாவாயினீங்கிச்
சுழிபெறுங்கங்கைவேணிச்சோதிவாழ்கயிலைமேவி
வழிபடுமொன்பதிற்றேழன்பரைவணங்கிவாழ்வாம். (கஉ)

திரிகாலத்திருக்கூட்டத்தார்.

சென்றகாலத்திற்பத்திசெய்துமுத்தியினைச்சேர்ந்தோர்
நின்றிடுநிகழ்காலத்தினிமலனுக்கன்புசெய்வார்
துன்றிடுமெதிர்காலத்திற்சோதிபாற்றொண்டுபூண்போர்
மன்றலார்கமலத்தாள்கண்மனத்துஞ்சென்னியிலுங்கொள்வாம். (கங)

கலைமகள்.

நான்முகனுவின்மேவிநான்மறைவடிவாயின்னந்
தானரும்பொருள்கடோத்தடக்கையின்முறையுந்தாங்கித்
தேனலர்கமலப்போதிற்செழித்துவீற்றிருக்குமம்மை
கீன்மலர்போற்றிநாளுங்கருத்துறவணக்கஞ்செய்வாம். (கச)

வாழ்த்து.

வானவர்வாழ்கயாகமறையவர்வாழ்கவானுந்
தானமாமழையுமன்னருஞ்சனங்களுந்தழைந்துவாழ்கத்
தேனலர்கொன்றைவேணிச்சிவபிரான்கருணைவாழ்க
வானநல்லறங்கள்வாழ்கவரசரும்வாழ்கவன்றே. (கரு)

அவையடக்கம்.

கைக்கிரிபோலவந்தகரியுரித்தாடல்கொண்ட
திக்குடையானைப்போற்றுஞ்சிவரகசியமியான்செப்பன்
மைக்கடலுடனேமற்றுமாங்கடல்கடந்துசென்றே
நெய்க்கடல்பருகப்போஞ்சிற்றெறும்பினைநிகராமன்றே. (ககூ)

கூற்றுதைத்தவன்மேலன்புகொண்டோர்குழகன்றன்சீர்
போற்றுமென்கவியிற்குற்றம்போக்கியேபுகழ்ந்துகொள்வா
ரேற்றதோர்கலங்கற்றெண்ணீரெய்திலுமதனைத்தேற்றிச்
சாற்றியபரிவிற்கொள்வார்தாகமுற்றோர்கடாமே. (கஎ)

மானெடுத்தவரைப்போற்றிவரும்பெரியோர்பெம்மான்சீ
ர்யானெடுத்துரைத்தசெய்யுளிழிபுதீர்த்தினிதுகொள்வார்
கானெடுத்ததனிலுற்றகடியதேனீயும்போக்கித்
தேனெடுத்தருந்துவாரேதேடியிவ்வுலகுளோரே. (கஅ)

MAHAMAHOPADHYAYA
Dr. U.V.S. IYER LIBRARY

அவ்வெறிசோதிவானோரமுதுணவிடமுண்டார்க்கென்
சொல்லெறிசொல்லதேனுஞ்சுந்தரமாகக்கொள்வார்
வில்லெறிவேடன்வில்லமெறிந்திடமேன்மைசெய்தார்
கல்லெறிசாக்கியர்க்குங்கருணையேபுரிந்தாரன்றே. (௧௯)

நொடியனவானைத்தேருநுண்ணறிவொன்றுமில்லேன்
முடிவரும்பொருளைச்சற்றேமுன்னினன்மொழிந்துவைத்தேன்
படியுளகாலமெல்லாம்பரமனுக்கன்பரான
வடியர்பாராட்டுவாரென்றாசையாலடியனேனே. (௨௰)

நூற்பயன்.

நூற்பெயர்முதனூற்பேரேபுனைந்ததுநுவலுமுன்னூற்
பாற்படுபொருளுஞ்சைவப்பாகுபாடுணர்ந்துநோக்கன்
மேற்பரம்பொருளாமுக்கண்வித்தகன்சரிதம்வேட்கை
யேற்பொடுகேட்போர்பேறுமுத்திவீட்டின்பந்தானே. (௨௧)

வேறு-நூலியற்றியகாலமுதலியன.

திருமருவுகும்பகோணத்தில்வாழுஞ் செல்வமிகுபலர்சனங்கள்சிவன்பாலன்பர், பொருவில்சிவரகசியபுராணமாகும் பொருந்தும்வடமொழிதமிழாற்புனைவாயென்னத், தருமமிகுதவவணையாஞ்சைவன்றியாகர் சன்னிதியில்வரிசைபெறுந்தலைமைபூண்டோ, னிருமைநல்காரூர்ப்பிறந்தோனாரூரன்சேயிசைகொளொப்பிலாமணிதானிசைத்தவாறே. (௨௨)

மன்னர்புகழ்சரபோசிமகாராசராசன் மாநிலங்காத்திடுநாளிற்றஞ்சைமாநகரிற், றுன்னுமேவிளம்பியுற்றமகரமதியைந்திற்சோதிசிவரகசியமொப்பிலாமணிசொற்றமிழை, யிந்நிலத்தினரங்கேறச்செய்தனர்பொன்மாறையெழில்சேருந்தீராதவினைதீர்த்தான்பாகைப், புன்னைவனநாதனிவர்சைவநெறிவளர்க்கும்பூபாலரவனியெங்கும்புகழினிதோங்கிடவே

திருச்சிற்றம்பலம்.

பாயிரமுற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நைமிசாரணியச்சருக்கம்.

வேறு.

அற்புதனமலனகண்டிதனனகனனுபமனசலனுமந்தன், றற்பரன் சாந்தன்சச்சிதானந்தன்சங்கரன்றத்துவாதீதன், சொற்பதங்கடந்துநின்றருள்சோதிதொண்டனேனென்று யர்துடைத்தாளுஞ், சிற்பரம்பொருளாஞ்சிவனவன் கமலச்சேவடிசென்னிசேர்த்திடுவோம். (க)

அத்திரிமரீசியங்கிராவசிட்டன்கவுசிகனுக்கினவற்கி,
பத்திசேர்வாமதேவன்குச்சரன்விபாண்டகன்பராசரன்கபிலன்
சித்திபெற்றிடுமார்க்கண்டன்பார்கவன்றதீசியேகாசிபன்பிருகு
புத்திசேர்வைசம்பாயனன்சுசீலன்புலத்தியனகத்தியன்பூதன். (உ)

கங்கைவேணியனேர்பயில்வனமிருகசிருங்கனங்கார்த்தியாயனன்சீர்ப்
பிங்கிருடிப்பேர்முனிவன்வான்மீகன்பெருமைசேராதித்தவன்மன்
றுங்கனுகங்கன்கிஞ்சுகப்பிரியன்றுந்துபிசிலாதரன்சுமுகன்
சங்கரன்றருமன்சத்திசாண்டில்யனுயுட்டிமான்சதானந்தன். (ங)

கண்ணுவன்சுமந்துகவுதமன்கற்கன்காருத்தன்காலபத்திரன்மெய்ப்
புண்ணியன்போதாயனன்றுருவாசன்புகழ்பெறுமுரோமசனிடபன்
பண்ணுறுதவத்துமுற்கலன்சுகற்பத்திரன்கிரீடிபாண்டவியன்
றண்ணளிபெறுமாண்டவிவிசாலாக்கன்சவுனகன்முதலியதவத்தோர். ( )

முப்புரிநூலர்குண்டிகைக்கரத்தர்மோனமுத்திரையரஞ்செழுத்தே
வைப்பெனுமனத்தார்பூதிகண்டிகையும்வயங்கியநயங்கொளும்வடிவ
ரிப்புவனத்திலுயிரனைத்துந்தம்மின்னுயிரென்னவேபேணுந்
தப்பிலாநெறியன்புடையவந்தணராசாரசீலத்தர்மெய்த்தவத்தோர்.

குடைகொளுங்கரத்தர்செந்துவின் குலங்கள்குவலயத்திறுமெனக்குந்து, நடைகொளும்பதத்தரைவகையிடத்து நான்றிடுமுரோமத்தர்நாற்பட், டுடைகொளுமருங்குலுடையர் பொற்புரிபோலொளிர்தரநீண்டசெங்குஞ்சிச், சடைகொளுமுடியர்தத்துவஞானத்தன்மையர்நன்மையாதரிப்பார். (சு)

அருந்தவரினையாரெண்ணுயிர்வரனைவருமொருங்குடன்கூடி
யிருந்துநாங்கருமமிதயமொத்திபற்றவேற்றதாயியல்புள தாகத்
திருந்திடும்பலங்கள்சாகமூலாதிசேர்ந்திடுந்தானமதாகி
வருந்திடாதிருந்தேநியமமாற்றுதற்குவாய்ந்திடுந்தலமெவனென்றார் ( )

சிந்தனையின்றியாஞ்சிவபூசைசெய்திடச்செபந்தவமோம, நைந்திடாதியற்றவுபகரணங்களுமேயிசைந்திடுநலத்தான், முந்தியதலமெ

ன்றெம்க்குறல்வேண்டுமுழு துலகளித்தருண்முதலர், மெந்தைபாற்செ
ன்றேயாங்கவன்பணித்தவிடத்தினிலுறைதுமென் றெழுந்தார். (அ)

அரந்தைவெம்பிறவிப்பிணிதணிப்பதற்கோரவுடதமானநீறணிந்தார்
புரந்தமந்திரமாமஞ்செழுத்துரைத்தார்புனைமணிக்கண்டிகைபூண்டார்
நிரந்தரம்பயின்றயோகசாதனையானீடியவிசும்பெல்லைநேர்போய்
வரந்தரும்பிரமன்மன்னிவீற்றிருக்குமனோவதிதன்னில்வந்தடைந்தார்.

தேவர்முப்பத்துமூவர்கணிருவர்சித்தர்வித்தியாதரரியக்கர்
கோவியலிருநான்கெனுந்திசைப்பாலர்குலவியபிரமரோர்பதின்மர்
நாவியல்சுருதித்தும்புருவுடனேநாரதாதியர்புடைசூழப்
பாவியல்வேதம்பாடவெண்கலைகையாபகாதருளித்திருந்தான். (கo)

ஒருகையிற்கரகமொருகையிற்றண்டமுபயமாந்திருக்கரமதனிற்
றருமபிர்தழைப்பவாதமோடபயந்தயங்கவேபிரமமாம்பொருளைப்
பரிவுடனுன்னிப்பதுமவாசனத்திற்பண்புடன்வாணிதன்னோடுந்
திருமிகவிருந்தபிதாவெனும்பெரியதேவனைமுனமொன்றுசேர்ந்தனரால்.

கண்டுகண்களித்தாரெட்டிரூப்பெடைதாங் கருத்துறப்பப்புவியுறவே,
தண்டெனவிழுந்தாரெழுந்துசூதர்ந்தாரநீட்டியிடங்கைகள்கொட்டி,
மண்டுபேரன்புபுறம்பொழிந்தெனமலர்க்கணீர்பனிப்பமெய்யரும்பு
த்,தொண்டுறுமன்பாலுருகிவாய்குழறசசுருதிமந்திரங்கொடுதுதித்தார்.

வேறு

வானவர்முதுவாபோற்றிமண்பொறுத்தந்தைபோற்றி
ஞானமாமுதல்வாபோற்றிநான்மறைக்கிறைவபோற்றி
தேனலர்கமலப்போன்றுதிருவருட்செந்தேன்பொங்கு
மானனநான்குகொண்டவையனேபோற்றிபோற்றி. [கங]

ஐயனேபோற்றியெங்களப்பனேபோற்றிவேத
மெய்யனேபோற்றிமேலாம்விமலனேபோற்றிதாயே
முய்யவேவரந்தந்தாளுமொருதனிமுதலேபோற்றி
செய்யனேபோற்றிதேவதேவனேபோற்றிபோற்றி. [கச]

என்றடிபணிந்துநிற்குமிருவினைப்பகுதியோர்ந்து
நன்றறிவிரதமெய்ந்நால்மறைமுனிவர்தம்மை
மன்றலார்கமலப்போதின்வானவன்மகிழ்ந்துநோக்கித்
துன்றியதவத்தீர்வந்தகாரியஞ்சொன்மினென்றான்.

ஓங்குநாற்பொருளுநல்குமொருவனுன்னடிமைபூண்ட
யாங்கள்சிந்தனைவேறின்றியிருந்தருந்தவங்களாற்றத்
தேங்குழலுமையாள்பாகர்க்கினிமையாய்ச்சிறந்தயாகம்
பாங்குடன்புரியப்பூசைப்பயன்றருந்தலமதாக. [கசு]

புடவியினிடத்தின்மிக்கபுண்ணியபூமியான
வடவியொன்றருளாற்கற்பித்தருள்செய்வாயென்னலோடு
மடலவிழ்கமலப்போதில்வானவன்றருப்பையொன்றுற்
றடமிகுமாழியாகச்சமைத்தனன்சாற்றுகின்றான். (கஎ)

இங்கிதன்பின்னரியாருமேகியேயிதுசென்றுற்ற
வங்கணீர்புகுந்துமேவியாச்சிரமங்கள்செய்தே
தங்குவீர்சைவநீதிதவறிடாதென்றுசாற்றித்
துங்கமாந்தருப்பைநேமிதூண்டினனன்சுருதிவல்லான். (கஅ)

பூமியில்விசிட்டமானபுனிதமாமிமயத்தென்பா
னேமியுற்றதுபின்னாந்தநேமியாம்பேராலோங்குங்
காமர்பூவனஞ்சிறந்தகாதல்சேர்முனிவர்யாருந்
தாமகிழ்ந்தன்புகூர்ந்துசார்ந்தனர்தவங்கள்செய்வார். (கசு)

சத்திரசாலையோமசாலைதேபூசைசெய்யுஞ்
சித்திரசாலைமேலாஞ்செபங்கள்செய்திருக்குஞ்சாலை
புத்திரர்பவுத்திராதிபொருந்தவீற்றிருக்குஞ்சாலை
நித்தராகமம்வேதங்கணிகழ்த்திடுங்கல்விச்சாலை. (உ0)

பன்னியர்மேவியேமுப்பத்திரண்டறம்வளர்க்குந்
தன்னிகரில்லாச்செல்வர்தருமறச்சாலையோடு
மன்னுமிப்பன்னசாலைவகுத்தனராங்கிருந்தார்
துன்னியவளங்கடம்மையாவராற்சொல்லலாமே. (உக)

திங்கண்மும்மாரிபெய்யத்திருந்தியசுதிதடாகம்
பொங்கியபுனல்பெற்றோங்கப்பூமரத்துடவையாவு
மங்களமாகுந்தெய்வவாசபுட்பாதிமல்கத்
தங்கியசாகமூலபலாதிகடழைத்தவன்றே. (உஉ)

கடிகையைந்தெனுவெழுந்துகடவுளைத்தியானஞ்செய்வார்
விடியலிற்றடாகம்புக்குமிக்கநீர்படிவார்மேலாம்
பொடிகமழ்பூதிமேனிபொலிதரப்பூசுவார்க
ளடிபணிந்தருணன்சாரவருக்கியமளிக்கின்றாரால். (உங)

கண்டிகைமாலைமார்பிற்கவினுறமேனியெங்கும்
புண்டரந்திகழமேலாம்புனிதமாமுருத்திராக்க
குண்டலங்காதிலோங்கக்கொடுவிளைபுறந்தந்தோட
வண்டநாயகரைப்பூசையாற்றுவார்போற்றுவாரால். (உச)

அதிகவோமங்கள்செய்வாரதிதிகடமைக்கொண்டேகிப்
புதியவாசனத்தில்வைப்பார்பூசனைபுரிதல்செய்வார்
மதுரமாமம்பலவர்க்கதிதின்மன்னுபோசனஞ்செய்விப்பார்
கதிதருசிவபுராணகாவியம்பயிற்றுவாரே, (உரு)

வேறு.

பூசைத்தலம்புகுந்தேதிருமெழுக்காற்புதுக்கிடுவார்
வாசத்துறுதிருமஞ்சனம்வடித்தேகொடுவருவார்
நேசத்தொடுபலபுட்பமுநிரைத்தேதெரிந்திடுவார்
தேசுற்றிடுதிருமேனியின்பூச்சன்பொடுசேர்ப்பார். (௨௬)

தேனெய்திலதயிலம்பலகனிச்சாறுசெவ்விளநீ
ரானல்குமஞ்சுடனேயபிடேகப்பொருளமைப்பார்
வானெய்துமின்னமுதேயெனநைவேத்தியம்வகுப்பார்
பானெய்யெனக்கலந்தோர்க்குபசாரம்பலபகுப்பார். (௨௭)

பத்திப்பொலிவொடுபூசையிற்பதுமாசனத்திருப்பார்
முத்திக்கிசைதருமாகமமூவொன்பதொன்றுரைக்குஞ்
சுத்திக்கியல்விதியாலைந்துசுத்தித்திறம்புரிவார்
சத்திக்கிறைசிவலிங்கவர்ச்சனைமந்திரந்தெரிவார். (௨௮)

நாத்தாம்புகழ்தருநித்தியநைமித்தியபூசை
பூத்தாமகத்துள்ளுஞ்செய்துபுறத்துஞ்செய்துபணிந்தே
காத்தாடிமுன்னின்றாடிக்கண்ணீராடிக்கைகொட்டிக்
கூத்தாடுவரேத்தாடுவர்குழைந்தாடுவர்விழைந்தே. [௨௯]

அட்டோத்தரசதகஞ்சகத்திரநாமவர்ச்சனைபூந்
தட்டார்மலர்கொடுபூசனைசவுராதிசண்டாந்த
முட்டாதருச்சனையேசெய்வர்முத்தீவளர்த்திடுவா
ரெட்டாச்சிவமனுவக்கரமிலக்கம்மிசைத்திடுவார். [௩0]

வரதன்சிவவிரதம்பலமனத்தன்பொடுபுரிவார்
சரதம்பெறும்யோகம்பலதாமின்பொடுபயில்வார்
பரதந்தருசபைநாடகப்பரமன்றிருப்பாவித்
திரதந்தருமனத்தோடுமுற்றிருப்பார்தவவிருப்பார். [௩௧]

கஞ்சாசனம்யோகாசனம்வீராசனங்கலங்கா
வஞ்சாசனத்திருப்பாருமையரனார்திருவுருவம்
நெஞ்சாசனத்திருத்தித்தொழுநினைவுற்றகமுருகாத்
துஞ்சாவெளிதனைக்கண்டுடன்றூங்குந்திறம்வல்லார் (௩௨)

யோகப்பொருடனையுன்னியயோகத்துறுமுணர்வா
லேகித்துணைவிழிபூருவினிடையேசெருகிடவே
யாகத்தினிலேறிப்பொழிகண்ணீர்தனையடவித்
தாகப்புனலாத்தேறுசமாதித்தலஞ்சார்வார். [௩௩]

சருகுண்பதுகாலுண்பதுசாந்த்ராயணமாதி
பருகும்புனல்பாலுண்பதுபக்கம்மதியயனம்
மருகும்முபவாசம்விழிதுயிலாவருந்தவமும்
பெருகும்படிபுரிவார்சிவம்பேணுந்தகைமையினார். [௩௪]

வருந்துந்தவமுனிவோர்புரிமறைவேள்வியிலவியின்
விருந்துண்டனர்மருந்துண்டிடும்விண்ணோருளமகிழ்ந்தார்
பருந்தின்சிறைநிழலுற்றதுபாம்பின்கணம்பகைதீர்ந்
தருந்துந்தவளைகள்பாம்பினதளையுற்றவவ்வனத்தே. [௩௫]

உலகம்புகழ்தவவேதியரோமம்புரிசாலைக்
கிலகுங்கனல்சிறைவீசியெழுப்பும்மிளந்தோகை
பலவின்கனிவாழைக்கனிபலமாங்கனிபலவுங்
குலவுங்கருமுகமந்திகள்கொடுவந்துகுவிக்கும். [௩௬]

அல்லற்படுபிறவித்துயரகலத்தவமாற்று
மல்லற்றிருமறையோருறைவனமெங்கணுநிறைய
நெல்லிற்கதிர்புல்லிற்கதிர்நிரையும்முதிரைகளுஞ்
சொல்லிக்கொடுவந்தேதினஞ்சொரியுஞ்சுகத்தினமே. [௩௭]

ஞானத்தவர்மோனத்தவர்நாளும்புரிவேள்விக்
கானைத்திரளோமச்சமித்தனைத்துங்கொடுவருமாற்
கானக்கிழங்ககழ்ந்தேகொடுகருமாவினம்வரும்பா
றேனெய்க்கடன்முகந்தேமமழைதினமும்பொழிதருமே. [௩௮]

இப்பெற்றிகள்பெறுநைமிசமென்னுந்தவவனத்தி
லொப்பற்றிடுதவவேதியருண்மைப்பொருளுணர்ந்தோர்
செப்பத்தகுசிவன்சேவடிசிந்திப்பவர்பெரியோர்
முப்பத்தொருபத்தெட்டெனமொழியாயிரமுனிவர். [௩௯]

வேறு.

ஆழியிலெழுந்தோராழியரியதேரேறிப்பாரின்
வாழிருளகற்றுகின்றவபங்கொளியாலும்போகாத்
தாழிருவினையுநீக்குந்தன்மையைநோக்கிச்சார்ந்தோர்
சூழிருளகற்றுஞானசூரியர்போலுற்றூரால். [௪௰]

அருமறைவாசபேயமரியதோர்பவுண்டரீகம்
பொருவருசோமயாகம்புத்ரகாமேட்டியாக
மிருமையுந்தருமியாகங்களினையனபலவுஞ்செய்தார்
தருமமாஞ்சத்ரயாகந்தான்செயத்தொடங்கினூரால். [௪௧]

சாலைகள்புதுக்கினூர்கடாமங்களலங்கரித்தார்
வாலிதாம்வாத்துசாந்திமறைமுறைதருவதாற்றி
யாலயமெனுஞ்சாலைக்குளங்குராற்பணமுஞ்செய்தார்
சீலமங்கலமெட்டோடுதெசாயுதஞ்சிறப்பித்தாரால். [௪௨]

கும்பபூசைகள்புரிந்தார்கூறுமந்திரங்கள்கொண்டே
விம்பபூசனைகள்செய்தார்வேதமந்திரங்களார்ப்பச்
செம்பொனுட்டவரையாமந்திரணங்கள்செய்தழைத்தார்
சம்புவைப்பணிந்தேயூபத்தம்பமுநாட்டினூரால். [௪௩]

வேதபண்டிதர்கள்வந்தார்வேள்விசெய்வதற்குவேண்டு
மோதருங்கலப்பையாதியுபகரணங்கள்சேர்ந்தார்
சோதிசேர்தருஞ்சுருக்குச்சுருவமுந்தொகுத்திட்டாசண
மாதவச்சவுதிமார்கள்வந்தனாமகிழ்ந்தருந்தார். [illegible]

அங்கிபூசனைபுரிந்தாரவிப்பாகமெயாவும்வாய்ப்ப
பொங்குமாகுதிகள்செய்தாரபூரணாகுதிபூரித்தார்
மங்களமாகும்பாகமணட்டலாந்தன்னிலைவந்தே
செங்கண்மாலறிபாதானுந்திருவருள்செய்தானன்றே [illegible]

இத்திறமுனிவரெல்லாமியப்பியவிதியினாலே
சத்திரயாகஞ்செய்துதாபதர்சங்கட [illegible]
பத்திரமாகப்பூசைபலவுபசாரஞ்செய்தே
சித்தமாதரவுகூரச்சிறந்துவீற்றிருந்தானன்றே [illegible]

வேறு.

அப்போதினிவைந்தானுயரா [illegible]
முப்போதினுமபுரிவான்மறைமு [illegible]
றுபபோவெனுஞ்சடையானகணடித்தி [illegible]
மெய்ப்பூதியுமனுபூதியுமவிளங்குஞ்ச [illegible]

வேதங்களோர்நாலுந்தனிவினையா [illegible]
பூதங்களோரைந்தாகிமுப்பொருளாகியபொருளி [illegible]
பாதங்கணினைந்தேயுடலபுளகாங்க [illegible]
நாதன்சிவசாதைதபொருணுணர்விருந்த [illegible]

வந்தானெனவறிந்தாமன்மகிழ்ந்தாருட [illegible]
சிந்தாகுலமின்றேயொழிந்தனையா [illegible]
முந்தாவெதிராகடந்தார்முகமலர்ந்தாரமுறைமுறை [illegible]
கொந்தாமலர்கைக்கொண்டனாதுணைமேத்தினாயிளைப [illegible] [illegible]

தூரத்தினில்வரக்கண்டனாதொழுதேதவிழ்ந்தெழு [illegible]
வாரத்திநேடிருகண்களுமகிழ்ந்தாரெதிர்புகுந்த [illegible]
சாரத்தொடுபுட்பாஞ்சலிதாண்மீதுசொரிந்தா [illegible]
பாருற்றதோரடியற்றிடுமரமேயெனப்பணிந்தா [illegible]

எழுந்தாருடன்மகிழ்ந்தாடினரினிதாகியமுகம [illegible]
மொழிந்தார்சிவனெமையாளுடைமுதல்வந்தனனென் [illegible]
வழிந்தார்தருகண்ணீரினர்மனமுமவந்தனமுமே
பொழிந்தார்தயவொடுநாங்கொட்டுக்காருடனன்றே. [illegible]

நைமிசாரணியச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் [illegible]

முதலாவது,

சிவரகசியவரலாற்றுச்சருக்கம்

வந்தனைசெய்வோர்நெஞ்சில்வாசனைமாலயற்குஞ்
சிந்தனைசெய்தற்கெட்டாத்தேவனைத்தேவர்கோனைக்
கந்தனைக்காழிவாழ்சம்பந்தனைக்கடப்பந்தாமக்
கந்தனைத்தந்தோன்றன்னைக்கருத்தனைக்கருத்துள்வைப்பாம். [௧]

புனிதமாஞ்சாலையெங்கும்பூவினுலலங்கரித்தா
சினியதோராசனத்தினேற்றினர்தாம்வெவ்வேறு
தனிதனிபாத்யமோடாசமனவர்க்கியந்தந்தே
மனமகிழ்பூசைசெய்தார்மாதவத்தோர்களியாரும். [௨]

சைவதேசிகனேதத்துவமுழுதுந்தேர்ந்த
தெய்வமேசிவஞானந்தான்சிவனையாகவாழ்வோய்
கைவல்யமேழவுந்தோவிகண்டனமுன்னையாங்க
ளுய்வகைபெற்றோமெமக்குறுதியும்பெற்றோமென்றார். [௩]

வந்தனையெம்மையெல்லாம்வாழ்விக்கும்படிக்கேயென்று
மெந்தைநீயுணராச்சைவரகசியப்பொருளொன்றின்றுற்
சிந்தனைசெய்துகன்றுத்தெரிபவாங்கவற்றையின்று
நந்தமையுய்யக்கொண்டுநவிற்றுகநாதவென்றார். [௪]

முடிவுறும்வேதமெல்லாமொழியுமுக்கியமதாகும்
படியினிற்புண்யதீர்த்தம்பரமசாந்நித்யலிங்க
மிடிதவிர்புத்திமுத்திவிளைக்கெதளிதாகப்போற்று
மடியவர்தமக்கெக்காலுமளித்திடுந்தலமுஞ்சொல்வாய். [௫]

எனப்புகல்சவுனகாதியிருடிகடம்மைநோக்கி
மனத்தினிற்சிவத்தியானமயிர்புளகரும்பச்சொல்வா
னினைத்தமைநன்றுநன்றுநீவிர்மெய்த்தவங்களாற்றிச்
சினந்திறந்தவிர்ந்திருங்கடெரிசனந்தனிலுய்ந்தேனல். [௬]

பரமர்பாற்பத்திபெற்றபாக்கியந்தழைத்தீர்நீவி
ருரமதாமுங்களோடுமுற்றுநானுறுதிபெற்றேன்
சிரமதாஞ்சைவரோடுசேர்ந்துறல்கிடைக்குமேநம்
மரனடியாருக்கெய்தாவரும்பொருள்யாதொன்றுண்டோ. [௭]

நாதனாரன்பரோடுநட்புறவேண்டுமென்றே
காதலுற்றிருந்தேனின்றுகிடைத்ததுகண்டீர்தொண்ட
ராதிசெய்தவத்தோரீசனன்பருக்குறவாவாரென்
றோதினர்வசிட்டனாதியுயர்மறைமுனிவரெல்லாம். [௮]

சிட்டமாஞ்சிவசின்னங்கள்சேர்ந்துளீர்சென்மகோடி
மட்டிலாதியற்றும்புண்யபலத்தினைவரப்பெற்றீரா
லட்டமாமூர்த்திபூசைபுண்டரமணிருத்ராக்க
மிட்டமாய்ப்பொருந்தப்பெற்றீரிவைபலாற்றவும்வேறுண்டோ. [௯]

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

அண்ணலாரன்பர்பாதரேணுவையடைந்ததீர்த்தம்
புண்ணியதீர்த்தமன்னோர்புகுமிடம்புனிதபூமி
மண்ணிடையவர்பாற்செய்தால்வர்த்தனையாகுந்தன்ம
நண்ணியவயிட்டமெல்லாநமர்கள்பாற்பெறலாமன்றே. [கo]

பத்தியன்பாகச்செய்வோர்பரமன்மெய்யடியார்வந்தான்
முத்திபெற்றேனென்றோடிமுன்விழுந்தடிவணங்கித்
துத்தியஞ்செய்தென்னையன்வரப்பெற்றேனன்றுண்டனேன்செய்
புத்தியென்னென்பார்கொண்டுபுகுந்துபூசனைகள்செய்வார். (கக)

பெருமனைபுகுந்தாற்றேவர்பிதிர்க்கள்கூத்தாடுவார்க
ளருமையாசனத்தில்வைத்தாலமரலோகத்தனுவ
னுரிமையாற்பாதபூசைபுரிந்திடிற்பாசநீங்கித்
தெரிதருந்தவங்களோங்கிச்சிவதன்மவடிவனாவன். (கஉ)

அடிமிசைமுடியைச்சேர்த்தியடிக்கடிவணங்குவானை
முடியணிதேவரெல்லாமுதல்வனென்றிறைஞ்சுவார்கள்
படியிலிப்படியெந்நாளும்பத்திசெய்திடுவோனாத
னடியவனவனேமேலாமளவில்புண்ணியஞ்செய்தோனும். (கங)

அன்பர்தம்பாததீர்த்தபானமேயமுதபான
முன்புகுசிவசின்னஞ்சேர்மூர்த்திநடம்மைக்கண்டா
லென்செயலென்றிறைஞ்சாதிருந்தவன்கொடியபாவி
பின்பவன்வேதங்கொள்ளாப்பெற்றியன்பேதைகண்டீர். (கச)

அண்ணலாரடியார்க்கண்டாலவர்தமைச்சிவனேயென்றே
யெண்ணவும்வேண்டும்பாதாவென்றிடிலவர்கடம்பா
னண்ணினுலையம்போனநங்கவர்கடம்மைத்
திண்ணமார்சிவமாமென்றேசிந்தனைசெய்வர்மேலோர். (கரு)

சேர்தருமனந்தகோடிசென்மத்திற்றவஞ்செய்தானேற்
பார்தனிற்சைவனாவன்பண்புடனவனைக்கண்டே
யார்தருபத்திசெய்தோன்டையாதபொருளொன்றுண்டோ
வேர்தருமவனைப்பூசிந்தேத்தினோன்றனைப்பூசித்தோன். (கசு)

தேவர்மாதவர்க்குமேலாந்தேசிகனாவனிப்போ
தோவிலாச்சைவசீலத்துற்றுளீர்சிவசின்னீங்கண்
மேவினீர்யானுமும்மைவிரும்பிப்பூசிப்பேனென்றே
பாவனையாகப்பூசைபண்ணினன்சூதன்றானே. (கஎ)

அன்னதுகண்டுநின்றசவுனகனாதியானோர்
புன்னருஞ்சூதன்றனைப்பார்த்தனர்கண்ணீர்மல்கி
யின்னதோர்சிவபத்திக்குளியநூவர்களுன்னைப்போல்வா
ருன்னருமன்புபெற்றவுறுதிசெய்தவத்தாலென்றார், [கஅ]

சொல்லுதியென்றுசொல்லச்சூதமாமுனிவன்சொல்வான்
வல்லியோர்பாகனெம்மான்மகிழுங்கேதாரந்தன்னி
னல்லவன்வியாதனெங்கோனண்ணிப்பூசனைபுரிந்தே
யல்லறீர்முனிவரோடுமளவளாயிருந்தானங்கே. (௧௯)

அப்பொழுதியானுஞ்சென்றேனடிபணிந்தவனைக்கண்டே
னொப்பருஞ்சிவத்தியானவுறுதிவந்தனையும்பார்த்தே
னிப்படியுனக்கிங்கேசமெய்ந்தெத்தவத்தாலென்றேன்
செப்பினன்வியாதனெங்கோன்றேசிகத்தலைவன்றானே. (௨௦)

மனதருச்சனைமேல்வைத்தடாதவனென்னைநோக்கி
யனகவஞ்செழுத்தையுன்னியாதியைப்பூதிதன்னைத்
தனதுகைதன்னாற்றொட்டுச்சத்தியமிவைசான்றாக
வுனதுளந்தனில்வைப்பாயென்றுபதேசமுரைசெய்தானால். (௨௧)

அருமைசேர்பரமதாகுமதிரகசியமிதாமற்
றிரமதாநீயுநல்லசிவபத்தனெமக்கும்பத்த
னுரிமையானீயுங்கேட்டியென்றுடனுறையுமங்கட்
பெருமுனிவோருங்கேட்கப்பிரியமாப்பேசினானால். (௨௨)

இப்பொருளன்பிலாருக்கிசைக்கொணாதியம்பும்போதிற்
றப்பிலாதெங்கும்பார்த்துச்சங்கரன்பத்தியில்லா
ரப்பொழுதங்கணுற்றாலப்புறத்தகற்றிப்பின்பு
செப்பிடவேண்டுமென்றுபின்னருஞ்செப்பலுற்றான். (௨௩)

தவமுறுமுனிவீர்தேடுந்தனக்குடந்தனைச்சீவன்போ
லுவமைதீர்மணியையாருஞ்சோரர்பாலுணர்த்துவாரோ
வவனியிலவைபோல்வேதத்தரும்பொருளாகுஞ்சைவச்
சிவரகசியமன்பில்லாச்சிதடர்பாற்செப்பொணாதே. (௨௪)

வேறு.

கயிலைவாழுங்கடவுள்கருணையான்
மயிலையேருமையாட்குவகுத்தன
னயிலையேந்துமருமைமைந்தற்கவ
டயவினாலிதுசாற்றினளாமரோ. (௨௫)

சாற்றுமந்தப்பொருளைத்தனதுதாள்
போற்றுநந்திதனக்குப்புகன்றன
னேற்றமாங்குகனெம்பெருமானந்தி
யாற்றல்சாலச்சுதற்கறைந்தானன்றே. (௨௬)

அந்தமாப்பொருடன்னையயனெனு
மைந்தனுக்குவகுத்தனன்மாயவன்
சந்தமாமறையோன்சனகாதியாம்
புந்திமைந்தர்தமக்குப்புகன்றனன். (௨௭)

சனகராதிமுனிவர்தமைப்பணி
யனகனாதனார்க்கருள்செய்தன
ரெனநுட்பத்திகண்டேமுன்னர்யாழ்முனி
மனநமேனாடும்வகுத்தனனென்றனன். (உஅ)

இறைவனாதனெற்குரைத்தனம்
துறவுமக்கின்றுரைக்கின்றனனது
துறவிர்காள்பத்தியோர்க்குச்சொல்வீரென
வறவன்வேதவியாதனனறைந்தனன். (உகூ)

அந்தணீரெந்தையார்கதைக்கன்பிலாச்
சிந்தையார்க்குச்சொல்லாதசெவ்வொன்றுமே
யிந்தமாநிலந்தன்னிமைக்குநீர்
தந்திடுங்குருதக்கணையாகுமே. (௩௦)

என்றுவேதவியாதனியம்பவே
நன்றுசொற்றனைநாயகநாமுய்ய
வுன்றனல்லருளன்றியுணர்த்திடோ
மொன்றுநீநினையேலென்றுரைத்துடன். (௩க)

ஐயனேயிவ்வரும்பொருளெங்களுக்
குய்யவேமுன்னுரைத்திலையாலின்று
செய்யனேநின்றிருவருள்செய்தெங்கண்
மையறீரவகுத்தருள்வாயென்றேம். (௩உ)

சிந்தைசெய்துசிவனைத்தியானித்தே
முந்துமன்பொடுரைக்கமுயல்கின்றா
னந்தணீர்சிவவித்தைக்கணியராய்
வந்தநீர்சிவசின்னங்கள்வாய்த்துளீர். (௩௩)

பைவரும்பணிப்பூணோன்பணிபுரி
சைவவே..த்தர்தாமடைந்தாரெனி
லுய்வகைக்கரனுண்மையுரைசெய்தான்
மெய்வழுத்துமிருவர்க்கும்வீடுண்டாம். (௩ச

எங்கணேனுமெம்மான்றன்கதைப்பிர
சங்கமுற்றவமுதசமுத்திரம்
பொங்குகின்றவிடங்தொறும்போயுமை
நங்கைவேலவர்நந்திகணாதிபர். (௩ரு

கூடவந்துமகிழ்ந்துறக்கோனட
மாடல்கொண்டிடுவானந்தியாணையா
னீடவேபயங்கொண்டெணடுந்தேவரை
யோடமையன்பிரம்புகொண்டோச்சுமே. (௩சா

இனையமாக்கதைகேட்குமிடத்தினின்
மனதிலைந்தொடுக்கிம்மரப்பாவைபோ
னினைவுவேறற்றதினிற்கவேண்டுமா
லனையபத்திவருந்தவத்தன்பர்க்கே. (௩௭)

ஆற்றல்சான்முனிவீரரன்றன்னைப்
போற்றுகின்றபுராணகதைதனைத்
தேற்றமாகத்தினந்தொறுங்கேட்பவர்
மாற்றரும்பலன்யாவர்வகுப்பரே. (௩௮)

அதிகமாதவத்தீரென்றறைந்துபின்
மதுரமாமதுரக்கதையினு
மிதுவென்னுவக்கினியதெனக்கொண்டே
கதிதருஞ்சிவன்றன்னைக்கருதுவான். (௩௯)

உரமதாம்பத்தியோடொருநாளுமை
பரமனார்கதைகேட்டோர்பகவன்றன்
புரமெய்தல்புதுமையதோவவர்
மரபெலாஞ்சிவலோகத்தினைவரே. (௪௰)

பெருவிற்பிடித்தோர்கையில்விண்டுவாங்
கோரவாளியுங்கொண்டமைகோனன்று
போரின்மேறிப்புரம்பொடிக்கப்புவித்
தேரின்மேலுந்திருவுருச்சிந்தித்தான். (௪௧)

இனைத்துத்தேவரம்மையமொத்தவெ
வனைத்துக்கொன்றையன்வாமமகிழ்ந்துறை
யனத்தின்பாதமும்போற்றியருள்பெற்றே
மனத்திற்றூயவியாதன்சொல்வானரோ. (௪௨)

ஈதுதான்கருப்பாலையிலிட்டுறுங்
கோதுதீர்ந்தரசத்தினுங்கூர்ந்ததென்
றோதுசூதனுரைப்பச்சவுனக
ராதிவேதியர்கேட்டனரன்புற்றே. (௪௩)

முதலாவது சிவரகசியவரலாற்றுச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௪௩.

இரண்டாவது

காயத்திரிவரம்பெற்றசருக்கம்.

பாலினுற்றநெய்யிந்தனத்தங்கிபோற்பரமன்
சாலவெங்கணுநிறைந்தனன்பத்தியாந்தனித்த
வேலுங்கோலினையூன்றியேயுறுதிநாணிறுகக்
கோலியேகடைந்தால்வந்துகூடுவனென்றானே. (௧)

வேறு.

நன்றறிவியாதனென்னுநாயகனன்றுசொற்ற
பொன்றரும்பரமன்காதையெனுமறைப்பொருள்களின்னு
மின்றெமக்கருள்கவென்னநைமிசத்திருந்தோர்கேட்பத்
துன்றியதவத்துச்சூதமுனிவரன்சொல்லுகின்றான். (௨)

வேறு.

பூதிபூசியைந்தெழுத்தினைநினைந்தரும்பொருளாஞ்
சோதிதாளிணையுன்னியேகேளுமின்றொண்டீர்
வேதமாகமஞ்சொற்றிடும்விதியினின்மேலா
மாதியாந்தவவிலிங்கவர்ச்சனையெனலாமால். (௩)

மற்றுமேபுரிபுண்ணியம்யாவுமெம்மானை
யுற்றபூசனைபுரிவதற்குற்றிடுமுறுதி
சொற்றதேவனெத்தன்மையனென்னவேசொலுங்காற்
பற்றில்சச்சிதானந்தரூபப்பராபரமே. (௪)

மோனஞானவானந்தனென்றேடுறன்மோக
மானதொன்றிலானாதியுமந்தமுமில்லான்
வானநாடர்தம்மனத்தொடும்வாக்கினைக்கடந்தோன்
கானநான்மறையறிவரும்பொருளவன்கண்டீர். (௫)

சோதிநிர்க்குணனிரஞ்சனன்றுன்பமொன்றில்லா
னாதிநாமமோடுருவமுமுருவமுமில்லா
னாதன்வேதங்கடேர்வருநாயகன்பெருஞ்சீ
ரோதுகின்றநம்புராணத்துளடங்குமோவுரைக்கில். (௬)

விரதிகாளரன்கதைமிகுவெள்ளமென்றாலும்
வரதனார்தந்தவரத்திலென்மனத்தினுள்வருமாற்
பரமரின்னருளாலுமக்கின்றியான்பகர்வே
னிரவிமண்டலத்திருந்தொளிதரும்பற்கரியல்பே. (௭)

அந்தமில்லதோர்பற்கர்தாநமக்கறிவருள்வா
ரிந்துசூரியர்க்கொளிபுரிந்தியக்குவோரவரே
முந்துமப்பொருளன்றியோர்முதல்வருமில்லைச்
சந்தவேதமெலாஞ்சொல்வதவர்பெருந்தகைமை. (௮)

வணங்குமன்பர்க்குப்பிறவியாமுனைவித்தைதவறுத்தே
யணங்குறுவகைசெய்வதாற்பற்கராமொருபே
ரிணங்கின்றதங்கவர்க்கெனவெம்பிரான்பெருஞ்சீர்
குணங்களோதியமாதவன்றுன்பின்னுங்கூறும். [௯]

அரியவேதநாதத்துருவாய்வருங்காயத்
திரியருந்தவம்பற்பலகற்பமுஞ்செய்தே
புரிமகாலிங்கபூசைகண்டெம்பிரான்போந்தே
வரிசையாலவட்கின்னருள்சுரந்துரைவழங்கும். [௰]

ஆயுதகற்பநீயருந்தவமாற்றினுயதனுற்
றயவுன்பாலுறவந்தனனினைந்தவைதருவோ
முயருந்தேவர்கடமக்கெலாமுறுவரமுதவு
மியலுளோமியாமுதவிடாவரமெவையென்றுன். [௧௧]

பகவனின்னணம்பகரக்காயத்திரிபரிந்தே
முகமலர்ந்துகண்ணீர்மல்கவுரோமங்கண்முகிழ்ப்ப
வகநெகிழ்ந்திடப்பணிந்தெழுந்தானந்தமாடித்
தகைமைசேர்தருதோத்திரம்பற்பலசாற்றும். [௧௨]

பகவனேயண்டர்நாதனேபற்கனேயுன்சீர்
புகலுமன்பர்தஞ்செனனவித்தைப்பொடிப்படுத்தே
யகிலமீதருட்கடலெனவிளங்கியவரனே
முகமுன்வந்தனைதந்தருள்வரமெனமொழிவாள். [௧௩]

ஓதுன்னுமங்களுற்றிடுமந்திரமவையே
வேதநான்குகொண்டாடவேவிளங்கியவாகும்
போதஞானியரவையன்றியொன்றையும்புகலார்
தீதிலாச்சிவமந்திரமேசித்திசெறிக்கும். [௧௪]

மைந்தரைப்பெருமனைவியும்பலமிலாமரமு
மிந்துசூரியரெய்திடாநாள்களுமீனு
முந்துகோவுமங்களமிலாமொய்குழலாரு
மெந்தைநாமமில்லாதமந்திரத்தையெய்ந்திடுமோல். [௧௫]

வாரியூடுறுபொருளெலாமிகழ்ந்துமற்றதனிற்
சேருமாணிக்கமொன்றையுமுடிமிசைச்சேர்ப்பார்
யாருமற்றதுபோன்மறைக்கடலினுளெய்துங்
கூருமந்திரமிகழ்ந்தின்னுமங்கைக்கொள்வார். (௧௬)

ஒளிகொளுஞ்சிவமந்திரமகத்திருளொழிக்குந்
தெளிவையன்றிமற்றவைகளுக்காதிக்கஞ்செலுமோ

வெளியனேனுற்றமந்திரஞ்சிவபதமின்ருற்
களிகொண்மாதவராங்கதுகருதிலர்கண்டே. (கஎ)

வேறு.

உனதாரருளாலனைபெசொழுதேயுணர்வொருவனன்றெருவாசாண [ங்
மினமாமறைபாலறிபாப்புவிப்பவாரெண்ணும் பொருளிசாரணஞ்சரண
கனமார்பொருளாபனுவாயுமையுங்கண்ணுமன் னடையாப்சரணஞ்சரண
மனமாகடைபாரிடம்வைகலிலாமணிமாமிடருய்சரணஞ்சரணம்

விடைமேல்வருவாய்சரணஞ்சரணம்விதிமாலறியாவிசரணம்சரண
முடைபாபிகமர்பாமறந்தருவாயுமைபாள்கணவாசரணஞ்சரணங்
கடிபார்கலையின்பொருளேபெனவுங்காயத்திரிபாள்கருதித்துதிசான்
டொடிபாவரமென்றெருர்திரமீதுன்னுமுறற்குகவென்றனளே.

பின்னம்பநர்வாளருமாமறையும்பெருவானவருந்தெரியாவுனதா [மோ
ருர்னைப்படிநன னெர்பெப்தவமாலுமுபெருருவர்க்கொரிவுற்றிடு
மன்னவர்ராரக்கியே புணாவொமலிக்கிடையார்வரன்வீடுறுவார்
பன்னுந்தாமொமலிதிபுறநவநிலாபரியுந்திடினற்நலமுற்றவரே. (உ௦)

இறைவாவுனைபெள்ளளவுந்நினைவார்க்கெப்தாப்பதமுஞ்சிறிதும்பு
ளதோ,குறைபாவல்புரருமைபாறிருங்குறைபாகல்யாணபரம்பரைய
நிறைவாரிடபத்திநள்பெருமைடைபோர் நிலவானந்தப்பொருளேபெற
வார்,மறைபார்தருபற்கபநந்தனைபென்மநத்ரபெறுமேல்வரமற்றதுவே

வேறு.

என்றுபோற்றகாயத்திரியுகன்றிடவிறைவ
னன்றுநந்தனங்கேட்டமெய்வாமெனகவின்றே
குன்றுபோலுநக்கணங்களுந்தானுமக்கொம்ப
ரன்றுசிந்தவிலிங்கத்துண்மறைந்தனனன்றே. (உஉ

ஒப்பிலாநவவ்விலிங்கத்தைத்தெரிசித்தோருவந்து
தப்பிலாநுதிநவர்தொமூவர்தாமே
மெய்பந்தம்பெறுகுவர்நினைந்தபேறெய்துந்
துய்யசேர்சைமுனிவிர்காளென்றனன்சூதன். (உ௩

வந்துகின்றகாயத்திரிமகநீரத்துள்ளே
பெக்கைபார்திருநாமன்றிருந்திடுமியல்பாற்
சிந்தைசெய்தவர்புத்தியுமுக்தியுஞ்சேர்வார்
முந்தவோதியேமுந்திபெற்றோர்முடிவிலரால். [உச

ஏந்துகின்றகாயத்திரிபிசைத்திடுமந்தத்
தோத்திரந்தனையொருதரந்துதித்துளோழீரல்லா
மாத்தனுகிபசிவன்றிருநாமங்களனைத்து
நாத்தழும்புறவழுத்தியபலத்தைநண்ணுவரால். [உ(

அருந்தவத்திறமுன்னைநாளாற்றினர்க்கல்லாற்
றிருந்துமெந்தையார்நாமங்கள்செப்பிடவருமோ
பொருந்தும்வேதத்திற்காமுதலிழிவுப்பேர்பொருந்தி
யிருந்துமெந்தையார்நாமமுற்றிசைபடைத்தனவே. [உசு]

திலகமாமெந்தைநாமஞ்சேர்ந்தருமறைசிறந்த
விலகுநன்மணிபாற்கடலிரத்நவாகரமா
முலவுவாசமின்றுருமேபுனைவதற்குரித்தா
மலர்களோடுற்றுமறைப்பொருளுணர்ந்தமாதவத்தீர். [உஎ]

மதியணிந்தவனுமங்கள்வழுத்திடப்பெற்றோர்
கதிமடந்தையைக்கைப்பிடித்தேயுடன்கலப்பா
ரதிகலிங்கமாதீர்த்தமுற்றிருந்தலத்தமர்ந்தே
முதிரவோதினோர்பெறும்பலன்யாவரேமொழிவார், (உஅ)

அரியதாமெசுர்வேதத்திலணியுருத்திரத்திற்
றெரியுமெந்தையஞ்செழுத்தினைச்செபஞ்செயப்பெற்ற
முரியபூதியுங்கண்டியுமுவந்துடன்றரித்தேதம்
பெரியசைவமுற்றேநம்போற்பெற்றவர்யாரே. (உ௯)

இன்னதாகுமுன்றுநவேதத்துருவியைந்தே
மன்னுகின்றகாயத்திரிவரம்பெற்றவாறென்
றுன்னுசூதமாமுனிவரனுரைத்திடவுவந்தார்
நன்னயம்பெறுஞ்சைவர்சீர்நைமிசவனத்தோர். [௩௰]

காயத்திரிவரம்பெற்றசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கசுஎ.

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS-

மூன்றாவது,

மேருச்சருக்கம்

ஐந்தவித்துயர்வரையிருந்தருந்தவயோகஞ்
சிந்தையுற்றவர்களுஞ்செலற்கருங்கதிசேர்வார்
கந்தனைத்தந்திடமாமுகக்கடவுளாங்கருணை
மைந்தனைத்தநதமைந்தனோர்நாமஞ்சொல்வாரே. [க]

வதரையணிமயகேதாரத்தின்மன்னி
யாதிநாமத்தினுண்மையிதென்றருந்தவர்கட்
கோதினானவையுள்ளங்கொண்டாருறுதியுங்கொண்டார்
போதநீதியிரென்றுபின்சூதனும்புகல்வான். [உ]

எந்தையார்தமைப்பூசித்தலாதியாமியாவு
முந்தவேதவியாதன்முன்னருளொடுமொழிந்தா
னந்தவாறுசொல்வாய்மைகேட்டருந்தவர்யாரும்
புந்திகூர்ந்தனரானந்தக்கண்கணீர்பொழிந்தே. [௩]

சிவனைப்பூசித்தல்சிவதருமத்தர்சீரண்ணற்
குவகைபாந்தருமம்மவனுறையுளாங்குறைவோர்
நவிலுமத்தலத்தற்புதமிவையெலாநம்பன்
கவுரிபாற்சொலுமவையெலாமுரையெனக்கழறும். [௪)

நல்லவாம்பொருள்சொற்றனரிவையெலாநவில
வெல்லையில்லதோரானந்தமெய்தியதெனக்கே
சொல்லரும்பவமலைதொலைந்ததுகடற்றுயர்போய்
மல்லலுற்றனனிப்பொருள்கேட்கநீர்வாய்த்தீர். (௫)

மேருமால்வரைச்சிகரத்தின்மேலதாஞ்சிகரஞ்
சாருமொன்றதிலெம்பிரானுலயந்தழைக்கு
மாரும்யோசனைபலவுளவதனிடையகலம்
பாருமெண்டிசையளவுமேதன்கதிர்பரப்பும். (௬

ஆலயத்தினின்மகிமைவேதஞ்சொலவறியா
சோலைகற்பகமமுதமேசூழ்நதியதனின்
வேலையிற்கிடந்தனாதசிந்தாமணிமிளிர்வ
காலையுற்றெழுமிரவியோரனந்தமாய்க்காணும். (௭

குழகனூர்மனத்தியற்றியகோயிலக்கோயி
லழகையார்புகல்வாரதன்சிகரத்திலழுத்து
மெழில்கொண்மாமணிக்கதிரெறித்திடவெதிரிந்து
தழுவிளங்கதிர்தானுமின்மினியெனத்தகுமால். (௮

அனந்தகோடியுண்டதனிடைவாயில்கோபுரங்க
ளனந்தகோடிமண்டபமுயர்மாளிகையமைந்த
வனந்தகோடிசாளரந்திண்ணையதனையேதேவ
ரனந்தகோடிகற்பம்புகுந்தளவிடற்கரிதால். (

அந்தவாலயச்சுற்றெலாந்தெற்றிகளருகே
யிந்திராதிகடருக்கணின்றிடுமிவற்றின்கீழ்
முந்துதேனபிடேகமும்பூவுமேமுடிக்கொள்
சந்திராதிபர்கோடிபோலிலிங்கங்கடழைக்கும். (௯

நன்றிசூழ்தருமமுதமாநதித்தரங்கத்திற்
சென்றுதோய்ந்துபூமணங்கொடுதென்றல்வீசிடுமாற்
குன்றுபோலுயர்கோபுரவாயில்கடோறுந்
துன்றுபூதகணதியர்கோடிபேர்சூழ்வார். (

சொலலுமாலயசசோதிபாற்சூழ்ருடொடரா
தொலலேமுச்சுடரொளிகளுமவேணடிடாரோஙகு
நலலகற்பகஙறுங்கனிநுகாநதிடுநலததால
வலலரேவாதமமுதுமெணணுரஙகணவாழவோா (௧௨)

அனையவாலயநடுவேணுாமணடபததளவை
நினையலாவதோவதனகதிாநிகாசொலலாமோ
பனிதுரநதிடுமிளவெயினமணடபபபாலிற
புனிதவேதிகையதனிடையரியணைபொலியும. (௧௩)

கூடுமயோசனையாயிரநீணடதிறகுலவ
நீகெறபகபூநதொடாவிதானததானிலவு
நாடிலீநதிடுதருவுக்குநலகியநமபன
றேடொணுதசோாரழகுகசோரழுகெனததிகழ. (௧௪)

ஐநதவிததவரககதினிலடஙகுவோனடஙகாச
சிநதையுறறவருளமபுகாெனமககருளசெயவா
னுநதுபாறகடலபொனவரையுடுதெனவொளிரப
புநதிகூருமவெணபடடுடஇககநதஙகளபூசி. (௧௫)

பூதிபோநகியபுணடரமபுனைநதுகணடிகையே
யாதி பாகியநவமணியணிகளுமணிநதே
சோதிநீணமணிமவுலியுமகடகமுநதுலஙகக
காதிலாதிததாகணமெனககுணடலஙகவின (௧௬)

சனனவீரமுமாரமுமாாபினிறறபஙகத
துனனுபொனனரைஞாணகதிருலகெலாஞசூழப
பனனுகைவிரலாழிகளபசுங்கதிாபரபப
மனனிவீறறிருநதானமையாளுடைவரதன. (௧௭)

முத்தினொலொளிாகவிகைபொனமுடிமிசைக்கவிபபப
பததியாய்மணிக்காமபுறுசாமரைபயிலத்
தததுமாலவிடைக்கொடியொருபானினறுதயங்கக்
கொத்துமாமலாமாலிகைபுயநதொறுங்குலவ. (௧௮)

ாசஞசனத்திருநதனனறாரத்தேகணஙகண
மூசினினறுகைபமிரமபொழிமுகிழ்ததகையினராய்க்
கூசியேத்தொடுகினறிடத்தேவாதங்கூட்ட
மாசைபெங்கணுங்கண்கொடுபாாத்திடலாமோ. (௧௯)

ஆரணன்புகழ்நாரணன்றேவாகட்கதிபன
காரணனசமையமபுகுநதேதொழுங்கருத்தாற்
சீரிணங்குமத்தாழ்வரைச்சாரலிற்சேர்வார்
பூரணன்றிருமுன்னரிலயாவரேபுகுவூர். (௨௦)

தந்திமாமுகத்தைதங்கரன்சண்முகத்தலைமை
மைந்தனீங்கிவர்சேயிடைவைகுறமன்னு
மௌனதைபோர்விளையாட விஙிமித்தமாங்கெழுந்தே
யந்தமால்வரைச்சாரலினடந்தனனருளால். (உக)

கண்டுகைதொழுநாரணனதியர்கலந்தே
தொண்டுசேர்தருநந்திதன்னேவலாற்சூழ்ந்தார்
சண்டபூதகணதிபர்பிரம்பினுற்சாட
மண்டியோடினர்சேயிடைவணங்கிவாழ்த்துவரால். [உஉ]

வந்துவாழ்த்துமங்கவர்க்கருள்புரிநதுவானவர்தஞ்
சிந்தைபாலுமெட்டரியவன்மீண்டனன்சிறந்தே
யந்தமால்வரைக்கோயில்விற்றிருந்தனனவனைத்
தந்தைகோயிலினமாந்திடும்பிகைசார்வான். (உங)

வேறு.

அருந்தவஞ்செய்ததாபருகுறப்
பொருந்துசாம்பவிபுன்மூரல்கோட்டியே
மருந்துபோன்மணிவாய்திறந்தாசனத்
திருந்ததாதைதனக்கொன்றியம்புவாள், (உச)

கனககோயிற்கதிர்மணி பாசனத்
தெனதுகேள்வரிருக்குஞ்சிறப்பெலா
நனிகண்டேமகிழ்கூரநயனமு
மனதுமேமிகவாஞ்சித்தவென்றனள். (உரு)

ஞானபூமியினுயகனரிடத்
தானகாதலையம்பிகைகூறவே
மேனைபோடுமவேந்தனினிதுகேட்
டேனமின்றியுரைக்கலுற்றனரோ. [உசா)

உனைச்செல்லென்னவென்னுள்ளமுஞ்செல்கில
நினைந்தநின்செயணிக்கவுங்கிற்றிலே
னனைத்தையுந்தருமன்னைநின்கேள்வர்பான்
மனத்தைவைத்தரிளானுடும்வருகுவேன். (உஎ)

என்றுதாதையியம்பவுமையவ
ணன்றுநீர்தளரின்றுநாளையே
சென்றுமீள்குவன்சிந்தைகலங்கலீ
ரொன்றுமன்புடையீரென்றுரைசெய்தாள். (உஅ)

ஆளும்வெற்பரசும்மவன்றேவியு
நாளைநாளைநின்னுபகர்பூரற்செலும்

வேளையென்றுவிளம்பவிளம்பவே
பாளையோதியொருதிங்கள்பார்த்தனள். (௨௯)

திங்களொன்றவர்செய்யுபசாரங்கள்
பொங்குபூசைபொலிந்திடமேவினா
ளங்கவட்குளமாதரங்கூரவே
மங்களந்தில்வரிசைபலசெய்தார். (௩0)

இங்கிவ்வாறிவணுற்றவியல்பெலாங்
கங்கைவேணிக்கடவுளறிந்தன
னங்கணாயகனந்தியைக்கூவியே
மங்கையைக்கொணர்வாயெனவந்தனன். (௩௧)

நாதனார்தங்கணங்களொடுநந்தி
யேதந்தீர்பவெற்பில்வந்தெய்தலுங்
காதல்கூரிமவேந்தன்கடிதெழுந்
தோதுமன்புடனோடியெதிர்கொண்டான். (௩௨)

அழைத்துவந்தனனாசனத்தேற்றினான்
றழைத்தவன்பொடுதானுபசாரங்க
ளுழைக்காத்தனைப்பூசையுஞற்றல்போன்
மழைக்கணீரொடும்வந்தித்துவாழ்த்தினான். (௩௩)

ஞானயோகிசிலாதனயந்தரு
ளானசைவத்தரசேயென்னையனே
யானுன்றாள்பணிந்தின்புற்றனனெனா
மேனைகாதலனன்பின்விளம்பினான். [௩௪]

ஆதியாரெமதன்னைமணாளனார்
சோதிபார்சுகமோவெனச்சொல்லினா
னேதையாவிமயத்தரசேயெனா
நாதனேவியநந்திநவிற்றுவான். [௩௫]

பகருநாமமொன்றோதும்பரிவினோர்க்
கிகபரச்சுகமீந்திடுமெம்பிரான்
சகலநன்மையுமாகுமத்தம்பிரான்
சுகமுறும்படிசொல்லவும்வேண்டுமோ. [௩௬]

காலகாலனவன்கணிமைத்திடின்
மாலும்வேதனுங்கோடியர்மாய்வரான்
ஞாலநாயகனல்லருள்பெற்றநா
ளேலுமன்னரீறெத்தனைகண்டுளேன். [௩௭]

சுகவுருக்கொளுஞ்சோதிக்கோர்துன்பந்தான்
புகல்வதோவவனும்புகன்றுளோர்

வெருவிதஞ்செயுமாயைவினையொரீஇ
நிகரிலாச்சுகவீட்டினிலைப்பரால். (௩௮)

நித்தியானந்தநின்மலனுன்மறை
சித்தியாஞ்சுத்திசெய்யுமாதேவன்றன்
சத்தியாமுமைதன்னைக்கொணர்கெனப்
பத்தியாலிங்ஙன்யான்வந்தபான்மையே. (௩௯)

எந்தையார்தந்தவாழிமற்றிங்கிதை
முந்தையார்மனையாண்முன்னருய்த்துநான்
வந்தகாரியமும்மென்வணக்கமுஞ்
சிந்தைகூர்தரச்செப்புதியாலென்றான். [௪0]

கொடுத்தமோதிரங்கொண்டிமயத்திறை
யடுத்தனன்னுமையாளிடத்தண்ணலார்
விடுத்தநந்திவரவும்விளம்பினா
னெடுத்துமுத்திரையாழியுமீந்தனன். (௪௧)

வாங்கினாண்மகிழ்ந்தாடந்தைவார்த்தைகேட்
டேங்குநுண்ணிடையாளென்னிறைவனார்
பாங்குசேர்திருவாழியெனப்பரிந்
தோங்குசென்னிவைத்தாள்கண்ணிலொற்றினாள். [௪௨]

மனமகிழ்ச்சியிற்றன்னைமறந்தனள்
பனகபூடணன்பால்வைத்தவன்பினாற்
றனதுகண்ணீர்தழைத்திடவேமுகிழ்த்
தனகிதானெடும்போதமர்ந்தாளரோ. [௪௩]

என்றுமேசுகமுற்றிருப்பாரையா
னன்றுற்றாரெனக்கேட்குநலத்ததோ
துன்றுமன்புபெற்றேசுகமுற்றுளேன்
சென்றுசேர்தறிடமெனச்சிந்தித்தாள். (௪௪)

அன்னையின்னணமாகவிருந்தனண்
மன்னுநந்திமகிழவரிசைகள்
பொன்னின்மால்வரைவேந்தன்புரிந்தனன்
பின்னிகழ்ந்தபரிசினிப்பேசுவாம். [௪௫]

மூன்றாவது பேருச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௱௨,

தேவியிமயம்
விட்டெழுந்தருளியசருக்கம்

வேறு.

வானவருந்தொழும்வானவனம்பிகைமாதேவன்
றேனவிரம்புயபாதநினைந்தவர்சேர்வாரே
யூனமுறும்பவவாரிகடந்துணர்வுறலாகா
ஞானவனந்தசுகோதயவின்பநலந்தானே. (௧)

சீதவளப்பனிமால்வரையுற்றசிவன்றேவி
யாதியிடத்துநன்மேருவினிற்செலலங்கார
மாதவருக்குவியாதனுரைத்திடும்வகையெல்லாஞ்
சூதன்முனிக்கணமேவவனத்திடைசொல்கின்றான். (௨)

அம்பிகைதன்செயல்கண்டிமவானெனுமரசன்றான்
வெம்பியசிந்தைவிசாரமொடும்மனைமேனையொடு
நம்பிசிவன்கணநம்பிக்கெதிர்மொழிநவில்வற்றோ
வெம்பெருமாட்டிசெலற்குபகரணமியற்றென்பான். (௩)

மங்கலமேவியகற்புடையாடன்மணுரைவிட்
டிங்குறைகின்றதுநன்குறுமோவவரேவல்செய்தே
யங்குறைவதுவேமேலாந்தருமமதாமன்றோ
நங்கைமகிழ்ந்திடவிடையின்றுதவுதுநாமன்றே. (௪)

இன்றுவிடுத்திலமெனிலிறைவன்வெகுள்வுற்றிடுமா
னன்றுபகாரத்தொடுபலவரிசைகளுஞ்செய்து
மொன்றியவன்புடனென்றுரைசெய்தேயுமைதன்பாற்
சென்றுளமுருகிக்கண்டுமகிழ்ந்தேசிந்திப்பான். (௫)

ஒடியறைக்குளுவந்துபுகுந்தனனொளிர்முத்தி
னீடியமாலைகணவமணிமாலைகணெடுநாளிற்
றேடியமகுடங்கடகங்கைவளைசிலவாரங்
கூடியவாபரணச்சுமைகோடிகள்கொடுவந்தான். (௬)

பொன்னரிமாலைகள்பன்னிறச்சேலைகள்புனையோலை
கன்னமணிந்திடுபூடணவர்க்கங்கண்டசரம்
பன்னியகைவிரலாழிசிலம்பொடுபதசாலஞ்
சொன்னபணிச்சுமைகோடியின்மேலுஞ்சொரிதந்தான். (௭)

வருணன்றிறைதூரவந்தனமாநிலமன்னரெலாங்
கருணைபெறும்படிகொடுவந்திடுகைக்காணிக்கை

தருவின்வளர்ந்தருநாடுறைவோர்கடரும்வரிசைக்
குருமணியாரச்சும்மையோர்கோடிகொணர்ந்துற்றான். (௮)

தன்னுடைமாமனைமேனையில்பின்னுஞ்சார்ந்துற்றே
யென்னுடையன்னையுடன்சென்மடந்தையரீசன்பாற்
றுன்னுகணங்களுமுண்டுசெலும்படி தூய்தாக
மன்னுமபூபவகைப்படியோதனவர்க்கங்கள். (௯)

ஆறுசுவைக்கறிநால்வகையுண்டிகளவையெல்லாம்
வேறுசமைத்தனமகனிவகைவர்க்கமும்விதமாகக்
கூறுமினிப்புறுமதுவர்க்கம்பலகோடிசுமை
யேறவமைத்தருளுண் வர்கொண்டேகிடவென்றான். (௧௦)

அமைதலிலாமகிழ்வுடனேமற்றுளவரசரைநம்
மிமயவரைக்குமேருவரைக்குமிடையெல்லாங்
கமைதருபுட்பவிதானப்பந்தர்கடிதாகச்
சமையுமெனச்செய்தனர்மலர்மாலைத்தண்பந்தர். [௧௧]

ஏகுநெறிக்கிடையேபடமாளிகையிமரோ
லாகியதவளத்தான்மதிமண்டலமெனவார்த்தார்
மாககனஞ்செலுமேருவைமானும்விமானங்க
டோகைதனேறுதோகையரேறச்சூழ்வுற்ற. [௧௨]

அடங்குபிடர்க்குளமைந்தவுளைத்திரளம்புலியாத்
தடங்கொளும்வெள்ளிவரைக்கெதிரேபொருதன்மையுட
னிடங்கொள்புறத்துறுகலணையிரத்தினவெழில்சேரு
மடங்கலின்வாகனமுமையவண்மேற்கொளவந்ததுவே. [௧௩]

என்றுதனில்லவளுள்ளமகிழ்ந்திடவிமையக்கோ
னன்றுபுகன்றுநின்வரிசையுன்மகள்பெறநல்கென்றான்
சென்றுயர்கோபுரமுற்றமணைந்தெவையுஞ்செப்பித்
துன்றுகளிப்புடனேகறங்கென்னச்சுழல்கின்றான். [௧௪]

வந்தனன்முந்துறுவரையரசன்றன்மகடன்பாற்
சுந்தரநந்திக்கருளுபசாரத்தொழில்கொண்டே
நந்திதனக்குபசாரம்பலசொலிநல்கிப்போய்ப்
புந்திகொளம்பையைநோக்கிக்கண்மழைபொழிகின்றான். (௧௫)

வேறு.

நந்திதேவனுக்கம்பிகைசந்தனநலமுறுநறுசாந்தங்
கந்தமாலிகைபூடணம்பூந்துகில்கடிகமழ்முகவாச
மைந்துமீந்திடப்பெற்றுயரானந்தமடைந்துறைந்திடும்வேலை
வந்துகண்டனரெம்பிரான்விடுத்திடுந்தூதராமாபூதர். (௧௬)

என்னதாமதமெங்களையுந்தையாரேவினரெனச்சொன்னார்
மன்னனுமிமயத்திறைகண்டனன்மனத்திடைமருள்கொண்டான்

முன்னவர்க்கும்வந்துற்றவர்தமக்கும்முறைமுறையுபசார
மன்னபானஞ்சந்தனங்கலைபூடணமனைத்துநல்கினனன்றே. (கஎ)

இனித்தரிப்பதன்றென்றிமயத்திறைபிறைவிதன்னிடத்தெய்திப்
பணித்தகண்ணுடைமினித்தபூசனைபலபத்தியாற்பரிந்தாற்றி
மினிற்றுனும்படாம்பதுமராகப்பணிவெயில்விடுகதிராரந்
தனித்தனித்தனிகொடுவந்துசாத்தினன்சாற்றருங்களிகூர்வான். (கஅ)

அன்னையேசிவனனுப்பவிப்போதும்வந்தடுத்தனர்கணநாத
ரென்னதாமதமெனவுரைத்தாரவரினித்தரித்திடலாமோ
நன்னயம்பெறுபூசமுமோரையுநல்லவேளையுமீதான்
மன்னுசோதியின்விமானமும்வாய்தலின்வந்ததிங்கெழுகென்றான்.(கக)

தாயராகியமேனையார் வந்தனர்தயவினர்தயவாகத்
தூயவம்பிகையெழுந்தனள்வாய்தலிற்றோன்றினளதுபோதின்
மேயபல்லியமுழங்கினவூழியின்விரிகடலார்த்தென்ன
மாபனுன்முகன்வானவராதியர்மனைவியரொடும்வந்தார். [உ0]

முனிக்கணங்களுமுன்னரேதுன்னினர்முறைமுறைசிவனேவுந்
தனிக்கணங்களுமன்னினரன்னைதன்றொடொழுதனரன்றே
யினிக்குமின்சொலாரற்புதமடந்தையரேறினார்விமானங்கள்
கனிக்குமின்மொழியம்பிகைசிங்கவாகனத்தினிவிவர்ந்தாளே. [உக]

தந்தைதாயரும்பின்செலவிமானத்திற்சார்ந்தனளெமதன்னை
யந்தவேளையின்மூவுலகத்துளவனைவரும்வந்தார்த்தார்
முந்தவேபுகுந்தோர்களுங்கூடியேமுறைமுறைநெருக்குற்றார்
நந்திபூதகணதிபர்பிரம்படிநாடியோடினரன்றே. [உஉ]

சென்மகோடியிற்செய்தபுண்ணியத்தினாற்றெய்வநாயகிசேரும்
பொன்மயந்தருவிமானசேவையும்பெற்றோம்பொருந்துகாற்றுறப்பெற்
நன்மகிழ்ச்சிசேர்மருத்துற்றான்கந்தவாகன்மனனுநாமந்தா [றோ
னின்மைதீர்த்தருடேவிசெந்தாமரையிணையடிதவழ்ந்தென்பார். (உ௩)

தூரத்தேபணிந்தடிதொழுவார்பலர்துதித்துநிற்பார்சிலரோ
ராரத்தார்திகழ்விமானத்தின்முடிகண்டோமடிகண்டோமென்கின்றார்
சாரத்தார்தருநாடகத்தரம்பையர்தனித்தனிநடஞ்செய்தார்
வாரத்தேயிசைத்தும்புருநாரதர்வந்துபாடினரன்றே. (உச)

செய்யசோதிவிமானத்தின்காந்தியெத்தேசத்துமிருளோட்டத்
துய்யதோர்சிகரத்தினிவிடக்கயந்தொடக்கியேகூடரோட்ட
வையமீதினில்வந்தடிதொழுமவர்வல்வினைத்துயரோட்ட
வையையம்பிகைவிமானமும்பைப்பயவடிபெயர்த்ததுவன்றே. (உரு)

கொடிநெருங்கினமகரதோரணங்கள்வெண்குடையொடுசேருடிப்
படிநெருங்கினசாமரைக்காடுகள்பரந்தனசீரந்தெங்கு

மடியிடுந்தலமீலையெனவட்டமாசித்திகளோடுந்தேவர்
முடிவின்முப்பத்துமூவருஞ்சூழ்ந்தனர்முறைமுறைநெருக்குற்றார்.

தேவர்பூமழைமேகங்கள்பொன்மழைசேவடிபணிகின்றார்
தாவுகண்மழையம்பிகையருண்மழைசொரிதரவிரிந்தெங்கு
நாவில்வேதியர்தோத்திரவோசைகளுடைகம்பயிலோசை
மேவுதேவவிமானத்திேனசையும்விரவியமிகவன்றே (உள)

நீதிசேர்கணநாதர்கைப்பிரம்படிநினைந்துநாம்பயந்தோடி
லாதியார்திருத்தேவிதன்றரிசனமதுநமக்கரிதென்றே
பூதிசேர்தருமேனியர்ஞானியர்புனிதன்மெய்படியார்கள்
சோதிசேர்ந்தவிமானத்தின்புடைவந்துசூழ்ந்தனர்தொழுவாரால். ()

இன்னவாறெமையுடையவளிமயம்விட்டெழுந்தருள்சிறப்பென்றே
சொன்னவேதவியாதனைத்தொழுதனர்துதித்தனர்முனிவோர்கள்
பின்னரன்னைதான்செய்ததென்னெனவவைபேசினனெனச்சூத
னன்னதும்புகன்றானுயர்சக்கரத்தடவிவேதியர்க்கன்றே. [உகூ]

நான்காவது தேவியிமயம்விட்டெழுந்தருளியசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உஉக.

ஐந்தாவது

தேவிமேருவரையைச்சார்ந்தசருக்கம்

வேறு.

பூதநாயகனுதிரைநாயகன்புகழ்சேர்நால்
வேதநாயகன்விண்ணவர்நாயகன்விடையேறு
நாதநாயகனம்பலத்தேநின்றுநடமாடும்
பாதநாயகன்றோத்திரநாடொறும்பகர்வோமே. (க)

குன்றசைந்ததுபோலுமையேறியகுளிர்மான
நின்றசைந்துசெலக்கொடியாடைகணிறைவுற்ற
தென்றல்வந்துதவழ்ந்ததுசேவைகள்செய்வோர்தா
மின்றுநம்பிறவிக்கடனீந்தினமென்பாரால். (உ)

ஆதிநாயகிபின்னுறமேவியவனைமேனை
நீதிசேருபகாரமனைத்தையுநினைறவித்தாள்
பாதிசேர்பிறைபோனுதலாயிவைபாரென்றார்
சோதிசேரும்விமானமருங்குறச்சூழ்கின்றார். (ங)

செய்யவம்புயத்தேவியொடுந்திருமால்வந்தா
னையன்வேதன்வந்தானிசைவாணிமின்னவளோடும்

னைதயலாஞ்சசியோடுவந்தானண்டர்தனிநாதன்
மைஃபல்கூரிமையோரும்வந்தார்தங்கண்மனையோடும். [௪]

சென்னிசேர்த்தியகையினர்கண்மழைசேர்கின்றார்
துன்னுநான்மறைத்தோத்திரப்பற்பலசொல்கின்றார்
பன்னிமாரொடுமொமுனிவோர்கள்வந்தனர்பாராய்
கன்னியேபுனகாரொடும்வானவர்கண்பாராய். [௫]

ஆடுகின்றவரம்பையர்நாடகமதுபாராய்
பாடுகின்றவர்தும்புருநாரதர்பணிபாராய்
கூடுகின்றகணங்கள்பிரம்புகள்கொடுசாட
வோடுகின்றகணங்கணெருங்கியவுவைபாராய். [௬]

மேருமால்வரைச்சாரலினருகுறமின்னேநீ
சாருகின்றவிமானம்வரத்தையைதருவாயென்
றேருமன்னைசொலென்னுடையன்னையுவந்துற்றாள்
கூருமானமும்வந்ததுமேருவின்குளிர்சாரல். [௭]

அங்குறைந்திடுதேவரும்வந்தனரடிதாழ்ந்தார்
பங்கயாசனனேமுதற்றேவர்கள்பலரெல்லாஞ்
சிங்கவாகனமேல்வருதேவிசிறப்பெல்லாந்
தங்கணூர்தரக்கண்டனர்தோத்திரந்தனிசெய்வார். [௮]

வேறு.

மங்கைநாயகியேபோற்றிமாமறைப்பொருளேபோற்றி
சிங்கவாகனத்தின்மேவுந்தேவியேபோற்றிபோற்றி
துங்கமாமிமயமீன்றதோகையேபோற்றிமேலா
நங்கையேகயிலைவாழுநாதர்நாயகியேபோற்றி. [௯]

கும்பிடுமடியார்தங்கள்கொடுவினைதவிர்ப்பாய்போற்றி
யம்பையேமேனையீன்றவன்னையேபோற்றிபோற்றி
வம்பவிழ்நீலவெற்பின்மரகதக்கூந்தல்போன்று
தும்பிசேர்ந்தார்க்குங்தொங்கற்சுரிகுழலுடையாய்போற்றி. [௧௦]

கமலமாமுகத்தாய்போற்றிகளபமாமுலையாய்போற்றி
யமருமாலிலைபோல்வாய்த்தவணிவயிற்றணங்கேபோற்றி
விமலர்கைத்துடிபோல்வாய்த்தமெல்லியவிடையாய்போற்றி
தமருடனடியார்போற்றுந்தாமரையடியாய்போற்றி. [௧௧]

உலகநாயகியேபோற்றியும்பர்தம்பிரானூர்தோளி
னிலகுபூமாலைசேர்க்குமிணைக்கரமுடையாய்போற்றி
குலவியவடியார்செய்யுங்குறைதவிர்த்தாள்வாய்போற்றி
கலவமாமயிலேநித்யகல்யாணவுமையேபோற்றி. [௧௨]

காட்சியேசரணமேலாங்கருணையேபொழிதருங்கா
மாட்சியேசரணமன்பர்மகிழ்வுறக்கடாட்சிக்குமீ
னாட்சியேசரணமெங்களன்னையேசருவலோக
சாட்சியேசரணமுன்றன்சரணமேசரணந்தானே. [௧௩]

தேவியேசரணந்தேவதேவனுஞ்சிவனார்தேகத்
தாவியேசரணமெங்களன்னையேசரணநீண்ட
காவியையனையவுண்கட்கன்னியேசரணநித்தம்
பாவியேஞானவாரிபாவியேமெனப்பணிந்தார். [௧௪]

மாமுனிவோருந்தேவகணங்களும்வந்துகூடி
யாமுனமியற்றும்பூசாபலத்தினாலிறைவிதன்னை
யாமுறைபுகழ்ந்துபாடியாடிடப்பெற்றோமென்றார்
தாமுளமகிழமேருச்சாரலின்வந்துசார்ந்தாள். (௧௫)

இனையவாறெம்பிராட்டியிலங்கியமேருச்சாரற்
புனையலங்காரத்தோடும்புகுந்தனளென்னவேதந்
தனையொருநான்கதாகச்சாற்றினோன்புகன்றானென்றே
முனைவர்வாழ்நைமிசத்தின்மொழிந்தனன்சூதன்றானே. (௧௬)

ஐந்தாவது தேவிமேருவரையச்சார்ந்தசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௨௱௭.

ஆறாவது,

தேவர்முனிவர்காட்சிச்சருக்கம்

வேறு.

ஒருவனையோரிரண்டுருவமுக்கண்ணன்றனைப்புயநான்குடையகோனை
பெருகியவைந்தொழிலானை பாறுமுடித்தானையெழுபிறப்புந்தீர்த்தே [ப்
யிருமையெமக்கருளட்டமூர்த்திநவகோணத்தாட்கிறையைப்பத்தா
மருவுபதினொருவருருத்திரர்பணியுநாயகனைவணங்கிவாழ்வாம். (௧)

சிந்தைமகிழ்மேருவரைச்சாரலில்வாழ்முனிவர்களுந்தேவரியாரும்
வந்துதிரண்டனரிமயமலையரசன்றருமரசிவருகின்றாளென்
றுந்தியவன்புடனோடிப்பணிந்தொளிர்விமானத்தையுற்றுநோக்கிப்
புந்திமகிழ்ந்தானந்தக்கண்மழையும்பூமழையும்பொழிகின்றாரால். (௨)

செனனகோடிகடோறுஞ்செய்ததவப்பலம்பெற்றோஞ்சிவன்றாட்பூசை
மனமகிழ்ந்துபுரிந்திடுமாவரம்பெற்றோமுரம்பெற்றோம்வாழ்வுபெற்றோங்
கனகமலையரையன்மகள்விமானத்தின்வரும்பெருமைகாணப்பெற்றோ
ஆதிசிவபூசைபுரிபலத்தினாலேயயனுலகமாலுலகமதற்குமேலா, மே தகையசிவலோகமுத்திலோக மேவுற்றோரளவினையும் விளம்பலாமோ, காதலுறுகுலத்தானபவுரிடங்கள்கருதுமேவதாகமசாத்திரங்கள்கற்ற,வோ தரியசற்குருவினுபதேசத்தாலுறும்பூசைநினைத்தவெலாமுதவுந்தானே.

உறுந்தாகமுற்றோர்க்குக்கங்கையாற்றினுமும்புனலல்லாற்கானலொ ழிப்பதுண்டோ, பெறும்பேறுகதிவிரும்பிலெய்தற்கெம்மான்பிரசமலர்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

ப்பதமல்லாற்பிறிதொன்றுண்டோ, தெறும்பாவிதரிசனத்தின்பாவந்தீரச்சித்திரகுத்திரரேநந்தேவன்றாளி, னறும்பூவுமஞ்சனமுங் கொண்டுபூசைநான்புரிவேனென்றுபின்னுநமன்சொல்வானால். (௧௩)

மன்னுபவவரையிடறவலாரிகையில் வச்சிராயுதமன்றோ பரமன்பூசை, யன்னதனுக்கையமிலைமண்பெண்பொன்னினாசையுந்தாபத்திரையமவையுநீக்கு, முன்னரும்பாவிகட்குவிடமாகுமென்றேயோதினானிருந்திடுமப்போதுதன்னிற், றன்னருங்கானகத்திலொரு முனிவன்கூவுந்தொனிபதனைவினவியமன்றுளங்கினானே. (௧௪)

மனங்கலங்கிச் சித்திரகுத்திரர்தம்மோடு மறலியுமவ்வனத்தேகிமுனியைக்கண்டான், கனந்தருமெய்ப்பூதியின்முப்புண்டரங்கள் கண்டிகைமாலிகைவிளங்கவிருந்தோன்றாளி, லினந்தருமெய்க்கணக்கருடன்வீழ்ந்திறைஞ்சியேதையாமுனிவரனேயிந்தக்கானி, லனந்தசுகந்தருசிவபூசனையைச்செய்தேயசையாமலிருக்குமுன்பாலுரையாதென்றான்.

அன்னவுரைகேட்டலுமேசாகமூல மருந்துமருந்தவன் புகல்வான்றென்றிசைக்கோர், மன்னவனேசிவத்துரோகங்கள்செய்தமாபாவியொருவனிங்குவரவேகண்டேன், றன்னுமவன்றனைக்கண்டபாவமென்பாற்றொடராமல்விடமுண்டசோதிநாமக், தன்னைமனக்கலக்கமுடன்கூப்பிட்டேனான்சாற்றியவச்சத்தமங்குச்சார்ந்ததேயோ. [௧௬]

ஆயவனைநீவிருமேகண்டீர்போலுமருந்தருமவடிவாகு மவரன்றோநீர், தீயவனைத்தான்கண்டபாவந்தீரச்செய்கருமமிவையென்றுசொல்வீரென்றே, நேயமுடனுரைத்தளவேமுனிவனோடுநிலைபெயர்ந்து சித்திரகுத்திரரதம்மோடுந், தூயமுனிசுகனிருக்கும்வனத்தில் வந்தான்சுருதிவழியிருவினையுந்துடைத்தல்செய்வான். [௧௭]

சகத்தில்வழிதனிற்கிடந்துமின்னு மிப்பிதன்னையொருதகட்டுவெள்ளிதானிதென்றே, யகத்தின்மடவாட்குடைமைக்காகுமென்னவதைப்பற்றுமதுபோலுமாசாபாசச், சுகத்தைமுற்றுமெண்ணாமன்முத்திவேண்டித்துளிர்கனிகாய்புனலருந்திச்சோகநீங்கி, மகத்துவஞ்சேர்சிவபூசையுறுதிபூண்டமாமுனியாஞ்சுகமுனியைவணங்கிச்சொல்வான். [௧௮]

என்னுடையவுலகிலியானிருக்கும்போதிலீனமுறுமொருபாவி சிவத்துரோகி, தன்னையான்வரக்கண்டேன்கண்டபாவந்தனை நீங்கவுபாயமொன்றுதான்சொல்வீரென், றன்னசமன்சொலச்சுகனு முனிவன்சொல்வானவனமதுதபோவனத்திலருகுசார்ந்தான், றுன்னரியதவங்கள்பலசெய்தானன்னோன்சூழ்வினையாற்சிவபத்திதொடர்ந்திலானால். [௧௯)

அப்படியாயிருந்தவனதிட்டங்கோடியருந்தவங்கள்செய்தாலுமாவதென்னே, மைப்படியுங்கண்ணுடன்பாகன்பத்திவந்திலதாலாங்கவற்குமறலிகேளா, யொப்பரியசிவபூசைப்பலத்தினாலேயுறுதபொருளொ

ன்றுளதோவுலகமூன்றின், முப்பொருளுமப்பொருட் குமுதன்மையா குமுழுப்பொருளுங்கைப்பொருளாய்முடியுமன்றே. (உ0)

சாற்றுமகாமேருவரைச்சிகரத்துற்றுற்சந்திரசூரியர்கள் சகவாசமெய்தி, மாற்றரும்பாதலத்துற்றுல்வருமோவன்னவாறு சிவபத்திவந்தால் வருங்காணுமுத்தி, யாற்றுறுபூசைக்கிடுக்கண்பலவுமெய்துமவைவிலக்கிப்புரியிலருங்கதியைச்சேர்வார், போற்றுதற்குத்தடைவந்தாலவற்றைநீக்கிப்புரியாதார்படுநரகிற்புகுவாரன்றே. (உக)

மன்னுசிவபத்தியில்லாமாந்தர் தங்கள்வாண்முகம்பார்த்திடிற் பாவமாகுமேலோ, ரன்னவர்தமுகங்காணில்வானிலுற்றவாதித்தன்றனைநோக்கிப்பூதிபூசல், பன்னியவப்படிசெய்யிற்பாவநீங்கிப் பரிசுத்தனுவனவையெவற்றுமெலன்னிற், றன்னிகரில்லாதசத்திவடிவாம்பூதிதனைப்பூசும்பலத்திலுற்றதன்மைதானே. [உஉ]

சொல்லரியஞானசத்திவடிவாநீறு தூளனஞ்செய்திடின்மயிர்த்துவாரமெல்லா, மல்லறவிராவுடையாளாகவேமூன்றரைக்கோடி சிவலிங்கவுருவமாவன், மல்லல்பெறும்பூதியணிவோர்கடாமே மகத்தானசிவலிங்கவடிவமாவர், புல்லுபுவிப்பிரதிட்டாலிங்கந்தன்னிற்பூதியணி யோகியுருப்புனிதலிங்கம். (உங)

காசிமுதலாந்தலஞ்சேரிலிங்கமெல்லாங்கருதிலசையாத தாபரலிங்கம், வாசியாஞானசத்திவடிவாநீறுவனையோகியுருவுசரலிங்கமாகு, நாசமிலாவன்பரிடத்திருந்துநித்தநைவேத்ய முதலெவையுங்கவர்தலாலே தேசுபெறுஞ்சிவயோகர்பூசைமேன்மைசிவனறிவனேவிலனே தெரிந்திலோமே. (உச)

கன்னிபராசத்திகைகள்குவித்தேயாலிங்கனம்புரியாவுடையாள்சேர்திருவிலிங்க, மன்னியதன்கைகுவித்தஞ்சலிசெய்யோகிவாய்த்த வாவுடையாள்சேர்சரவிலிங்கஞ், சென்னிபெறுமிரண்டிலிங்கந்தன்னிலெங்குஞ்சென்றுவருஞ்சிவயோகியாகுஞ்செல்வ, வன்னசரலிங்கத்திலிருந்தெந்நாளுமரன்போனகாதிநுகர்ந்தமர்கின்றனே. (உரு)

அருமறைகளன்பரிடத்திருந்தெந்நாளுமரன்பூசை கொள்வனெனவறைந்தவன்றே, தருமமிகுசிவயோகிபூசையொன்றுஞ்சாலுமெனவியம்புதியேற்றருமகேளாய், பெருமைபெறுதிரவிலிங்கபூசைநாளும் பிரியமுடன்செய்துபத்திபெறவேமீண்டு, மருவுசரலிங்கமாமன்பர்பூசைவாய்த்திடச்செய்தேமுத்திமருவலாமே. (உசா)

அன்பரிதயத்திருப்பர்பரமரென்றேயறைகின்றதால் வேதமரனூர்நாமந், தன்பரிவினினைத்தவுடன்கண்ணீர்வாரத்தழுதழுப்பநாவுடலம்புளகம்போர்ப்ப, வின்பமிகுமானந்தம்பெருகப்பெற்றோனிறைவரடிபார்க்

குளவன்ஞானதீரன், றுன்பமில்லாஙான்குவன்னத்தாரும்பூசைசொன்னமுறைசெயிற்பாவத்துயர்தீர்வாரே. (௨௭)

செல்வமுற்ரேன்பொருளளவின்சிறப்பாற்பூசை செயவேண்டுமுலோபமுற்ருனரகஞ்சேர்வன், சொல்லரியவானந்தக்கனமாய்மேலாஞ்சுயம்பிரகாசமுமான சோதிதன்னைக், கல்வியறிவாம்பொருளைக் காணவேண்டிற்கருத்துடன்பூசிக்கவெதிர்காணலாமே, பல்வரஞ்சேர்சிவபூசைகாட்டுத்தீப்போற்படர்பாவக்கனலழிக்குமழைகண்டாயே. [௨௮]

இப்படியாஞ்சிவபூசைமேன்மையின்னமெத்தனையென்றுரைத்திடுகேன்யமனேகேளாய், மைப்படியுங்கண்டனபராதஞ்செய்த மாபாவிதனைப்பார்த்தபாவந்தீர, வொப்பரியசிவபூசைசெய்திபோ யுன்னுலகிலெனச்சுகமுனிவனுரைத்தலோடுங், கைப்பிடிசூலம்பாசமுடையகாலன்கருணைமுனிவனைப்பார்த்துக்கழறுகின்றான். [௨௯]

சிவபூசைபுரிவோர்களும்மைப்போலெத்தேசத்துங்கண்டிலேன்றேவரீரித், தவமேவுமுருவெடுத்தேயுறைதலிந்தத்தரணியெல்லாங்கண்டுபிழைத்திடத்தான்கண்டீர், நவமானவுபகரணவகையோபத்திநலமோவாசாரமோநாடுங்காலத், துவமானமற்றவுமதிடத்தில் வந்தேயுற்றேன்கண்பெறும்பேறுபெற்றேனென்பான். [௩௦]

சுத்தமுறுசுகமுனிவீர்நுந்தாட்போதிற்சுரும்பெனவென்மனம்விரும்பிச்சுழன்றதென்றான், பத்திபெறுமுமைத்தொழவேகைகள்பெற்றேன்பாக்கியம்பெற்றேனென்றான்பரமானந்த, முத்திதருந்தவம்புரியுமுனிவர்நும்போன்மூவுலகந்தனிலுமிலையெனமொழிந்தே, யுத்தமமாமுனிவரடிபணிந்துசித்ரகுத்தருடன்மறலியுந்தன்னுலகுற்றானே [௩௧]

அரசுபுரிசபையதனிற்போய்ப்புகுந்தானணிப்பொன் னாசனமேல்வீற்றிருந்தான், பரசும்யமபடர்கடம்மைவிளித்தான்பூவைப்பத்திபெறுஞ்சுகமுனியைப்பழித்தபாவத், துரிசுடையோன்றனைப்பாசக்கயிற்றாற்கண்டஞ்சுருக்கிட்டேயிழுத்திட்டுத் துடிக்கமோதி, நரகின்மிக்கசண்டகோலாகலப்பேர்நரகிலிட்டுத்தள்ளுமெனநவின்றிட்டானே. [௩௨]

கொண்டுபோனார்சூலமுனைகளாலேகுத்தினார்தடிகள்கொண்டுமொத்தினார்கள், சண்டகோலாகலமாநரகிலிட்டுத்தள்ளினார்யமதூதர்துள்ளினாரத், ரெண்டுபுரிசுகமுனிவன்சொன்னவாற்றாற்சோதிபூசனைபுரிந்துசுகத்திருந்தார், மண்டுசண்டனுடன்சித்ரகுத்தர்தாமுமற்றைமுனிவனுமென்றேவழுந்திப்பின்னும். [௩௩]

பாரதனிற்சிவபத்தரானவன்பர்பரமன்பூசைக்குரியபதார்த்தமெல்லாஞ், சாரமாச்சேகரித்துப்பூசித்தேதத்தித்தம்பிரானடியரொடுந்தான்பூசித்தே, வரமுடன்சிவதருமகதையுங்கேட்டுவாழ்வரெனக்குகனந்திக்கி

சைத்தவாறே, நாரதமாமுனியுரைத்தானெனவியாதனவின்றதனைச்சூத
னைமிசத்திற்சென்னான். [௩௬]

பதினேழாவது சிவதன்மாதன்மச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௫௨௩.

பதினெட்டாவது,

விசையைசெயையுத்தரச்சருக்கம்.

வேறு.

கனசன்குடார்புனையுநரவரியாகியகரியோன்
பனகர்துயிலரிதேடியபாதன்குருநாத
னனகன்வடவாலன்னுகராலன்காலகாலன்
சனகன்முதலியர்போற்றியசரணஞ்சரணமக்கே. (௧)

வேதம்பயிறருராவன்வியாதன்விளம்பிடுவா
றுதன்குருநாதன்பணிநந்திசனைப்பார்த்தே
யீதிவ்வணமுன்னெய்தியதிறைவன்னடியவாமுன்
னோதுங்கருத்தறிந்தோதிடவேண்டும்மெனவுரைததான். [௨]

வருகின்றவரெவரோவவர்முன்போயினைமதுரந்
தருகின்றநல்வசனம்புகறருவாயெனச்சாற்று
மொருகுன்றனமணிமானமிவாநதேகெனவுடனே
பெருகுங்கணம்புடைசூழ்தரப்பெயர்ந்தேகினனன்றே. [௩]

அதிர்துந்துமிமுழங்கக்கடன்மலைவநதெனவாமென்
றெதிரவந்தநந்தியைத்தூரத்தினிடைகண்டனன்மகிழ்ந்தான்
பிதிரன்புடைமனத்தன்னுயர்பிருங்கிக்கணநாதன்
முதிர்பத்தியோடருகுற்றடிமுடிவைத்தனன்மொழிவான். [௪]

வந்தாய்சிவன்மாதைக்கொடுவரவேவிடநந்தி
யந்தோவெகுகற்பங்களடுத்தேகியவன்றே
நந்தாவரன்கருத்தின்படிநடக்கின்றவனீயே
யெந்தாய்வெகுகாலங்களிருந்தாயிதுதகுமோ. (௫)

நீவந்தபினையாநெடுமால்கோடியரயனோ
டோய்வந்தவர்சதகோடியரொன்றோபிறந்திறந்தார்
தாய்வந்திலளென்றாலெமையாள்சங்கரன்றன்பால்
வாய்வந்தனசெயவேசொலவந்தாயிலையந்தோ. (௬)

உமையம்மைதன்னிடத்துஞ்சிவனிடத்தும்முறுபூசை
யமையுங்கருத்துடையாயானத்[illegible]ணிடத்தே

கமைகொண்டனன்வெகுளுற்றிலன்கருணைக்கடலன்றோ
தமையன்புடன்றொழுவாரிடத்தினிற்சங்கரன்றானே. [௭]

ஒப்பாருமிலாநம்மிறையுக்ரன்னெனவுற்றுந்
தப்பானருளடிபோற்றியதனியன்பர்கடமக்கே
யப்பாலவன்பொறுப்பானெனவபராதங்கள்புரிந்தான்
முப்போதிருபோதன்றியுமுற்றும்பொறுப்பானோ. [௮]

என்றோதியபிருங்கிக்கணத்திறையோனைநந்தீசன்
குன்றோவெனுந்தோளோடுதன்றோள்கூடுறத்தழுவி
நன்றாகுமுன்மொழியென்றனனயர்ந்துற்றிருவோருஞ்
சென்றார்மணிமானத்தினிற்சிவன்மைந்தன்முன்வந்தார். (௯)

வந்துற்றனர்மணிமானம்விட்டிழிந்தேவணங்கினராற்
கந்தப்பெயர்க்கடவுள்ளதுகண்டானருள்கொண்டா
னந்திப்பெயர்த்தலைவாவுயர்பிருங்கிக்கணநாத
வெந்தைக்குரியீர்நீவிர்களிணையில்லிர்களன்றோ. [௧௦]

எனவோதினன்பிருங்கிப்பெயர்க்கணநாதனொடிசைப்பான்
மனமாசினரிடத்தேயுறமதியாமதிச்சடையான்
கனகாசலவிமயக்கொடிகணவன்னெமதையன்
னனகன்னெனசெய்தேயவணமர்ந்தானெனக்கேட்டான். [௧௧]

அபுதஞ்சதமொருகோடியற்புதநிற்புதமனந்த
முயரம்மளவையும்யோசனையுளவாநவமணியின்
செயலொன்றியகதிர்வீசியசிங்காரமண்டபங்க
ணயமொன்றியவெவற்றுற்றனனாதன்னெனநவில்வான். [௧௨]

கோமண்டபத்திடையோவுயர்கொலுமண்டபத்திடையோ
மாமண்டபத்திடையோதனிமணிமண்டபத்திடையோ
பூமண்டபத்திடையோவியம்பொலிமண்டபத்திடையோ
வோமண்டபத்துறைவோனெவணுறைகின்றனனுரைப்பாய். [௧௩]

அமுதந்நதியலைவாய்க்கரையதிலுற்றுலவினனோ
குமுதவ்விதழெமதன்னையையிணைத்தேகுலவினனோ
விமுதென்றல்வந்துலவுந்தனிமேல்வீட்டிலுற்றனனோ
வெமதன்புறுமிறையோனெவணியம்பாயெனவிசைத்தான். (௧௪)

கொற்றக்குமரேசன்னிவைகூறப்பிருங்கிப்பேர்
வெற்றிக்கணநாதன்புகல்வான்வீசியதென்றன்
முற்றுத்துறுசுகந்தப்புதுமுகைகாண்மலர்வசந்தத்
தெற்றிக்குளிர்திருமண்டபத்திடனென்றுசெப்பினனே. (௧௫)

அமலன்னெனைவிளித்தேதனதணைபாற்சென்றுவரப்போங்
குமரீன்னிடைப்போய்வாவெனக்கூறுற்றீனுப்பினனா

லமையாண்டருளரசேபுனையெய்தித்துயரொழிந்தே
னுமைநாதன்முன்னுறத்தாமதமுளதோபுகலென்றான். (௧௬)

வேறு.

அங்கவன்புகன்றவாய்மையறிந்தவைங்கரத்தோன்றமபி
சங்கையின்மகிழ்ச்சியோடுஞ்சார்ந்தனனிருந்தானிப்பாற்
றுங்கமாம்விசையையோடுசெயையென்பார்தொழுதாரின்ற
பங்கயமுகத்தார்தம்மைப்பார்த்துமைபகருகின்றாள். (௧௭)

தோழியர்கேண்மினென்றுஞ்சுகரூபியானபெம்மான்
வாழிதானெனநினைக்கவல்லனோவென்னலோடும்
யாழிசைமொழியாய்கேளாயிறைவருன்பிரிவினாலே
யூழியேயாகநாளொன்றிப்படியுறப்பெற்றாரால். [௧௮]

மங்குலையளகமென்றுமதியேதவதனமென்றுஞ்
சங்கமேகிரீவமென்றுந்தரளமேநகைகளென்றும்
புங்கமேவிழிகளென்றும்புலவர்கள்புகலுகின்றா
ரங்கவையிமவான்மங்கையணியுறுப்பொவ்வாவென்பார். [௧௯]

மேருவேதனங்களென்றான்மெய்யினிலணைக்கவின்பஞ்
சாருமோவென்பார்செய்யதண்கிடையதரமென்றா
லாரும்போதமுதால்கலாகுமோவதுதானென்பார்
சேருமோமணநாசிக்குச்செப்புமெட்பூவுமென்பார். [௨௦]

உந்தியின்சுழிக்குக்கங்கையூர்சுழியொப்போவென்பார்
தந்தியின்கரமோவாழைத்தடைகளோதுடைகளென்பா
ரந்தியின்பிறையோமாதரரைசியார்நுதற்கொப்பென்பார்
சுந்தர்கனிவாய்க்காம்பல்சொல்லவும்பெறுமோவென்பார். [௨௧]

மடநடைக்கனங்களோபபோவடிவிற்குமின்றானொப்போ
விடையினுக்கிணைசிங்கத்தினிடையென்பதியல்போவென்பார்
பிடிநடைப்பெண்கட்கெல்லாம்பேரரசுரைக்கொப்புண்டோ
கடைவிழிப்பார்வைகாட்டுங்காலமுமுளதோவென்பார். (௨௨)

தனத்தணிமுத்தமாலைதனையுடுக்கணமோவென்பார்
புனக்குயில்போதாதென்றன்பூவைதன்வார்த்தைக்கென்பார்
கனத்தெழுகாமத்தீயாற்கலைமதிக்குளிர்ச்சிதன்னை
நினைத்தனர்வரவேகண்டார்நெருப்பிதுநெருப்பிதென்பா. (௨௩)

பத்திமண்டபத்திற்போவார்பஞ்சணைமிசையேபோவார்
கத்திகைக்கூந்தன்மாதர்களிடம்பார்க்கில்லார்வே
ளத்திரமதனைவென்றவாண்மையுமிழந்தாரம்மா
பித்தரிற்கலங்கினின்றார்பெண்களுமயங்கியுன்னாலே. (௨௪)

சந்தனக்காவிற்சாரார்சந்திரகாந்தத்தாலே
சுந்தரமாகச்செய்தசோதிமண்டபத்திற்செல்லா

ரந்தரிஙினைப்பிரிந்தவாசைநோய்க்கவுடதந்தான்
வந்தருள்வாரைக்காணார்மயங்குவாரியங்குகின்றார். (௨௫)

காணவேயினியரானகடவுளைக்காணவம்மா
நாணினைபோலுமுன்றனைகைலாவமுதமுண்ண
வேணுறுசகோரம்போன்றவெம்பிரான்விழிகளன்றோ
தாணுவினிடத்திற்சாரத்தாமதம்புரிதனன்றோ (௨௬)

தம்புகழ்கேட்கின்றார்க்குத்தாளிணைபூசிப்பார்க்குச்
செம்பதுமத்தானெஞ்சிற்றியானங்கள்புரிகின்றார்க்கே
யம்பிகையழியாவீட்டிலின்பங்களளிக்கின்றாரா
னம்பர்மாவிமயநங்கைநயந்திடாதிருந்தியென்னே. (௨௭)

மலைமகள்கேட்டிவெள்ளிமலையவர்க்கின்பநல்கும்
தலைமையாம்பெரியவானதனம்பெற்றாய்நீயேயன்றோ
வலகிலாச்சத்ரயாகத்தவபிரதத்தாற்பெற்ற
நலமெய்போற்பரனைச்சேர்ந்துநலங்கொண்மெய்யுடையாயன்றோ.

அன்னபூரணியேயம்மாநித்யகல்யாணராகுந
தன்னிகரில்லாவின்பசாகரமதியஞ்சேர்ந்த
சென்னியாரிடத்தில்வந்துசடிதியிற்சேரவேண்டு
முன்னையாமிறைஞ்சுகின்றோமுன்பதம்பிடிக்கின்றோமால். [௨௯]

அனகனுமெம்மானுகத்தணைத்திடாதிருக்கிலுன்றன்
கனகபுட்பாதிபோன்றகவினுக்கோர்பயனுமுண்டோ
சனகர்சூழ்பரன்செய்லீலைதனக்கிளங்கொடிபோன்மேனி
யுனகமுற்றிசைந்தாலன்றோபெற்றதற்குறுதியம்மா. [௩௦]

இறைவிநீயெம்மான்பாகத்திருந்திடிலன்றோவுன்ற
னிறைமதிவதனமூரனிலாக்கதிர்விரிவதம்மா
வறைகழலண்ணன்மூரலளித்திடும்வதனங்கண்டே
பிறைமதிநுதலாயோகைபெறுவதுன்னிதயமன்றோ. (௩௧)

வாவியின்மலருநீலவரிவிழிப்பார்வையாலே
தேவிநீசிவனுக்கின்பஞ்செய்வதெக்காலஞ்சொல்லா
யாவியாமுன்னைக்கண்டாலவர்புயம்பூரிக்குங்கா
ணேவியநீயுங்கண்டாலுன்குயம்பூரியாவோ. [௩௨]

அன்னைகேளெம்பிரானாரவர்கவன்றுரைக்குமாற்றஞ்
சென்னியைந்தவற்றிலைந்துதிக்கண்கள்சிறுபாம்பு
துன்னுமாபரணஞ்சூண்சுந்தரமதனைக்கொன்றே
மின்னதால்வந்திலாளென்றினைந்தினைந்தேங்குகின்றார். [௩௩]

இப்படிப்புலம்புகின்றாரிறைவிநம்பால்வந்தற்றா
லப்படிப்பட்டவெல்லாமனுகூலமாகுமென்றார்

கொப்படிபாயுங்கண்ணுய்குறுமுரல்செய்பவேண்டா
முப்படிபாயுமையன்முன்வராயெனமொழிந்தார். [கச]

துன்னருங்கருணைவெள்ளச்சோதிமாநதித்தீரத்தி
லன்னைநீவிளையாட்டுற்றாலழகினுக்கழகேயன்றோ
முன்னவன்கருணைமேன்மைமெய்யொளிவடிவமெல்லா
முன்னையல்லாமலுண்டோவுமையம்மையுரையாயென்றார். (கரு)

உருப்பெறுமுன்னோடுற்றாலுலகெலாந்தழைக்குங்கண்டாய்
கருப்பெறுமுயிர்கள்வாழக்கடிதெழுந்தருள்வாயென்றே
திருப்பொலிவிசையைசொன்னுளெனப்பராசரனார்செல்வ
னருட்பெறுசூதனேமிவனத்தவர்க்கருள்செய்வானே. (கசு)

பதினெட்டாவது விசையைசெனயுத்தரச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-ருரு.

பத்தொன்பதாவது,

நந்திகணதிபன்வந்தனைச்சருக்கம்

வேறு.

உண்ணிலாவன்பின்வெள்ளமுவட்டெடுத்தோடிற்றென்னக்
கண்ணிலானந்தவாரிபொழியமால்கமலனிந்த்ர
னெண்ணிலாமுனிவர்வானோரேத்தவீற்றிருக்கும்வெள்ளி
வெண்ணிலாச்சிலம்பன்செய்யசிலம்படிவிரும்பிவாழ்வாம். (க)

வேணிசேர்வியாசன்சொல்வான்விரைநீலவேணிமுன்னர்
வாணிபோல்விசையைசொன்னவாணிகேட்டுளமகிழ்ந்தா
ளாணியாந்தோழிசெல்லாரமுதுண்டாண்மான்பிடித்த
பாணியாரனுப்புந்தூவெண்பட்டெடுத்துடுத்தாளன்றே. (உ)

புரிகுழல்வகிர்ந்துவாசப்பூமுடிச்செருகிக்கொண்டாள்
விரிவெயினிலவெறிப்பமின்னெறித்திடுமெய்யெங்கு
மரியபொன்னாரம்ரத்நாபரணங்களலங்கரித்தாள்
பரியுஞ்சேடியர்கொணர்ந்தபள்ளையத்தமுதுமுண்டாள் (ங)

மைந்தரைப்பந்திவைத்தாள்மாணிக்கப்பள்ளையத்திற்
சுந்தரபோனகங்கடுய்த்திடப்பணித்தாள்பின்னர்
நந்தியேமுதலவாயநற்கணநாதர்க்கெல்லா
மந்தரிபரிகலத்தாரமுதுணவளித்தாளன்றே. (ச)

காதலோடெவருங்கொண்டார்கைகளும்பூசினார்கள்
சீதளகளபகற்பூரங்கண்மேனியிற்றிமிர்ந்தார்

தாதவிழ்சுகந்தந்தாம்பூலாதியுந்தரித்துநின்றா
ரோதுறுகணங்கள்கண்டாருவந்தனரார்க்கின்றாரால. (௫)

பஞ்சதுந்துமிகள்பேரிமத்தளம்படகந்தாரை
கஞ்சத்தின்கருவியாயகண்டைகைமணிசேகண்டி
யெஞ்சலிலொருபத்தெட்டென்றிசைக்கும்வாத்தியங்களெல்லா
மஞ்சுறவூழியாழியார்ப்பெனவார்த்தவன்றே. (௬)

பெருகியமுழக்கங்கேட்டான்பிறையணிவேணிப்பெம்மா
னருகினிலிருந்ததண்டிகணாதிபன்றனையழைத்தான்
வருகின்றாடேவிபோலும்வாத்தியங்கடலோரேழும்
பொருகின்றமுகிலோரேழும்போன்மெனமுழங்கிற்றன்றே. [௭]

சென்றுநீபார்ப்பாயென்றுசெப்பினானுடனேதண்டி
நன்றுநன்றெனப்பணிந்துநகையொளிவிமானமேறிக்
குன்றுவிண்பரந்ததென்னவுமையிடங்குறுகலோடு
மன்றதுகண்டநங்கையருகுறுங்குகற்குச்சொல்வாள். [௮]

ஏவனோவருகின்றான்பாரென்றலும்புறத்துவந்து
சேவலங்கொடியோன்பார்த்துத்தேர்ந்துமீண்டுரைக்கலுற்றா
னாவியேசிவனுக்கின்னோனதிபத்தனாகுமன்றே
கோவின்வண்கொடிகளாடுங்குளிர்மணிவிமானந்தானே. (௯)

எனக்குமரேசனின்றுகூறினனிமயத்தன்ன
தனக்கரனேவவந்ததண்டியுமருகுசார்ந்தான்
மனக்கருத்துடனேவீழ்ந்துவணங்கியஞ்சலிக்கையோடுங்
கனக்குழலுமையாண்முன்னேநின்றனன்கழறுகின்றான் (௧௦)

அம்பிகையின்னமுண்டோதாமதமமலனேவச்
செம்பொனின்விமானமீதோகொடுவந்தேன்சிறப்பதாக
வும்பரோடிமபர்யாருமுறுதுயரொழிந்துவாழ
வெம்பிரான்மகிழயாங்களுய்யவேயிவர்வாயென்றான். (௧௧)

பன்னியமாற்றங்கேட்டாள்விமானத்தின்பொலிவுபார்த்தாண்
மின்னையேயனையாள்சேடிவிசையையுஞ்செயையும்பார்த்
துன்னவேயடியார்சென்மத்துயர்க்கடற்கரையிலேற
வென்னையாளுடையாள்செம்பொன்விமானத்தினேறினாளே. [௧௨]

ஆடகப்பாவைபோலுமற்புதமடந்தைமார்க
ளாடகமடவார்கூடிநாட்டியநடிக்கலுற்றார்
மாடகமகரயாழ்கள்வானதுந்துமிகளார்ப்ப
வேடகத்தலர்விமானமிசைந்தசைந்தேகிற்றன்றே. (௧௩)

கணபதிகுமரனந்திகணாதிபன்பிருங்கிதண்டி
குணபதியழகும்பைதோழியர்குறித்தேயேறு•

மணமிகுவிமானமுன்னும்பின்னருமருங்குமொய்த்த
விணையிலானுறைதற்கைக்தாமயுதயோசனையினெல்லை. (௧௪)

கையினிற்பிரம்புகொண்டுகணநாதர்கோடிகோடி
யையைதன்விமானஞ்சூழநெருக்குறவடர்க்கின்றாராற்
செய்யதோர்விமானமீதிற்றேவர்கள்பொழிபூமாரி
வையகத்துடனேவானுமறைந்திடநிறைந்தவன்றே. (௧௫)

மன்றலார்தென்றல்புட்பமாரியின்பராகத்தோடு
குன்றசைந்தாற்போற்செல்லுங்குளிர்மணிவிமானத்தூடு
சென்றதுவாசம்வீசத்திருவனார்கவரிவீச
நன்றருள்வீசுமன்னைநகைநிலாவீசச்சென்றாள். (௧௬)

தண்டளிர்ச்சாலைசோலைதடாகங்கடண்ணீர்ப்பந்தர்
மண்டபமுப்பரிகைமாளிகைதெற்றிமுற்ற
மெண்டருநெறியினோங்கவியற்றியசிறப்பையெல்லாங்
கண்டளிர்த்திடவேகண்டுசென்றனள்கருணைகூர்வாள். (௧௭)

மாங்குயின்மயிலோடன்னம்வரியளிசக்ரவாக
நாங்கணவாய்சுகங்கணலங்கொள்பேட்டுடனேசேவ
லாங்கலந்துறைதல்கண்டாடமபிரான்றனைநினைந்தா
ளீங்கிவளைக்கண்டகணங்களைத்தெடுக்கின்றாரால். (௧௮)

வேறு.

வேதமெய்ப்பொருளேவிசையீபவாவீறுசொற்கவுரீவிசையீபவா
நாதனுக்குரியோய்விசையீபவாநாடுதற்கரியாய்விசையீபவா
மாதிரந்தொழுவாய்விசையீபவாமாநிலந்தருவாய்விசையீபவா
சோதிமங்களையேவிசையீபவாசொல்லுசாம்பவியேவிசையீபவா. (௧௯)

சறுவமங்களையேவிசையீபவாசங்கரனிடத்தாய்விசையீபவா
வறிவினுக்கறிவேவிசையீபவாவன்பர்க்கின்பருள்வாய்விசையீபவா [வா
வெறிகொடார்விகடைவிசையீபவாவிசையையேசெயையேவிசையீப
நறுமலர்த்திருவேவிசையீபவாநங்கைவாகீசுரிவிசையீபவா. (௨௦)

சாம்பவிசறுவாணிசெயசெயசங்கரிமகமாயிசெயசெய
காம்பெனுந்தோளுமையேசெயசெயகாலகாலப்பிரியேசெயசெய
வாம்பல்வாயம்பிகையேசெயசெயவனகையேவரைமாதேசெயசெய
தேம்புசிற்றிடைத்தேவிசெயசெயசெய்யதாமரைத்தேனேசெயசெய.

தேவரம்பையர்பூசைகொளம்பையேசெல்விசித்தகல்யாணிசெயசெய
தூவியன்னநடையுடைத்துற்கையேசுந்தரிசண்டிகையேசெயசெய
மேவுமீசற்கினியபிரியமத்தாய்விமலையாம்விசாலாட்சிசெயசெய
பூவில்வானவர்போற்றும்பொன்னேதிரிபுரபயிரவிமாதேசெயசெய. ()

பிள்ளைமாமதிசூடியசங்கையேபிரமராம்பிகைத்தாயேநமோநம
கிள்ளைபேந்தியகையாய்நமோநமகிண்கிணிமேகலையாய்நமோநம [நம
வள்ளைவார்குழைப்பெண்ணேநமோநமமச்சம்போன்றிடுகண்ணீநமோ
கள்ளுண்கோதைக்குழலாய்நமோநமகாங்கேயனைத்தந்தாய்நமோநம. ()

நீலவேணிநிமலைநமோநமநித்தியானந்தரூபிநமோநம
பாலலோசனத்தெந்தம்மானுடலொருபாதிகொண்டபரையேநமோநம
சூலமோடுகபாலங்கைகயேந்தியசுந்தரியந்தரியேநமோநம
வாலகாலமுண்டாருக்கமுதமாமாயியேமகமாயிநமோநம. [௨௪]

வேறு.

எங்களையேகாத்தருள்வாயிமயமாமலைபயந்தவிறைவியேயுன்
பங்கயமாமலரணையபாதமேதுணையல்லாற்பற்றொன்றில்லோஞ்
சங்கரனாரிடத்தினினீயந்தரங்கத்துடனிருக்குஞ்சமையந்தன்னி
லெங்கள்பிழைபொறுத்தாளவரம்வாங்கித்தரக்கடினேகாயென்றார். []

சிறுவர்கடாங்குற்றங்கள்செய்தாலுந்தருதாயார்சீறாரன்றே, குறைய டியேம்புரிந்தாலுமன்புவைத்துநீகருணைகூர்வாயம்மா, பிறையணிநுதற் றாயேசங்கரனை மெங்களுடைப்பிதாவுநீயு, மிணையுமெமைப்பராமுகஞ் செய்யாதருளக்கடிதினெழுந்தருள்வாயென்றார். [௨௬]

காலகாலன்சரணத்தடிமைபூண்டேமெமக்கோர்கவலையுண்டோ
தாலமிசையாவர்தமக்கஞ்சுவோமுனசரணந்தனைப்பூசிப்போம்
பாலனஞ்செயுனதருட்குப்பாத்திரமாமெமைநீயும்பரனுங்கூடிக்
கோலமுடனந்தரங்கத்துறைபோதிலெமக்கருளக்குறிக்கொள்வாயே. []

அரனுருவிற்பாதிகொண்டாயெமக்கருள்வாயுன்னருள்பெற்றனமே லம்மா, வுரவுறுவோம்பாங்களாண்டவன்பெருமையடிச்சேரிக் குளதா மன்றோ, வரமுறபாம்புகல்வார்த்தைமறவாமனீயவர்க்கு வழங்கியெம் மைத், திரமுறச்செய்திடிலவருக்குமாசகாயப்பெயருந்திடமாமன்றே.()

இப்பரிசுகணநாதர்கூறுகின்றமொழிகேட்டாளெம்பிரான்ற, னுைப் பரிபெருமைபெலாம்வினவியநாயகிமிகவுமுவந்தாள்யாருஞ், செப்பரி யபெருமைபரன்றேவென்றுண்மனத்தவரைத்தியானஞ்செய்தா, டப் பிலாவானந்தங்கொண்டேவின்மயிர்ப்புளகந்தான்கொண்டாளே. [௨௮]

சுந்தரிபப்பரிசுசெல்லுநெறியிலரனாரிருக்குஞ்சூழற்பாங்கர்
வந்தரிபரிசித்திரமாமண்டபங்கண்டதனிலுறமனங்கொண்டாளான்
முந்நரிபாசனங்களதிலனந்தநவோசனத்தின்முறையாலேறி
யந்தரிசந்திரனுதித்திதாலெனவிருந்தாளெவர்கீதுமிளைப்பாற்றினளே. ()

ரண்... த்திலுமையிருந்தாண்மதனைவென்றவன்னலார்மானஞ்சேணிற்
க...னாரிங்கவ்நாளுன்றுளத்திலிருந்தபெருங்கவலைதீர்ந்தார்

மண்டேறுங்காதலினினியமொழிப்பூவைகோலையிதழ்மதுரப்பாவை
யொண்டொடியுந்தாமுமுனமிருந்தபரிசத்தனையுமுன்னினாரால். (௩௧)

சந்தனப்பூண்முலைமார்பிலழுந்தவேயணைத்தணைத்துத்தழுவிக்கொள்வோஞ், சுந்தரவாண்முகத்தெழிலுங்காண்போமஞ்சுகவார்த்தைதச்சுகமுங்கேட்டோம், கொந்தளகமணங்கவர்வோமிதழ்த்தேனுண்போஞ்சப்ரகோளத்தேறி, மந்தமாருதம்வீசவிற்றிருப்போமெனவுளத்தின்பகிழவுற்றாரால். (௩௨)

இவ்வாறுபுகன்றொருமண்டபத்திரத்னவாசனத்தினினிதேறி
மைவாழுண்மிடற்றான்மகிழ்ந்துவீற்றிருந்தனனம்மா றந்தேர்ந்தே
யொவ்வாதசதுர்வேதமுறைத்தருளுமுனியுரைத்தானன்னை பொன் ா
செவ்வாறுசேர்சூதனைமிசவாணருச்கினிதுசெப்பினனே. (௩௩)

பத்தொன்பதாவது தண்டிாஞறர வரச்ரிசரு ழற்றிற்
ஆகத்திருவிருத்தம்-௬௨.

இருபதாவது

தேவிசிவனைப்பொருந்தினசருக்கம்

வேறு.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRAR
BESANT NAGAR, MADRAS-9

பொங்கரவாடவேயம்புலிபாடப்புலித்தோலா
தங்கமாஞ்சபையிலாடுந்தம்பிரானெம்பிரானர்
மங்களங்கண்ணிநீலமலர்க்கண்ணிவாமஞ்சேர்ந்த
திங்களங்கண்ணிவேணிச்சிவனடிக்கண்ணிவாழ்வாம். (௧)

மாதவன்றனையானமாதவன்சொல்வான்கண்க்
ளாதவன்சோமனங்கியாயவனுமையாள்வந்த
போதாண்விமானம்வந்தபொலிவுந்துந்துமியினார்ப்பு
மோதியகணங்களார்ப்புங்கண்டுகேட்டுளம்பூரித்தான். (௨)

பருத்தாகத்தார்நீர்க்குப்பாதவிப்பார்போலுற்ற
முருகவிழ்கொன்றைபார்க்குமொய்குழலுற்றபோதிற்
றருமிளநீர்சிற்றுண்டிதருணத்தேபெற்றதாமா
லருகுறக்கண்டானண்ணலாகமும்புளகங்கொண்டான் (௩)

பற்றுறுபசியாளர்க்குப்பாற்சோறுகையுற்றாற்போ
லற்றவர்தமக்குச்செம்பொனருங்குமகப்பட்டென்ன
வற்றுறுதடத்தில்வாரிவரிலுயிர்மகிழ்ச்சிபோலப்
பொற்றொடிவந்தபோதிள்ளவிலாமகிழ்ச்சிபூத்தான். [௪]

தன்னிகர்விசையையோடுசெயையுமேதளிர்க்கைதாங்கப்
பொன்னடிபணிந்துபூமின்னிருவரும்புகழ்ந்துபோற்று

மன்னியவிந்திராணிமுதலியோர்வரிசைசெய்ய
வன்னமென்னடையாள்வந்தாளண்ணறன்முன்னமன்றே. [௫]

அம்பிகைகண்வேலண்ணலரும்புயந்தன்னிலாழ்ந்த
சம்புவின்கண்ணுமம்பைதனங்களிற்பாய்ந்தவன்றே
நம்பன்முன்பணிந்துநங்கைநாணொடுமருங்குநின்றா
ளெம்பிரான்கண்டணைத்தேயிடத்தினிலிருத்திக்கொண்டான். [௬]

கண்டனர்கணங்கள்கண்கள்களித்தனருமையாளோடு
மண்டர்நாயகன்றானுற்றானிலமின்றுய்ந்ததென்பார்
மண்டுபூமாரியோடுமழைக்கண்ணீர்மாரிபெய்தார்
தண்டெனவிழுந்தெழுந்தார்தனித்தனிகளித்தாரன்றே. [௭]

தூரியம்பேரியார்த்ததுந்துமிக்குழாங்களார்த்த
தாரையெக்காளஞ்சின்னஞ்சங்கமெங்கெங்குமார்த்த
வாரிசையோடுமெங்களையன்வீற்றிருத்தல்கண்டார்
நாரியர்தாமும்வந்தார்நாடகமாடினரால். [௮]

பண்ணேறுமகதிவீணைபலாண்டிசைபாடுகின்றார்
தண்ணேறுமழகாலத்தித்தட்டங்கள்சுற்றுகின்றார்
கண்ணேறுகழிப்பார்போலக்கடவுளோடுமையையைச்சூழ்ந்தார்
விண்ணேறுமரம்பைமாதர்மேனகையாதியோரே. [௯]

வேறு.

தமரமிகுஞ்சபைதனிலுறைவோர்கள்
விமலமுழுமுதல்விளம்பியெழுந்தா
ரமலனோடம்பையுமன்பர்தமிதயக்
கமலநிகர்த்திடுகடிமனைபுக்கா. [௰]

கதியுலகெனவொளிர்கடிமனையதனின்
மதியுலகெனமிளிர்மலரணைமிசையே
புதியநன்மலரளிபுகுமவையெனவே
யதிகனுமமலையுமவண்மருவினரே. [௧௧]

பாலுறுசுவையும்பருகுறுபுலனு
மேலுறுமுலகுமேவுநல்வினையுஞ்
சீலர்தம்மன்புந்திருவடியும்போ
லாலனுமமலையுமரியணையுற்றார். [௧௨]

வேறு.

அருத்தியோடுலகெலாமளித்தவம்பையா
மொருத்தியுமுயிர்க்குயிராமொருத்தனும்
பொருத்தமாயுலகெலாம்பொருந்தவைகிப்பின்
றிருத்திடுமானந்தசபையிற்சேர்ந்தனர். (௧௩)

தோகையுமதனைவெல்சுந்தரேசனு
நாகரீகம்பெறுநலங்கொண்மண்டபத்
தோகைசேர்பரியங்கத்துலகமுய்யவே
யேகசிங்காதனத்தெய்திமேவினர் (கச)

இலங்கியமணிப்பணியங்கமெங்கணு
நலமபெறவணிந்தனர்நாதனோடுமை
துலங்குமண்டபத்தூற்றளென்றருந்தன்றான்
றலைப்புகழ்நைமிசத்தவர்க்குச்சாற்றினான். (கரு)

இருபதாவது தேவிசிவனைப்போருந்தினசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கூ0எ.

இருபத்தோன்றாவது,

சைவர்பரிகலப்பிரசாத மகிமைச்சருக்கம்.

வேறு.

தங்கபபுரிபோல்விரிதந்தொளிருஞ்சடையானிமையோர் தமையாளுடையான், கொங்கைக்குயிலாண்மயில்போலியலாள்கொடிநேரிடையாளிடையன்புடையான், வெங்கட்புலியின்விரிதோலுடையான்விரையாரிதழித்தொடையான்மிடல்சேர், செங்கட்டனிமால் விடையானடியார்திகழ்சேவடியெம்முடிசேர்த்துதுமே. (க)

வேதம்பகரும்வியாதன்புகல்வான்வெறியார்மலர்மண்டபமேவினரா
ஞதன்னுமையாள்புதல்வர்வரவேநாடுற்றனர்முன்னனுகுற்றனராற்
போதந்தருவிஞ்ஞானுந்தப்பொலிவாயுறைவோரிருவோர்தமையும்
பாதந்தொழுதார்மறையின்முறையாற்பகருந்துதிபற்பலபன்னுவரால்.()

இமையோர்பணிவெற்பிறைவாசரணமிமயத்தரசன்மகளேசரண
மமைவாமிடபத்துசனேசரணமரியின்கொடிசேரனையேசரணங்
கமழ்பூதியின்மேனியனேசரணங்களபம்புனைமெய்யுடையாய்சரண
மெமையாள்கருணைவிழியாய்சரணமிருதாமரையாகயனீசரணம். (ஈ)

பொருசூலமெடுத்தவனேசரணம்புனைதாமரைசேர்கையாய்சரண
மரிதாகியதிக்குடையாய்சரணமணிதூயொளிபட்டுடையாய்சரணம்
வரிவேணியிளம்பிறையாய்சரணமலர்க்கொந்தளகப்பிறையாய்சரணந்
தெரியாடரவக்குழையாய்சரணந்திகழ்மரமணித்தோடுடையாய்சரணம்

உடுக்கோளணிமாலிகையாய்சரணமொளிர்முத்தணிகந்தரத்தாய்சரண, மடுக்குந்திகழ்பொன்னிறத்தாய்சரணமணியார்பசும்பொன்னிறத்தாய்சரண, மடுக்கும்புரமூன்றெரித்தாய்சரணமதுகை டவனைநெரித்

தாய்சரணம், படுக்குஞ்சமனையுதைத்தாய்சரணம்பகட்டாசுரனைவதைத்தாய்சரணம். (ரு)

ஒருஞானவுருவாகும்பரனேபோற்றியெய்ப்பில்சிதானந்தமன்பர்க்கருள்வாய்போற்றி, மருவாகுஞ்சடைமவுலியரனேபோற்றிமணிநீலவேணிபுனைமயிலேபோற்றி, திருவாருங்கற்பூராகரனேபோற்றிதிகழ்தருகுங்குமந்தரித்தசெல்வீபோற்றி, குருவாருங்கூவிளவர்ச்சனையாய்போற்றிகுருக்கத்திமலர்விரும்புங்குயிலேபோற்றி. (சா)

மண்டலசிங்காரனேபோற்றிபோற்றிமாணிக்கவலங்கரியேபோற்றிபோற்றி, யெண்டருவேதாந்தத்தோத்திரத்தாய்போற்றியெழில்விசுவேசன்புகழுமிறைவீபோற்றி, யண்டர்கள்யாவரும்வணங்குந்தலைவாபோற்றியம்புயமாதடிபரவுமமலைபோற்றி, பண்டருமென்மொழிதழைவக்குழைந்தாய்போற்றிபரமரருண்மகிழ்ச்சிபெறும்பரையேபோற்றி. (எ)

காசினிக்குத்தந்தையேபோற்றிபோற்றிகடலுலகீன்றருடாயேபோற்றிபோற்றி, பேசுமதன்றனைக்காய்ந்தாய்பெரியோய்போற்றிபெரியமதன்றனையேவல்கொள்வாய்போற்றி,யேசறவேவிடநுகர்ந்தாப்போற்றிபோற்றியின்னமுதநுகர்ந்தாயேபோற்றிபோற்றி, தேசுபெறுமகேசுரனேபோற்றிபோற்றிசீர்திருக்கொந்தளதேவிபோற்றிபோற்றி. [அ]

இன்னவாறனந்தந்தழைக்கநல்குமிறைவனையுமிறைவியையுமிருவர்மைந்தர், முன்னர்நின்றுபுகழ்ந்தவுடன்றழுவிக்கொண்டார்மொழிகின்றாரானைமுகன்குகனேவாரீ, ரென்னவுமக்கியன்றவரங்கேட்பீரென்றாரீன்றவரைமைந்தர்பார்த்தியம்புகின்றா, ரன்னையுமத்தனுமானவுங்கள்பாதத்தன்புமனமறவாமலருள்வீரென்ன. [கூ]

பின்னருநன்னுமங்கண்மந்திரங்கள்பெருகுசிவார்ச்சனையுபயோகத்தைதவேண்டல், சொன்னவாகமம்வேதம்புராணமங்கந்துதித்தருளுநும்பெருஞ்சீர் தீர்த்தஞ்சேவை, பன்னுவதுசிவவிரதந்தியானம்யோகம்பகர்வரியசிவஞானமுதலவான, மன்னுசிவபுண்ணியமாமிவற்றிலெங்கண்மனஞ்செல்லவேண்டும்வரம்வழங்குமென்றார். [கo]

பொன்னாசைமண்ணாசைமோகமின்னார்போகததில்வருமாசையேனுமுத்தீயின், மன்னுதபடியடியார்க்கருளுமெந்தாய்மர்தாவோாவினியசுவைகண்டாற்போ,னன்னறுமலர்கண்டவண்டுபோலநளினநெய்தளிருசுடரைக்கண்டவாபோ, லெந்நாளுமுமதுரியசரணங்கண்டா லெமதுமனங்களித்திடவேவேண்டும்வேண்டும். [கக]

இன்றுமதுசரணதரிசனந்தான்பெற்றோமிதுபோதுமினியெய்தாப்பொருண்மற்றுண்டோ, வென்றிதருநும்பதமேயிதற்குச்சாட்சிவேறிலையென்றுரைத்துநின்றமைந்தர்தம்மைத், துன்றுமுவகையினுடனேதழு

விநாதன்சொன்னபடியேயாகக்கடவதென்றே, பென்றுமென்பாணீயுமி
பமுகனுந்தாயுமினிதிருக்கவென்கருத்தப்படிச்செய்வீரே (கஉ)

என்றவரையருகிருத்தித்தழுவிக்கொண்டேயிரத்தினவாபரணமு
டன்விசித்ரவாடை, நன்றளித்துக்குமரனைப்பார்த்துரைப்பானெம்மா
ணங்கையிவட்னையழைத்துவநதுளோர்க, மென்றுநந்திபிருங்கிதண்டிமு
தலோரான தூயகணத்தலைவருக்குமற்றுளோர்க்குஞ், சென்றுநந்தப்பிர
சாதமாடைபூண்கள்செய்யுமுபசாரமெலாஞ்செய்தியென்ருன். [கங]

சொன்னவுடனிருவோருந்தொழுதுநின்றுதுதித்துவிடைகொண்
டெடர்ச்சோதிதுன்னு, மன்னுமணிவாசல்பலகடந்துசென்றுமாணிக்க
மண்டபத்தில்வந்துசேர்ந்தார், பன்னுநந்திமுதற்கணங்களெவரும்வந்
தார்பணிந்தவர்பாற் றேத்திரங்கள்பண்ணுகின்ரு, ரன்னவரைக்குகனை
ழைத்தேபெம்மான்சொல்லியருளியவாறேவரிசையமைக்கின்ருனல்.

குமரேசனினைத்தவுடனன்னராசிக்கூறுகறிவர்க்கமதுவர்க்கராசி
கமழ்கூரும்பனிநீரிற்களபராசிகற்பூரகுளிகைதாம்பூலராசி
யமரேசற்கரியசித்ரவத்ரராசியாபரணராசிமலைமலைகள்போல[ன்ருனல்.
வளமைவாகவர்துகுவிந்திடவேமுந்து மடற்கணங்களுவகைபெறவளிக்கி

நந்தியுடன்பிருங்கிதண்டிமுதலாயுள்ளநாயகமாங்கணநாதர்தங்கட்
கெல்லாம், புந்திமகிழ்போசனந்தாம்பூலகல்கிப்போதுபொனவாடையாப
ரணமீந்தான், சுந்தரிமுன்கொடிகுடைகடாங்கிவந்தோர்சொல்லரும்ப
லவியந்துவைத்தோர்பணிகள்செய்தே, வந்தவர்க்குமன்னமுடன்களப
ம்பஞ்சவாசந்துசாபரணம்வழங்கினனே. [கசு]

எங்கள்பிரானுலயச்சுற்றெங்குந்தங்கமிழைத்தரத்நமாளிகைகுளி
கையுண்டாக்கி, யபகங்கேகணங்கள்வீற்றிருக்கும்வண்ணமமைத்திடவ
ங்கவரிருந்தார்செவ்வேலண்ண, றிங்கண்முகமங்கைதெய்வயானையின்
பந்தினைத்துமணிமாளிகைபிற்சேர்ந்திருந்தான்,றுங்கதுண்டியைங்கரன்
வல்லவையினேடுசோதிபெறுமாளிகையிற்றுன்னினனல். [கஎ]

மங்கையுமைநாயகிதன்சேடிமாராமாதரார்செயைவிசையைமகிழு
ம்வண்ணங், தங்கமணிப்பூடணங்கள்விசித்ரவாடைதான்கொடுப்பவாங்
கினர்தாங்கிக்கொண்டா, ரங்கதற்பினுடகஞ்செய்மாதர்க்காடையாபர
ணவரிசைகளநேகஞ்செய்தா, ளிங்கிதன்பினங்கையுடனெங்களுதனி
யற்றியவுப்பரிகைபுகுந்திருநதானன்றே. [கஅ]

ஆங்கமரும்போததனிலெம்பிராட்டியமைத்தனடன்கையாலன்னதியெ
ல்லாம், பாங்குடனேபரிமாறவெமபிரானர்பரிந்தழுதுகொண்டனரம்பி
கையுங்கொண்டா,ளோங்குமடைக்காயுநுகர்ந்திருந்தபோதி*லோலைப்பூ

* ஓலைப்பூ-தாழம்பூ.

வாசம்வந்துவிசிற்றங்கே, யிங்குமைக்கிதுவாகாதுமையேகொள்ளென விளைறவிபிறைறவனைப்பார்த்தியம்புகின்றாள். [௧௯]

ஐயனீவிரும்பிநுகர்சேடமல்லாலடியனுகர்க்கிடலாமோவென்று னின்று, டையனுயகிகையிலுருத்ரவீணை தாங்கினாள்சிவனருகிற்சார்ந்திருந்தாள், செய்யமுறுக்காணியுடனரம்பின்கோவைச்சீர்கண்டாள்சுருதிகொண்டாள்சிவன்றனுமம், பையவெடுத்தரகாசங்கரவீமேசபற்கபராபரவெனவேபாடினாளே. [௨௦]

பாடினாள்சிவன்மகிழ்ச்சியாற்கொண்டாடப்பலகலை வல்லவைபரமானந்தக்கண்ணீ, ராடினணகங்களாற்றெறியேயென்னுமதிசயருத்திரவீணைவரலாறெல்லா, நாடினானறிகிலேன்புகல்வாயென்றுனுயதனும்புகல்கின்றான்முன்னைநாளி, னீடியகந்திருவரினிதிருந்துவாழு நீணகரமொன்றுளதுநிகழ்த்தக்கேளாய். [௨௧]

வனைபுகழ்நகரிலோரிலிங்கமோங்கிவளர்ந்துளதாங்கதன்பெருஞ்சீர்வகுக்கலாமோ, வனையநகர்மேவியகாந்திருவர்ச்சேக்தலாகு மவனூகுவென்பானுண்மைமிக்கான், புனைமணிப்புட்பகவிமானத்திலேறிப்புருந்துலகம்பார்க்கவேபுறப்பட்டானல்,வினையமுடனதிசயமெங்குளதாமென்றுவிசாரிப்பானவனொருவெற்பருகுசார்ந்தான். (௨௨)

அந்தவரைச்சாரலில்வீற்றிருந்தசைவவாண்மைபெறும் யோகியைக்கண்டங்கணுற்றே, யுந்துபுகழ்க்கநதிருவனூகுவென்போனுலகிலியன்றனைப்போலவொருவற்காணே, முந்துசிவனிவனெனவங்கவனைத்தாழ்ந்துமொழிகின்றான்சைவநெறிமுதன்மைபெற்று, யிந்துசேகரன்பூசைப்பலனும்பெற்றுயென்பெறநீயிவ்வரைவந்திருக்கின்றுயே. (௨௩)

என்றுரைத்தோன்றனைப்பார்த்துநகைத்தேசைவத்திருங்கருமத்தவயோகியியம்புகின்றான், றுன்றுமிவண்மகத்தானவிலிங்கநாதன் சுத்தராஞ்சித்தர்தொழுஞ்சித்தநாத, னன்றிதருமிவ்விலிங்கப்பெருமையெல்லாநற்செவியாரமுதமெனநவில்வாங்கேட்டி, குன்றிதனில்விரதனெனுமந்தணளன்குருடனகங்கைசொத்தைகுட்டரோகி. [௨௪]

கூனனுடுத்திடுகூறைநாறுபீறல்கொடும்பாவம்புரிந்ததனுற்படும்பாடொன்றோ, வானதுயராளனல்லவினைமுன்செய்தானுதலாலித்தலம்வந்தடுத்தானன்று, னீனமகற்றிடுஞானவிலிங்கமிங்கணிருந்ததறியானினைப்போதிருந்தானப்போ, தூனமிலோர்கின்னரனிவ்விலிங்கபூசையுஞற்றுவானன்பினுடனுவண்வந்துற்றான். (௨௫)

வந்துசைவசீலத்தான்பூசைசெய்வான்மஞ்சனங்களாட்டினன்மலர்கள்சூட்டிச், சிந்தைமகிழ்கிருதகுளபாயசந்தான்றீங்கனியபூபமதுவர்க்கத்தோடு, நந்துகதலியினிலையிற்றனிகைசேர்த்தானலமிகு நைவேத்தியங்கணுடிச்செய்தான்,மூந்துமுபசாரங்கள்புரிந்தானன்பின்மூன்பணிந்தான்றோத்திரங்கண்மொழிந்தானன்றே. (௨௬)

மன்னினுன்சண்டபூசைபினைப்பின்னின்மாலியமோரிடத்திருந்து ண்டுவகைகூர்ந்தா, னன்னபரிகலத்தரம்பைத்தளிரைக்கைக்கொண்ட யலெழிந்தானங்கிருந்தவாதணுளன், முன்னர்விழுந்ததுதடவியெடுத்து க்கொண்டான்மோந்துகொண்டான் மணங்கண்டான்மூர்ச்சைதீர்ந்தா ன், றுன்னுபசியாலதனைவாயில்வைத்துச்சுவைகண்டான்மென்றுமென் றுதுய்த்திட்டானே. (உஎ)

அருந்தினுன்விண்ணுலகின்மருந்துண்டான்போலகத்திலுறுதீப்பிணி களனைத்துந்தீர்ந்தான், வருந்தியமூப்பதுவொழிந்தானிளமைசார்ந்தான் வரிவிழிகடெரிந்திடவேமகிழ்ச்சிகூர்ந்தான், பெருந்தவமென்செய்தே னென்றகம்பூரித்தான்பிரியமுற்றிவ்விலிங்கத்தினருகேசார்ந்தான், பொ ருந்தவேபிராதக்காலம்பூசித்தோன்புகுதனனுச்சியினுமெம்மான்பூசை செய்வான். (உஅ)

முன்போலவருச்சனைநைவேத்தியங்கண்முறைபுரிந்து பரிகலத்தி னமுதந்தன்னை, யின்போடுமருந்தியிலைதன்னையப்பாலெறிந்தனனங்க துபார்ப்பானிருந்துபார்த்தான், பொன்போலவோடியெடுத்தருந்தியுள் ளம்பூரித்தானுடலமுமேபாரித்தானு, லன்போடுமுருகமலன்முன்னம்வ ந்தானாகரசங்கரவென்றோர்சைவன்றுனே. (உ௯)

வந்தவுடனிந்தமகாலிங்கந்தன்னைமகிழ்பூசை செய்துபின்னின் மாலியத்தைச், சிந்தைமகிழ்ந்தருந்தியேகளித்திருந் [illegible] தேசிகன்முன்வந்தே, யந்தணனும்விரதன்றன்பணிந் [illegible] செய்துரைக்கின்றனையரேயா, னெந்தவகையென்றறி [illegible] கெழுந்தருளவிறும்பூதுகண்டேனென்பான். (௩௦)

வருகின்றபோதிருந்தவுருவமவேறேவந்துசிவபூசைசெய்து மாலிய ந்தான், பரிவினுடனருந்தியபோதுருவம்வேறேபார்த்திடிலோ ரயுதமட ங்கதிகமானீ, ருருகுகின்றேனிதனுண்மையுரைப்பீரென்றுரேணுதுசைவ தேசிகன்றனுணர்த்துகின்றன், புரிகின்றதவவிரதகேட் டியெம்மான்பூ சனைகின்மாலியத்தின்புனிதமீதால். ([illegible])

ஓங்குமெனக்கிவ்வுருவம்வாய்த்ததெல்லாமுமைபாகன்பூசனையின் சேடமுண்ட, வாங்கதனுலிதன்பெருமைபுகலலாமோவழகாண்மைபெ றுவரிந்திரருமாவர், பாங்கிலுற்றோர்பரிகலம்பெற்றுலுமேலாம்பதம்பெ றுவரெனவேதம்பகர்ந்ததாமா, லீங்கதனுனிகழ்ந்தகதையொன்றுகேட் டியென்றுசைவதேசிகன்றனியம்புகின்றன். (௩உ)

வேடர்குலந்தனிலுதித்தாள்பதுமையென்பாள் வேட்டோன்றன் னெடும்விறகுபுல்லுவிற்பாள், காடதனின்மிருகவேட்டைகளுஞ் [illegible] வாள்களுடனேயூனருந்திக்காலம்போக்குவாள், [illegible]டையாள்வயதுள்ள

காலமெல்லாம்பாவமேபுரிந்துடலம்பழுத்துமூத்தாள், கூடுபெசியால்வரு ந்திவிறகுசுமைகொண்டுதமொற்றமுடன்குறுகினளால். (௩௩)

வருகின்றநெறியதனிலொருவர்சைவர்மாதவத்தோர் தீர்த்தயாத்தி ரைபோய்வந்தா, ரொருகின்றநதிக்கரையிலரனைப்பூசையுஞற்றினர்பாத் திரத்திலமைத்ததூய, பரிகின்றவன்னபானியமைநைவேத்யம்பணித்தாமே நுகர்ந்தபரிகலங்காட்டுய்த்தார், பொருகின்றகாலதனைப் பதுமைமேனி பொருந்துறவேசெலுத்தவவடானும்வீழ்ந்தாள். (௩௪)

வீழ்ந்தவுடனிர்தனக்கட்டுடனேவீழமெய்யிலுறுகட்டும்விடவுயிரு ம்விட்டாள், சூழ்ந்தபமபடர்வந்துபிடித்துக்கொண்டார்சொல்லரியயம ன்சபையிற்கொடுபோய்விட்டார், வாழ்ந்தருளுஞ்சித்திரகுத்திரரைநோ க்கிமன்னுமிவனிருவினையின்வகைகளெல்லா, மாழ்ந்துரைமினெனப்ப கர்ந்தானிவள்செய்பாவமடங்கியவெங்கணக்கேட்டி லடங்காவென்றார்.

நண்ணியதிண்ணியரானகணக்கர்பின்னுநவிலுவார்சிவநாமநாதனர் தம், புண்ணியமென்றொருகாலும்புகன்றுமில்லாள்புரிந்ததுதா னில்லை யேயிவடான்முன்னம், பண்ணியநல்வினையேதாசைவருண்டபரிகலங் காற்றெறியவந்துபட்டதேயாற், றண்ணியவிங்கிவளுடல்விட்டுடனேயா விசாம்பினளிதுவுளதாற்றருமவென்றார். [௩௬]

என்றவுரைகேட்டலுமேயாசனம்விட்டெழுந்தெதிரே போடிவந் தான்மின்னனுண்மேற், றுன்றியபாசக்கயிற்றின்கட்டுவிட்டான்சூழ்வந் தான்பணிந்துமணிந்தெழுந்துநின்று, னன்றிதருஞ்சைவர்பரிகலஞ்சேர் தூபநல்லவுடலென்றவண் மெய்தைவந்துற்று, னன்றவன்கைதடவள வேகமலைதானேயாயினளவள்பெற்றதார்பெற்றாரே. (௩௭)

ஆசனத்தின்மேல்வைத்தான்பூசைசெய்தானுபரணிதிகள் பூட்டிவி மானத்தேற்றித், தேசுபெறுந்தேவர்பதநதோறுமேகீ சென்றிருந்துவாழ் தியெனவனுப்பினனன், மாசில்சமனென்றுசைலன்விரதன்கேட்பவழ ங்கினனைவயோகியூகூவுக்கே, பேசினனெனப்பரம னுமைக்குச்சொ ன்னபெருங்கதைசூதன்முனிவர்க்குரைசெய்தானே. [௩௮]

இருபத்தோராவது சைவர்பரிகலப்பிரசாதமகிமைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கூசரு.

இருபத்திரண்டாவது

சிவனடியார்தெரிசனமகிமைச்சருக்கம்

வேறு.

வன்னிசென்னியிற்கையினிற்றரித்திடும்வரதன்
பொன்னின்மாலிமசந்தருபொன்னறம்வளர்க்கும்

கன்னிமேவியகடவுளன்பர்கள்பதம்பணிந்தே
சென்னிபெற்றிடுபலன்பெறச்சிந்தைசெய்திடுவாம். [௧]

தெய்வநாயகன்செப்புகின்றானுமைதனக்கே
சைவன்வார்த்தைகேட்டுவகைசேருறுவினைதவிர்தந்
துய்வருந்தவவிரதன்வேட்டுவர்குலத்துதித்த
மைவருங்குழல்பின்செய்ததென்னெனவகுப்பான். [௨]

போற்றுகூற்றுவன்புகன்றிடப்பொன்னுலகுற்றா
ளாற்றுநல்வினைப்போகந்துய்த்தவ்விடையமர்ந்தா
ளேற்றமாம்பதுமாசனனுலகிலெய்திடவே
தோற்றியன்னவடனக்குபசாரங்கொடுத்தான். [௩]

அன்னவாகனனுடன்சனகாதியரவரு
மன்னுபூசனைபுரிந்திடமகிழ்ந்துவீற்றிருந்தாள்
பொன்னினாசனத்திருந்தவள்பொலிவினைநோக்கி
யென்னமாதவஞ்செய்தனளிவளெனக்கேட்பார். [௪]

சனகராதியர்வினவிடச்சாற்றுவான்வேத
னனகனுஞ்சிவனன்பர்தம்பெருமையாரறிவார்
வனகபூடணப்பரனறிந்துரைப்பனோவறியே
னெனகமுற்றிடும்வேதமுமறிந்திசைத்திலவே. [௫]

வான்புகழ்ந்திடும்விண்டுவும்வல்லனோபுகல
நான்புகன்றிடவெளியதன்றாயினுநவில்கேன்
* யான்பிரிந்திடுமன்பர்சந்நிதியெய்தப்பெற்றோர்
தான்பொருந்துறுஞ்சுத்தரேயாகுவர்தவத்தீர். [௬]

அனையதொண்டர்தம்முருவமேசிவனுருவாகும்
வினையொழிந்திடுமெய்யன்பர்கையினாற்றீண்டிற்
பினையுஞ்சென்மசாகரந்தனைப்பின்னிடப்பெறலா
மினையவாலவர்தன்மையையான்சொலவெளிதோ. [௭]

அண்ணலாரவர்பெருமையுமன்பர்மேன்மைகளும்
பண்ணமைந்தவேதங்களும்பகர்ந்திடவரிதே
நண்ணுகல்விசேர்நாவிரண்டாயிரம்படைத்த
திண்ணமிக்கதோர்சேடனுஞ்செப்பவல்லானோ. [௮]

திசையெலாம்புகழ்சிவனடியார்களாந்தேச
ரிசைகொண்மேனியைப்பரிசிக்கவேண்டுமோயாக்கை
விசையில்வந்திடுங்கால்பட்டமெய்யினார்வினைக
ளசனிவீழ்ந்திடமடிந்திடுமரவு X புள்ளாமால். [௯]

* யான்-ஆணவம், X புள்-அசனம்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR MADRAS-90

வேறு.

இன்னவற்றோர்கதையியம்புகின்றனந்
துன்னருமுனிவிர்காள்வேடர்தொல்குல
மன்னவனொருவனுண்டவன்செய்மாபவந்
தன்னையிவ்வளவெனச்சாற்றலாகுமோ. [க0]

உலகினிற்பலபொருள்கவர்தலூறுசெய்
தலல்சிலபுரிந்திடலரியகற்பினோர்
நலனுகர்ந்திடனிந்தைநவிற்றறீயவெங்
கொலைபலபுரிந்திடுங்கொடுமைபூண்டுளான். (கக)

கோவதைமாதர்தங்கொலைகளந்தணர்
மாவதைமற்றுமன்னுயிரைவாட்டுதல்
காவதையழித்தல்செய்காதகன்செய
லாவதையென்னெனவறைகுவாமரோ. (கஉ)

ஆங்கவனொருபகலடவிவேட்டம்போந்
தேங்கியமிருகங்கள்வதைசெய்தெங்கும்போய்
வாங்கியசிலையினன்வருந்தியுச்சியி
னோங்கியகூவிளநிழல்வந்துற்றனன். (கங)

தழைத்திடும்வில்வத்தினீழல்சார்ந்துளா
னழைத்தனன்வேடரையதனுக்கேயரா
ணிழைத்துநீர்வார்த்திடுமிவணிலோர்தடங்
குழித்திடுவீரெனக்கூறிப்போயினான். (கச)

அன்னவனேவலாலமைத்தகாவினிற்
றன்னிகரிலாவொருசைவநாயகர்
துன்னியவேனலின்வெப்பஞ்சூழ்தலான்
மன்னியவில்வத்தினீழல்வந்துற்றார். (கரு)

அத்தினத்தரசனும்வேட்டமாடியே
மத்தியானத்தவண்வந்துசார்ந்தனன்
முத்திசேர்சைவமாமுனியைக்கண்டனன்
றத்தியபரியிழிந்தருகுசார்ந்தனன். (கசு)

தவமுனிதாளினிற்றாழ்ந்திறைஞ்சினா
னவமெனுமஞ்ஞைபோயறிவுசார்ந்தன
னெவனிவனோவெனவிதயத்தெண்ணியக்
குவலயத்தரசன்முன்கூறன்மேயினான். (கஎ)

அண்ணனீரெங்குளீரடைந்ததேதிவண்
கண்ணினுமும்மையான்கண்டபோதிலே
திண்ணியஞானங்கள்சேர்ந்துளேனரோ
பண்ணியபாவங்கள்பகுரொழுதவே. (கஅ)

உம்மைநான்கண்டுமெய்யுறுதிபெற்றிட
வெம்மையிற்செய்தவமென்றறிந்திலேன்
செம்மனீரென்றடிசென்னிசேர்த்தினான்
மும்முறைவணங்கினான்மூரிவேலினான். [௧௯]

அரியனுஞ்சிவனடிக்கன்பர்மெய்யினிற்
பரிசனத்தரிவந்துபட்டபான்மையா
லுரியதோர்தேகத்தினுற்றபாவங்கள்
கரிகள்போற்புறம்வந்துகருகிவீழ்ந்தவே. [௨௦]

அன்னதுகண்டனனரசனையநுஞ்
சன்னிதானத்துறுந்தன்மையாலன்றோ
வென்னுடைப்பாவங்கள்யாவும்யானையாய்த்
துன்னிவீழ்ந்துளவெனவணங்கிச்சொல்லினான். [௨௧]

அரசனைப்பார்த்தானன்பர்கூறுவார்
விரைசெறிகூவிளம்விளங்கத்தண்புனல்
கரைசெய்துபெய்தனைவளர்த்தகாட்சியா
லுரைசெயிலுன்னைப்போலொருவரில்லையால். (௨௨)

செயலருமபுண்ணியஞ்செய்ததன்மையாற்
பயிலுறுபாவங்கள்பாறப்பெற்றுளா
யுயர்வில்வத்தோர்துளிபாணியுய்க்கினு
மயலுறுபாதகங்கோடிமாயுமே. (௨௩)

தண்ணுறுவில்வத்தின்றளிர்கண்மூன்றுமே
யண்ணலார்நேத்திரமூன்றுமாகுமாற்
கண்ணுதலுருவமாய்வில்வங்காணபெதன்
றெண்ணிலாவேதங்களியம்புகின்றவே. (௨௪)

சாற்றரும்வில்வமங்குற்றதன்மையாற்
போற்றியவிவ்வனம்புனிதமானதான்
மாற்றருமிங்கிழல்வதிந்துளோரெலா
மாற்றல்சேரிலிங்கரூபங்களாவரே. (௨௫)

வில்வமூலத்தினிற்புனலைமேற்கொளி
னல்லறீர்ந்தாறுபத்தாறுகோடியா
மல்லல்சேர்தீர்த்தங்களாடுமாபலன்
புல்லுவர்புவியினிற்புனிதமாவரே. (௨௬)

பரனையர்ச்சனைசெயல்செபங்கள்பண்ணுத
லுரமுறுவிரதநல்லோமஞ்செய்திட
லரனடியவர்க்கனமளித்தல்கூவிளத்
திரமுறுநீழலிற்செய்தன்மேன்மையே. (௨௭)

கூவிளத்தருவைநாயகனெனக்கொடே
தீபதூபங்கொடுபூசைசெய்திடிற்
றூவில்சந்ததிகளுந்தழைக்கவாழ்ந்துபின்
மேவருங்கதியுலகத்தின்மேவுவார். (௨௮)

தண்டலில்கூவிளந்தன்னைச்சூழ்வரல்
கண்டபோதிறைஞ்சிடல்கருதுமூலத்தி
லெண்டருநல்விளக்கேற்றிவைத்திடன்
மண்டலத்திபற்றினோன்வரதனவனே. [௨௯)

ஒருவருக்கனமதன்மூலத்துய்த்துடில்
வருசதகோடிபேர்க்குதவன்மானுமாற்
பொருதிறலரசகேள்புகலுமப்பலன்
றருகதையொன்றுளசாற்றுவாமரோ. (௩0)

விந்தவெற்புறுந்தலத்துறையும்வேதியன்
மைந்தரும்பேருமனையும்வாய்த்துளா
னுந்துநல்குரவினூர்கடோறும்போய்ச்
சந்ததமிரந்திரந்துழலுந்தன்மையான். (௩௧)

அண்டரும்விந்தவாரணியந்தன்னிலே
யெண்டருமைந்தருந்தானுமெய்தினான்
கண்டனன்முனிவன்மாற்கண்டயன்றனைத்
தண்டெனவிழுந்தடிதொழுதுசாற்றுவான். [௩௨]

எந்தைகேள்வறுமையாலிடருற்றேனியான்
வந்ததுமூப்புமென்மனையுமூப்புற்றா
டந்தருண்மைந்தருஞ்சாம்புகின்றன
ருய்ந்திடவுறுதியொன்றுரைசெய்வாயென்றான். [௩௩]

அடுத்திடுமைந்தருமனையுமாருயிர்
விடுத்திடுவோமெனவிளம்புகின்றனர்
கிடைத்திடுமொருபொருள்கெடுவதேயலாற்
கொடுத்திடுவோருமிலென்னகொள்கையோ. (௩௪)

எவ்வகையெம்பிரானிடர்கடந்தியா
னுய்வகைபுகலெனவுருகும்வேதியன்
கவ்வையையறிந்துமாற்கண்டமாமுனி
செய்வதுகேளெனச்செப்புவானரோ. [௩௫]

கூவிளநீழலிற்கொன்றைவேணியா
னேவல்கூரன்பருக்கன்னமீந்திடாப்
பாவமதாற்கலிப்படர்வந்துற்றதா
லாவதுதனினியதையாற்றல்வேண்டுமால்: [௩௬]

இவ்வனந்தன்னிற்கூவிளமெங்குற்றதென்
றவ்விடைநாடிச்சென்றான்றனன்பர்க்குச்
செவ்வியபூசனைசெய்யென்றேவினா
னவ்வகைபுரிந்திடவலன்சென்றனரோ [௩௭]

இரந்திடுமுபகரணங்கொண்டேகியே
பரந்திடுங்கானகம்படர்ந்துநாடினான்
வரந்தருசிவனன்பர்மன்னுகூவிள
நிரந்திடுநிழற்புரிநியதிகண்டுற்றான். (௩௮)

வணங்கினனுய்ந்தனனென்றுவாழ்த்தினா
னிணங்கிநீராடிப்புக்கிறையைப்பூசித்தான்
குணங்கொளச்சமைத்தனன்கொணர்ந்தவாலரி
வணங்குறுமமலையோரமலையானதே. (௩௯)

கண்டனராங்குறுகடவுளன்பர்தா
மண்டுபேரன்புடன்மகிழ்ந்துவாழ்த்தினர்
பண்டுறுகலியிலாப்பாக்கியம்பெற்றாய்
தொண்டரிவ்வனத்துளாக்கணித்துச்சூழ்ந்தென்றார். (௪௦)

ஓடினனிவ்வனத்துற்றசைவரைத்
தேடினன்கொணர்ந்துசேவடிகள்பூசித்தா
னாடினன்பந்திவைத்தமுதுசெய்வித்தான்
கூடினனளகையிற்குபேரன்செல்வமே. (௪௧)

மைந்தருமனைவியும்வாழவாழ்ந்துளான்
முந்தியகூவிளமூலந்தன்னிலே
யெந்தையாரன்பர்பூசனையியற்றினோர்
சிந்தனையின்றியேயின்பஞ்சேர்குவார். (௪௨)

மன்னவநீயுமிவ்வில்வமாநிழ
றன்னிலேசிவலிங்கதாபனஞ்செய்தே
யென்னையாள்சோமநாதேசன்பூசனை
யுன்னியேபுரிதியென்றுவந்துகூறினான். (௪௩)

கேட்டனன்கிராதர்தம்வேந்தன்கேடிலா
நாட்டமூன்றுடையவன்பூசைநாடினான்
வீட்டிலகுறுஞ்சைவமேவினானன்றே
சேட்டராமுனிவர்க்குவேதன்செப்பினான். [௪௪]

இருபத்திரண்டாவது சிவனடியார்தரிசனமகிமைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௯௮

இருபத்துமூன்றாவது,

உருத்திரவீக்ஷணவரலாற்றுச்சருக்கம்.

வேறு.

பணவாளராவொடலவன்கலந்துபகையின்றிவாழுமுடியா
னிணர்சேருமாலைமுடிநங்கைபங்கனிமையோரிறைஞ்சுமிறைவன்
கணநாதர்சேவைபுரிபாதனுதிகயிலாசவாசனடியார்
மணமேவுபாதமலரன்புகொண்டுமலர்கொண்டுபூசைபுரிவாம். [௧]

பதுமாசனத்தின்முனிவோரொடேற்றபலதேவருக்குமொழிவான்
முதுகூவிளத்தினிழல்வாசமுற்றமுறையோகிதாள்கள்பணியா
வதிர்வேடருக்குமுதன்மன்னனையவடியன்செய்பாவவினைபோய்க்
கதிசேரும்வண்ணமுதவென்றுசிந்தைதகவலுற்றுநின்றுசொலவே. [௨]

சிவயோகிசிந்தைமகிழன்புகொண்டுசிலைவேடர்தங்கள்பதியே
நவமாகவுன்றன்வினைபோயொழிந்துநலமேவுகாலமுளதாற்
றவமேவுநந்தமுடலுற்றபூதிதருகாலுன்மெய்யிலுறவே
பவகோடியானையுருவாயெரிந்துபடியுற்றுவீழ்ந்தபடிபார். [௩]

திருநீறுகண்டிபுனைதந்துதீக்கைசிவசைவசீலநெறியுங்
குருநாதர்சொல்லுமுபதேசமுங்கொள்குறைவற்றநெஞ்சமுடனே
யுருமேவிலிங்கவுயர்பூசைபெற்றவுரவோர்கடாங்களலரோ
தருமேவுநாடாமுனிவோர்களோடுசெமனுமவணங்குதகவோர் [௪]

எனவிண்டுசைவனினியஞ்செழுத்துமியலபாகவெய்தியுமைகோன்
புனைலிங்கபூசைபுரிகென்றுரைப்பமகிழ்வோடுநின்றபொழுதில்
வனமெங்குமோடியிறையோனைநாடிவருகின்றசேனைமுதலோர்
சினைதுன்றுவில்வநிழலின்கண்யோகிதிருமுன்புகண்டுமகிழ்வார். [௫]

சிவபத்தர்பாதமுடிவைத்துநின்றுசிலைவேடராசனுருகு
நவமத்திகண்டுதளகர்த்தர்சொல்வர்நகரிற்பொருந்தியெமையா
ளவனிக்கிராசனிவணுற்றதென்கொலருளென்னமேலொடுமறைவா
னுவமிக்கொணாதசிவபூசைசெய்யவுபதேசர்சைவருளரால். (௬)

தழைவுற்றவில்வநிழன்மேவுசைவர்சரணத்தடைந்தென்வினைபோ
யொழிவுற்றதிங்ஙன்வளர்சொற்கமன்னுமுயர்தச்சனிங்ஙன்வருவித்
தெழிலுற்றகோவினகர்கட்டிலிங்கமினிதிற்பதிட்டைபுரிவித்
தழிவற்றபூசைபுரிவித்தியோகியருள்பெற்றுவாழ்வனினிநீர் (௭)

மூதூரிலேகியுபயோகம்யாவுமொழிவுற்றவாறுகொணர்வீர்
போதீர்களென்னவவர்போகவேடர்பதிபுத்திகண்டுபுகுதாத்
தீதூர்தலற்றநகரத்தினோடுசிகரத்துலாவுகதிர்வான்
மீதூர்செய்கோவிலமைவித்தனஃசொல்வினிலுற்றதச்சனவனே. (௮)

வேறு.

மாடமாளிகைகள்சூழ்ந்தமாநகரதனிலுப்ப
ளுடகக்கோயில்கண்டேயரசனுமகம்பூரித்தான்
கூடியகலப்பை பாவுங்கொணர்ந்தனன்சேனைநாதன்
றேடியமுனிவன்முன்போய்த்திருவடிவணங்கிச்சொல்வான். (கூ)

அத்தனேதீக்கைக்கேய்ந்தவருந்திரவியங்கள்யாவு
மித்தலைவந்தவன்றேநருமலைதயிலிங்கந்தானும்
பத்தியாற்கொடுவந்துற்றேன்பதிட்டைபூசையுமேபண்ண
மத்தியானமுநல்வேளைவாய்த்ததென்றேத்தினின்றான். (க0)

கண்டனர்சைவர்யோகர்கனகவாலயத்துட்சென்றே
யண்டர்நாயகனைத்தாபித்தரியபூசனைகளாற்றி
யெண்டருஞ்சந்நிதிக்கண்யாகமண்டபமுண்டாக்கிக்
குண்டமண்டலஞ்செய்தோமக்குறைகளுமுடித்தாரன்றே. (கக)

அரசற்குமவன்றன்மைந்தர்மனைவியரனைவோருக்கு
முறைசெயுந்தீக்கையாற்றியுபதேசமுறையுஞ்செய்தார்
வரைதருமவன்றனாட்டின்மாந்தர்கள்யாருஞ்சேனை
ரபதியவரும்வாதுநல்வினைப்பயம்பெற்றாரே. (க௨)

அந்நகரத்திலுள்ளவனைவருஞ்சைவரானார்
மன்னவன்சைவயோகர்மலர்ப்பதம்வணங்கியேத்தித்
தன்னிகரிலாவிலிங்கார்ச்சனைவழிபாடுசார்ந்தான்
பன்னுகூவிளத்தின்கீழும்பரமனைத்தாபித்தானே. (கங)

ஆலயந்தனிலெம்மானுக்கபிடேகமாநைமேத்யங்
காலந்தப்பாதபூசைகன்னியராடல்பாடல்
சீலமார்திருவிழாநற்சிறப்புடன்றீர்த்தநல்கல்
சாலவேபுரிவித்தன்னதானமுஞ்செய்வித்தானல். (கச)

அரியகூவிளமூலத்திலரனடியவர்கள்கோடி
தெரிதருமவர்க்கேயாறுதீஞ்சுவைக்கறிகளோடும்
பொருவருமகேசபூசைபுரிந்தனன்யோகிசொல்லா
லுரியதன்பொருள்களன்பர்க்குதவினனுவகைகூர்ந்தே. (கரு)

ஒருசிவயோகர்வந்தேயுற்றகானவனுடெங்கும்
பெருகியசைவநீதிப்பிரளயமாகவன்றே
திருமறைமுனிவீரன்னசிறப்பெலாஞ்சென்றுபார்க்க
வருதிரென்றுரைத்துப்பின்னுமலரயன்வகுக்கின்றானல். [கஎ]

அன்னதோர்சைவகூட்டமதனைநாங்காணப்பெற்றாற்
பன்னருபாக்கியங்கள்பார்வைபெற்றதற்குண்டாமா
லுன்னுமந்நாட்டிலுள்ளவூர்வனபறப்பயாவும்
பொன்னகர்புகுவதல்லாற்புகணமன்புரத்துச்சாரா. [சஎ]

சாற்றருஞ்சைவநீதிசார்ந்தருள்வேடர்வேந்தன்
போற்றருங்கிளைகளோடும்புத்திராதிகளினோடு
மாற்றமேவார்பிரமகற்பமவனியாண்டிருந்தபின்ன
ரேற்றமார்வைகுண்டத்திலெய்தியோர்கற்பம்வாழ்ந்தான். [௧௮]

பின்னர்ப்போய்ச்சிவலோகத்திற்பெருங்கிளையோடும்பெம்மான்
றன்னடிநீழல்சார்ந்தான்சைவயோகீசர்தாஞ்செய்
யுன்னரும்யோகத்துற்றுறுந்தவமுனிவீரென்றுப்
பன்னரும்வேதஞ்சொன்னான்பின்னரும்பகர்கின்றானே. [௧௯]

தன்னிகரிலாதசைவத்தபோதனர்பெருமையெல்லா
மின்னமெத்தனையென்றென்றேயியம்புகேனன்னோருண்ட
வுன்னரும்பரிகலந்தானுயிர்விடுங்காலத்தூறு
துன்னலாலன்றோவேடர்தோகையும்பவங்கடந்தாள். [௨௦)

தென்றிசையரசன்செய்புஞ்சிறப்புகள்பலவும்பெற்றாள்
பொன்றிகழுலகில்வந்துபுரந்தரன்பூசையுற்றா
ணன்றிநம்முலகில்வந்துநாஞ்செயுநலமுஞ்சார்ந்தாண்
மன்றல்சேர்வைகுண்டத்தில்வாழ்ந்துபின்கயிலைசேர்வாள் [௨௧]

அம்பிகையருடான்பெற்றேநித்தியகன்னியாவ
ளெம்பிரானிவட்குநாமமிலக்குமியென்றுகூறி
யும்பரிவிவள்கல்யாணத்துரியர்யாரென்றுதேர்வான்
கொம்பனாளிவளைமாயோற்களித்திடமனத்திற்கொள்வான். [௨௨]

இந்திரைகமலைபற்மையிலக்குமியெனப்பேர்மேவிச்
சுந்தரமுகுந்தனார்க்குச்சுருதியின்முறைகல்யாணத்
தந்தமிலாதவெம்மானளித்திடமனைவியாகித்
தங்கியார்கயிலைநீங்காதிருப்பளித்தையறானே (௨௩)

எனப்புகல்வாய்மைகேட்டவிருடிகளிறும்பூதெய்தி
மனத்தினிற்சிவத்தியானம்வல்லராய்மகிழ்ந்திருந்தா
ரனத்திறையிந்தவேடரவ்வையைப்போற்றியிந்தத்
தினத்தினிற்கண்வாய்பெற்றசிறப்பிற்குச்சிறப்பாய்த்தென்றான். ( )

இத்திறமடியாருண்டபரிகலமேன்மையென்றே
பத்திசேர்சைவர்சொன்னபரிசெலாம்விரதன்கேட்டே
சித்தனாயகவிலிங்கதெரிசனம்பூசையாற்றி
முத்தியும்பெற்றானென்றுமொழிந்தனன்யோகிதானே. (௨௫)

பத்தியாற்கின்னரேசன்பகர்பூசைச்சிறப்புச்செய்வான்
கத்திகைச்சிறப்புத்தீபக்காட்சியின்சிறப்பினோடு
மத்திருவன்னார்பாட்டலாடலின்சிறப்பும்வாய்ப்பச்
சித்தனாயகன்றனக்கேதிருவிழாச்சிறப்புஞ்செய்தான். (௨௬)

அன்னவன்மனைவியாராமரிவையர்தாமும்வந்தே
மன்னுநம்முன்னர்வீணைவாசித்தார்வளிதான்றுக்க
வன்னவைமுழங்கல்கண்டேயதிசயித்தலைவதாமாக
வுன்னினர்நம்மைநோக்கியுறுவரங்கேட்கலுற்றார். [௨௭]

நகங்களாற்றெறிப்பதின்றிநலம்பெறுமோசைநல்குஞ்
சகம்புகழ்வீணையாயாமுறுவரந்தருவாயென்று
றுகந்தவர்தமக்கேயவ்வாறுதவினமுமையேயன்ன
விகந்திடாவணையர்வீணையாயினரீதுகேளாய். [௨௮]

என்றரனியம்பக்கேட்டாள்வீணையின்வரலாறெல்லா
நன்றுநன்றெனநயந்தாணங்கைமாமகிழ்ச்சிகூர்ந்தா
டுன்றியவிசைகள்பாடிச்சோதியார்மகிழச்செய்தா
ளன்றுதான்வசந்தகாலமாகிவந்தடுத்ததன்றே. [௨௯]

நங்கைதன்கொங்கைதன்னைநாயகன்கைகளாலே
குங்குமவருவிபாயுங்குன்றிரண்டாகச்செய்தா
னங்கணன்புயங்கள்பன்னீரருவிக்குன்றாகச்செய்தாண்
மங்கைதன்கையாலின்னவசந்தன்கொண்டாடினாரே. (௩௦)

தூவிகண்கண்டுகண்ணீர்கலுழவாய்கண்டேயாம்ப
லாவிபோயடங்கத்தூவியன்னங்கணடைகண்டோடப்
பூவியல்வண்டுங்கையில்வண்டுமேபுலம்பியார்ப்ப
வாவிநீர்தன்னிலம்மைவள்ளலோடாடினாளே. (௩௧)

நீராடிச்சந்த்ரகாவிசிறந்தபட்டுடுத்துமுத்துத்
தாராடுமார்பின்முல்லைத்தாமங்குங்குமமுஞ்சாத்தி
வாராடுந்தனத்தாளோடுமணியாடுங்கண்டத்தெம்மா
னேராடுமணிமேல்வீட்டினினிதாடியிருந்தானன்றே. (௩௨)

இக்கதைபடித்தல்கேட்டலினிதெனவிரும்புவோர்க்குத்
துக்கமாமடவிதன்னைச்சுடுங்கொடுந்தீயுமாகிக்
கைக்கொளும்பெண்டிர்மக்கட்கடுஞ்சுறவெறிசஞ்சார
தக்கசாகரங்கடக்கத்தருங்கப்பறானுமாமால். (௩௩)

எனவரனடியார்தங்களிரும்பிரசாதமேன்மை
யுனலருமவர்தமேன்மையுயர்சிவதருமம்யாவு
மனகனும்வியாதன்கூறுமம்முறைப்படியேசூத
முனிவரனேமிபோன்றமுதிர்வனத்தவர்பாற்சொன்னான். (௩௪)

இருபத்துமூன்றாவது உருத்திரவீணைவரலாற்றுச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௭௨௩.

இருபத்துநான்காவது,

சத்தியலோகச்சருக்கம்.

பணகந்தனினடமிடுமென்றொருமுதுபகைகொண்டிடுசகடறமோதும்
வனகந்தரங்கரளகந்தருதிருவடிவஞ்சிலைபெறநடைகூரு [மான்
மெனகந்தருவினையொழியும்படியருளிறைவன்பிறைபணிசடையெம்
கனகந்திகழ்சபைநடனந்தருமொருகருணாநிதிசேவடிதானே. (௧)

மறையோதியமுனிபகர்வானுயர்தருமணிமாளிகையரியணைமீதே
யுறைபாதியையிருநாலாமூர்த்தியினுருவாகியவொருமுதலோனை
யிறைபாமமலனையிறுகத்தழுவியவின்பந்தருமுமையன்போடு
நறைபாரமுதுபொழிந்தாலெனவுரைநாதன்றிருமுனநவில்கின்றாள். [௨]

ஆறாகியகுணபரிபூரணனெனுமரனேயுபர்சத்தியலோகம், வேறா
முலகினின்மிகுமேன்மைகள்பெறவியனல்வளமுறவிதிசெய்தாய்,பேறா
முலகினிலெய்துந்தகைமையர்பெரிதாம்புண்ணிய மெவைசெய்தோர்,
மாறாவரசெவன்வாணாளெவன்வாஞ்சித்தனனவைபகரென்றாள். [ ]

கனிவாய்மொழியுமைபகரச்சுடர்தருகண்மூன்றுடையவனுரைசெய்
பனிமால்வரைதருமயிலேயுயரனபதிமேவியசத்தியலோக [வான்
மினிதாகியநமதாடற்கிசைதரவெய்தும்படியதுசெய்தோமா
லினியாவருமவணுறுதற்கரிதரிதுயர்மேருவின்மிசையுறுமன்றே. [௩]

தருவின்செறிவனநீடுங்குளிர்தருதடமெங்கணுமலரளிபாடும்
பெருகுங்கதிர்விடுசதகோடித்தொகைபெறுமாளிகைகொடிமிசையாடு
மருகெங்கணுமுளமந்தாரத்தருவதனின்புடையுளமணிலிங்க
முருகும்பரிவொடுதொழுவார்வினைகடிதோடும்முயர்கதியதுகூடும். [௫]

அந்நாட்டுறைபவர்பசிநோய்தாகமுமடையார்யாமோர் விளையாட்டான், முந்நாண்மணிமண்டபமொன்றதனிடைமுனிவோரமரர்கண்முறையாகப், பன்னாரணமுந்துதிசெய்திறைஞ்சிப் பரிவொடுபணிசெயவரியணைமேன், மன்னவவணினிதுற்றேமவ்விடைவந்தானந்திறனந்தீசன்

அடி[illegible]றிடுமரமெனவேவீழ்ந்துநம்மடியிற்பணிதருமவனன்பா, முடியிற்செங்கைகுவித்தேயாடினன்முன்னின்றின்னன மொழிகின்றான், படியிற்றிகழ்தருகயிலைத்திருவரைபாங்குற்றிடுநீயிங்குற்றாய், நொடியிற்பெருவளமுளதேற்பதிவிசைநூறாயிரத்தொருகூறுண்டோ. [எ]

அமிர்தம்பொழிகனிகனிகொந்தளமலரண்டத்தளவினுமதிவாசங், கமழுந்தருநிறையுளவோ குளிர்துளிர்கனகத்தளிரெனவொளிர்வான்மே, னிமிருங்கூவிளநிழலெங்கெங்கணுநிரைதந்திடநீணிரயத்திற், றிமிரங்கெடவெயில்விடுசூரியர்நிகர்சிவலிங்கங்களுமுளவோதான். [அ]

குயில்பூவைகளளிகிளிமாமணியொளிகுலவுற்றிடுநிறமவைபெற்றே
மயிலாடிடவெதிரெனையாளுடையவன்மகிழ்காமத்திசைபலபாடு

பூயர்மாவொடுபலவுறுவாலழகள்பலவுடையுங்கனிபலமூறுங்தேன்
செயவார்முத்தப்பெருநதியொடுபொருசெயலாலலையெறிதிறனேம். (௯)

வேறு.

அல்லணிக்கிடுங்கயிலையந்தாழ்வரையருகின்
வில்வநீழலின்மேவியவிலிங்கங்கட்கெல்லாஞ்
சொல்லுமம்மலர்த்தேனபிடேகமுஞ்சொரியு
மல்லற்பூந்தளிர்வாளருச்சனையுமேவாய்க்கும். [க0]

இனையவாகியகயிலையைநீங்கிடாதிருக்க
நினையுமாலென்றனெஞ்சகமையநின்னிதயத்
தனையமால்வரைதனைவிடுத்திவ்விடையமர
வனையுஞ்செஞ்சடைவள்ளலேமதித்தவாறென்னே. [கக]

அண்டர்நாதனின்முன்னரித்திறமெலாமடியேன்
தொண்டனுதனிற்சொற்றனன்சோதிநீயுறையக்
கொண்டதானங்கள்கோடிதான்குவலயத்துநினு
மெண்டருங்கயிலைக்கிணையாகுமோவெந்தாய். [கஉ]

எனப்புகன்றநந்திக்கெதிர்யாஞ்சிலவிசைத்தே
நினைத்தநின்னுரைமெய்ம்மையேநீபெருலகி
லுனக்குநேர்தருதொண்டருநண்பருளரென்
றனக்குநேருமுண்டெனிற்கயிலைக்குநேர்சாரும். (கங)

பாலிற்கோவின்பாலனங்களிலேபரமான
மேலுறுந்தருவவற்றினில்வில்வநல்லணியிற்
சாலுமக்கமாமணிமெய்யிற்றரிப்பதிற்பூதி
மேலும்பெண்களினிமயமான்மைந்தரிற்குகனே. (கச)

சாற்றுதீர்த்தத்திற்சிவகங்கைதலங்களிற்காசி
யேற்றலிங்கத்திலேவிசுவேசன்மண்டபத்திற்
போற்றுமுத்திமண்டபமுனிவரிற்கும்பன்பூசை
யாற்றலிற்சிவபூசைமந்திரத்திலஞ்செழுத்தே. [கரு]

கலைகளிற்சிவவித்தைகாலாலயஞ்சூழ்கா
றலைகளிலெமைவணங்கிபதழும்புறுதலையே
மலைகளிற்றிகழ்மேருவேயதிகாமகிழு
நிலைகளிற்கயிலாயமாம்வேதமுநிகழ்த்தும். (கசு)

ஈதுநந்திகேள்கயிலையுங்கவுரிதன்னிடமுந்
தீதிலன்பர்தஞ்சிந்தையுமுன்றிடஞ்சேர்வே
மோதுமூன்றினுமன்பர்தமுளமகிழ்ந்துறைவோங்
காதலாலரும்பூசனையாம்பெறுங்கருத்தால். [கஎ)

ஏறுமன்பர்தம்பூசைகேளிவ்வளவென்றே
கூறுதற்கடங்காவிடங்கொண்மனக்கோயி
றேறுதற்கருஞ்சிறப்பையார்செப்புவார்நந்தீ
மாறிலாநமையிரத்நவாசனத்தினில்வைத்தே. [௧௮]

அரியபூசையின்றிரவியந்தானபிடேகத்
துரியபாறயிர்தேனெய்க்குவிண்புனலூறும்
பெரியமாக்கடல்களுமொவ்வாபெருவரையெழுந்
தெரியுமங்கவர்புரிநைவேத்தியத்திரளாகா [௧௯]

ஆரமட்டிடுஞ்சுண்ணங்கற்பூரமோடடைக்காய்
சாரவற்பொடுசோடசமாமுபசாரஞ்
சேருவித்தவரிப்படிசெய்தலானமக்கு
மோரிடத்தினுமவரிடத்தின்பம்போலுறுமோ. (௨௦)

அளப்பிலானந்தம்பெருகமானதம்புரியன்ப
ருளப்பெருந்திருக்கோயிலேயுகந்தனநந்தீ
வளத்தினான்மிகும்பிரமன்செய்மானதபூசை
கிளத்தருந்தரமாகையாற்கேண்மைபெற்றுறைந்தேம். (௧௨)

சிறந்தமாநிதிமைந்தருமனைவியுஞ்சேர்ந்தே
நிறைந்தவல்வினைநீங்கிடநினைப்பரோமாந்தர்
மறந்துமோர்பகல்வரிசையன்பர்கண்மனக்கோயி
லுறைந்தயாமவணீங்கிடவல்லமோவுரைப்பாய். (௨௨)

பிரமனார்செயும்பூசனைவிரும்பிமுன்பெயர்ந்தோ
நருமதாநதிக்கரையிலேநம்பியோர்நம்பி
புரியுமாபெரும்பூசனையுகந்தனம்புகுவோந்
தெரியுமத்தயாமத்தினிலென்றுசெப்புவனால். (௨௩)

அத்தயாமத்தினவன்செயும்பூசையாரமைப்பார்
வைத்தசாளரமண்டபஞ்சப்பரகோள
மெத்தைமேல்விதானங்குளிர்மாணிக்கவிளக்கம்
பத்தியாற்புரிதருமுபசாரங்கள்பலவே. [௨௪]

நல்லபோனகம்பானககலம்பெறுகனியே
மல்லல்சேர்மதுவர்க்கநைவேத்தியவகைதான்
சொல்லருங்களபங்குளிர்சந்தனஞ்சுகந்த
மெல்லைதீர்ந்தவங்குள்ளனவெங்கணுமில்லை. [௨௫]

தேவியோடவன்சிந்தைமானதப்பெருங்கோயின்
மேவிவீற்றிருந்தேவிளையாடிடவேண்டு
நாவிலாரமுதூறநன்னாமங்கள்பாடு
மோவிலாவிசைக்குருகுமெம்முளமுமென்றுரைத்தான். [௨௬]

நந்திநீகடிதேகியேநம்பெருங்கயிலை
முந்துகோபுரவாசலின்முறைபுரிந்துறைகென்
றெந்தைகூறினனென்றிருடிகட்கியோசனைசேர்
கந்திதந்தருண்மைந்தனூர்கட்டுரைத்தனரே. (௨௭)

இருபத்துநான்காவது சத்தியலோகச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௭௫௦.

இருபத்தைந்தாவது

மானதபூசைச்சருக்கம்

வேறு.

வெள்ளத்திரைக்கங்கைவேணிப்பிரான்பாதவிரையார்மலர்
பள்ளத்திலலர்கின்றமலர்கொண்டுவழிபாடியல்பத்தியா
லுள்ளத்தில்வைத்துத்தொழுந்தொண்டர்மனநாளுமுபயச்சரண்
வள்ளத்தைநிகர்கஞ்சமிகுவஞ்சநெஞ்சத்தின்மலர்கின்றவே. (௧)

உரைபெறுமறைநாலுமுறையாகவேயோதுவாரோதுவான்
விரைபெறுதிருநீறுபூணநந்திதனையெந்தைவிடைநல்கியே
நரையேறுதனையேறியுமையோடுமேநண்ணினனர்மறைத்
திரையேறுகரைமேவுசிவயோகியிதயச்செழுங்கோயிலே. (௨)

அதிர்கின்றகணநாதருடைசூழமறைபாடவமரேசர்தா
முதிர்கின்றமகிழ்வோடுதனியோடமுனிவோர்கண்முனமாடவே
மதிகொண்டகுடைசாமரங்கோடியுடைசூழவருகின்றபோ
தெதிர்கொண்டுதொழுமன்பனிறைவன்றனையாசனத்தேற்றினன். (௩)

குளிர்சந்தனக்கலவையாட்டினனற்றுடைகொடுசாத்தியே
மிளிர்குங்குமத்தோடுகத்தூரிகற்பூரமேற்சாத்தின
னொளிர்கின்றபொன்னுடைகடகங்கண்மகுடாதியுளபூண்களுந்
தளிர்கணடியிடைகொண்டிடுங்கொத்துமுத்தாரமுஞ்சாத்தினன். (௪)

பருப்புப்பொருப்பைப்பிதிர்த்திட்டுநெய்யாறுபாலாறுடன்
சருப்பெற்றிடுஞ்சர்க்கரைப்பொற்கரைக்கேய்ந்ததயிர்வாரியும்
விருப்புற்றகறிவர்க்கமதுவர்க்கமலையன்னவெற்போடுமே
திருப்பெற்றபாவாடைபூவாடைதிகழ்மண்டபஞ்சேர்த்தினன். (௫)

திருக்கண்சிறப்போடுகொள்ளுஞ்சிதீபச்சிறப்பூட்டினன்
மருக்கொண்டதூபங்கள்கற்பூரவாலத்திவகைகாட்டின
னுருக்கொண்டமின்னன்னபொன்னன்னநடையார்களுசிதங்களாத்
தருக்கின்றவிசைபாடலாடற்சிறப்புஞ்சமைத்தனரோ. (௬)

ழுகின்றகண்ணீரினொடுதண்டெனச்சென்றுவீழ்ந்தேபதந்
தாழுகின்றதொண்டன்றனைக்கண்டுமகிழ்கொண்டுசொல்வானெமான்
றூழ்தொன்றுமிதயங்கொணின்பூசைமிகநன்றுமொழிவாய்வரம்
பாழிதந்துளோமென்றபொழுதன்பினொடுநின்றுபுகழ்பேசுவான். (எ)

வேறு.

அம்பிகாபதியேபோற்றி அழிவிலாப்பொருளேபோற்றி
யெம்பிரானுமையுநீயுமின்றருள்புரியப்பெற்றே
னம்பினேனுனதுபாதநான்றொழுதுய்ந்தேனந்தோ
சம்புவேகதியுமின்றுசார்ந்துளேன்போற்றிபோற்றி. [அ]

பாவிப்பாருளத்திற்பூசைபரிந்தருள்புரிவாய்போற்றி
யாவிக்கோராவியானவண்ணலேபோற்றிபோற்றி
சேவிப்பாதமக்குமேலாஞ்செல்வந்தந்தருள்வாய்போற்றி
காவிக்கேவிகரதாயகண்டத்தாய்போற்றிபோற்றி. (௯)

குழவிவெண்பிறையணிந்தகொன்றைவார்சடையாய்போற்றி
யழகமருமையாள்கொங்கையணிகளபங்கடோய்ந்த
மழவிளங்கதிர்போன்மேனிவானநாயகனேபோற்றி
விழைதருமடியார்க்கின்பவீடருண்முதல்வாபோற்றி. [௧௦]

உன்னரும்பாதபூசைக்குரியபாத்திரமுமானே
னென்னரும்பவங்களோர்ந்தேயிகபரம்பெற்றேனெமமான்
றன்னிகரில்லாநீவிர்தமியனேனிதயந்தன்னின்
மன்னியேபூசைகொண்டவரமன்றிவரம்வேறுண்டே. [௧௧)

ஆயினுமடியனேனுக்கருள்வரமுளதேகேளெந்தாய்
தாயெனுமெம்பிராட்டிதனையுநின்றனையுநாயே
னேயெனுமளவுநீங்காதிதபத்திவிருத்திப்பூசை
மேயினவாறுசெய்பவீற்றிருந்தருளவேண்டும். (௧௨)

சந்ததியாகவெற்குவந்தவர்தாமுநும்மை
வந்தனைசெய்துவாழும்வாழ்க்கைபெற்றுய்யவேண்டு
நந்திநாயகவென்றேத்திநருமதாநதிக்கரைக்கண்
முந்தியயோகிசிந்தைப்பூசனைமுடிவிற்சொன்னான். (௧௩)

அடைக்கலமடியனேனுன்னம்புயத்தாளுக்கெந்தாய்
கடைக்கணிந்தருள்வாயென்றானென்னவேகருணைநாதன்
மடக்கொடியுமைக்குச்சொன்னானென்றுமாமறைகடேர்ந்த
திடத்தவமுனிவன்சூதன்முனிவர்க்குச்செப்பினானே. (௧௪)

இருபத்தைந்தாவதுமானதபூசைச்சருக்கமுற்றிற்று.

மற்றங்கவன்றானெத்தூரத்துறினும்படுத்துவருமன்றே
பெற்றதிதனுக்கேயன்றோபெருமானருள்சக்கரந்தானே. [௬௦]

நமக்குப்பகைநற்சைவனல்லானவன்றனுறைவைநாடியே
யிமைக்குமுன்னந்தலைதகர்த்தாற்சுகமுற்றறிவுமெய்தலாங்
குமைத்தலவனையெப்பொழுதன்றெப்போதினுமிக்குறிக்கொள்வோஞ்
சமைக்குமிதுவல்லாற்செய்யுங்கருமமென்னேசாற்றுதியால். [௬௧]

இவ்வாறிழைத்தோமெனிற்றுயரக்கடலின்வடவையிடரெய்தோஞ்
செவ்வான்வேணிவிசுவேசர்ச்சிந்தியாரைச்சேரொண்ணு

தவ்வாறிந்தப்புத்திபத்திசென்மாந்திரஞ்செய்தவத்தலைவா
ரொவ்வாதியாதுமிவைக்கெனமால்வேதன்றனைப்பார்த்துரைத்தனனே.

முப்பத்துநான்காவது காலாக்கினிச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௩௫௮.

முப்பத்தைந்தாவது,

கூர்மச்சருக்கம்.

வேறு.

ஆடானைசிலந்தியெறும்பரவுநாகமடவிமயில்பாக்கனேடலவனுரை காடாருங்கருங்குரீஇதமக்குமேலாங் கருணைபுரிந்தளித்தருளுங்கடவு ணீயே, பீடாருமிவைகளிலொன்றல்லேன்பொல்லேன்பேதையே னுன தருளும்பெறுகுவேனே, தாடாழுமவாக்கருளுங்கயிலையாம்வேதண்டத் தாய்மேருகோதண்டத்தாயே. [௧]

கற்றவன்யாக்கினைவற்கிசொல்வான்மாயன்கமலத்தோனுடன்றேவர் கணங்கள்கேட்பச், சொற்றிடுவன்சைவனல்லாற்காணஞானச்சுடர்தோ ன்றமுனங்கூறல்செய்வோமென்ன, வுற்றவருநன்றதுவேசெய்யுமென் னவுபாயக்கொப்பரைநிறையநறுநெய்யூற்றி, மற்றதுதீயெழக்காய்ந்தபி ன்னர்மாயன்மாமாதுமூழ்கியேசுத்தரானார். [௨]

அயனுடனிந்திரன்வாணியிந்திராணியவர்களும்வீழ்ந்தெழுந்துசுத் தராயினாரற், சயமுறுதேவர்கண்மாசர்மைந்தரோடுதாம்போய்மூழ் கிச்சுத்தசைவரானார்,மயல்செயுமன்மதனொருவன்றனதுநெஞ்சின்மதித் தமதியினைநினைந்தேமாழ்கிமூழ்குஞ், செயலதுசெய்திலனின்றானதனை க்கண்டதிருமாதின்கேள்வனுந்திருமால்சொல்வான். [௩]

வாடாவேடாமதனுதுட்டாநட்டாமதிகேடாமங்களங்கணல்குமெ ங்க, ளேடாருங்கொன்றையினன்றன்னையென்னென் றெண்ணினாய்ச டையிளம்பிறையைக்கொண்டே, பீடாரும்புவனங்களெல்லாமேலா ம்பேரொளிகாட்டியதேவதேவனன்றோ, தோடாருங்குழையுடையான் றாடணத்தீதூரத்தேயுறினும்வந்துகடுங்கண்டாயே. [௪]

அங்கதனுனீயடலையாகின்றாயையப்பாவையோவுனக்கடாதகன்ம, மெங்கிருந்துவந்ததந்தோபுவனமூன்றுமிடத்துமுன தெழினலம்போலி ல்லையன்றே, சங்கரனைத்தூடணஞ்செய்புத்தியெங்குச்சமைந்ததனைக் கடமகனேமகனேநீதான், மங்குதல்செய்திடுமிந்தச்சத்யமென்றுமன த்திலுறச்சற்றுநீமதித்திலாயே. [௫]

சத்துருவாம்பிள்ளைநீயெங்கேவந்தாய்சாற்றிலிங்கிதுபுதுமைபுதுமை
நானே, யத்தனிடத்தபராதஞ்செய்தவுன்மேலாழிசெலுத்தாமலுறலுசி
தமன்றே, நித்தனெனக்களித்ததுதூட்ணஞ்செய்வோரைநிக்கிரகஞ்செ
ய்பவன்றோவடைவைபோலுஞ், சித்திபெறுசக்கரமுன்னுடலைக்கூறுசெ
ய்தலாலதன்கோபந்தீர்ந்திடாதே. [௬]

திரிபுரத்தையெரித்ததிரிபுரனுக்கேசினமவரச்செய்தவினைவினைசி
தைகிலாதான், பரிபுரச்சேவடியதனாற்காலற்காய்ந்தபரமனெனும்பானு
முன்கச்சோதம்யாமே, கரியுரித்தோன்றனைநிகராந்தேவர்யாரங்கசவெவ
ருமவனடிமைக்கடிமைகண்டா,யெரியுருவற்கபராதஞ்செய்திறந்தோரெ
ண்ணிறந்தோரிதிற்பயந்துநாடந்துளோமே. [௭]

அவனாணைப்படிநடவேனுகிலென்னையந்தகன்கைவசமாக்கிவிடுவ
னன்றே, யிவண்மேவுந்தேவர்களுமுனிவர்யாருமீசன்மகிமைகள்காணக்
குருடாகண்டாய், சிவன்பாலவிழிபம்பொறியோர்கோடியொன்றிற்சிறிதண்
டகோடியெலாஞ்சிதைப்பதாமே, பவன்மேன்மையாரறிவாரனந்த
கோடிபசுவாய்பெற்றுடையோர்க்கும்பகரொணாதே. [௮]

அன்னவன்றன்மகிமையவனறிவனன்றேயணுவுமகமேருவுமேபொ
ப்பென்றாற்போ, லென்னமதியாலெமைமேயயீசனேடுமிணையென்றேது
ன்மதியாலெண்ணினையே, யுன்னுடலைச்சுடவேண்டுநாசகாலமுற்றதனா
லுனக்கிதுவந்துற்றதிந்தப், புன்னினைவேயுன்னுயிர்கொள்யமனுமென்
றேபொறிப்பறக்கவுறுக்கியரிபுகன்றானன்றே. (௯)

ஆங்கதுகணடேபுருவநெறித்துக்கோபித்தயன்புகல்வானரன்றனை
க்கேயபராதஞ்செய், தீங்கிழைத்தவிவன்றனைப்பார்த்திருக்கின்றீரித்தீய
புத்தியுமஃகெங்கேவந்ததந்தோ, வோங்குபரன்றனைமதியாமதிகேடுற்ற
வுவன்றனைப்பார்த்திடிற்கொடியபாவமனறோ, வீங்கிவனைக்கொல்லவெ
ன்றன்படையுமுற்றதிவனையிழந்தோமென்றேயெண்ணுவீரே. (௧௦)

சங்கரனைத்தூடணஞ்செயிவன்றனுக்கைத்தலையையறுத்தேநரகக்
குழியிற்போடீ, ரிங்கிவன்றன்யமனேவுஞ்சவளஞ்சாமமெனுநாய்கள்க
டித்துங்கத்தீர்க்கப்பட்டே, யங்கிநரகிற்கிடக்கக்கடவனென்றேவயன்பு
கலக்கோமளவம்புயப்பெண்கேட்டுப், பொங்கியகண்ணீரினுடன்கோப
த்துற்றபுருடனுடன்பணிமொழியாற்புகலுகின்றாள். [௧௧]

சம்புவினுக்கபராதம்புரிந்தானேனுந்தாதைநீரிவற்கோறறகுதியன்
றே, வம்புறுகாலம்போக்காதிவனையண்ணன்மகிழ்பூசைகடிதினிற்செய்
திடவேபண்ணு, மிம்பரிலிங்கிவனுமெண்ணமெய்தப்பெற்றானினையி
லழகிவனைப்போற்கிடைக்குமோதா, னம்புதல்வன்றனைப்பாருமுன்ன
மேமெய்ந்நம்பரைப்பூசித்திடவேநவின்றிலீரே. (௧௨)

காலகாலங்களினீர்கற்பியாதகாரணத்தாலிவனிழிந்தோனாயினானாற், பாலனாமவன்றன்னைப்பிதாநன்றாகப்பயிற்றிலவன்சிலநடைபடைத்தோனாவன், சாலவேசிவவித்தைகற்பித்தந்தத்தனையனரன்பூசைசெயத்தானையானோர், ஞாலமிசைக்கண்டுமகிழ்ந்துறுவரீதுநயந்துசெய்யாதருந்துயரநண்ணினீரே. (௧௩)

அமுதவிலிங்கந்தனை நும்மைந்தன்பூசையாற்றிலதுபோற்செல்வமேது சொல்வீர், நமதுசெல்வமாம்புதல்வன்பூசியாமனாற்பொறியாம்பெயர்ப்பயனின்றற்றேனென்றே, விமுதுயரார்க்கமலைசொன்னவார்த்தைகேட்டுவிண்டுவிழிநீர்சொரியவிளம்புகின்றான், குமுதவிதழாயுனதுமைந்தன்றன்னைக்குழகனைப்பூசித்திடெனக்கூறிலையோ. (௧௪]

வாராய்மைந்தாமதனாவிடிப்பற்போதின்வள்ளலைப்பூசித்திடுபூசித்திடென்றே, யாராதகாதலினாற்புகன்றிலையானவனிரதிசமேதனாய்த்தூங்கினானே, சீராயிங்கிவனதிட்டவினனன்றோசிவபூசைகாலையினிற்செய்யானேனும், பேராதபத்தியின்மத்தியானம்பிரதோடத்தேனுமேபேணிலானே. [௧௫]

ஈங்கிவன்றன்பாக்கியமில்லைதானன்றோவிலக்குமியேபூசியாதிருந்தவாற்றாற், றீங்கிதனாலென்செய்வோஞ்சிவனைப்பூசைசெய்யவல்லபிள்ளைதனைப்பெற்றிலோமே, பாங்கிலிவன்பரமனையர்ச்சனைசெய்தானேற்பாலர்பாலரைப்பெறவும்வேண்டுமோதான், பூங்குழலாயிவன்பூசைபுரியிலானப்புராந்தகனாமேவன்சிவன்றாள்கரிகண்டாயே. [௧௬]

பரிந்திவனர்ச்சனைபுரியிற்காலவங்கிப்பயநமக்கேன்வருஞ்செல்வத்தளவையுண்டோ, தெரிந்திவன்முன்புரிந்திலனான்மரணகாலஞ்சேர்ந்துழிநாமினியென்னசெய்வோங்கண்டா, மெரிந்துமனைவேம்பொழுதிற்கூவறொட்டவெண்ணுகின்றோர்செயல்போனீயிசைத்தாயென்றே, கரிந்ததிருமேனியரிபுகலச்சேட்டகாரிகைகண்ணீர்கலங்கியழுதாளன்றே. [ ]

கண்டிரதியுடனழுதாண்மாமியோடுகாதன்மருகியுங்கலங்கியரற்றநோக்கி, யண்டர்பதிமனைவாணியரம்பைமாருமாகுளித்தார்பேராரவாரமாக, மண்டுகுரன்மலைமுழைகடோறும்புக்குமாறுதொனிபுகுந்துளதெண்டிக்களாவிக், கொண்டவண்டமுற்றுமேயுண்டகாணிற்குலவுகருமேகவினங்குமுறல்போலும். [௧௮]

அட்டகசமட்டமாநாகம்பூமியசலங்கள்சலங்கொள்கடல்கூர்மனாதி, நட்டமொடுசலங்களுற்றகலங்குகின்றநங்கையர்களழுமோசைகயிலைமேவு, மட்டளகத்துமைசெவியிற்புகுதலோடுமருங்குநின்றவிசயைதனைப்பார்த்துச்சொல்வாள், பட்டவிந்தத்தொனியேதோநமதுவெள்ளிப்பருப்பதமுநடுங்கவேபரந்ததென்பாள். [௧௯]

ஏழுபாதலமுமேனடுங்குகின்றவெங்கணுறங்கயிலையாதாரமாக, வாழுகின்றதிதுவேயிப்படிநடுங்கின்மற்றையதொடுக்கமுறல் வகுப்பதென்னே, சூழுமாப்பிரளயகாலத்தினோர்ப்போசொல்லுவாயெனத்தேவிகேட்டலோடுந், தாழுமவளாச்சரியமுடையளாகித்தாயேநானீதான்றுமறியேனென்பாள். [௨௦]

ஆங்கதன்பினவடனைப்பார்த்தரம்பைசொல்வாளண்ணலாரறிந்திடுவரவர்தம்பாற்போ, யீங்கிதனைவினவிவந்துகூறுகென்னவெழில்விசையைதான்பகர்வாளிமயமாதே,யோங்குகின்றமகேசரெங்கேயுற்றுளாரோவுற்றவரோடியானேசொல்லுரைக்கவல்லேன், பூங்குழலாயெனைவெகுளிலென்செய்வேன்யான்புவனமெலாநடுங்குவதுபுகலவன்கேளாய். ()

தேவர்களிலொருவனவன்கேடுசூழுந்தீமையோன்றங்களொடுங்காமென்றே, மூவர்கம்புரமெரித்தமுதல்வன்றன்னைமுன்னினானின்னுடையகணவன்றானே, யாவர்கட்குமேலானதேவதேவனெல்லவரும்பூசனைசெய்யீசனேச, னேவறுவெங்கணுநிறைந்தோனொப்பிலாதோனொருவனெனவேதமெலாமுரைத்தவன்றோ. (௨௨)

காலகாலேசனகிலேசனேராய்க்கடவுளரிலயாருளார்கருதும்போதின், மாலுமயனேமுதலாந்தேவரெல்லாமற்றையவனுக்கவைகிங்கரர்களன்றோ, சாலுமவன்றான்சிருட்டிதிதிசங்காரகாரணனும்விசுவேசன்றானேயன்றோ, வாலமுண்டோன்றிருவருளையடைந்தோரன்றோ வளவிலாச்செல்வமுற்றேயமர்கின்றாரே. (௨௩)

கந்தருவர்தேவர்சித்தாபூசைசெய்யுங்கடவுள்கலியாணகுணவாரிபோல்வ,னந்தமற்றசவுரியவீரியனவற்கேயாரொப்பாரிமைப்பதன்முனயனேமாலே,யிந்திரனேமுதலமரர்தமையுண்டாக்கியளித்தொடுக்கிலீலைபுரியிறைவனனை, சுந்தரனைக்கணவனெனப்படைத்தாயம்மாசொல்லரியவருந்தவநீ செய்துளாயே. [௨௪]

உன்றனக்குக்கமலைமுதலணங்கனருமுலகளந்தோன்முதலாயவமரர்யாருந், துன்றியதாசியர்தாசர்தாமேயன்றேசோதியைபூசித்ததனுலிவைபெற்றாயே, கொன்றைவேணியன்கொழுநனாகத்தந்திருமாணுமைந்தர்களாகச்செல்வம்பெற்றாய், யின்றுனதுபாதசேவைகடாஞ்செய்யுமெங்களுடைச்செல்வமேசெல்வந்தானே. (௨௫)

யாங்களேழுவுலகாளிறைஞ்சத்தக்கோரிறைவியுன்பாதந்தொழுவோரெய்தாதென்னே, பூங்குழனீயாதிசத்தியுலகமீன்றாய் பொருவருமித்தொழில்புரியும்பொருளுநீயே, நீங்கலாய்சிவனையென்றுமுனையல்லாமனிமலனோரொருகருமநினைக்கலாமோ, வோங்கியவுன்செல்வமன்றோசெல்வமம்மாவுன்பெருமைதன்னையெவ்வாறுரைசெய்வோமே. [௨௬]

அருமறைகள்யாவுமுனையறியமாட்டாவறிந்தோர்களழிவிலாப்பதத்திற்சேர்வா, ரொருமுதல்வியேயென்னவிசையைசொல்ல வுற்றபோ

தோர்நகநாகனடந்ததாலோ, பரமதூடணையில்வந்தகாலவங்கிபார்சுவர்க்கமபலபுவனந்திசைகள்பாவும, விரவிவிண்டுபெதமயன்றன்பூதமுமேவிமிக்கபாதலத்தினெல்லேமேவிற்றன்றே. (௨௭)

அதுகணடே சேடனுளநடுக்கமுற்றனப்பாலதாரசத்தியளவுமண்டு, வதுகணடே கூர்மருந்தம்முளங்கலங்கியோடிவந்துவணங்கித்தோத்திரங்கள்செய்வார், முதியபிரளயகாலானலனேபாரினமுழங்குகதிகதங்கள்சமுத்திரங்களெலாந், துதிபெருகச்சுவறநுகர்ந்திடுவாய்போற்றிதூபவணமுற்றுமுண்ணுஞ்சுடரேபோற்றி. (௨௮)

பருபபதங்கள்பொடிப்படவேபரபமூர்த்திபாலவிலோசனத்தில்வந்தேயுதித்துளோனே,யுருபபமுறுமொளிபெறுஞ்சூக்குமதேகத்தோயோதுசகமுழுதுமுண்டியாக்கொள்வோனே, யருபபமுறுமாசமனமாகவாரியனைத்தையுமுணடிடுவோனேமறுமாற்றங்கொள், விருப்பமுறுமூறுகாயரிபாவேதனமிக்காசமாகவுங்கொள்விராபோற்றி. (௨௯)

இந்திரனேயிமேலகிபமாவுணபாய்போற்றியிசைவாயுவுமுன்கலந்தேயெங்குமாகி, வநதபிரசித்தனேபோற்றிபோற்றிவணங்கினர்க்கு வரங்கொடுக்குமவாதாபோற்றி, சிநதைசெயுமனபர்துன்பங்களைவாய்போற்றி செயகற்பகாலக்கண்ணுமையாய்போற்றி, சந்ததஞ்சங்கற்பமித்திதருவாய்போற்றிதயவுசெய்வாயுனசரணம்போற்றிபோற்றி. (௩௦)

எனக்கபராதமபுரிகதோர்தமைபேசோதியுனைவணங்கு மெங்களைபேபுரத்திகணையாய், தனக்கிணையிலாச்சிவனேதலைவனுவான்சாற்றுலகில்பாருமவன்றனிலவாழ்வோர,மனக்கினியபிரமன்மாலிந்திரன்சந்திரன்மார்த்தாண்டன்முதலினைமேபோருடனேபானு, நினக்குநவமாமன்றேநின்றனுணைநிகழ்ந்துநெறியேநடத்துகொள்கின்றேமே. (௩௧)

பரமனைமுன்னமென்னையிவணைவைத்தான்பணித்தவந்தச்சமயுவென்பாலருள்செய்வானே, திமனவனருளுணடேலவனைபபூசைசெய்திடுமென்னிடத்தினுநீதயைசெய்வாயே, யரனயகிழர்ச்சனையெனக்குவிரதமாகுமரனேபென்றனக்காயோடத்தனுவான், விரவுகினைகளுமவனேபானபூசிகுமவிமலலிங்குமுளததுபார்விருப்பஞ்செய்வாய். (௩௨)

செய்பவைபவவ்விலிங்கபூசைசெய்வாசெங்கமலத்தோன்முதலதேவாபாரு, முப்பமேவவநதனாபூசனைசெய்தார்போலோங்குகூவிளவனமுற்றுளதுபாராய், துப்பநெப்தலசெங்கமலமபூத்தவோடைசூழ்ந்துளவாலந்தமலர்வில்வங்கொண்டே, மைபபனேயாடகலிங்கேசர்க்கண்டாலருச்சனைசெய்பாதொருவரகலாரன்றே. [௩௩]

இந்தவான்றத்துவநீபறியாதில்லையெனக்கூர்மம்சொலமகிழ்ச்சியெய்திமேன்மே, லுந்துகாலாக்கினிச்சொரூபனுமே னுங்குமவையவஞ்சேர்ந்தமூர்த்தியாகி, மூந்துவெண்ணீறுடன்சண்டிவை மந்தரங்கிருளி

கூவிளநீலம்புனிதமான, கந்தமுறுமஞ்சனங்கொண்டிலிங்கபூசைகாதலிற்செய்தேவணங்கிக்களித்தானன்றே. (௩௪)

காதல்பெறுகச்சபரைக்காலவங்கிக்கடவுள்பார்த்துரைக்கின்றானீயே சைவன், நீதகலவெப்பொழுதுமருச்சிக்கின்றாய்சிறந்தவிந்தவிலிங்கமுகாந்தருக்கே, யோதரியபிரியமுற்றதன்றோவிந்தவுயர்பூசைசெய்வதனாலுலகந்தாங்கு, மேதமில்சத்துவமுற்றாயிந்தவில்வத்தெழில்வனம்வைத்தனையுலகத்திசைவைத்தாயே. [௩௫]

இந்தக்கூவிளத்தளிராலிலிங்கபூசையென்றும்விடாதருச்சிப்பாயிவைசெய்வோர்கள், சிந்தித்தகருமமெல்லாஞ்சித்தியாமென்றோரனையாணலன்றான்செப்பக்கேட்டே, முந்துற்றகூர்மர்தாஞ்சொல்வார்செல்வா முதுபசியானுற்றநீதயிர்நெய்தேன்பால், சிந்தொக்கவெந்தைக்குநிவேதனங்கள்செய்ததுளநுகர்ந்திளைப்புத்தீர்வாயென்பார். (௩௬)

இழுதிலிச்சையுடையனீயினமநேகமிருக்கின்றவவற்றையெல்லா நுகர்தியையா, பழுதிலிந்தப்புவனமெல்லாந்திரிந்ததாலேபலயுகஞ்சென்றனபசிதான்பெரிதேயன்றோ, வெழுதியினியெங்கேதான்போகின்றாய்நீயெண்டிசையுஞ்சென்றுளாய்நினையாரேனுந், தொழுதுபசியாற்றுவாரிலையேநின்றன்சூழ்பசிக்கேற்றிடும்போசிப்புப்பெற்றிலாயே. (௩௭)

உனதிளைப்பாற்றுதற்காசையுவைக்குளியாவருந்துளாரெல்லோரு முன்னைக்கண்டே, மனதுபயந்தாலோடிப்போயினாரெனமகிழ்ந்துகூர்மர்சொல்லவந்தோன்றானுந், துணையுடனங்கவன்காட்டுந்தயிர்பானெய்தேன்றோயமுதலியாவையுமேயநேகமுழி, கனையுடனின்றேபருகியிளைப்பிறேனுங்கடும்பசிதீர்ந்துடறடித்துக்களித்துளானால். (௩௮)

தகுங்கூர்மருடன்சொல்வானீகொடுத்ததயிர்நெய்தேன்முதலாம் பானங்களாலே, மிகுந்ததாகந்தவிர்ந்தேமெய்பூரித்தேன்மேவுமிலிங்கார்ச்சனையின்மகிழ்ச்சிபெற்றேன், திகந்தமெல்லாம்போயலைந்தவருத்தந்தீர்ந்தேன்சென்றகாலங்கள்யுகபபுதங்கண்டாய்புகுந்திடும்வைகுண்டாதியுலகந்தன்னிற்பூசைசெய்ததொருகோடியிலிங்கமுண்டே. (௩௯)

உனதுசிவலிங்கம்போலெங்குங்காணேனுறுபோகமுத்திதரற்கிதுபோலில்லை, யனகன்பூசனைபுரிவாய்நீமயக்கையகற்றுசிவதருமங்களநேகஞ்செய்வாய், சனனதுக்கங்கூட்டுமாணவமும்பாசத்தருக்கையுநீக்கிடுமிலிங்கபூசையென்று, மனதுடன்செய்வாய்சிவார்ச்சனையையாவர்மன்னினாரவரெனக்குவரதராமே. (௪௦)

அண்ணலடியார்போல்யாரறிவுளார்நீயறிந்தனசொல்லெனக்காலாக்கினிதான்கூறக், கண்ணுதல்வெண்ணீறுருத்திராக்கம்பூண்டகச்சபர்சங்கரனையுளத்திருத்திச்சொல்வாரென்னருமெய்ப்பொருளேநீயெனைக்கூறென்றவெழிற்றங்கதமகவினுரைகேட்டம்போலும், புண்ணியனேயினவிந்தவாறுசொல்கேன்பொறுத்தருளியினிதாகக்கேட்கவேண்டும்.

கவித்தபடலப்படுகுழியிலழுந்துகின்றோர்சாரணனைப்பூசியார்குடும்பந்தாங்கித், தவித்திடுவொராசாபாசங்களாற்பச்சாகின்றோர்சங்கரன்சீரறியமாட்டார், குவித்தமனத்தால்வாக்காற்கிரீசன்மேன்மைகுறித்திடச்சொற்றிடப்படுமேயுலகத்தேயுற், பவித்தசனஞ்சங்காரர்ச்சனையிலென்றும்பலகாலம்போக்கிடவேவேண்டும்வேண்டும். (சஉ)

அம்பிகாபதிபூசையான்மலாமறைதத்தவிரவொண்ணிலையர்ச்சனையின்மேன்மை, செம்பதுமன்முதலோரானம்மாலேதாமசிந்தனைசெய்திடப்போமோவேதஞ்சொல்லு, நம்பனீறணிந்துசுத்தசலம்வில்வத்தானமாந்தமாஞ்சிவநாமத்திலிங்கபூசை, யிம்பரிற்செய்பவனேபாக்கியவானந்தவிலைநாமத்தாலுரையியற்றுவோமே. (சஙு)

இந்தமனுவரன்பூசைச்சித்திநல்குமிதயசுத்தியுடன்முத்தியாவுமீயு, முந்துமிலிங்கார்ச்சனையாகிதியினுலேமொழியுநவசித்திபிறந்ததவைமெய்யன்றோ, வந்தமனுப்புருடார்த்தஞ்செல்வமெல்லாமரியமுத்தியிவைக்குநற்காரணமதாகுஞ், சிந்தையினிற்சிவபூசைப்புந்திவாய்த்தல்சென்மகோடியிற்புரிந்ததருமந்தானே. (சச)

இதுசிவலாபசாதனமாமன்றேயிதனுலேபெருந்தகைமையெய்தப்பெற்றே, னதிகமாஞ்சாதுக்களுலகந்தனிலிலெரிதறிந்தவறிவுறலுமரியதாகுங், கதிதருமவ்வறிவினுடன்பூதிகண்டிகையணிந்துசைப்போதுகொண்டு, நாளுமதியணிவான்பூசைபுரிபாதவத்தோன்வாய்த்தசகவாசமேவாஞ்சிப்பேனியான். (சரு)

பொழுதுசிவார்ச்சனைதனிலேபோக்கனன்றப்போதுபோக்குவர்ச்சேருநட்பேநன்மை, முழுதறிவாற்பரன்ஞானம்பெறவேவேண்டுமுற்றலரிதுவதனாற்பூசித்தென்றுந், தொழுபவர்பாற்கூடியேயிருக்கவேண்டுந்தொடர்வதனாற்பரனிடத்தோர்துளிநீராலும், வழுவறக்கொண்டன்பினிற்பூசித்தால்யார்க்குமனதினுக்குமெட்டாதஞானமன்னும். (சசு)

ஒருதிவலைத்தண்புனற்குப்புத்திமுத்தியுளதேற்சங்கரனிடத்திற்பத்தியோடுங், கருதிநறும்பூவில்வங்கொண்டுபூசைகாதலிக்கிற்கதிபெறுதல்கேட்கவேண்டா, மருவுருவோடரனுள்ளகாலமெல்லாம்வாழ்வுறவேவேண்டினோர்புனல்கொண்டேனுந், திருமருவுமிலிங்கபூசனைதான்செய்யிற்சிவன்பிரியயாகியருள்செய்வன்றனே. (சஎ)

ஆங்கவனையோர்பொழுதுசிந்தித்தன்பாலடிவணங்கிலருச்சிக்கிலகிலமெல்லாந், தாங்கரசுபுரிந்துபின்னர்முத்திமாதுதன்கேள்வனெனப்புணரத்தகுவரன்றே, தீங்குபெறுமறிவினர்சிவனைப்பூசைசெய்யாதார்சேர்ந்துநிறைந்துறைவதற்கே, யோங்குநரகுற்றுளவாற்பரமனபூசையுஞற்றுதானருந்துயருக்குறையுளாவான். [சஅ]

குடிவாழ்க்கைதனிலிருந்தேயரும்போகங்கள்குறித்திடுவோராயிடினும்பரமன்பூசை, யடியார்க்கேயுறவாகியவர்கள்சொற்கொண்டன்பூ

சைசெயிற்கயிலையடைந்துவாழ்வார், நெடியான்கண்மலர்சாத்துமிமலன் பாதமினைவாகக்கூவிளநற்றளிர்கள்கொண்டே, படிமீதிற்சடையாமலரு ச்சிப்போர்கள்பாக்கியத்தாரெனக்கூர்மர்பகர்ந்தாரன்றே. [௪௯]

முப்பத்தைந்தாவது கூர்பச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-க௪௯௭.

முப்பத்தாறாவது,

மன்மதநவதைச்சருக்கம்.

வேறு.

ஈனமேவியமாதர்சிற்றின்பமேயிச்சைகொண்டனன்பேரின்பமிச்சி யே, ஞானமேவுமுடற்றனைப்போற்றுவேனுன்பதாம்புயம்போற்றப்பெறு வனோ, வானமேவியதேவரிறைஞ்சிடவாரிவாரிவிடத்தைநுகர்ந்திடு, ஞா னவாரிதியேசபைநாடகநாடகத்தவருக்கருணைதனே. [௧]

முந்துமைந்துமடக்கியயாக்கினவற்கியாகுமுனிமொழிவானுறுப் பைந்துமாகத்தடக்கியுரைத்தசொலகிலநீறுமனனும்வந்தேயுரை தந்துளார்சைவநீதிக்கமடகேள்சார்ந்தனனின்னதுசகவாசத்தாற் சிந்தையுற்றிடுபாலவிலோசனர்ச்சேர்ந்துபேரின்பம்பெற்றிருந்தேனரோ அவர்ப்பிரிந்துபெருந்துயராற்றினேனவையனைத்துமுனதுசிவலிங்க முவப்பினோடுதரிசனமுற்றதாலொழிந்துளேனிந்தப்பூசையினுய்ந்தனன் றவத்தினாற்பெறுகின்றசிவப்பிரசாதமுண்பெசிதவிர்ந்தேனிதை யுவப்பினோடுமுடலமெடுத்துளோருற்றுநோக்கினும்பாவமொழிகுவார்.

முன்னரின்னசிவப்பிரசாதத்தைமொழிந்ததான்முத்தராயினர்சித்த ர்கண், மன்னுகின்றசிவார்ச்சனைபோலகின்மாலியமுத்திசாதனமாகுமா, லன்னதைப்புசித்தோர்கொடும்பாவங்களனைத்து நீங்கியயனுருவாகுவா ர்,பன்னுமின்னதருந்தியன்றோபுவிப்பாரந்தான்முடிப்புவிற்பரித்துளாய்.

என்றுசொல்லும்பிரளயவங்கிசொல்லினிதுகேட்டிடுங்கூர்மனவ னுள, நன்றுதான்மகிழப்புகல்வான்சிவனுடைகஞ்செயும்லீலைமகிமையா, லொன்றுகின்றவுலகினிலைக்குமாலோதுகின்றனர்யான்பாரங்கொள்வனெ ன், றன்றிநுந்தமக்கும்மெனக்கும்மவனுணையன்றியொராண்மையுமுண் டரோ. [௫]

பலவகைப்படவேபுவனங்களைப்படைத்தளித்தழிக்கும்பரிலீலைசெ ய், தலைவனன்னவற்காகாதமெனனையத்தலைவனுலருட் பார்வைசற்றே கிடைத், துலகந்தாங்கும்பெலஞ்செல்வஞானமுமுற்றுளேனத்தன்றன் பாததூளின்கண், மலராருச்சிக்கின்மாலறுமண்ணருடனைவந்திக்கின் மற்றோர்பயமுண்டோ. [௬]

மதியணிந்தகிரீசன்பதியெனமாமறைக்குலந்தாமறைகின்றதா, லதி கனித்தனெம்மையனியாவருமளக்கொணாதசிவனவன்றேவர்கடுதிசெய் பாதந்தொழுவோனுளத்தினிற்றூயஞானம்விளைந்திடுந்துன்பஞ்சேர், விதிதருஞ்சனனப்பயந்தீர்ந்துபர்மிக்கவீடுபெற்றுய்வதுமெய்ம்மையே. [௭]

உலகவஞ்சனையுற்றபிராந்தர்களூற்றதென்னதியான்செய்துளேனென்பார், மலினமானபிமானமற்றேதலைவனைத்தனைவினைதன்னையுந்தேர்ந்துளோர், தலைவன்செய்தியென்பாரவர்தாமெலாந்தத்வஞானிகளாங்கல்விற்றேறைக்கு, மலகிலாவுயிர்கட்குமருத்திசெய்தாட்டுவிப்பதாமண்ணறன்பான்மையே. [அ]

எவ்வுலோகத்தும்வைகுண்டலோகத்துமிருக்குந்தேவர்கடம்மைத்தான்பேணல்செ, யவ்வளவுமற்றோர்சிவனையுலகியாவுமாட்டிநடத்தும்ப்ரதாபனுஞ், செவ்விசேர்தருகாரணனாதியோர்செனனதுக்கங்கள்சேர்வார்திரமில்லார், நவ்விசேர்தருகையனெனையனைநாடியேதுக்கந்தீர்வர்நல்லோர்களே. [௯]

ஈங்குவந்ததுநீர்கிரீசனுமெந்தையார்தந்திருவருளாலன்றோ, வோங்குநுந்தமைப்போலெனக்கேநெஞ்சமுவக்குந்தன்மையரியாவரு மில்லையாற், றீங்கிலாநுந்திருவருளாற்சிவன்றேவதேனைப்பூசனைசெய்துளேன், றாங்குமிந்தப்புவியோராறுவதாஞ்சங்கரன்னருளாற்பாரமில்லையே.

வேறு.

அவனருள்சிறிதின்றிலகிலநான்சுமந்துய்வேனோ
வுவமையில்கனலோயென்னக்கூர்மன்றனுரைத்துறுங்காற்
றவலருங்காலந்தாமுமநேகங்கள்சார்ந்தவங்கட்
கவலைகூர்பயமுண்டாக்குங்காந்தியொன்றுறவேகண்டார். [௧௧]

ஆங்கது கண்டகாலவனலர்தாமறிகிலாம
லோங்குறுகூர்மன்றன்னைவினவிடவுரைசெய்வானாற்
பாங்குறுநும்மைக்கண்டுபயந்தநாரணரேயாதி
யேங்குறுதேவர்யாரால்விளைந்ததிங்கிதெனத்தேர்வார். (௧௨)

சித்தசனலேவந்ததிதுவெனத்தெளிந்துகொண்டா
ரித்தனைகேடுசூழ்ந்தானிவன்றனைக்கோறுமென்றே
யத்திரமேவினார்களனைவருமவைகளெல்லா
மத்தனைச்சூழ்ந்துநின்றுவதைத்திடாதொழிந்தவன்றே. [௧௩]

அந்தவேள்சிவனைநிந்தையறைந்திலனேலவற்கே
வந்திடுந்தேவர்தம்மினிகர்சொலவல்லாரில்லை
முந்துமங்கவனைச்சிந்தைசெய்திடின்முனிவர்தாமும்
பைந்தொடிமாதர்மோகவாரியிற்படிவர்தாமே. (௧௪)

பூங்கணையவன்றனேவிற்பொருவறுமுனிவர்நெஞ்சாந்
தீங்கறுவெற்பையேவச்சிரமெனப்பிளக்குமன்றே

யாங்கதாச்சரியமாகுமழகன்மன்மதனவன்றான்
பாங்குசேர்தவரைத்தன்கைப்படுத்தியேவசஞ்செய்வானே. (௧௫)

அனையனும்மிடத்தின்மோகபாணம்விட்டழுத்தவல்லான்
மனைவிநுஞ்சுவர்காமதேவிமருவியேகாலம்போக்கும்
வினைபுரிந்திடுவானானுன்விண்ணவர்படைகளாலே
வனைவுற்றுஞ்சஞ்செய்யவருமும்மையறிந்திலானே. (௧௬)

தீரன்மன்மதன்றானும்மைக்கண்டிடிற்றிருவன்றுரை
வாரமதாகக்கூடிவழிபடப்பணிப்பனன்றே
சாருநீரவ்வாறெய்தில்வாதகாரியந்தாழ்வாகுங்
கோரமாமபராதஞ்செய்குற்றமும்வருங்கண்டீரே. (௧௭)

பரமனைநிந்தைசெய்யும்பாவியைக்கண்ணுற்றாலும்
திரமுறுபாவஞ்சேருமதுநீரச்செய்யுஞ்சாந்தி
யுரமுறுநூறுபேதஞ்செய்யினுமொழிவுறாதா
லரனுறுபத்திபெற்றோரபராதன்றனைச்சேராரே. [௧௮]

சேர்ந்திடிற்றுக்கமாகுஞ்சென்சுடர்ப்புலிங்கமொன்று
போந்தவன்றலைமேல்வீழ்ந்துபொடித்திடச்செயுமென்றீசற்
கார்ந்திடும்பத்தியோடுங்கூர்மன்றானையக்கேட்டே
சார்ந்திடுங்காலவங்கித்தலைவர்தாஞ்சாற்றுகின்றார். (௧௯)

பண்புறுங்கூர்மநின்றன்மனத்தானபத்திசேர்ந்தாய்
திண்பெறச்சென்மங்கோறுஞ்சிவபூசைசெய்தார்க்கன்றி
யெண்பெறவெய்திடாதாலிதுகதிக்கேதுவன்றோ
விண்பெறுதருமவாரியாம்வியப்பாகுமன்றே. (௨௦)

என்றனர்காலவங்கிகூர்மன்சொல்விதயத்தெண்ணிக்
குன்றனபுலிங்கமொன்றுவிடுத்தலுங்குலைந்தாரியாருஞ்
சென்றதுவண்டமெல்லாஞ்செறிந்ததுதேவர்கண்டார்
நின்றனர்திகைத்தாரேகநெறியொன்றுங்காணோமென்பார். [௨௧]

அண்டமுற்றளாவிற்றென்றேநடுங்குவாரதனைத்தானுங்
கண்டனன்மருண்டான்றன்பங்கனைசிவன்மகிமைநெஞ்சங்
கொண்டனன்கூர்மன்காலவனலர்முன்குறுகிவந்தே
யெண்டருபொறிதானென்னைவிடுத்துளீரெற்றுக்கென்னும். [ ]

இப்பிரமாண்டந்தானோர்பிண்டமென்றெடுத்துண்பேனோ
முப்புவனங்கள்வெவ்வேறாகவேமுறையினுண்கோ
தப்புதலின்றியென்பார்சதகோடிபுலிங்கமுண்டா
லப்பொறிமேன்மையாரேபுகல்வராங்கவற்றிலொன்றே. [௨௩]

இந்தலோகத்தையானேயுண்பனென்றெதிரேயோடு
முந்துமால்பிரமனிந்திரனேமுதன்முறைமைபூண்ட

வந்தவானவரில்பாரையாகுதியாகக்கொள்வே
னுந்துமங்கவரையெல்லாமொருங்குதுய்த்திடுவேனென்னும். [௨௪]

அகிலங்கடம்மையாங்களடர்ப்பதற்கரியதன்றே
யிகலறுமெங்கடம்மையாதுகாரணத்தாற்றந்தீர்
புகலுமிட்புவனமூன்றும்யாங்கடுய்த்திடப்போதாதாற்
றகவுறுமெமக்கிலக்கார்கண்டிலோஞ்சாற்றுவீரே. [௨௫]

யாஞ்செயற்பாலதென்னேயியம்புதிரென்னலோடும்
வாஞ்சையாலதிசயித்தேதகூர்மருமகிழச்சொல்வார்
பூஞ்சடைச்சிவனைமற்றைப்புத்தேளிர்கிராமென்றே
தாஞ்சொலும்பழிசேர்காமன்றனைப்பொடிபடுத்தியென்றார். [௨௬]

என்னவேகாலவங்கியியம்பலும்புலிங்கங்கோபந்
துன்னவேபுகலுகின்றதிவனையேசுடுவதற்குப்
பன்னியென்றனைப்பணித்தீர்பரமன்செய்லீலையாலென்
சின்னமதொன்றேயண்டர்செகம்பொடிபடுக்குமன்றே. [௨௭]

எங்கேனும்பெரியதாயகருமமொன்றிருந்ததென்றா
லங்கேயென்றன்னையேவல்காரியமற்பன்றன்மேற்
பொங்கோதத்துடன்விடுத்தல்போதுமோபுல்லிதன்றே
றுங்கேண்மைப்பெருமைக்கீதோசம்மதநுவலுவீரே. [௨௮]

நானிலத்தெவரேனுந்தாரகங்கொடுகுறைப்பதன்மேல்
வானகத்திந்திரன்றன்வச்சிரம்விடுப்பாருண்டோ
யீனமாங்கொதுகின்மேல்வெற்பெடுத்தெறிந்தடர்ப்பார்போலத்
தேனலர்மாலைமார்பீரென்வயிற்செப்பினீரே. [௨௯]

அரியயனிந்திராதிதேவரையடர்த்துவெற்றி
புரிவதுமெளியதென்றுபுகல்காந்திப்பொறியைநோக்கித்
தெரிதருகாலவங்கிமகிழ்ந்துயர்சிவலீலைக்கே
யுரியவுன்வல்லபந்தானெக்குமென்றுரைக்குமன்றே. [௩௦]

ஆயினுமரனைநிந்தையறைந்திடுமதனையின்னே
போயினிப்பொடித்தியென்னச்செப்பலும்பொறியொன்றேகித்
தீயவனுடலந்தீயத்தேவர்களேவச்சூழ்ந்து
மேயினபடையெலாமின்மினியெனப்பறந்தவன்றே. [௩௧]

அரன்றனைநிந்தைசெய்தவவனுடல்சாம்பராக்கி
யுரந்தரும்புலிங்கஞ்சாந்தமுற்றதாலும்பரெல்லாம்
வரந்தரும்வள்ளல்செய்தலீலையைமனத்துட்கொண்டே
பரந்ததங்கிளைகளோடும்பயந்துதம்பதங்கள்புக்கார். [௩௨]

சிந்தனையின்றியன்பாச்சிவபூசைசெய்திருந்தார்
மைந்தர்காள்சகலதேவவந்திதன்சிவனைகண்டீர்
நிந்தனையின்றிநீவிர்பயபத்திநியமம்பெற்றே
வந்தனைபுரிவீரின்றேன்மதனைப்போலாவீரன்றே. [௩௩]

ஈதுநிச்சயமாங்கண்டீரிப்படிவராமலீசன்
றீதறுபூசைசெய்வீர்சிவனுளமகிழ்ச்சிகூரிற்
பூதலத்தரசுமின்பமுத்தியும்பொருந்தச்செய்வன்
வேதங்கள்பணிவோன்பாதஞ்சரணமென்றடைவர்மேலோர். [௩௪]

எத்தனைகாலமீசன்பூசனைவழுவின்றாகிப்
பத்தியாற்புரிவாரன்னகாலமுமபமிருத்துதான்
முத்தனையாராதிக்குமயன்றிடிற்சுகங்களுண்டாம்
புத்திரர்நீரிப்பூசைப்பொருள்கட்குவிசாரம்வேண்டாம். (௩௫)

ஆடவியிலுள்ளபத்ரமலர்பலங்கொண்டுநாளுங்
கிடமுறைக்காலைதன்னிற்சிவதீர்த்தந்தன்னின்மூழ்கி
விடையவனிலிங்கபூசைநியமமுமவிரும்பிச்செய்வீ
ருடையவனுருத்திராக்கம்புண்டரமுவந்துபூண்பீர். (௩௬)

பொருள்பலநாடிக்கொண்டுபுனிதனாலயத்துட்சென்றே
யருள்புரியிலிங்கபூசையுபசாரத்தாற்றுவீரா
மருள்புரிசோமபலின்றிவருகாலந்தப்பாவண்ண
மொருமையாற்பணியிற்பாவமொழிந்தின்பம்பெறலாமன்றே. (௩௭)

கனவினுமற்றைத்தேவர்தங்களைக்கருதும்பொல்லா
நினைவினைமங்களந்தானிகழ்வுறுமதுசெய்யன்மின்
வினவுநீர்செய்யவேண்டும்விமலனர்ச்சனையேயின்பந்
தினமருள்சுரபியாங்கதயனுக்குந்தெரிந்திடாதே. (௩௮)

வாய்த்திடுகாலந்தன்னின்மகிழ்ஞானபூசைசெய்வீர்
நீத்துப்பின்புரிவமென்னினிலைவாமில்லைக்காய
மேத்துறுகாலந்தாழ்க்கின்னமுதமுநஞ்சாமாற்
பூத்தவன்புடையோர்துன்பம்புகினும்பூசனைவிடாரே. (௩௯)

செப்பருந்தலைமையாகுஞ்சிவார்ச்சனைச்செல்வத்திற்கே
யொப்பரும்விக்கினங்களுறுமனத்துறுதிசேரி
னப்பெருங்கேடுவாராதபீட்டங்களனைத்துநல்கு
மிப்பெருந்தருமமொப்பாந்தருமங்களில்லையன்றே. (௪௦)

எத்திறத்தேனும்பத்தியைந்திடவிறைவன்பூசை
நித்தியம்புரிதிராயினித்தியம்பெறுதிரன்றே
முத்திதந்திடுவெண்ணீற்றன்முதல்வனைப்பூசையாற்றிற்
பத்திசேர்சைவசீலம்பலிக்குமெய்யுண்மையீதே. (௪௧)

புனிதன்பூசனைப்பொருட்குப்புண்ணியப்பொருள்விபூதி
யினிதுகொண்டிறைவன்பூசையியற்றிடிற்பிரியமாவன்
றனியிவற்றினிலதிகதையொன்றுசாற்றுகின்றேன்
பணிமதிவேணிக்கன்பன்பனவர்கட்கதிபனுனேன். (௪௨)

விசையநன்னகரில்வாழ்வோன்விமலனைப்பூசைசெய்வோ
னிசைபெறுமவன்றன்னோர்காளிறைவர்தீர்த்தேசர்தம்மை
நஞ்சதருநனவிற்காணப்பெற்றனனுதன்முன்னர்த்
திசைபெறுஞ்சைவசீலரநேகரைத்தெரிசித்தானால். (௪௩)

செஞ்சடையவன்றீர்த்தேசன்றிருக்கோயிலதனிற்சேர்ந்தே
யஞ்சமுதத்தினோடுகூவிளமலரின்வர்க்கம்
விஞ்சுமாபரணவர்க்கம்வெண்பட்டாங்கலைவர்க்கத்த
மெஞ்சலில்கனியின்வர்க்கமிறைபகிற்கிவேதனங்கள். (௪௪)

பொற்புறுந்தூபதீபவரிசையாம்பொருள்கள்கொண்டே
யற்புடனடியாரங்கண னகானங்களாதி
பற்பலவியற்றுவார்போற்பத்தியாற்றுணையன்பாற்
சொற்பெறவியற்றிச்சூழ்ந்துவணங்கினன்றுதியுஞ்செய்தான். ()

அஞ்செழுத்தெண்ணிப்பூசைப்பலனான்றனக்கேயாக்கி
யுஞ்சனனோர்சாருற்றான்றுகம்வக்குறுதவொடுங்
கஞ்சமாம்புனலநந்தச்சார்தலுமாங்குச்சார்ந்த
வெஞ்சலிலாதசைவர்கண்டனிதனைச்சொல்வார். (௪௬)

பனவவிப்பானியந்தானருந்திடேல்பாமனைமே
தனமதுசெய்ததன்றற்சங்கரன்பத்திபெற்றாய்
புனலிதுசுத்தியாகப்பூதிதான்றெறித்தபின்னை
ரனகனுக்கற்பிதஞ்செய்ததன்பின்னரயிக்கவிடாயால். (௪௭)

என்றவர்புகன்றபோதிற்பூதியெங்குற்றதென்று
னன்றவரளிப்பநீரிலஞ்செழுத்தோதிப்பெய்தே
கொன்றைவார்சடையனுக்கற்பிதமெனக்குறித்தபின்னர்ச்
சென்றதைநுகர்ந்தேயாங்கணிருந்தனன்சிறிதுகாலம். [௪௮]

சாற்றருநீறளித்தசைவர்தாஞ்சிவதன்மங்க
ளாற்றவும்புகலக்கேட்டேயவர்தமைச்சிவனுமென்றே
போற்றினன்குரவர்நீரேயென்றவர்புகன்றபோதி
லேற்றநித்திரையுணர்ந்தானிவையெலாமுணர்ந்துளானே. [௪௯]

ஆதலாற்புதல்வர்நீருமரன்பூசைப்பொருள்கட்கெல்லாம்
பூதியைப்புனிதஞ்சேரக்கலந்துபூசித்தல்வேண்டுங்
காதல்சேரமுதமேனுநீற்றினைக்கலவாதுற்று
லோதுறும்விடமதாகுஞ்சிவனுமற்பிதமுறானே. [௫௦]

அணிபரிவட்டநீறுபரிசித்தேயணிதல்வேண்டுந்
தணிமடைப்பள்ளிவேறுசங்கரர்க்கமைக்கவேண்டும்
பணியுடன்பாகஞ்செய்யுமவர்களும்பரமன்பூதி
மணிபணிந்தமைக்கிற்பாகதோடங்கண்மாறுமன்றே. [௫௧]

சமைத்திடுங்கலத்துநீறுதரித்திடவேண்டுமவ்வா
றமைத்தனைவேதனங்களானமுதாகக்கொள்வா
னிமைத்திடுபொழுதுமில்லாவிளமைசெல்வங்கள்வாணா
ளமைத்தமின்னார்மின்கூட்டமவற்றாசையொழிகுவீரே. [௫௨]

பானுவின்கிரணநீற்றுப்பாலலோசனனைநாளு
மானவன்புடனேபூசித்தடிபணிந்தேத்துவோர்க்குத்
தானவனருஞ்சோதிமுத்தியுந்தருவானென்றே
மானவனனவிஸ்வாவசுமைந்தர்க்கிசைத்தான்மன்னோ. (௫௩)

முப்பத்தாறுவது மன்மதவதைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௪௫௯.

முப்பத்தேழாவது,

வருணாசச்சருக்கம்.

வேறு.

படவரவம்புலிபயிலுங்கானம்போலப்படர்பவளச் சடை முடியுஞ்சுடர்கண்மூன்றுஞ், சுடர்விழியுந்திகழ்வதனும்புயமுறங்கொன்றைத் தொடையணியும்புயவரையுந்தோடுங்காதும, புடைவிரியும்புலியுரியினுடையுமெய்யன்பொய்யருளம்புகுதாதான்புவனமீன்ற, கடலனையவிழிகாணநடிக்குந்தாளுங்கண்டுளார்பிறவிவெள்ளக்கரைகண்டாரே. (௧)

வேதயாக்கினவற்கிமுனிவன்சொல்வான்மிக்க விசுவாவசுவாந்தந் தைவார்த்தை, காதல்புரிமைந்தர்கடாந்தலைமேற்கொண்டார் கடவுளிவனெனக்கருத்திற்கொண்டுதாழ்ந்தார், தாதையுன்றனுபதேசம்விசுவசித்தோந்தழைத்துளோம் யாங்கண்முன்செய்தருமந்தன்னான், மாதவஞ்செய்சிவபத்தியுறும்பிதாவை வாய்த்துளோமற்றையர்க்குக்கிடைத்திடாதே. [௨]

எந்தைசிவபத்திபெறுமத்தன்றானேயிகபரந்தந்தருள்குரவனவனையல்லாத், தந்தைவயிற்றிற்பிறந்தானுடலைவீட்டத்தகும்யாங்கணினதிடத்திலுதித்தலாலே, வெந்துயர்தீர்ந்தனமெங்களைநீபெற்றமேன்மையாலுன்றனக்குந்துக்கமின்றாற், சிந்தைமகிழ்சம்புவித்தையெல்லாமுன்றன்றிருவருளானின்னிடத்தேதெரிந்துளோமே. (௩)

இப்பிறப்பிற்சைவனுமுன்னிடத்தில்யாங்களுதித்தமையினன்முத் தாரோ, மப்பரொடுமைந்தர்களுஞ்சைவாசாரமடைந்துளரேற்செல்வ ரவரென்னும்வேத, மொய்ப்பில்சிவப்பிரசாதநுகர்தாய்தந்தையுதவுமைந் தர்சரைமரணமொழிந்தமேலோர், தப்பில்காலாந்தகரைப் பூசைசெய் வோர்தங்களுக்குமிருத்துபயமில்லைத்தானே. [௪]

யாங்களுஞ்சென்மக்கடலைநீக்குமெந்தையிந்துசேகரன்றேவரெல் லாம்போற்றும், பாங்குபெறுநீண்டசெங்கைப்பதுமஞ்சூலம்பரித்தகளகந் தரனைப்பணிதல்செய்வோம், பூங்குழலாளுமையைபவண்மைந்தர்தம்மை ப்பொருவில்சரணெனக்காலம்போக்குகின்ருக, நீங்ககல்வோம்பின்ன ரொருவரையுநெஞ்சிற் சிந்தியோங்கனவினிலும்வந்தியோமே. (௫]

எமதுசுத்தமனத்திலுமையிதயப்போதிலெங்குசாணுப்புயனையவ டன்றோளி, லமைதரவேயணைத்ததுணைக்கையினனையவளாசந்தனிற்ற ரித்தகளபநாவி,திமிர்தரவேசெம்மைவெண்மைபடைத்தாரார்பந்திகழ்பர னையருணவுதயம்போற்சேப்பாங், கமழ்தருசெங்கமலச்சேவடியினனைக் கடவுளையேகாதலினுற்பணிகுவோமே. [௬)

எனப்புதல்வர்புகன்றமைகேட்டிசயித்தேயிசனன்பனும்விசுவா வசுசொல்கின்ருன், வனப்புடையீர்நுமதுசகவாசத்தாலென்பன்னுகு லத்தோடியானும்புனிதமானே, னனைப்பதுமன்விண்டுவிந்திராதிதேவாறி ந்தனரென்குலமேன்மைநும்மையின்று, நுனிப்பரும்பூசனையிலிங்கம்பு னிதமானேனும்வார்த்தைபமுதருந்திப்பூரித்தேனே. (௭)

மறைபரவுவிசுவேசர்மகிமையின்னமன்னுபலமென்றருமோவதிகி லேனு, னறைதருமிச்சிவசிலரவையேநன்மையதைநோக்குங்கண்களே புனிதமாகு, மிறையவன்பூசனைகாதைவிரும்பிநாளுமிருந்திடுவோமென விசுவாவசுதான்கூறி, நிறைதருதன்மைந்தரவர்மைந்தரோடுநிகரில்சூரி யன்போலவிளங்கினனே. (௮)

மன்னர்குலந்தன்னில்வந்தவன்னைகேளிப்மற்றிப்பேற்றினிலரனர் ச்சனையினலே, பன்னருங்காலப்போக்கவேண்டுமந்தப்பாக்கியத்தாற்சி வபத்திமைந்தர்தம்மை, யின்னிலத்திலின்றிவொர்குடும்பவாரியிடையழு ந்திச்சிவபூசைமறந்தாரெல்லாந், துன்னுவர்நீரகினிலத் துயர்வராமற் சோதிபூசையிற்போதுபோக்கல்வேண்டும். (௯)

வேறு.

என்னவேபுகல்கின்னரன்சொலிராசகன்னிசெவிக்கொடேயீசர்பூ சையினேசமாயினளிவைபகர்ந்திடுமெவன்முனம், பன்னுகின்றனளையநீ பகர்கின்றவிக்கதைகேட்டுளோர்பாவநாசமதாகுமால்விசு வாவசுப்பெய ருற்றுளான், மன்னருஞ்செல்வம்யாவருற்றவர்சிவன்மகிழ்ந்திடுபூசனை வ ரத்தினன்மனைமக்களொக்கல்செழித்துளான்புணர்மாதரு, முன்னருஞ் சிவனைப்பரர்விடுமுறுதிபெற்றனர் நிலமூநல்லோதுகாலமும்வித்தும்வாய் த்திடிலுழுதொழிற்பயன்விளையுமே. (௧0)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR MADRAS-90

சாற்றிடும்விசுவாவசுத்தருதனையர்புண்ணியரூபராந்தன்மையோர் தரிசனமுறிற்கொடுவினைகள்வந்தெதிர்சாருமோ, வாற்றருந்தருமங்களேயுருவுற்றரன்பணிபுரியுமென்றறிவுளோர்புகல்வார்களோர்கதையொன்றுதானுளதறைகுவே, னேற்றமாமிதுவினவினோர்களரன்பணிக்குரியோர்களாயிடுவர்சொற்றிடுமெவருமின்பமதுறுவர்பாக்கியவானுனை, மாற்றருஞ்சிவனாலயத்தினில்வந்துநோக்குறப்பெற்றனன்மன்னுமிங்கதனாற்சிவன்பிரியம்பெறும்பணிவாய்த்ததே. (௧௧)

யான்சொலும்மிதியாசமிங்கிதுபிரமனாதியருலகெலாமெய்துறும்பிரசித்தமுன்னிதுவினவியுற்றுளனெந்தைதான், கான்செறிந்திடுகொன்றைவேணியர்பூசனைப்பிரியத்தினற்கனகராசியிரத்நராசிகணக்கிலாதசெல்வத்தினால்,வான்செலும்முயர்புட்பகத்தவன்வந்துநாடொறுமவனுளமகிழுறும்படியெலுவனென்றிடமருவவன்பணிபுரிபவன், ருன்செறிந்திடுபெருமையாலவன்றனபதிப்பெயர்தன்னொடுந்தருமதேனுவெனும் திருப்பெயர்சாற்றவேற்றமிருந்துளான். (௧௨)

ஐயனங்கவன்றுய்யவாஞ்சிவதருமம்யாவையுமாற்றிடுமாலயம்மெனலாகுவானவன்பெற்றடுத்திரியாமெனக், குய்யவேசிவனாலயங்கனகத்தினவமணியினாலுண்டுசெய்தனகோபுரம்பிராகாரமண்டபமுடையதாற்செய்யவங்கதுசூழுகின்றவசோகமாவனமுளததிற் றிகழுமாம்பிரந்தாளிபுன்னைதமாலங்கூவிளஞ்சிறுபெருந், துய்யசம்பொடுகந்திதாழைதுலங்குமெளவல்குராமாசொன்னசண்பகமத்தைதும்பையொடற் கமின்னனதுன்னுமே. (௧௩)

அலர்கொடாமரைநெய்தலுங்கமழோடையிப்படியாகவேயமைந்திடுங்குளிர்சோலைமாலையதாயொழுங்கின்விளங்குறுங், குலவுமங்கதிலுறுதருக்குலம்யாவுமேசிவசங்கராகோதைசேர்மகதேவவென்றிசை கூறுமன்பர்முகத்தினை, விலகிடுந்தழைதழையுநன்மலர்கனிகள்காய்களுமேயளித்திந்துமண்டலமுற்றளாவியெழுந்துநின்றுவளர்ந்திடு, முலகுறுந்தவர்தேவர்வந்தவணுளமலர்த்தொகைகொண்டரற்குரியபூசனைபுரிகுவார்பரிந்தின்பநாடகமுறுவரே. (௧௪)

அந்தநந்தவனத்தில்வந்தெனையன்பினல்கியதந்தைமெய்யன்பர்தங்களிலதிகசத்தியவிரதன்ருனமுதேசனாஞ், சுந்தரச்சிவலிங்கவர்ச்சனைசெய்தலான்மனைவந்திடான் சொல்லுமிப்படிநாடொறும்புரி வானலைக்கொண்முழக்கினன், முந்துவிண்டுவினுலகினிற்கதவந்தகர்த்திடுகங்கையின்மூரிநீள்கரையிற்றினந்தொறுமுதிருமன்பிலிமுறைமையா, லெங்கைதான்சிவபூசைசெய்திடுமகிமையாலிருநிதிகடாமிந்துவந்தெழுவேழுவாரிகளெழுவதென்னவிளைந்தவே. (௧௫)

சங்கரன்பதபூசைசெய்திடுமன்பர்தங்களிலெனதுடைத் தந்தையொப்பவரில்லைநந்தவனத்தினிற்சதகாலமும், மங்களஞ்செயிலிங்கபூசனை

யாற்றியன்பர்பகர்ந்திடும் வள்ளலார்கதைகேட்பனவ்விடை மகதியாழ் முனிவந்தன, னங்கவன்றனையரியபூசைசெய்தமலனற்கதைபுகலெனுவ வனுரைத்தனன் முன்னமன்பதையாற்று புண்ணியம்யாவையும்,பொங் கமாமுருவங்கொடேதிகழ்பொன்வரைச்சிகரத்தின்மேற்போந்துகூடிய ரன்றன்மேன்மைபுகழ்ந்துபாடியிருந்தவே. (கசு)

அவைகொடுற்றிடுமவைகடங்களிலதிகபுண்ணியமூர்த்தியொன்றர னையர்ச்சனைபுரிவதற்குறுபொருள்பெறுமல்விசாரமா, யெவைசெயக்க டவோமெனச்சிவனைக்கருத்திலிருத்தியெய்துபுண்ணியமூர்த்திதங்க ளையினிதுநோக்கியம்பிடு, நவைகணீக்குகிரிசரர்ச்சனைநவமணித்திரள துகொடேநாஞ்செயக்கடவேமதற்கவை நாடியேகொடுவருதுமாற், கு வைகளுற்றிடுபூசையின்பொருள்கொடுவரற்கியலாதவன் கூறுகினறவவ த்தனும்வெகுகோடிசென்மமெடுப்பனே. (கஎ)

வாரிதன்னிலநேககோடியிரத்நராசிவளர்ந்துறு மன்னுமாங்கதுகொ ண்டருச்சனைசெய்திடிற்சிவன்மகிழ்வனாற், சீரிதாகியகூவிளத்தினின்மா லைசெம்பொனினம்புயஞ் செய்யபொன்னரிமாலைநெய்தன்மந்தாரமேகு ருக்கத்தியி, னோரின்மல்லிகைமாலைமான்மதநாவிசந்தனபளிதமுமினியதா ரைகள்கலவைசாத்திடவேண்டுமுய்வகையெய்தவே, நேரிலாத்தருமப் பெருங்கடல்பெருக்கவேண்டுமெனச்சொலி நேசமுற்றிடுமவைகளோடு நெடுங்கடற்கரைவந்ததே. (கஅ)

ஆடகேசுரனாலயத்தினிலெய்தியண்ணலைநோக்கியேயதிசயத்தொ டுபுதியநன்மலராதியாம்பொருளவைகொடே, நாடகச்சரணத்திலர்ச்ச னைசெய்துநன்கிலிருந்தவாறுடருங்கடலரசனவ்விடை நண்ணினனுயர் சிவனையே, தேடரும்பலமணிகள்கூவிளமாலையைந்தமுதங்களாற்செய் புவேதநன்மந்திரங்கொடுபூசைசெய்துவணங்கியே, கூடகங்கெடுமன்பி ன்மெய்புளகங்கொளக்கணினீர்வரக்கூத்துமாடினனுத்தமம்புறு தோத் திரம்பலகூறுவான். (கக)

கருணைவாரிதியேசதுர்த்தசபுவனநாதமகேசனே கருதுதத்துவ ஞானபூடணகடவுளேபுவிகாவலா, சுருதிபாடியபாலலோசனசடைமுடி த்தருளிறைவனே தூயகங்கையும் வாலசந்திரனுந்தரித்தருள்சோதியே, பொருவின்மேருவிலொடுபினுகவிலும் பிடித்தகைமுதல்வனேபூசைசெ ய்தனனெனதுசீவனைவேதனைப்பொருளுதவினே, னருணசோதிகொள் வடிவவாடகநாதவீசமகேசனேயையனே விசுவேசனேயடியேனையாண் டருள்புரிதியே. [உ௦]

என்னமுன்னரினின்றிசைத்தனனிவனகன்றனனேகுவானிருபுறத் தினுநீறுகண்டிகையிலகுமார்பினரிறைவனைச், சன்னிதிக்கணிருந்துளத் திலிருத்துபுண்ணியமூர்த்தரீஞ் சைவர்தங்களைநோக்கியே * சதையத்தி னனிதுசாற்றுவான், முன்னர்நுங்களையேயறிந்திலன்முதியர்நீவிர்கள்யா

* சதையத்திறன்-வருணன்.

ரெனமூர்த்தியாகியபுண்ணியங்கண்மொழிந்திடுங்கடலரசனே, யுன்னரு
ஞ்சிவனன்பஞ்கியபினதுதொண்டர்கடொண்டரியா மோதுபுண்ணியமு
ருவுகொண்டனநீசெய்பூசையுவந்துளோம். [௨௧]

ஐயநின்றெரிசனமுறத்தவமாற்றியுற்றனமெமதுளத்தாதரப்படியே
யணைந்தனைகாட்சிதந்தனையாமரோ, செய்யதோர்சிவபத்தர்தங்களில
திகனீசிவதத்துவந்தெரியவெங்கடமக்குரைத்தருள்செய்தியாமதைவின
விளு, லுய்யுமாறுருவமபடைத்திடுபயனடைந்திடுவாமரோ வுனதுநற்சக
வாசநாளும்விரும்பினேமஃதுறுவதோ, மெய்யாஞ்சிவபத்தரோடுறும்
வாசமுத்தியளித்தல்போன்மிக்கயாகதவங்கடாமு மளித்திடாதிதுமெய்
ம்மையே. [௨௨)

கடவுளன்பர்களுடனுறைந்திடுமவர்கடம்முடிமீதிலே கங்கையும்பி
றையுங்கலந்திடுவேமெனச்சமர்புரியுமே, யடைவுடன்சிவபத்தரோடுறி
லதுபரன்படிவம்பெறற்கமையுமென்றிடிலந்தகன்பயமுறுவ துண்டுகொ
லோவெமக், குடைமையாப்பெறல்வேண்டுமெற்றிவைபன்றிவெறிலையின்
னெறியுற்றதுன்பமெலாமகற்றுமெனச்சொல்புண்ணியமூர்த்திக,ணடை
யறிந்தனன்வருணராசன்மகிழ்ந்தனைரைவணங்கியே நாதனர்ச்சனைபெ
றுவதேயரிதாமெனச்சிலநவிலுவான். (௨௩)

இடைவிடாதுபரன்றனர்ச்சனைசெய்குவோர்பரமானந்தமெய்துவார்
கணினைத்தயாவும்விநோதமாயவர்க்கெய்துறும், விடையவன்பதபூசையி
ன்பலன்யானெவாறுதெரிந்துற விளம்புகேனெனவேபுகன்றிடப்புண்ய
மூர்த்திகள்வினவியே,சடைமுடித்தருள்பரமனைப்பணிவருணனைப்பணி
வுற்றனர்சாற்றுவாரிலிங்கமேன்மைதனைப்பகர்ந்திடுகென்னவே,யடவி
நீறணிவுற்றனன்னவிலிங்கரைப்பரிசித்தன னகமகிழ்ந்தவர்சொல்லதாம
முதுண்டபூரிதனுரைசெய்வான். (௨௪)

வேதம்யாவும்விளம்புமேன்மையிலிங்கநாயகர்நாமங்கண்மிக்கபாவ
மொழிப்பதாகவுங்கேட்கவேண்டுவதாகவும், போதவுள்ளனமின்செறிந்
தனவோடவைத்தபசும்பொனே போலமேனிவிளங்கலாலிவராட்கேச
னெனும்பெயர், மேதினிக்கண்விளங்குமிங்கிவர்தம்மிடத்திலுதித்தலா
ன்மேருவானதுபொற்பொருப்பெனமிக்கமேன்மையைமருவுமே,மாதவ
த்தவர்தேவர்வைகிடமவைகொண்மூவிலைவேலினுன் வையமாகியவை
யமஞ்சுருவாணியாகவுமருவுமே, (௨௫)

அதனில்வானவர்வாசமாகியவாலயங்களநேகமாமாழியேழுமகழ்க்
கிடங்கதன்வேரளாவுறுமேழுபார், முதன்மைசேர்தருதாழ்வரைக்கிடை
யமன்தாலயமொன்றுறுமுற்றுமாங்கதன்மூலமேவன லாறுமொன்றலே
மோதுமால், விதனமேபுரிதீவிடத்திரைகோரமானவராத்திரைவெற்பெ
னச்சொல்விரிச்சிகத்திரைவச்சிரத்திரைவீசுறும், பதனமாகியவிருகரை
க்கணுமுனைபடைத்திடுகெண்டகப்பலவரைக் குலமலைகையின்குலமுஞ்
செறிந்துறும்பாங்கரே. [௨௬]

தருவனங்களநேகமுற்றுளவவைகளிற்றழைகூவிளத் தண்டருக்க
ளநேககோடிகளுண்டதன்றிறமெவர்சொல்வார், மருவுமாங்கவைகளின்
மணித்திரளாலிழைத்திடுமாலய மதுரவாரமுதச்சமுத்திரமலர்வனத்திர
ள்வளைவுறும், பெருமைசேரரனர்ச்சனைப்பெரியோர்கடாமுமநேகர்தாம்
பேணுமவ்விடைதோறும்வைகுவராயவாலயம்யாவினு, முரிமையாற்றி
னமுற்றருச்சனையாற்றியேமனமகிழ்வொடு முருகுவான்பெரியோர்கட
ம்மொடுகாலம்போக்கினானுறைவனே. (உஎ)

இந்தவாறவணுற்றிடுஞ்சிவலிங்கம்யாவுமருச்சியாவின்பமுற்றொரு
மணிமயச்சிவலிங்கவீசரையன்புறுஞ், சிந்தையாதரவோடுபூசனைசெ
ய்வனுங்கவர்கருணையாற் செய்தருங்கருமங்கள்யாவையுமையலின்றியிய
ற்றுவா,னந்தலிங்கரைவந்துவந்தனைசெய்தசித்திரகுத்தரே யாதியோர்க
ள்செய்காரியங்களுமழிவிலாமலியற்றுவார், முந்துமம்மணிமூர்த்திமேவி
யவாலயத்தினின்மூலத்தின் மூரியாரிருளாணிறைந்தசமுத்திரங்களநே
கமே. [உஅ]

அந்தவந்தமிலந்தகாரசமுத்திரங்களிலூழிவா யங்கிபோற்சுடுமெ
ழைகடாமுமநேகமுற்றுளதீவிடந், தந்தகுட்டம்விரிச்சிகங்கணிறைந்த
வாரிமலக்குழி சாற்றுசுக்கிலமூத்திரக்குழிதாமுமுற்றதநேகமே, கொந்
தழற்சிகைபோற்கொதிக்குமிரத்தவெப்புறுவாரிகள் கொடியவச்சிரமனை
யபற்செறிகிருமியின்றிரள்சேர்குழி, வெந்துதீயெழக்காய்ந்தவாயுதகோ
டியோடயப்பாவைகள் விமலனன்பரலாதபேர்பயமேவுறும்படிமேவுமே.

அனையபாவியர்தங்களுக்கெனவரணமைத்துளவவைகளை யந்தவந்த
கனோக்கியேமகிழ்சிந்தையுற்றனனுறைகுவா, னினையமாநரகங்கள்காத்
திடுகாலதூதரநேகராலிறைவனன்பரலாதபேர்தமை யீர்த்துவந்தவற்று
ழ்த்துவார், வினைசெய்பாவியர்மேவும்வெந்நரகொன்றினுக்கொருகோடி
பேர் மேவியேமிகுகோபமுற்றுடன்விதனதண்டமியற்றுவார், புனையும்
வேணியனன்ப ரல்லரையிடரிழைத்திடவேநமன் பொருவிறன்படை
யோடுரைத்திடல்புகலுவேனதுகேண்மினே. [௩௦]

இன்னவாய்மைகள்வினவினோர்சிவபத்தியெய்துறுவார்களா லெந்த
வேளையுமேவெணீறொடுகண்டிமாலைதரித்திடா, ரன்னபாதகர்துக்கமா
க்கடலாழ்குவோரவருறைதரு மவனிநீவிர்கள்சஞ்சரிப்பதுபூதியின்றிரிபு
ண்டர, மன்னுதூளனமக்கமாலிகைகாதுகந்தரமார்புதோள் வனைகி
லார்வரினையவெந்நரகத்தில்வந்திடருறுவாராற், பன்னுகாலையுமாலையும்ப
ரமற்கருச்சனைபுரிகிலார் பரவுமந்திரராசனானபஞ்சாக்கரமனுவெண்ணி
லார். [௩௧]

இவர்களேமலவட்டைசேர்நரகத்தழுந்தியருந்துவோ ரீசனைக்கண
மேனுமர்ச்சனைசெய்துகாலங்கள்போக்கிலார், கவர்கொ

வெங்நரகத்துறக்கடவார்களாற் காசிமாநகர்முதலவானசிவத்தலங்களில் வாசமா, மவர்கண்ஞானமுறுஞ்சிவானுபவக்கடற்குளழுந்தியே யண்ணலார்கதையமுததாரையினுணனைந்துமகிழ்ந்துடன், சிவன்மகிழ்ந்திடுதருமமாகியபுனல்செறிந்திடுபெந்தரிற் சேருவாரவர்கயிலைமாமலைமீதும்வந்துசிறப்பரே. [௩௨]

அந்தமேலவர்முன்புநீவிர்செறிந்திடக்கடவீரலீரண்ணலாரடியார்கள்வாழ்வுறுமப்பதிக்கணமர்ந்துளோர், முந்துமரீங்கவர்தம்மொடும்முறவாகுமாலைசமுயற்சியோர்மொழிதரும்மவர்நாம்வணங்கிட முதல்வர்வாழ்கயிலைச்செல்வார், சிந்தைசேர்சிவனன்பர்முன்னமதுக்கிரப்படிவங்கொடே சென்றிடச்செய்வதன்றுசாந்தகுணத்தொடுற்றிடுதேகமாய், வந்தனோர்பதபூசைசெய்துவணங்கிடக்கடவோமியாம வாலவெண்பிறைசூடிவைத்திடும்மாணையிப்படியாகுமே. [௩௩]

அறமிலேசமுமற்றபாவியொர்காரணத்தினிலண்ணலையகத்துள்வைத்துளனேலவன்சிவபத்தரோடு மடைந்தரும், பெறல்பொருந்தியெலாரும்வந்தனைசெய்யமேவுவனாரணன் பிரமனுதியராலளக்கவொணுசிவார்ச்சனைமகிமையே, சிறிதறிந்தவனடிவணங்குறுமவன்மகத்துவமறிகிலஞ்சிவனையன்பொடு பூசைசெய்தவர்தமைவணங்கினவர்க்குமே, சறுவசீவதயாபரன்பிரசன்னமாகுவனவன்மகா சரணவர்ச்சனைசகலமங்களமுஞ்செறிந்திடுதானமே. [௩௪]

நிகரிலாச்சிவதருமமேசரைமரணநீக்கிடுதருமமாகொடியபாவமதானபன்னன்மலைக்கடுக்குநெருப்புமா, மகமயக்குறுதுன்பமாமவிடநோய்தணித்திடுமமுதமா மையவெண்சொல்வனற்பர்தாமரனர்ச்சனைப்பவனறிகிலார்,மிகமயற்புரிமாதரார்விடயக்கராநிறையிருள்புகும்விதனமானகருங்கடற்குள்விழுந்தழுந்திடுவோர்களாற், சகலசீவதயாபரன்சிவனைப்பழித்திடுமவர்கடாஞ் சங்கரக்குலமாகுவார்நமதண்டனைக்குரியாரகளே.

பூதிகண்டிகைபுண்டரத்தொடுமைந்தெழுத்தரனர்ச்சனைபோற்றிடப்பெறுவோர்களும்புரி பூசனைக்குரியார்களே, யாதுமத்தருமத்திலிச்சைபடைந்திடார்சிட்சையடைகுவார் யாவனுகிலுமரணகாலையி லீசனுமமிசைத்திடிற், நீதகன்றுயர்சிவபதத்திடைசேர்வனுலிதுநிச்சயந் தெளிந்ததூதர்கள் கேண்மினென்றுநமன்பகர்ந்திடுவானெனு, மூதுணர்ந்திடுசைவசீலநெறிக்குணின்றிடுதருமனு மோதுறுங்கடலரசனபுண்ணியமூர்த்திகட்குரைத்தானரோ. [௩௬]

முப்பத்தேழாவது வருணராசச்சருக்கமுற்றிற்று.

ம-கசசகரு.

முப்பத்தெட்டாவது,

உருத்திராத்தியாய வியாக்கியானச்சருக்கம்

வேறு.

திருவடியிற்கண்மலருநரசிங்கத்தின்றிகழுரிவெண்பட்டாணவுடை
யுமார்பிற், பெருவராகக்கோட்டிலாமையோட்டிற்பெருகொளியாரமுங்
கொண்டார்புரங்கள்வேவப், பொருவடிவெங்கணைகொண்டார்விடையா
க்கொண்டார்புனையதட்சட்டையும்பூண்டாருடலிற்பாதி, கருவடிவந்தா
ங்கொண்டார்கயிலைவாழுங்கடவுண்மாலிடத்தில்வைத்தகருணைதானே.

அருண்முனியாக்கினவற்கிசொல்வான்பின்னுமாழியரசன்றருமவ
டிவோர்தம்மை, யொருமையுடன்பார்த்துரைப்பானம்பொன்மேருவுயர்
வரையினியமனுலயத்தின்மீதே, பெருமைவளியுலகமதன்மிசையேயங்
கிபெயர்வருணனிருதிபிங்கலன்வலாரி, யொருமைசேர்கடிமலரோன்மா
யன்பானுவுபெதிமீதிவருலகீசானலோகம். (௨)

ஆங்கதன்மேற்றிரிசூலபாணிலோகமதன்மிசையேமேருவின்றன்சி
கரமேசாதி, யோங்குசுடர்க்கடற்போலநிறைந்தமீதே யுயர்ந்தநடுக்கொடு
முடிமேற்கயிலைமேரு, வீங்கதனிற்கொடுமுடியாயிரமாமங்கேமேவுதேவ
ர்கடமக்குமாடகூடம், பாங்குறுமுப்பரிகைபிரகாரஞ்சூழ்ந்தபடரொளி
யாலயங்கள்பலபலவுண்டாமால். (௩)

உயர்ந்திடுமாராமங்களுள்ளவாங்க ணுளதருப்போலோருலகிற்கண்
டதுண்டோ, பயன்றருதீங்கனிநறும்பூப்பருவந்தப்பாப்பலர்தருமவ்வன
த்தில்விசுவேசராகு, நயந்தருமுன்னதவிலிங்கர்ப்பூசைசெய்ய நாடுகின்
றோர்தங்களெதிர்வணங்கிநாளும், வியந்தநறுந்தளிர்மலர்தீங்கனியுநல்
குமென்கவிகைபோற்குழைந்துமேவுமன்றே. (௪)

பூணருக்கங்காப்பிரவாகமோடுபொன்னியெனவோடுமங்கேபொருந்
திலிங்கந், தானருவபிடேகஞ்செய்யவேமஞ்சனமதாமந்தாரத்தருக்கள்
வாய்ந்த, வானருவதன்கரையிற்புழுகுநாவிமணத்திடு சந்தனக்குழம்பு
மாருவோடும், வேனிருனில்லாவவ்வனத்திலிங்கம்வீற்றிருக்குமேடை
பலவிளங்காநிற்கும். (௫)

அந்தமிலாவந்தவிலிங்கங்கட்கம்பொற்றாமரைமலர்களாதனங்
கள், சந்ததஞ்சாத்திடவிளங்கும்பூவின்மாரிதண்ணருமாரிபொழிசந்தக்
கானில், வுந்துமையாளுடனைமையாளண்ணலாடன் மகிழ்ந்திடச்செய்
தேபிரியாதிருப்பனுங்கட், சுந்தரஞ்சேர்மணிமயவுப்பரிகை யெண்ணத்
தொலையாதங்கதன்சிறப்பார்சொலவல்லாரே. (௬

முத்தனுமையுடனுறையுமந்தக்காவின்முச்சுடர்மின்னிலையுடைப் பேர்மொழிவோரில்லைச், சித்தசனைவென்றபிரான்றேககாந்திச் செஞ்சுடராலவைமழுங்கித்தேயுமாலோ, பத்தருறையுப்பரிகைபலவுண்டங்கட் பகாயுதம்யோசனையுன்னதத்தூண்பத்தி, யுத்தமமண்டபமொன்றங்கதனின்மஞ்சமுபர்சிங்காசனகோடியுள தாமன்றே. (௭)

மாமணியின்காந்திரத்நசெம்படாத்தின்மணமலர்கள் பரப்பநிறைந்திருக்குமாங்கே, தூமணிவெண்ணகையுமையா*டொடலைசெய்வாள்சுடர்மணியின்பிரபையெல்லாஞ்சரற்காலத்தி, னுமதிமுன்னுடுநிரைபோலாகுமீச னடிக்கமலப்பேரொளியால்வைகுண்டாதி, நாமவுலகினிலுறையுந்தேவரெல்லாநளினபதகதாவமிர்தபானங்கொள்வார். (௮)

அந்தவந்தக்கொடுமுடியாலபங்கடோறுமமர்ந்திடுந்தேவர்கள்காலந்தவறுறாமல், வந்தனைசெய்தேசிவன்றனருளினாலேமாறுதசெல்வசுகவாழ்வுற்றாரான், மூநதுமருமறைதெரிந்தமுனிவர்தேவர்முதல்வனைசிவனென்றுமவன்றன்பாதம், பிந்துறாவன்பினிற்பூசித்துளோர்கள்பெருகுமுத்திபெறுவரென்றுபேசுவாரால். (௯)

இன்னபரிசாற்றேவர்யாருமேருவிருஞ்சிகரந்தனிற்சூழ்ந்தேயிருக்கவீச, னுன்னதமாங்கயிலாயசிகரந்தன்னிலொளிர்மணிமண்டபத்தரியாசனத்திலேறிக்,கன்னியுமையோடும்விளையாடல்செய்துகருதருமுத்தொழில்புரிந்தேயுறுவன்கண்டீர், பனனரியலீலையிலிப்படிசெய்தாலும்பானுண்மைநிர்க்குணமலால்வேறில்லை. (௧௦)

அறிவிலறிசிவலிங்கார்ச்சனையிலேபற்றனசிலதேவர்நினைந்தண்ணறன்னைச், சறுவசுதந்தாகர்த்தன்சறுவசீவதயாபரன்மெய்ச்சறுவகாரணனுமற்றனைக்,குறிகுணங்களில்லானத்துவிதமானகோமானென்றறிந்தருச்சித்தந்தநாதன், கிறுபையினாற்செகசாலசிருட்டியாதி கிரமத்தின்முத்தொழிலும்புரிகின்றானால். (௧௧)

இத்தன்மையையன்சிவனென்றுணராமாந்தரிரத்தவெப்புமலக்குழியினிடரினாழ்ந்தே,பித்துறுசென்மப்பிணியினகப்பட்டேழற்பெருநாற்றயோனிவழிப்புகுந்துமாழ்கிச், சத்துருவாமைம்புலனுற்றவிப்பரீசன்றனையல்லான்மற்றையதேவரைத்தான்பூசை, சித்தமுடன்புரியிலன்னோர்பதமுமுக்கட்டேவருளாலன்றியவர்க்குதவலாகா. (௧௨)

வேறு.

கடவுண்மிருத்திஞ்சயர்பூசைகருதிப்புரியவோர்கால
மடைதல்கொள்ளார்புண்ணியமூர்த்திகணீர்கேண்மினம்பையொடும்
விடையில்வருவாரன்றியேவேறுதேவர்தமைக்கனவி
னிடையுநினையோமவர்மகிமையெவர்க்கும்புவியிற்றெரியாதே (௧௩)
புவியின்மாந்தரிற்றுறந்துகோபத்தேனும்புறம்போந்து
நவியமேந்திதனைநினைத்தாலயத்திற்புகுதினுகர்பதங்

* தொடலை-மாலை

தவிசிலுறைவோன்றொழப்பெற்றேசிவன்றாணீழல்சார்குவரால். (௧௪)

தேவிதழீஇவக்குழைந்தவன்சீர்சிதடரறியாரவர்கடமை
மேவுகாலபடர்காலாலெற்றிநரகில்வீழ்த்துவரால்
வாவிநீலவிழிபாகன்றன்னைமாதேவெனுநாம
நாவினேத்தியருச்சிக்குநல்லோர்மனநாடகசபையே. (௧௫)

பரமன்றனக்கேயந்தரங்கபத்திசெய்வோனுளங்கோயில்
பிரமனாதிதேவரவன்றனையேவணங்கப்பெறுவானு
ளுரமாங்காலபயமுமெய்தானுளத்திற்சிவனேபிரமமெனத்
திரமாநினைவோன்சென்னதுக்கஞ்சேரான்முத்திசேர்குவனே. (௧௬)

மனமுற்றவன்சங்கரன்றனையேவணங்கித்தியானஞ்செயவேண்டும்
பினமற்றவனையிறைஞ்சுவோன்பிறப்பன்மறவிதனையடர்ப்ப
னனகன்சிவதத்துவவித்தையறிவாரவன்றனன்பர்களே
தினமுஞ்சிவன்றாள்பூசைசெய்வோர்சென்மமேபாக்கியசென்மம். (௧௭)

இந்திராதிதேவரெல்லாமிறைஞ்சும்பதம்பெற்றிடவிசைந்தோ
ரந்திவேணிப்பரன்பூசையமைக்கவேண்டுமாலிவற்றின்
முந்துங்காதைபொன்றுளதுபுகல்வேன்றருமமூர்த்திகாள்
சிந்தைவைத்துக்கேண்மினெனாத்திரையாகவிவேந்துரைசெய்வான்ர.

முந்தைநாளினருமதாநதியின்கரைவாழ்முதுமறைதே
ரந்தணனொருசத்யவிரதனவன்பேராகுமால்
வந்தவறுகுவில்வமுடன்மற்றமலரான்மனைவியொடும்
பந்தமறுக்கும்பரன்பூசைபத்தியுடனேபுரிந்திடுவான. (௧௯)

காலகாலரருச்சனையிற்புசிப்புமின்றிக்கருத்திருத்திச்
சீலமுடனேகாலம்போக்கிடுவானவன்றன்றிருத்தேவி
சாலுமவன்றாள்வணங்கினளஞ்சலிக்கையுடனேதயாவுடையீ
ரேலுமடியேன்விண்ணப்பங்கேட்பீரென்றேயியம்புவாள். (௨௦)

சதுர்வேதங்கள்சொலுந்தருமசாரமாஞ்சைவாசார
மதுவேயதனைவிடுத்தோர்கள்பாவத்தடைவாராமன்றே
விதுவேணியன்புண்ணியமெனக்குவிபரமாகவிளம்பிடுவீ
ரிதுதானறிந்தாலத்தருமந்தனிலென்மனந்தானிசைந்திடுமே. (௨௧)

தருமபுத்தியுடையோர்க்குத்தருமந்தனிலேமனஞ்செல்லும்
வருமாப்பாவபுத்திக்கேபாவந்தனிலேமனஞ்செல்லு
மருமைத்தருமமிதுபாவமிதுவெனவறிந்துநடந்துகொளல்
பெருமையுடையோர்கடனதுவின்றெனக்குத்தெரியும்வகைபேசீர். ()

என்னப்பன்னிவினவமறையயிலும்பனவனிசைக்கின்றான்
பன்னும்வேதபுராணங்கள்பலவும்புகலுந்தருமங்க

ளூன்னுமநேககோடியுளவுவையிணைந்துமுக்கியமாச்
சொன்னதுளவங்கவைதாமியாவென்னிலுனக்குச்சொல்லுகின்றோம்.

பூதிதரித்தல்கண்டிவடம்பூணல்சிவமந்திரமெணல்வில்
வாதிதனிலாதியைப்பூசைபுரிதனின்மாலியநுகர்த
லோதுமிவைகள்கடைப்பிடித்தவுண்மையுடையோர்பலகோடி
கோதுதருவெம்பவநீங்கிக்குன்றுமுத்திவீடடைவார். [௨௪]

மாதர்புருடர்யாவருமிவ்வைந்துகியமமாறும
லோதுகாதலுடன்புரியவேண்டுமுருத்ரவத்யாயம்
பேதைமகளிர்க்கியலாதாலதனினடுவா பேசுகின்ற
தீதிலாவஞ்செழுத்தோதிலெல்லாமோதுந்திறம்பெறுவார். (௨௫)

தயிர்தான்கடைந்துவெண்ணெய்கொண்டாற்போலுஞ்சகலவேதங்கட்
குயிர்தானெனும்பஞ்சாக்கரமேசாரமாகுமோதுகின்ற
மயறீர்மனுக்கட்கரசாகுமறையுமிதனையறைந்திடுமா
லியல்சேரிறைவனுடனுமையாள்கணேசன்குமரனெனுமிவர்கள்.(௨௬)

காரிவீரபத்திரனேநந்திபிருங்கிகணநாதர்
சீரிதாங்கின்னரருடன்கந்திருவர்மனைகளொடுநாகர்
நாரியொடுநாராயணனேநாவின்மகளோடயனிந்த்ரன்
பாரியாகுஞ்சசியோடுஞ்சுவாகையுடனேபடர்சடையோன். (௨௭)

பூதியுடனேயனிலனுயர்பொருவிறருமியொடுதருமன்
நீதிதிலாதததீசிமுதன்முனிவர்சகலசெனங்களுமே
யாதிநாமமஞ்செழுத்தும்பரமந்திரமென்றறைவரன்றே
யோதுமுத்திகொடுக்கின்றபொருளுமிதுவாமொண்டொடியே. (௨௮)

அமிர்தமாகுமகாருத்ரவடிவமாகுமறியாமைத்
திமிரமகற்றுமஞ்செழுத்தையார்தாஞ்செபங்கள்செய்யாதார்
கமர்வீழ்கொடியகோகத்திப்பாவிகருதல்செய்யாறுற்
றமர்முத்தணிபாயிதனையந்தத்தருணத்துணரிற்கதிசார்வார். (௨௯)

எனவேமறைசத்தியவிரதனிசைத்தல்கேட்டயவன்றேவி
புனேவேயனையதோளினுள்புகல்வாளிந்தமந்திரத்தை
மனவேதனைதீர்த்தருள்சிவனுமகிழ்ந்தோதுவனென்றேயிசைத்தீ
ரனவேயிதைமுத்தியைவேண்டுமவரேசெபஞ்செய்குவதன்றோ. (௩0)

ஈசற்கிதனுலாவதென்னேயிறைவன்றனையேநமவென்று
பூசைக்கியன்றவிதியாகப்புகலுகின்றததுவன்றோ
பேசத்தகுமப்பூசைமனுப்பிரானும்பகர்வனென்றுரைத்த
னேசத்துறுமென்சிந்தையினிற்பொருந்தலின்றுணிகழ்த்துமென்றாள்.

பனவன்புகல்வான்சத்தியமேபகர்ந்தாயதுதானுரைக்குதுங்கேள்
வினவிற்பாவம்போக்கியின்பவிருத்திகொடுப்பதிதுகண்ட 1

யனகன்மறைகளநேகமமைத்தவற்றுளதிகமேறவென்றே
முனமேவைத்தானதினுருத்ரவத்தியாயமெனமெழிந்தே. [௯௨]

அதுவேமனுக்கடமிலிரத்நகலசமதனுக்கொப்பிலையா
லதுவேமுத்திசாதனவித்திதனைத்தவிரவொன்றுண்டோ
விதுவேசகலமங்களந்தந்தருண்மந்திரங்கட்கிருப்பிடமா
முதுவேய்த்தொளியிதைமுன்னமுதல்விகேட்கவரன்மொழிவான். [ ]

இமைய்த்தரசிகேட்டியிந்தவியல்சேருருத்ரமந்திரத்தி
லமைவுற்றுனக்குப்பிரியமேதென்னவணங்கியறைகின்று
டமையொப்பில்லாய்தேவாதிதேவவிதனைச்சாற்றுதற்குக்
கமைபெற்றுடையகருத்திதென்றேசடுதியாகக்கண்டிலனே. [௯௪]

கோபங்கொள்ளாதென்னிடத்திற்றயவுபுரியிற்கூறுகின்றேன்
றீபமெனவேபூச்சுமரப்பட்டையதனிற்றெரித்தெழுதிப்
பாபமகற்றுமம்மனுவைவரிசையாகப்பார்த்ததனைச்
சோபமகற்றுநின்னருளாற்சொல்லவேண்டுமெனக்கென்றாள். [௯௫]

அன்னவார்த்தைகேட்டருளியண்ணலுமையாடனைத்தழுவிச்
சொன்னபடியேவரைந்தளிக்கத்தொழுதுவாங்கித்தலைமேற்கொண்
டுன்னும்வகையாலொவ்வொன்றாப்பார்த்தானந்தமுற்றனளாற்
றுன்னுமனுவின்பொருளீசனிறைவிக்குணரச்சொற்றனனே. (௯௬)

தேவிசிவன்முன்னிவைநிகழச்சென்றகாலமளவிலவான்
மேவுமனுவொன்றினுக்கொர்கற்பம்விருத்தியுரைத்துமடங்கிலவாற்
பாவுமிருமூன்றிலக்கணத்தினுடனேபகர்ந்துமொழிந்திலரா
லோவிலமுததாரையுண்போருவட்டாரதுபோலுரைத்துற்றார். [௯௭]

அம்மந்திரத்திற்சிகராதிவகாரமீறுமதையறிந்தே
செம்மைமகிழ்ச்சியொழியாதோர்கோடிபொருள்செப்பினனன்றே
யெம்மையாளுமுமைவினவியதனிற்பிரியமெய்தினு
டம்மையுணர்த்துந்தன்மையினுலடங்காவாசையதிற்கொண்டார். [௯௮]

சிகரவகரமனுவன்றிச்சிறந்ததுளதொன்றிலையென்றே
யகமுற்றதனையநேககற்பஞ்செபிப்பான்போலவறைந்திருந்த
குகனையளித்தோன்றனையுமையாள்வணங்கிக்குழைந்துகூறுகின்றாண்
மகமந்திரமாமுருத்திரவத்தியாயமெனக்குவரைந்தளித்தீர். [௯௯]

முதன்மைச்சைவமந்திரமாமிவற்றுக்குரைகண்மொழிந்துற்றீர்
சிதைவிலவைதான்கேட்டதனுலனந்தானந்தஞ்சேர்வுற்றே.
னுதவுமிவற்றிற்சிகராதிமனுவொன்றுளதொப்பிலதன்றே. [௱]

இந்தமனுவுக்குரைபகரவயுதயுகமாயினவின்னு
மந்தமிலதாற்கோடிகற்பஞ்சொலினுமுடிவுற்றடங்காதான்

முந்துமிதனாற்காலம்போக்குதலேமுத்தியாகுமன்றே
தந்தவிதனிற்கேள்வியெனக்கொழியாவரந்தான்றருவீரே. [௪௧]

எனக்கிங்கிதுவேநவநிதியாஞ்செல்வமிதனின்மாதுரியந்
தனக்கெனுளமாதரவொழிவதில்லையிதுவேசாரமா
மனக்கொளமுதநீங்காமல்வளரக்கடவதென்றுரைப்பக்
க்கொந்தளத்தாள்கருத்தறிந்தேகந்தன்றனைப்பார்த்தரனுரைப்பான்

மைந்தவுனக்கொன்றுரைக்குதுங்கேண்மங்கையிவண்மந்திரராச
னைந்தக்கரத்திலுரைகேட்கவிரும்புகின்றாளறைகுவமா
னந்தங்கருமமுத்தொழிலூடத்துவாய்நாம்பின்னு
மெந்தக்கருமந்தாம்புரிவோமவையுமியற்றவிழையவாயே. [௪௩]

உரைக்குமுறையித்தனைக்காலவரைக்குளொடுங்குமென்பதனாற்
றரைக்குள்விபரீதங்கள்வராத்தகுங்காரியநீதான்புரிவாய்
நிரைக்குங்கணங்களேவலுண்டேயவர்களோடுநீமைந்த
கரைக்குங்கருமம்புரிந்திடுவாய்கவலைவாராதுறைகயாம். [௪௪]

என்றுபரமன்புகன்றவுடன்குமரன்வணங்கியிசைக்கின்றா
னன்றெம்பெருமநாயகிக்குநன்மந்திரத்தினுறும்பொருள்க
ளொன்றவுரைக்கும்போததனில்யானுங்கேட்பதுறுதியன்றோ
துன்றுசமையமிதுபோலக்கிடையாதெனக்கிச்சொற்கேட்க. [௪௫)

எந்தைநீயேசொலுமாறுமெம்பிராட்டியீங்கிதற்கு
முந்துசங்கையுத்தரங்கண்மொழியுமாறும்விடையுதவு
மந்தவகையுமேகேட்கப்பெறுவேன்பின்னரையவெற்கு
வந்துகூடாதிவைகேட்கப்பெற்றேனெனில்வாழ்வுற்றேனே. (௪௬)

சீரார்கருணைமாதேவநீசொன்மனுவின்செழும்பொருளா
மாராவமுதினதிப்பெருக்கையாரால்விடப்போமுனதருடான்
பேராவென்றனிடத்துளதேற்பேசுங்கருமம்பெறவேண்டா
நீராதரிக்குமைந்தெழுத்தின்பொருளென்கேள்விநிறைக்குவனால்.(௪௭)

எந்தாயிந்தமனுவினுண்மைப்பொருடான்யாவரியம்பவல்லார்
முந்தாதரவாவென்றாய்க்குமொழிதல்கேட்கவிரும்புகின்றே
னந்தாஞானச்சுடராநின்னுமங்கேடபதரும்பெறலாந்
தந்தாய்தாராயெனக்குமரன்றம்பிரான்முன்சாற்றினனே. (௪௮]

முப்பத்தெட்டாவதுநந்திராத்தியாயவியாக்கியானச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௫௪௩.

முப்பத்தொன்பதாவது,

சத்தியவிரதருத்திரச்சருக்கம்

வேறு.

சீதேவிவெண்கமலத்தேவிபோற்றுந்தேவியிடத்தேயிருக்குந்தேவதே
வன், நூற்றேவியிலங்கைநகர்பொடியாக்குஞ்சுந்தரத்தேவலசுருதிசொ
லும்வாசிசப்பூதேவியுடனிந்திராதிதேவர்பூதேவரும்பணியும்பூதநாதன்,
மாதேவன்றிருக்கோயில்வலஞ்செய்பாக்கால் மரக்கால்வாய்க்கால்கொ
டிக்கால்வழங்காக்காலே. [க]

பாக்கினைவற்கியம்பு நல்வாறாக்கோவைநிரைநிரைத்தாலெனச்
செவ்வேவினிசைந்ததெல்லாம், பாக்கியமாமுமையுங்கேட்டஞ்செழுத்தி
ன்பதப்பொருளாமுதமிருசெவிகளாலுந், தேக்கிநுகர்ந்திடவெண்ணமி
க்குமெம்மான்சிந்தையுமகிழ்ந்தருள்வனெனச்சிந்தித்தே, யாக்கியவிம்
மனுவினரும்பொருள்கண்டத்தினணிமணிமாலிகையெனவா தரித்தாள
ன்றே. [உ]

ஈசனுரைத்தருள்வன்முருகேசனஞ்செழுத்தினரும்பொருள்கேட்
டுமையுங்கேட்டிடுமென்றே பேசியசொல்சகலசனங்களுமெய்யும்பெருகுமுப
காரமெனப்பிறந்ததன்றே, தேசுதருமம்மனுவின்சாரம்யானைத்திருமுக
னுமுங்கேட்டிடுவாரென்று, நசைபெறுமனத்தினானந்தவெள்ளத்
தழுந்திவணங்கினார்திருமுனமர்ந்தானன்றே. (௩)

அம்பிகைக்கஞ்செழுத்தினுரையரன்சொல்கின்றஞான்றெழுத்தையு
டையனுங்கேட்டமர்போதத்தச், செம்பொருளானவையெல்லாமநேக
கோடிசிவவுருவமாகவந்தோரக்கண்டே, கும்பகெர்ப்பிரத்தனுடன்கூறு
கின்றான்குலவுமெம்மான்றிருமுன்னர்க்குறுகல்பாரீர், நப்புதிருநீறுருத்
திராக்கம்பூண்டார்நகைமுகத்தர்சடிலர்ஞானந்தேக்குற்றார். [௪]

ஆனிடத்திற்பற்றுடையர்விசித்திரத்தேவாபூரணந்தரித்துளார்
சந்திரசூடர், பாவுமுயர்முச்சுடரினயனரம்பைபாகத்தார்சூலஞ்சேர்பா
ணியார்கள், வரதர்மணிகண்டர்மனோகரராயுற்றார்மறையுருவர்சிலர்களு
க்ரவடிவர்வீரர், திரமுறுகொப்பிரதிடங்காந்திபெற்றோர்திக்கெலாமளா
விவளர்திறலினோர்கள். (௫)

இங்கிவர்கள்யார்புகல்வீரென்னலோடுமிளம்பிறைக்கோட்டைங்க
ரன்றுணிபம்புகின்றான், றுங்கமுறுங்குமரகேளிவர்களெல்லாஞ்சோதிப
ஞ்சாக்கரப்பொருளினுருவிற்சூழ்வார், தங்குதயிரியம்விடேலிறைவன்சா
ற்றுந்தகுபொருளினுருவங்களிவர்தாமகண்டாய், பொங்குமுருத்திரர்கள்
கோடானுகோடிபொருவரும்பேருருவுகொண்டுபுகுந்துளாரால். (௬)

அஞ்செழுத்தினுருவாகுமிவர்கடம்மையத்தனுணர்த்தினுமன்யாரி
யாவமோனு, நெஞ்சழுத்தியெத்தனைநாளெண்ணினாலுமிகரிலிவர்தந்தொ

கையைநிகழ்த்தொணுவாற், றுஞ்சலிலாவிவர்கணத்திற் சனந்தமாகத்
தோன்றுகின்றபராபரனுஞ்சோதிநல்கு, மெஞ்சலிலாவுருவங்களிவற்றை
ப்பாராயிதுவலவோவானந்தமெமக்குத்தானே. (௭)

அம்புவியின்பாங்கண்டவிறும்பூதைப்போலார்கண்டாரானருளாற்
காணப்பெற்றோ, நம்பரமன்றிகழட்ட மூர்த்தியாகுநல்லுருவம்யாவர்க்கு
ங்காண்பதன்று, லிம்பரினுஞ்செய்நதவத்தருமங்கோடியிதுவாகுமெனு
வைத்துகரத்தோன்கூறக், கும்பமுனிக்குபதேசம்புரிந்தோனுநெடுங்கு
லவுதாப்தந்தையர்தாள்குறுகித்தாழ்ந்தான். (அ)

இருவருமானந்தவெள்ளத்தழுந்தியுற்றாரிவ்வளவிற்கற்பம்வெகுவாய
வன்றே, பொருவிலிவரிவ்வாறுங்குற்றபோழ்திற்புகழ்நந்திகணத்தலைவ
ன்பொருவில்சேர்ந்தன், திருவடியைச்சிந்தித்தானுடனேதோன்றித்தெள்
ளமுதாமானந்தக்கடற்குளாழ்ந்தே, குருவடிவாமெங்கையாலுற்றென்ற
ன்னைக்குறித்தெனென்னைனந்திகூறுகின்றான். (௯)

தேவனையெண்ணிறந்தபிரமகற்பஞ்சென்றவாவிவ்வளவுமுன்றன்
பாத, மாவலுடையேன்காணப்பெற்றிலேனு மெண்ணல்காதையுநகேளா
தவமாவுற்றேன், காவலநின்றரிசனந்தானுற்றிடாதகையனேன்கனோபா
ம்போலுற்றேனன்றே, பேவல்செயுமென்னிடத்திற்றயைதான்போயதெ
ன்றால்யானென்செய்வதெம்பிரானே. (௧௦)

அகிலமெலாமகேசன்றனாணையாலேபடிக்கமுண்டாய்த்தழைந்தே
யடங்குமாதோ, நிகரில்சிவலீலையேசிருட்டியாதிநிகழ்கருமமுடிக்குமதா
ல்யாவருக்கும், பகர்வருத்தமுறவேண்டாங்கணங்களுந்தம்பாததரிசன
ம்புரியப்பரிவுகூர்வா, ரிகழ்விலன்பனிவனென்னத்தயவாலெந்தாயின்று
நீதரிசனந்தந்திடப்பெற்றேனே. (௧௧)

என்னமேவநந்திசொலவயில்வேலேந்திமைசதிடுவானெம்பெருமா
னெம்பிராட்டிக், குன்னருமைந்தெழுத்தினுண்மையோதுகின்றானுனை
ப்பதனுக்கடங்கும்[illegible]ந்தகோடி, பன்னருநாப்படைத்தவர்க்கும்பக
ரொணுதாற்பகருமந்தவமுதப்ரவாகமூழ்கி, யன்னவன்றனருகிருந்தான
ந்தமுற்றேனன்பநீயழைத்திடவந்தடுத்துளேனே. (௧௨)

அப்பெருஞானத்தைவிடுத்தெனதுநெஞ்சமகன்றிடுமோவதற்கே
விக்கினமதாக, வெப்படிநீயெனைநினைத்தாய்விசேடவார்த்தையியம்பியி
ருப்பதற்கிப்போதமையமல்ல, செப்பரியவமுதப்ரவாகமாகச்செறிபொ
ருளையருகிருந்தேகேட்கவேண்டுங், கற்பங்கடோறும்பாமன்சரணானந்த
க்கடலழுந்துமென்மனமெப்படிதானீங்கும். (௧௩)

மன்னுமிதனாற்காலம்போக்கப்பெற்றான்மாறாதபேரின்பமருவுமன்
றே, நன்னயஞ்சேர்சிவகதையினமுதவாரிநவநவமாய்ப்பெருகியதானுத
னார்தாம், பன்னுகின்றவரவமதுகேட்டிகேட்டி பகரிதுபுதுமையிதுபு
துமைகண்டாய், துன்னுகங்கைத்திரைமுழக்கநீயிந்தத்தொனியிலட
ங்கியததனைப்பார்த்திடாயே. (௧௪)

இரவுபகலற்றசிவசபையெல்லாமஞ்செழுத்தினரும்பொருளுருவாயினை
ந்தவன்றே, தெரியுமவர்தம்பெருமைகேட்பதாலென்பிறக்கையுமே தயிரி
யங்கள்சேர்ந்ததாமே, விரிதருமப்பொருள்வினவியெனதுகாதுமெய்யும
னமும்புனிதமேவிற்றந்தோ, வரியபொருள்விசேவேசாப்புகலவன்னையகம்
பூரித்தடிக்கடிவிஞைவுற்றாளால். [௧௫]

இனையபொருள்விரித்துவிரித்துரைத்துமின்னமிகுந்திராவின்சு
வையென்னுற்றகொல்லோ, புனையுமிந்தமுழக்கமொட்டுத்திசைகண்மு
ட்டிப்போகியதப்பொருண்மூர்த்திதன்மையெல்லாம், வனைகுழலென்
னன்னையுளமகிழக்காட்டி மகிழ்கின்றான் சந்திதிவிட்டுருக்காமாட்டேன், நா
னையரிடந்தனிற்புருதுமேனென்னச்சென்றா னதுகொண்டிப்பதிசமுற்
றானல். [௧௬]

பிருங்கிமுதலாங்கணத்தின்கூட்டத்தோர்பெருங்கயிலைவாயிற்றனி
லினிதுமேவி, மருங்கிலுற்றவோர்க்கெல்லாந்திகசன்மறைப்பொருள
ஞ்செழுத்தோதியிருக்குநாளிலே, பருங்கருடையார்தியானதியோராயான
ருளால்வருமேலாந்தேவர்வந்தே, தருங்கருணையுருவாருநந்திதேவன்று
ள்வணங்கியஞ்சலிக்கையினராய்நின்றார். [௧௭]

மன்னுசிவவிரதர்களாய்வந்துசூழ்ந்தவானவரைநந்திசன்மகிழ்ந்து
நோக்கி, பென்னகாரியநீவிர்வந்துளீரென்றியம்புதலும்விண்டுபதத்தி
னைவோன்சொல்வேட், பன்னிடுவன்கற்பாந்தவிற்றிசிக்காட்பரமனருளா
ற்சிருட்டிப்பாட்டேவந்தே, பின்னதொழில்செய்வனவென்றறியகில்லே
மிறைவனேபொக்கறியவியம்புவாயே. (௧௮)

ஈசனாமைத்தவுலோகங்களெல்லாமிருந்தாலும்யாங்களுறைதான
ம்பாவே, தேசிகயாஞ்செயுங்கருமமென்னேயீசன்றிருமுனமியாஞ்செ
ன்றிடவுங்கிடைத்திடாதே, மாசில்கணேசன்றாமின்சமுகந்தானும்வா
ய்ந்திடாதேதாயாங்கள்வந்துசெய்தி, யாசையுண்டாயார்நீமருத்தெரியச்
சொல்லவருங்கணங்களொருவர்தமையனுப்புவாயே. (௧௯)

காலதாமதம்புரியல்யாங்கள்வந்தகவலைதீர்ப்பதற்குனைப்போற்கண்
டிலோமா, லாலமுண்டோன்றெண்டருக்குளதிகனே பர்ச்சனையாற்
சகலவல்லமையும்பெற்றாய், சிலமுநவுமான நுபாசுகியருபாக்பமென்றுநா
ரணனுமேவோன்செப்பலோடு, மேலுமிவர்முன்னிருந்தோர்தமிலுமிக்கோ
ரென்றுநந்திதேவன்றனியம்புகின்றான். (௨௦)

தேவர்காணீவிர்முன்னுளென்னவென்னசெய்தருமப்புரிந்துளீரிங்
கெல்லோரு, மேவியகாரியமதனைத்தெரியநன்றாய்விரித்துரைப்பீரென்
னவவர்விளம்புகின்றார், காவலவமல்லிகார்ச்சுனமாங்குன்றிற்கனவரை
ச்சாரலிலுளதோர்கதலிக்கான, மோவிலிந்துசூரியர்களொளிபுகாதாலோ
ங்குமப்பாங்கரின்வாசமுற்றுளோம்யாம். (௨௧

தாமரைப்போடைகளுயர்ந்தவில்வக்கானஞ் சட்டிருதுவும்பலன்கணல்கும்வாசப், பூமலர்மந்தாரைமுதற்றருக்கண்மல்கும்புகலமுதநதிக்கால்களநேகமுண்டா, லாமவணையொப்பற்றவிலிங்கநாதரமர்வாரவர்சிகரத்தினழுத்துஞ்சோதி, யாமணியின்காந்தியெங்கும் வீசுமாங்குவாசமுற்றோர்க்கோரிடத்துமனஞ்செலாதே. (௨௨)

ஆங்கவர்கண்மகிமையளவில்லையன்றேயவர்பூதிபுண்டரங்கண்டிகையணிந்தே, யோங்குசிவலிங்கவருச்சனைகள்செய்வாருற்றிடுமெவ்வினைக் காலபயத்தினொடு, தீங்குபுரிதருகற்பகாலந்தன்னிற் சேர்பயம்பாவப்பயமுஞ்சேறிந்திடாவாற், பாங்குபெருகுகந்தமணம்வீசுமாங்கட்பகர்சபிலநாதர்விளையாடல்கூர்வார். (௨௩)

கானத்தின்றொனிமுழங்கும்பாடுவோரைக்காணுதாற்கோடிசூரியர்தங்காந்தி, யானத்திலுதித்ததெனத்திப்மாலைமலர்மாலைச்சுடர்வயங்குமரங்களெல்லாந், தேனுற்றமலரினுளிலிங்கபூசைசெய்திடுமாங்குற்றிமெச்சனங்களெல்லா, ஞானத்தரடியருக்குமடிபராடுநம்பிரான்சிவபூசையந்துளாரே. (௨௪)

தருமின்பச்சிவனடியாரடியார்சமயமாற்றடைப்படுவதாலவர்பாற்செல்லமாட்டோம், விரவுதருக்குலங்களவர்சிவபூசைக்கேமிக்கவுபுபங்கனிகளியாவுநல்கு, முரவரவர்நிவேதித்தேயுண்டசேடமுண்பரவர்சீடரவருநவுஞ்சேடம், பரிவுறுமற்றவர்சீடர்பொசித்தேநல்கும்பரிகலப்ரசாதமேபருகிவாழ்வேம். (௨௫)

திரிபுராந்தகலிங்கபூசையன்றோர்செய்திடுமெப்போதினில்பாங்கவிலரிதுசென்றே, யருகினின்றுதரிசனங்கள்செய்யக்கூடாதநேகதூரத்தினின்றஞ்சலிதான்செய்வோம், பெரியவரைபோன்றுறுமவ்விலிங்கமூர்த்திபிரகாசமங்களமாய்ப்பிறங்குமன்றே, புரியசித்தர்சனகரங்கண் வருடமொன்றிற்கொருகதலிக்கனியருந்தியுறைகுவாரால். (௨௬)

அன்னகனிபொன்னிறமாமதனையீசற்கன்புடனைவேதனஞ்செய்தாயிரம்பேர், மன்னுமொருகனியருந்திச்சுகத்தில்வாழ்வார்வளர்விளவுமுந்திரிபேரீந்தின்வாய்த்த, வின்னமுதப்பலங்களெங்குநிறைந்துமல்குமிவ்வரையின்செல்வம்போலெங்குங்காணேம், பன்னருமங்கவைகாணிற்பவங்கள்போக்கும்பரமனுடற்றனம்பலவுமுண்டால். (௨௭)

அவ்வரைச்சாரலினங்கிச்சிகைகள்போலுமமையிலிங்கங்கட்களவில்சித்திநல்குந், திவ்வியதீர்த்தங்களும்பற்பலவுண்டாங்கட்டிகழயிராவதயானைக்குலத்தில்வந்த, வெவ்வமிலாமதயானையநேகமேவுமினியபாதலகங்கையிசைந்ததந்தக்,கௌவையுறுகண்புனலைத்தரிசித்தோர்தங்கடுவினைபோயின்பங்கூர்கதியிற்சேர்வார். (௨௮)

அக்கங்கைதனின்மூழ்கிவில்வங்கொண்டேயாங்குறையுஞ்சிவலிங்கத்தநர்ச்சிப்போர்க, டக்கசித்தியாவுமேபெறுவரன்ன தாம்பெறுதலரி

தாருமங்குச்சார்ந்த, தொக்கசிலையா வையுமேயிலிங்கமாகுஞ்சொல்லரி யபிரமராம்பிகைபார்த்தூய,மிக்கமாதேவியுளாளவளைகாசிவிசாலாட்சிப வானிசிவைவிசையதானே. (உகூ)

தேவியவள்பதபூசைபெறலாமங்கட்சிவசிசியிலருச்சித்தோர்சித்தி யாவு, மேவிடுவர்யாங்களுமோர்சிவனிரவில்விமலைதரிசனம்புரிந்துபித க்கணங்க, ளோவிலொருநூறுசெய்தோமன்னபோதி லுடையில்லார்ச டைமுடிபாரொளிவெண்ணீறு, பாவுகவசத்தரங்கிர்கடர்கள்போலப்ப டர்கேசரோகநேட்டிப்ரவேசர். (௩௦)

பருப்பதம்போலொருவர்மையினொருப்புப்பா லும்பருவரைகளைக் திவந்தாரவர்கள்பின்னே, யுருப்படமுறும்விடம்போலும்புரிமாமேருவொ த்தசிங்கமாயிரநாவுடையபார்தள், வெருப்படவந்துடன்சூழ்ந்தவவைக ள்கண்டேமிகநடுக்கமுற்றுளோம்வெளியிற்போந்தே, மருப்பமுறுதயிரி யமும்போயதின்னுமந்தவந்தநடுக்கமந்விலதாலன்றே. (௩௧)

இறந்தவின்மேற்பயனினித்தானென்னையென்றுவெணித்துணிந் தாவனிமுன்னமெய்திநின்றே, மறத்துறுநரபபன்போல்வாள் வந்து தோன்றியருள்புரிந்தாளவளமுதக்குவமையுண்டோ,நிறத்துறுமங்கவன் மேனிபார்க்கவஞ்சிநெஞ்சகமுங்கண்ணுமவள்பதத்தில்வைத்தோம், புற த்துறுமோரசரீரிதேவர்நீவிர்புந்திபுற்றதென்னெனவேடிகன்றதன்றே. [ ]

அவணிகழ்ந்தகேட்டனம்பாமன்னேயெங்கடகமரர்பதம் வேண்டு மென்றேந்தந்தேமென்றே, சிவைபேசியறைந்தனளாலந்நேக்கண்டே திகைத்தனமற்புதத்துடனேயிங்குச்சேர்ந்தே, நவைதீர்தேவத்துவம்யா ம்பெறவேவேண்டுமாதனிவிசாரித்தூநல்காயென்றார், சவைசேருமவர்க ளுடனந்திதேவன்சார்ந்தனனவைதுண்டமாமுலகிற்றுனே. (௩௩)

ஆகரவாமுன்போலவொளிபெற்றுங்குமனையபதந்தனைநோக்கிய ருந்துநின்ற, சீதரனுமுருவுடையோன்றனையழைத்தேசிவபூசைசோம்ப லின்றிச்செய்துநாளு, மோதுமிந்தவுலகுபரித்துறைதியிங்ஙனொருகோ டிசிவலிங்கமுளவில்வக்கான், மீதுளதுகோமளமாந்தளிர்கள்கொண்டுமி க்கவருச்சனைவிடாதியற்றுவாயே. [௩௪]

அனையபூசனைசிறிதுவழுவி லுன்றனதிகாரம்வழுவிபிடுநீபுசிக்க, வி னையதெல்லாந்திருவருளாவிபைந்தவென்று மிவைபுரியிற்செல்வம்வளர் ந்திடுங்கண்டாயே, பினையுமானருளா லுன்றனக்கோகாமம்பிறிதருள்கோ நாரணன்வைகுண்டவாசி, வினைதவிர்செனுர்த்தனன் செங்கமலைகேள் கோவிந்தன்வியரசுயர்த்துந்துவசவேந்தன். ௩௫

இனிமேற்சக்கரபாணியெனப்பேர்கொள்வாயிறையவரஞ்செழுத் தையுன்னியிருத்தியென்றே, தனியேவிமற்றுள்ளதேவரோடுஞ்சத்திய லோகத்தில்வந்துசார்ந்தேயாங்குப், புனைசோதியிலிங்கங்கடம்மைநோ

க்கிப்பூசைபுரிந்தனனந்திபிரமரூபந், அனைவிழுறுமவனையழைத்தரன்றியானச்சுத்தமனத்தொடும்பார்த்துச்சொல்லுகின்றான். [௩௬]

பன்னுசைவசீலத்தின்மிக்கமேலாம்பாக்கியவானீயிலிங்கபூசையாற்றி, மன்னுமிந்தவுலகுபரித்திருத்தியீசன்மனமகிழும்பதியிஃது காண்டியீங்குத், துன்னுகின்றகூவிளக்கானதனைநன்றாய்த்துலங்கிடச்செய்திடிலுன்றனதிகாரத்திற், கின்னல்வாராதிறைவனருளாலுனக்கேபியானுமஞ்சிற்சிலநாமிசைக்கின்றோமே. (௩௭)

சதுர்முகத்தன்விதிபரமன்வாணிகேள்வன்சாற்றுமிப்பேர்முதலாமநேகம்பேர்கொண், டிதுபதியாவுறைதியெனவைத்தேயப்பா லிருந்துளதேவர்களோடுஞ்சுவர்க்கநாட்டிற், கதுமெனப்போய்க்கண்ணுதலைச்சிந்தைசெய்தாகண்டலன்றனுருவாகுமவனைக்கூவி, விதுவணிவானின்பதிலமாகவிந்தமேலுலகம்படைத்துளான்விளம்பக்கேளாய். (௩௮)

இவ்வுலகிற்சுகந்தபுட்பவனமநேக மிருந்துளவாவிம்மலர்கொண்டிறைவன்பூசை, கவ்வையின்றியேயியற்றியிருத்தியீதுகலங்கிலிந்தவதிகாரங்கலங்குங்கண்டாய், நவ்விவிழிபாகனருளாலுனக்கேநாமஞ்சிற்சிலநவில்வேம்வலாரியிந்திரன், கொவ்வைவாய்ச்சசிகாந்தன்வச்ராபாணிகூறுசதக்கிருதுவெனும்பெயர்கள்கொண்டே. [௩௯]

இப்பதியிலிருத்தியெனவைத்துப்போகியியமபுரத்தியமரூபனையேநோக்கிச், செப்பிடுவானந்தியிந்தவுலகந்தன்னிற்றேவவனமிருந்துளதிங்கிதனைநன்றாத், தப்புதலில்லாதுதழைத்தோங்கச்செய்தேதண்மலர்நன்கனிகொண்டேயிலிங்கபூசை, முப்பொழுதுமியற்றியுறைதவறியுற்றான்மொழியுமுனததிகாரந்தவறுமன்றே [௪௰]

இந்தவிலிங்கார்ச்சனைகள்செய்யவேண்டியிங்கேயுன்றனைவைத்தோமாகையாலே, சந்ததமுந்தவறாமற்சோம்பலின்றிச்சாற்றரியபத்தியொடும்பூசையாற்றிச், சிந்தைமகிழ்ந்துறைதியிதுவழியதாகச்சிவனுறையுங்கயிலைவரைக்கேகும்பத்தர், வந்திடிலிங்கவர்தம்மையெதிர்கொண்டேகிவாய்த்தவுபசாரமுடன்பூசைசெய்வாய். [௪௧]

உனதுபெருலகத்திலான்றன்பத்தியுறாதமாந்தர்க்கெனவேயநேககோடி, கனலுருவாநரகங்களிருப்பதுண்டாற்கயவர்தமைக்கொடுவந்துதள்ளியன்னோர், மனமறுகமரமறுக்குமீர்வாடன்னான்மற்றவர்தேகங்கடமைவகிர்திகண்டாய், கினைவயரநெருப்பாறுநெருப்புப்பாறைநெருப்புமரங்களிற்றள்ளிநெருக்குவாயே. [௪௨]

பெரியவிருச்சிகவாரிவிடத்தீவாரிபெருங்கொதுகினினம்பிடுங்குமாடகூட, முருகவேலகாய்ந்தவாயுதத்தின்கானமொழுகுகனவிருப்புமலைகொதிக்கக்காய்ந்த, கருகுவெப்புநீர்க்கடலநேகமின்னங்கடியகொடுந்துயர்த்தானங்கணக்கின்றாமாற், றிருகுசிந்தைப்பாவியர்க்குஞ்சைவசீலஞ்சேர்ந்திடார்க்குமிறைவன்செய்தவாறே. [௪௩]

பொருந்துமப்பாவியர்களெவரென்னிற்சொல்கேம்பூதியுத்தூளனைத்தொடுபுண்டரங்க, டிருந்துருத்திராக்கமணிபணிகிலோர்கள்செய்யபஞ்சாக்கரசெபங்கள்செய்திடார்க, ளருந்தவத்தாற்சிவன்றனருச்சனைதியானமவையில்லாரவர்களையிந்திரயந்தன்னில, வருந்தவேதனளிமுன்பின்பார்த்திடாமல்வதைபுரிநிதூதர்களான்மறவிநீயே. [௪௪]

உனதாணைபுரிபடர்கோடியர்கடம்மையுந்றனைசவனல்லாதாரிடத்தினேவி, மனதுமகிழ்கோரவடிவினராயன்னோர் வதைபுரியுந்தொழில்செயவேவரம்புரிசெபவாய், மினதுசிலபெயர்காலன்மிருத்துசண்டனிகழியமனெனப்பெறுதியென்னக்கூற்ற, னனையநந்திதாள்வணங்கி யன்னோன்சொன்னவாணைதனைத்தலைக்கொண்டேயமைந்துசென்றான். [ ]

மற்றைபதிக்குள்பாலர்தமக்குமிந்தவண்ணமமைத்துமைபாகராளாலன்னோர்க், குற்றபெயர்சிலவருளியேவிப்பின்னுமுளதேவர்நவக்கிரகமுடுவின்கூட்டங், கொற்றமுறுமெழுமுனிவர்வரைகள்வாரிகுலவுநதிமனிதரொடுநாகருள்ளார். சொற்றவனம்பயிர்மிருகமாதியாகச்சொல்லுசரமசரமெல்லாந்தொகுத்துக்காட்டி. [௪௬]

அந்தவந்தப்பதங்கடொறுமமைத்துவைத்தேயமரர்யாவரும்வணங்கிப்பூசித்தேத்த, வந்துநந்திகணங்களொடுங்கயிலைக்கோயில்வாயில்வீற்றிருந்துமையாட்கிறைவன்கூறு, மைந்தெழுத்தின்பொருளரவம்வினவிச்சிந்தையதிசயத்தாற்சிவனைநினைந்திருந்தானென்றே, சிந்தனைசெய்திடுஞ்சத்யவிரதன்சொல்லத்தேவிசுகவாணிகேட்டுகந்துசொல்வாள். [ ]

தலைவகேளைந்தெழுத்தின்பொருளையீசன்றான்மொழிந்துமுடிந்திடுநாடானுமுண்டோ, மலைமகளங்கதுவினவியொழிவதுண்டோமைந்தரிருவருங்கேளாதிருந்ததுண்டோ, நிலைமைபெறுமிவர்க்கிதுவேகருமமல்லானிறதொருகாரியத்தின்விருப்பமின்றே, சொலுமெனவேயனைவிசுகவாணிகேட்கத்தூயவன்சத்தியவிரதன்சொல்லுகின்றான். (௪௮)

மானேசத்தியவாய்மைசொல்லுகின்றேன்மகதேவன்மகிமைமனத்தடங்காதன்னோன், றானேயோர்கருமங்கள்செய்யவென்னிற்சகத்திரமாய்முடியுமதுதான்கண்டாயே, யானேறுமவனினைக்கிற்சகலலோகமண்டபகிரண்டமுமுண்டாகையாலே, தேனேயுங்குழலணங்கேயவனேயல்லாற்செகத்தினிலோர்தலைவரெவர்செப்பத்தானே. (௪௯)

மற்றுளதேவர்கள்கற்பகாலந்தோறுமனம்வருந்திப்புரியினுமொன்றமைவதுண்டோ, சொற்றிடுசிற்பரன்சிவன்செய்லீலையாலேசூழ்கடல்வெற்பினங்களீரேழுலோக, முற்றிடுபேழையுமதனின்மூடியும்போலுண்டுபெண்ணினனவனுண்டாக்குகின்ற, விற்றருபாதலந்தன்னிலரன்றான்மேவுமிக்கதொருதானமுள்ளததன்சீர்கேளாய். (௫0)

அத்தலத்திலாயிரத்தெட்டாமிலிங்கமமர்ந்திடுந்தங்கத்தின்மயமாகுமன்றே, சுத்தமொருநாகபூடணம்பொருந்துஞ்சொல்லரிய மாணிக்கத்

தொளிர்விமானமுத்தகையமானஞ்சூழ்தரும்பிரகாரமணிமணிமண்டபஞ்சிகரகோபுரங்கள், பத்திபொளிர்தருமந்தவாலயத்திற்பத்திபுரியனந்தன்முதனாகமெல்லாம். (௫௧)

கூவிளத்தின்பத்திரம்பொற்றாமரைப்பூகுளிர்தருமந்தாரைமலர்சண்பகப்பூ, வாவனுடனளவின்மாணிக்கமுங்கொண்டருச்சனைசெய்குவர்நாககன்னிமாதர், மேவியேபூசைசெய்தகானமிர்தவிதங்களுமேபுரிவர்புத்ரர்பவுத்திராதி, யாவருமிவ்விலிங்கபூசனையேயல்லாலேற்றதொருகருமங்களியற்றிடாரே. [௫௨]

பாதலத்திற்சிவபூசைசெய்திடாதபடவரவக்குலமொருவரில்லையன்றே, கோதையிடத்துறைபரமனருள்செய்லீலைக் கோமளத்தாரெல்லோருங்குறைபடாத, மாதவத்தார்திடபத்திபெற்றாரென்றுமனைவிசுகவாணிதான்மகிழ்ந்துகேட்ப, வேதவிதிச்சைவவிரதத்தனைமிக்கசத்யவிரதன்றான்விளம்பினனே. [௫௩]

முப்பத்தொன்பதாவதுசத்தியவிரதனுத்தாரச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௫௯௩.

நாற்பதாவது,

சாம்பவவிரதச்சருக்கம்

வேறு.

திருவிளையாடலிற்சகலபுவனமெல்லாந்திருட்டிதிதிசங்காரஞ்செய்யுங்கோமா, னருள்விளையுமுயிர்க்குயிராய்நிறைந்துநின்றோனருள்வாரியடியவர்களிடர்கடீர்ப்போ, னுருவிளையும்வினைப்பிறவிக்கடலில்வீழ்ந்தேயுலையாமலெனையாள்வானும்பர்போற்று,மருவிளையுங்கொன்றையினனிமையப்பாவைவாமத்தானனைத்தினமும்வணங்குவோமே. (௧)

வீரையரசன்புகல்வானிவைகளெல்லாம்விளம்பியசத்தியவிரதன்வாய்மைகேட்டே, நாரிசுகவாணிபவவினைகடீர்க்குநாயகனுமவன்முகம்பார்த்துரைசெய்கின்றாள், சாரமுடனீர்புகலுத்தரங்களெல்லாஞ்சாற்றரியபாவங்கடீர்ப்பதன்றோ, வாரமுறுமென்னிடத்திற்றயையாலின்னமாற்றமொன்றுண்டதனையுநீர்வழங்குவீரே. (௨)

அம்பிகைக்குஞ்சங்கரர்க்கும்பின்னரென்னவனனியவிலாசங்கண்டதென்ன, நம்பனையேமணவாளனாகப்பெற்றநங்கையவடானென்னதருமஞ்செய்தாள், சம்புவவன்றனக்குநாரணனையாதிசாற்றரியதேவர்களும்பணிசெய்தாசர், செம்பதுமைமுதலானவிமையோர்மாதர்தேவியவடனக்குழையஞ்செய்வாரால். [௩]

முன்னரே யென்னவிரதங்களியற்றியிக்கமுடிவருமபாக்கியம்பெறற்கு ணமங்களஞ்சே, ரன்னசிவன்றனைச்சேர்ந்தபடியினாலேயழிவறுமங்களை யெனப்பேராயினாளாற், றன்னிமித்தவிதனையுற்றிடாமற்செய்யுஞ்சொலலரியசிவவிரதமுண்டோவெல்லா, மெனனுளத்திற்கேட்கவேவிருப்புகின்றேனிவைபலாதெரியவேயியம்புவீரே (௪)

என்றுசுகவாணிகினதஞ்சலிக்கைகயோடெமிசைதந்துஞ்சத்தியவிரதனிப்பாயுகின்றனை,யின்றிவிடைபோலமகிமைவிளம்புகின்றேனவினை வினாருபாவமொழியிடுமன்னோ, ளொன்றுசுராசுரர்கடமக்குடற்றும வெம்போருநமெநாருநாறுயுமதுமேவதெனனிற, றுன்றுதானவர்க்கெல லாமரசனைத்தமேதானபிறனாயிரசனைடனென்பேருசூரனை (௫)

அனனவனவாழநகாமங்கிக்கோட்டை சூழ்ந்தேயக்கினிசககரமெ னப்பெயரபதனேனை, பன்னரிபவவுணாகடங்குலதநுக்கெல்லாமபாட் டினமநமபைபவலவானபமெசெப்வான, மனனுமெழுநிலையளந்தவடி வனபொனனிவளாகைநாலகணகோடிகோடியாகுந, துனனியவச்சிரம போலுமபவலுமங்கிச்சுவாலைபோனுவுமொய்வோராகோடியாமே. [௬]

அங்கவனறனமெலவெமசாலுமவாரதையபாயிரமாயிரமிடியி னமுழநகமமாட, பொஙகுமவனறகதநிறகாநதியிநதபபுவனமளநதிடு மூசசில்காறறினுமே, தங்கிபவாரிகளேழுமலைகணமோதுஞ்சயிலஙகள யாவையுமுணமயனலாஙகணணிற, செஙகணலினபொறிகளாற்குலவெற பெலலாஞசெநதூளாமவனசேற்றசெயலைககணடே. [௭]

காரணனறதிபடைகவிலலாமுறறநடுக்கநதாபாதமடபுகடகொடுகக ஞசோநதா,காரணமிஙகிதற்கெனனெனசெய்வோமென்னக்கருதியோரயு தயுகஙகலஙகினாக, ளாரணனை பிரதிரனமுனனோகளேவவாங்கடைந் தெமுகமவாடி பபாவோடுறற,வாரணமொநதியகையானமுனனரெய்திவ நதனைசெய்திவ்வாறுவகுக்கின்றனல. [௮)

ஏனைதயாநாரணனைபாதாளத்திலெத்தனை நாடகுடியிருப்பதுச்சின் மேவிப, பேதையாரிருப்பாதில்ற,தனனமேபெருமபயமிங்கிதுதீரப்பெ றுவதெனமேறு, தீதைதபெபுரியுமவனிங்குவந்தாறசெய்வதெனனேவரில யினிறமசென்றிடானுன,மாதரொடுமைநதாவாதயமையெல்லாமவளைதபு ரிவன்றடைபுரிபவலலரியாரே. (௯)

ஆனகயினாலயோசனைசெய்தாலதென்னேயாயுதபாணிகளாகியவ ன்பாலேகி,வாகைபுனைபோராயுரியினவெலவதனறிமடிதலிரணடினிலொ னறுவாய்க்குமனமேற, தோகையாகண்மைந்தாநமதான்மலிங்கஞ்சுரபித ருமுதலாயசூழ்நதயாவு,மீகைபெறுமிவ்வுலகினமேவவைத்தேயேகியட லுகொணடபினனமேகுவோமே. [௧௦]

என்றுபிரமன்புகலநன்றுநன்றென்றெழிலாழியேந்தினானிந்திராதி துன்றுவானவரயனுந்தொடரவேகிச்சூழ்தந்தானக்கினிசக்கரமூதூரை, யன்றசுரரேவுமங்கிச்சுடரினாலேயடைந்தனர்கண்மூர்ச்சையயர்க்கடைந்தோரெல்லாஞ்; சென்றதுவுமுயிர்சோர்ந்துவீழ்ந்தவாறுந்திருமுதலாமமரமின்னார்தேர்ந்துளாரால். (௧௧)

கலங்கினார்நடுக்கமுடன்கண்ணீர்சோரக்கதறியேசேடன்முன்போய்க்கவலைகூர்ந்து, மலங்கியேபுகல்கின்றார்மாயனாதிவானவர்கடுணையின்றிமலைவான்புக்கார், நிலங்குலவுமாமுடியாய்வீந்தார்போலுநீபுகுந்துபார்த்துவரவேண்டுமென்றா,ரலங்கல்புனையாழியானிறந்துளானோவந்தோவென்றரவரசனழுதானன்றே. (௧௨)

அனைவோருங்கூட்டமிட்டேயலறிச்சோர்வுற்றயுதயுகங்கிடந்தனராலலரின்மேலா, ணினைவோடுமெழுந்துகைம்மையுற்றோமென்றுநெடுஞ்சோகத்துடன்றேவமாதரோடு, முனைவோனாஞ்சிவயோகிகபிலன்முன்போய்முறைபணிந்துமொழிகின்றாளசுரன்றன்னா,லினைவோரும்விண்டுமுதலமரெல்லாமிறந்துளராமென்செய்வோமியாங்களென்பாள். (௧௩)

செய்யவேண்டியகருமந்தெளியகில்லேஞ்சித்தயோகியர்போற்றுந்தவத்தோயென்றே தையன்மாமடந்தைசொலக்கபிலன்கேட்டுச்சாற்றுவான்சங்கரனைச்சரணடைந்தா,லுய்யலாமிந்திரைகேள்சோபனங்களுதவுவாரவனையன்றியொருவருண்டோ, வெய்யதிரிபுரதகனன்றனைவென்றவீரனையேத்திடிற்கொடியவினைகள்போமே. (௧௪)

அந்தவரன்றனைமதியாதகங்காரத்தாலசுரனும்பிரசண்டன்றனையேவெல்வான்,சிந்தைசெய்துசிவன்றனையேபூசியாமற்சென்றனனாலவர்க்குவருஞ்செயமுமுண்டோ,முந்தைமுதலாய்த்தேவதேவனாகுமுன்னவனையிகழ்ந்துளார்மூடராகி, வெந்துயரக்கடன்மூழ்கியரசும்வாழ்வுமிகழ்பிரட்டராய்நரகில்வீழ்வர்தாமே. (௧௫)

அமலையிடம்பிரியாதபரமன்பாதத்தன்பிலாரின்பசுகமடைகுவாரேற், கமலைகேண்மேகமின்றிமழையுமுண்டாங்காட்சியாமெனக்கபிலனுரைக்கும்போதிற்,சமர்புரிதேவர்கணாசமுற்றவாற்றாற்சாற்றரியதுயரமுறுங்கலுழன்சார்ந்தே,விமலமாந்திருநீறுகண்டிபூண்டவிழுத்தவன்சேவடிவணங்கிவழுத்துகின்றான். (௧௬)

தானவர்களதிபதியாமப்பிரசண்டன்றனிநகரக்கினிக்கோட்டைதன்னின்மேவி, வானவர்யாவருமாயனுடனேவீழ்ந்துமடிந்துகிடக்கின்றனரான்மற்றதற்கே,ஞானமாதவவென்னசெய்வோமென்றுநாயகமாம்புள்ளரசனவிற்றலோடு, மானசிவயோகிபாங்கபிலன்கேட்டேயங்குநிகழ்ந்தனவகையாவறைதியென்றான். (௧௭)

பாதலத்திலிருந்தமான்முதலதேவர்பகையசுரன்பிரசண்டனென் பான்றன்னை, மோதுபோர்புரிந்துசயங்கொள்வோமென்றேமொழிந்துந டந்தனரவன்றன்மூதூர்தன்னிற்,சீதரன்சார்ங்கங்குனித்துச்சிறுநாணோ சைசெய்தனன்சங்கமுநாதஞ்செய்தான்மற்றை, வேதன்முதலோருமே முழக்கினார்கள்வீறொலிபோயசுரர்புரமேவிற்றன்றே. [கஅ]

அண்டமெல்லாம்பொதிரெறியவரைகளெல்லாமடைந்திடமண்டி யதொனிபிரசண்டன்கேட்டே, யெண்டருமிம்முழக்கந்தானேதடாவெ ன்றிற்புலியின்முதன்றனைப்பார்த்திசைக்கின்றான், மண்டுகின்றகனற் பொறிகளயுதகோடிவருகின்றபேராரவாரமீது, கண்டதிலையென்னிதய ங்கலங்கமென்மேற்கதிக்குமட்டகாசங்களுதித்ததென்பான். [கக]

என்றனையேயெதிர்க்கின்றாரொருவரில்லையிப்போதுவந்தவர்யாரி தனைத்தேர்ந்து, சென்றுநீகடிதின்வந்துபுகறியென்றுசெப்புதலுமார்ச்சா லன்றெரிந்துசொல்வா,னுன்றனக்கேயித்தனைவிசாரமென்னேயுண்டிநீத் துறைவதென்கொல்புவனமூன்றில், வென்றிபுரிநின்னுடன்போர்புரி வாருண்டோமிக்கசெல்வமுனதன்றோவிளம்புங்காலே. [உ௦]

ஆனதிறத்தாலுனக்குப்பயமேனம்மோடமர்புரியுமமரர்கள்போய தலஞ்சேர்ந்தா, ரூனமுறுமிவ்வுலகிலெதிர்ப்போரில்லையுயர்தருபொன் னுலகுசத்யலோகத்தோடு,வானவர்சூழ்விண்டுபதமுடிவிளுடுமரலிபதம் வறுமையுற்றுமாழ்கிற்றன்றே, ஞானநாயகன்கயிலைவாசமுற்றானுமவன் பூசனைபுரியநலம்பெற்றோமே. [உக]

நாசமிலாவிலிங்கேசன்பூசைநன்றாநற்பொருளாற்படமின்றிநயந்து செய்வா, யீசனிடத்தன்பில்லையென்னினன்றேவேக்கமுடன்றுக்கபய மெய்துமன்றே, பாசமகற்றிடுமீசன்றனைப்பூசிப்போர்பருவரலுற்றிடுவதி லைமருவார்தம்மைப், பூசறனிற்சயங்கொள்ளச்சிவன்றன்பாதபூசையால் லாதுராணுண்டோபுகலுங்காலே. (உஉ)

நந்தமக்குப்பிரளயகாலத்திலேயுநடுக்கம்வராதெனப்பாக்கனவில லோடுஞ், சிந்தைசெய்துபிரசண்டன்புகல்வானீதான்செப்பியதெல்லா மெய்யேயாயினாலும், வந்ததென்றன்மனத்திலையமிந்நாள்காறுமன்னு ரிமைபுரிகின்றேனின்றுபோலப்,புந்திமருண்டிடுமிந்தமுழக்கமுண்டோபு குமிதுதீர்ந்தாலன்றிப்புசித்திடேனே. [உ௩]

வேறு.

வெருகின்மாமுகவருதியுக்கிரசுவாலனைகியசேனையின்விரனைக்கடி தேகியன்னவர்மெய்பொடித்திடுகென்னவே, பெருகுசேனையொடேவி னனவனேறினானொருதேரின்மேற்பிறங்கிடுஞ்சுடர்ாமிடக்கயகோடிசூழ்ந் திடவருதலுஞ், செருமுயன்றிடுதேவர்நின்றுதிகைத்துளாரொருநாரண ன்செப்புதாமரையைப்பணிந்துரைசெய்குவான்செழுந்திமலே, வருவபோ

ன்றதுவையமிப்படிகண்டிலோமமருன்னியெமன்னுமாமினியென்னசெய்குதுமறைவலாயறைவாயரோ. [உ௪]

வாயுவேகமொடேயிடிக்குரல்கொண்டெதிர்த்தனனூழிவாய்வந்திடுங்கனல்போலநாமெதிர்நின்றடர்த்திடவல்லமோ, பாயுமாவதுபூண்டதேரினையூர்ந்துவந்திடுமகரனைப்பார்த்தியால்விதியேயினித்தனிபாதலத்தினிலேகவே,யேயுமோவவணேகிடிற்சுகமென்னையென்றரிசொல்லவே பெண்கணன்பகர்வான்பயத்தினையெய்தலிரடலாழியான் மேயவிங்கிவனோடெதிர்த்தமராடுவிரேனும்வேலையினவிரைந்துவந்தெதிர்கிட்டினனிருவோரும்வெஞ்சமராடினர். [உ௫]

ஒருவருக்கொருவோரடர்த்திடயாதுகத்திருவோருடைறுப்பளாசரனன்விடமத்திரத்தினிழுக்கிரக்,நருவாலனுடையடித்திடுசேனையாவுமடிந்ததாற்சாற்றுமங்கவனேறிவந்திடுதேருமேபொடிபட்டதால், வருமவன்கதைகொண்டிறப்பொருதன்றுகொண்டனன்விண்டுவும்வல்லவாறமர்செய்யும்வேலையில்வானிலேலகினனசுரனை, பொருதிறத்தவனோடெழுந்தெதிராமர்தொடங்குறப்பொழுதினிற்போர்செய்தானவனுழையடைந்தரிபூவில்வீழ்ந்தனனமரோ. [உ௬]

விழுந்துமூர்ச்சைதெளிந்தெழுந்தனன்முட்டியுந்தமியற்றியேவிரமோடரிருத்தவுக்ரசுவாலன்வீழ்ந்துமடிந்தனன்,னெழுந்தசேனைகள்யாவுமேபோருகனமதிற்பொடிசெய்தனலிவழிலேபொளித்துளானெனுமவன்புருந்தனன்பாவருந்,தொழுந்தகைப்பிரகன்னடைமகுரேசனோடுரைசெய்தனன்றுபமாயவனொற்றவுக்ரசுவாலன்வீழ்ந்தனனென்னவே,யழுந்துகின்றவிசாரமுற்றனனைதவினுவிடம்பொருதிடுமையுருகுகின்றிடுமகுரசேனையினதிபனெடுநிரைசெய்தனன் [உ௭]

அனையசேனையினதிபனோதினவுடல்கொணம்கசுரர்க்குமிரயற்பதுற்பலருதுழக்சுவாலின்வீந்தனனெனுமே, மன்னனெஞ்சில்விசாரமுற்றனபொர்பராக்கிரமசாலிபாம் வன்னிகூடனிருந்துளானவன்வல்லமைச்சமரிச்சுசயான்,சொன்னவன்னவனொடுகூடியவசுரசேனைகள்கோடிபொர்குராமவர்போர்செயத்துணிகின்றசிங்கமடைத்துளார், பலனருந்திறல்பெற்றுளாரவர்தம்மொடும்படிறேரிரபஜெக்கைகடாவிரன்பயுதத்தொகிரன்புதம்பரிகூடியே. [உ௮]

அரசவன்டர்க போய ரத்திட வஜ்னபேகுதியென்னவே யாக்கிரமங்கொள்பராக்கிரமன்னெனும்வன்னிகூடனெபொறைக்குரைசெய்தாறுறுதாமசங்கள்சொய்நமர்க்கமெகெனு வுடனாறுபினைவனடங்கனவுற்றசேனையினோடேரா, விரைசெய்தாமுதலதேவர்கள்மேலிடத்தலின்மெயினன்விரமொடவன்வருதல்கண்டனர்வின்னுளோர்களியாவருங்கணைகள்பரவநிக்குபச்சமருந்தெதிர்த்தனர்போர்செயச்சக்கரந்தரித்திடுமரிநெடுவாளிசேனைதகர்த்தனன், (உ௯)

அசுரர்சேனையை நூழில்செய்யவிரத்தவாறுகண்மண்டியேயமரர்
சேனையைவாரிபெயலைவாரிதன்னிலழுத்தவே, விசையினோடவர்தாமெ
ழுந்தனர்களைதெளிந்தனரவுணரை மீட்டெவ்வந்தமராடிவென்றனர்வன்
னிகூடனும்வீந்துளார்,னிசிசராதிபனும்பிரசண்டனும்வினவியேபயமுற்ற
னனின்றபூசையின்வரதனும்பிரதானியோடுநிகழ்த்துவார், னிசையவேயி
னியென்னசெய்குதுமசுரர்யாருமிறந்துளாரென்னுநெஞ்சுக வன்றுரை
த்திடவல்லபத்ரனிசைப்பனால். [௩௰]

அரசனேயமர்செய்களம்புகில்யாவர்தாமுயுர்வீகலாராவதென்றயிரிய
ம்விடேலளவற்றசேனைகளுள்ளவா, லுரைசெயுஞ்சிலர்பொன்றினர்களு
னக்கிதிற்பயமென்கொலோ வோதுதேவர்கள்வல்லமைத்திறமுற்றுளார்
சிலரல்லவோ, விரையவானவர்தமையடர்த்திடவவுணர்தங்களையேவுது
மேவுகற்பமதுறினுநம்முடைவெள்ளம்வற்றுமதிலையெனுத்,தரைநிறை
திடுமசுரர்நம்படைகோடிகோடியனுப்பவேதானடைந்தமராடிமால்விடு
சக்கரத்திலிறந்ததே. (௩௧)

இனையவாறுவிடுத்ததானவர்யாருமானவர்தங்களா லிறந்துளாரென
வேபிரசண்டனுணர்ந்தினிச்செய்வதென்னென வினையம்வல்லதோர்பூ
னைமாமுகனுடன்விளம்பிடவுரைசெய்வான் விசையமெய்திடவேண்
டினுற்சிவனருளாற்பெறலாகுமோ,புனையும்வெணிபரன்றனக்களவற்றபூ
சனையங்கமாம்பொருள்கொடேவ ழிபட்டவன்றனதருள்பெறிற்புகழ்பூ
ணலா,மனையவண்ணமமைத்தியாலெனநன்றுசொல்வினையாமெனுவன்
றுநற்பொருள்கொண்டருச்சனையாற்றினனசுரேசனே. (௩௨)

அன்னநாலையிலமரர்கூடினரசுரர்யாருமிறந்துளாரடல்கொளும்பிரச
ண்டனுமவனொருவனேயுளனுமெனு,மன்னினுரவன்மேவுகின்றபுரத்தை
பவனைவுற்றுளார்மருவுமப்பதிதன்னிலுற்றிடுவன்னிமாமதி ருன்சுடத்,
துன்னருந்துயருற்றுருண்டுசுருண்டுவீழ்ந்துகிடக்குளார் தூயமாமுனி
வாநடந்துளதிதுவெனக்கலுழன்சொல, வின்னல்சேர்திருவாணிமாதயி
ராணிதாரையயினோடியாமென்செயக்கடவோமெனக்கபிலத்தவன் புகல்
வானரோ. [௩௩]

வேறு.

தாமரைத்திருவேகோடானவன்பிரசண்டனென்பான்
காமனைக்காய்ந்தவிஸ்வநாயகன்கமலத்தாளிற்
றேமலர்கொண்டுபூசைதிடபத்தியதனாற்செய்தா
னுமவன்றனக்கேவென்றியன்றிவிண்ணவர்க்குண்டாமோ. [௩௪]

கண்ணுதற்கன்பிலாதார்கடுந்துயர்க்கடலாழ்வாரென்
றெண்ணிலாயிரந்திராதியிமையவரயன்மாலென்பார்
நண்ணுறுமதனாலன்றோநடுக்கம்வந்துற்றாரந்தோ
மண்ணுவாரான்றன்போற்றிவாழ்தலைமதித்திலாரே. [௩௫]

உமையொருபாகன்பூசையுறுதியாற்செயவொட்டாம
லிமையவர்மயங்கச்செய்தமோகமாச்சரியமென்றே
கமைபெறுகபிலன்சொல்லக்கமலைதான்வணங்கிக்கண்ணீ
ரமைகிலாதழுதுநின்றேபஞ்சலித்துரைப்பாளன்றே. (௩௬)

என்னுடைக்கணவரானவிண்டுவிக்கிமையோர்தம்மி
னன்னயஞ்சொல்வோரில்லையவர்மோகநடுக்கடற்கு
டுன்னியேயழுந்தியுற்றார்சோதிபூசனைசெய்யாமன்
மன்னுறுதின்பமென்றலின்றுநான்மதித்துளேனே. [௩௭]

இனியேனுமசுரராகுமருவலாரிடர்கள்செய்யுந்
துனிதீருமாறும்யாங்கள்கைமையிற்றுயர்சேராம
னனிவாழ்வுதழைக்குமாறுநாசமுறாதவண்ணந
தனிபோயினார்கண்மீண்டுவருமாறுஞ்சாற்றுவாயே. (௩௮)

பரமனர்ச்சனையினாலும்பரயோகமகிமையாலுந்
திரமுறுமுனிவர்க்கெல்லாமதிகநீசெப்புகென்ன
வாரயதுபா[illegible]
யுரமுறுவிரதமொன்றுகபிலமாமுனியுரைப்பான் (௩௯)

புனிதமாங்கமலைகேளாய்பொருவரும்விரதமொன்று
வனிதைபோர்பாகன்றன்னலமைத்ததுமகத்தாயுள்ள
தினிபலவிரதந்தம்மின்மேலானவிரதமீதா
லுனியிவைபுரியில்வற்றாச்செல்வம்வந்துறுங்கண்டாயே. (௪0)

ஆதிகாலத்திரத்நசிகரங்கணிறைந்ததாகிச்
சோதிசேர்கோபுரம்பிரகாரமண்டபங்கள்சூழ்ந்தே
சீதசந்தனப்பூஞ்சோலைசெழுந்தடாகங்களெங்குங்
கீதங்கள்வண்டுபாடுங்கிளர்கயிலாயநாப்பண். (௪௧)

அபுதம்போசனைமேலோங்கும்புரிசையொன்றதனின்மீதே
யுயர்தருமிரத்நசிங்காதனமதனுடனேபுட்ப
சயனங்களநேகஞ்சூழ்ந்ததிற்சசிப்பிறைசேர்மாலை
துயல்வருவேணியார்தாஞ்சுகாசனராகியுற்றார். (௪௨]

இன்பசாகரர்கிரீடகுண்டலமிலங்குமாழி
பொன்பயில்கேயூரங்கிண்கிணிபொன்னினரைஞாண்பூண்டு
நவபாயமைதை து[illegible]
மின்பயிலிரத்நபாதச்சிலம்பொளிவிரவச்சாத்தி. (௪௩)

வளர்பயோததிபோல்வெண்பட்டுடைஇவரதாபயங்கள்
கிளர்தரக்கணங்கள்போற்றக்கேழ்கொண்முச்சுடர்நோக்கத்தோ
டொளிர்பிறைசூடிச்சூலமேருவில்லுடனேதாங்கி
மிளிர்தருநகையர்வச்ரங்கற்பூரநிறத்துமெய்யர். [௪௪]

இன்னதோரலங்காரத்தோடெய்திவீற்றிருந்ததேவைத்
துன்னியேயிமயங்கைதொழுதனள்சொல்லுகின்று
டன்னிகர்கருணையாழிச்சம்புமாதேவவீச
வுன்னருட்குரியராவாருலகில்பானலதார்சொல்வாய். [சுரு]

இலகுகின்றபவிஞலேயென்னிடத்தருட்கண்வைப்பா
யுலகினுக்கிதமதாகவுற்றிடுமவிரதமொன்றை
நலமுறக்கேட்கவென்றேநான்மிகவிரும்புகின்றேன்
பலமுறுமதனைபெற்கேபகர்ந்திடவேண்டுமென்றாள். (சுசா)

என்றுமைபகர்ந்தபோதிலெம்பிரான்றயவுகூர்ந்தே
மன்றலங்குழலாடன்னைத்தழுவினன்மகிழ்ந்துசொல்வா
னன்றுநீவினவுகின்றாய்நாடரும்விரதமிக்கா
யொன்றுளதததனையார்க்குமுரைசெய்வதன்றுகண்டாய். [சுஎ]

அன்னதால்விளம்புகின்றேனளவிலாச்செல்வமீதென்
றென்னையாளுடையோன்சொல்லவிறைவிதானியம்புகின்றாள்
பன்னகமவுலியாயுன்படிவத்தோர்பாதிபெற்றேன்
மன்னுமிங்கிதுபோற்செல்வமற்றியார்பெற்றாரென்பாள். [சுஅ]

அளவில்சந்ததிசெல்வங்களநுட்டித்தோர்பெறமின்னார்க
ளுளமருள்விதவைக்கோலமுற்றிலாவரத்தைநல்குங்
கிளர்தருவிரதமொன்றுகிளத்துதியென்னலோடும்
வளமெலாந்தருவதாகவநற்விரதத்தைச்சொல்வான். (சுகூ)

பலந்தருங்கன்னிமாதம்பகருஞ்சுக்கிலபக்கத்தி
னலந்தருமத்தத்தோடுதிரிதிகைநயந்தநாளிற்
கலந்தபூசனைக்குவேண்டுங்கரணங்கள்கருதிக்கொண்டு
பொலந்தரும்பூசைத்தானம்புனிதமாயலங்கரித்தே. (ரு0)

பூரணகும்பந்தூபதீபமாலைகளும்பொற்பித்
தேரணிபஞ்சவன்னக்கோலங்களினிதுதீட்டித்
தோரணநிரைத்தபூசாத்தானத்திற்றூயதாய
வாரணவிரதமாற்றுமரிவையர்சுசியிற்சார்ந்தே. [ருக)

வெள்ளியாற்பசும்பொன்றன்னல்வெண்மணலதனலேனுந்
தெள்ளியவிலிங்கமொன்றைச்செய்ததிற்றிங்கள்சூடி
யொள்ளியபணிகள்பூண்டவுனையிடம்வைத்துமூரால்
கொள்ளுமுன்வதனைநோக்கிக்குழைதனக்களபம்பூசி. [ருஉ]

கற்பூரம்போலும்வெண்மையுடையகாயத்தினோடும்
பொற்புறுபணிகள்பூண்டுபொருவருமுருவங்கொண்ட
சிற்பராகநம்மையுன்னைநெடுந்தியானஞ்செய்தே
யற்புதத்தராகித்துவணங்கியஞ்சலிக்கையோடும். (ருங)

இவ்விலிங்கத்திலெம்மானினிதுசாநித்யமாகிச்
செவ்விதினமர்ந்துநாயேன்செய்திடும்பூசையெல்லாங்
கொவ்வைவாயுமையாளோடுங்கொண்டருள்கொழிக்கவேண்டு
நவ்விசேர்கரத்தாயென்றுநன்குடன்வேண்டிக்கொண்டே. (௫௪)

ஆசனமூர்த்திமூலம்பாத்யமாசமனமர்க்யந்
தேசுசேர்பூசையாற்றியபிடேகத்திரவியங்க
ளேசவஞ்சமிர்தமாட்டிநிறைசந்தக்குழம்பினோடு
வாசமஞ்சனங்களாட்டிமகிழுமொற்றாடைசாத்தி. (௫௫)

பரிவட்டம்பூணூல்சந்தம்பலபுட்பமாலைசாத்தி
விரிவுற்றதூபதீபம்விளங்கியசாம்பிராணித்
திரிபத்தோடொன்றநந்தந்திருமுன்னரேற்றிவைத்தே
புரிவுற்றசிறப்புநைவேதனங்கள்பற்பலபூரித்தே. (௫௬)

உற்றவாசமனமீந்தேயுறும்பரிவட்டங்கொண்டு
பற்றுகைவாய்துடைத்துப்பாகருந்தாம்பூலநல்கிச்
சொற்றிடுந்தூபதீபஞ்சோடசவுபசாரத்தோ
டற்றையிற்பூசைநம்பாலற்பிதமாகச்செய்தே. (௫௭)

ஐவகையபிடேகத்துமப்படியுபசாரங்கள்
செய்வகைசெய்துநைவேதனங்களுஞ்சிறக்கச்செய்து
மெய்வருமதற்குப்பின்னர்விளங்குகும்பாபிடேக
முய்வருமுருத்ரசூக்தமந்திரமுவந்தேயாட்டி. (௫௮)

இனையமாவபிடேகந்தானியைந்தருள்வீரென்றேத்தி
வனைதருந்திருவொற்றாடைபரிவட்டவகையுஞ்சாத்திப்
புனையும்வெண்பட்டிரண்டுபூணூலிரண்டினோடு
தனைநிகர்தருபவித்ரஞ்சந்தனக்கலவைசாத்தி. (௫௯)

மகுடமேமுதலாம்ரத்நாபரணத்தின்வகையுஞ்சாத்திப்
புகழ்பலபுட்பமாலைபொன்வில்வத்தளிர்கள்பொற்பூத்
திகழ்தருமாலைசாத்தித்தீபதூபங்கொடுத்தே
தகுபரமானந்தண்பாற்கடனுரையனசம்பானம். [௬௰]

ஆனதோரபூபவர்க்கமமுதமேநிகர்கோதும்பைப்
போனகங்கறியின்வர்க்கம்பொருவருங்கனியின்வர்க்கந்
தேனெய்சர்க்கரைப்பானீயந்திருந்தவேயமுதுசெய்வித்
தூனமில்பஞ்சவாசத்தாம்பூலமுதவிசெய்தே. (௬௧)

சாற்றுகர்ப்பூரநீராஞ்சனம்புட்பாஞ்சலியினோடு
மேற்றசோடசமதானவுபசாரத்தியைந்தபூசை
யாற்றவேபுரிந்திப்பூசையண்ணலங்கீகரித்தே
மாற்றிடாச்செல்வந்தாராயெனவரங்கேட்டபின்னர். (௬௨)

பாதமே முதற் கேசாந்தம் பரிந்தருச்சனை செயங்க
மேதகு பூசை செய்ய விண்ணவ ரசுரர் தங்க
டூதறு மகுடரத்நந் திகழ்பதநகங்களுக்கே
யாதபர்க் கருணநல்குந் தாள் விரலணிகளுக்கே. (௬௩)

அம்பொற்றாமரைகளோடு மெரிவிழி யருச்சித்தேத்துஞ்
செம்பொற்றண் மலர்க்குத் திங்கட் பந்தெனு முழந்தாளுக்கே
யெம்பெருமாட்டி காணுமுருவிற் கெழின் மின் போலும்
பைம்பொனினை ஞாண் சாத்தும் பகர்தரு மிடையினுக்கே. [௬௪]

விண்டுவே முதல தேவர் தோற்றி மெய்ப்பத்தியோடுங்
கண்டருச்சனை செய்லிங்கந் தனக்குமே காதல் கூர்ந்து
தொண்டெனப் பூசை செய்வேன் சுந்தரமைந்தர் தம்மை
யெண்டிசையவரும் போற்ற வினிதருள் புரியவென்றும். (௬௫)

மதிபுனற் சூழி யென்றம்பை மயங்கிய நாபி தன்னைச்
செறிவளையவடன் கொங்கை சேர்களபங் கடோய்ந்த
வெறிகமழாகந் தன்னை மெல்லியலவடன் செங்கை
பிறிவறத் தழுவுந் தோளைப் பிரியத்தாற் பூசிக்கின்றேன். (௬௬)

உமையுட னுடும்போதி னுறுவெயாரம் போல
வமைகளத் தன்னை மூன்று புவனங்கட் கபீட்டநல்கச்
சமைதரு வதனந் தன்னை ரசம்வாசநாக் குழக்குத்
தமையன் பினுடனே வில்வஞ் சாத்தியே பூசிக்கின்றேன். [௬௭]

மண்டல மூன்று போலுங் கண்களை மாணிக்கத்தின்
குண்டல மிலங்கு காதைக் குறைமதி நதியுஞ் சூடு
மண்டரும் பரவற் கெட்டாத் திருமுடி யதனை யன்பாற்
றெண்டனேன் மலர்கள் கொண்டு தொழுதருச்சனை செய்கின்றே(ன்.

எனவங்கத் தன்னை யிவ்வாறிசைத்தியற் றுறுப்பின் பூசை
மனமகிழ்ந்தாற்றிச் சிந்தை தவரந் தருவா யென்றேத்தி
யனகனைச் சூழ்ந்து வீழ்ந்து வணங்கியே யம்பொன் வேணிப்
பனகவாபரண சம்போ பவவற்கபகவ வென்றே. [௬௯]

பிறப்பெனும் பிணியைத் தீர்க்கும் பெருவயித்தியனே யில்லார்க்
கறப்பயன் போல நல்கு மம்பிகாபதியே யெல்லாத்
திறத்தையுந் தருவா யுன்றன் சேவடி பூசை செய்வே
னுறத்தகு முனைப் பூசித்தே யுயர்ந்துளார் முனிவர் தேவர். [௭௦]

அனையவுன் னிலிங்க பூசை யாற்றுவேற் கபீட்ட நல்கி
யெனை முழுதாள்வா யென்றே பிறிதருச்சனை யியற்றிக்

கனையிருண்முழுதுமேநங்கதைகவினுய்த்துயிலுநீத்துப்
புனையுருத்திராக்கம்பூதிபுனைமின்னார்நடமுஞ்செய்ய. [எக]

உண்டிநீத்திரவுநீக்கிப்பானுவினுதயந்தன்னில்
வெண்டிலமெய்யிற்பூசிவியன்புனலாடிநித்தங்
கொண்டிடுங்கருமமாற்றிக்குறைவறும்பொருள்கள்கொண்டே
யெண்டருமிலிங்கபூசையினிதினிலியற்றிப்பின்னர். [எஉ]

உச்சியிற்பூசைசெய்தவ்விலிங்கேசன்முன்னருன்னை
மெச்சியகணேசன்றன்னைவியன்பொன்விக்கிரகஞ்செய்தே
நச்சியபூசையாற்றியபூபத்தின்வகைநைவேத்ய
முச்சிதமுடனெல்லோர்க்குமுதவியேவணங்கிப்பின்னர். [எங]

நலத்தகுகுடும்பத்தோடுநண்ணிடுநம்பத்தர்க்கே
நிலத்துறுமாடம்பத்தாமயுதத்தினிறையினின்ற
பலத்துறுமப்பொனன்றிக்கிடைத்தவைபரிவினல்கித்
தலத்துறுவெள்ளிபொன்வேய்தமிலொன்றின்முறஞ்சமைத்தே. [ ]

அன்னதிற்கனியின்வர்க்கமபூபத்தின்வகைநிறைத்தே
பன்னுமந்நடுவிலிங்கம்பானிறப்பட்டுச்சாத்தி
யுன்னுதக்கணையினோடுதாம்பூலத்துடனமைத்தே
யென்னையாளம்பிகேசவிற்றினக்கிசைந்ததானம். (எரு)

எனவுபாயனதானத்தைக்கொண்டெனக்கீட்டமெல்லா
மனகனைதருதியென்றம்மந்திரங்கொண்டேயீந்த
பினநமக்கடியார்தம்மையறுசுவையோடும்பொட்டின்
முனமனமருத்திப்பின்னர்பாரணமுடித்தல்வேண்டும். (எசு)

இப்படியுமையேசம்புவிரதமாமிதனைச்செய்யின்
மைப்படுகண்ணார்புத்ரபவுத்திரர்வாய்க்கப்பெற்றே
செப்பியவிதவ்வைக்கோலஞ்சேர்ந்திடார்பழியுஞ்சேரா
ரொப்பரும்விரதமில்லாவளங்களுமுதவுமீதே. (எஎ)

எனச்சிவனிமயமங்கைக்கிவ்விரதத்தின்மேன்மை
யனைத்துமேசொலமகிழ்ந்தாளம்புயத்தணங்கேகேளா
யுனத்தகுவிரதஞ்சோமவாரத்தினுடனேவந்தான்
மனத்தின்மங்களங்கணல்குஞ்சிவயோகமாகுமாதோ. (எஅ)

சடிமலரணங்கேகன்னிமாதமுமிதுவேகண்டாய்
படிபுகழ்விரதநாளுநானையேபலித்ததன்றே
சடிலநங்கபிலவீசர்சந்நிதிதன்னின்மேவி
முடிவிலாப்பொருள்கள்யாவுங்கலுழனேமுறையினல்க. (எகூ]

அமரர்கண்மடவாரோடுமெரியவிவ்விரதமாற்றிற்
சமரிடைத்துஞ்சுமாயன்றமரொடும்வருவனன்றே

கமலைபெயிதுவென்வார்த்தைகடைப்பிடித்தருடிகண்டாய்
சமையுமிங்கிதனுக்கீசனடிமலர்சாட்சிதானே. [அ௦]

இவ்விரதத்தையாற்றியார்பெற்றாரென்றியாயிற்
செவ்வியதிருவேகேட்டிசிவன்றிரிபுரத்தைவெல்வா
னவ்வயினேகும்போதிலமலையுத்தழுவிக்கொண்டே
நவ்விபோல்விழியாய்கேட்டியென்னவேநவில்கின்றானால். [அக]

தானவர்க்கதிபர்முப்புரத்தவர்சமரந்தன்னில்
வானவர்தம்மையெல்லாம்வதைத்திடமனத்திற்கொண்டா
ரானவர்படிவமொருவருவரைபோலுந்தீப்போன்
மேனிலையுலகெலாஞ்செல்வெற்பெனுமதில்கண்மூன்றால். [அஉ]

வீரதாரக்கனேடுமகராக்கன்வித்துன்மாலி
யோவர்மூவராகும்பெருகுமூன்றுலகும்வென்றார்
காரணத்திதேவரவர்களடக்கத்தாலே
சீரணிகிளைகளோடுந்திகாந்தஞ்சென்றொளித்தாரன்றே. [அ௩]

அசுரரங்கவரைவெல்வதொருவரின்றாகையாலே
யிசைதரும்யாமேபோகியார்ப்பதற்கென்றுநின்றோ
னசைதரும்பொன்னேயுன்றோடேகிடினன்மையன்றால்
வசைவருங்கண்டாய்மைந்தர்ப்புரந்தவண்வதிதியன்றே. [அச]

கன்னியேயுனக்குநான்முன்கழறியகன்னித்திங்க
டன்னின்மங்களங்கொள்குஞ்சாம்பவவிரதந்தன்னை
யின்னிலைசோமவின்றியியற்றியேயுறைதியாயின்
மன்னியவசுரர்தம்மைவென்றியாம்வருதுமன்றே. [அரு]

இருடிகளநேகர்முன்னரிவர்களாலிறந்துளார்க
டெருடருஞ்சாலிபாதிமுனிவர்தந்தேவிமார்கள்
மருடருமனத்திநோடுமழுதனர்வருந்தியுற்றா
ரருடருநந்திகண்டானவர்துயரறிந்துசொல்வான். [அசு]

அருந்ததிமுதலாம்போகர்பன்னிமீரேழன்மினீவிர்
வருந்துறுகைமையெய்தாவண்ணமோர்விரதஞ்சொல்கேன்
றிருந்தியநன்னிமாதத்திரிதிகைவிரதந்தனைப்
பொருந்திடவனுட்டித்தீரேற்புனைகலன்றழைக்குந்தானே. [அஎ]

அரும்பவம்போக்குமிந்தவிரதமாதரித்துளீரேல்
விரும்புறுகேள்வர்வீந்தோர்மெய்யுயிர்பெற்றுமீள்வார்
வரும்பயன்பெறலாமென்றுநந்திசொல்வாய்மைகேட்டே
சுரும்பிமிர்குழலார்நோற்றார்துணைவர்வந்துற்றாரன்றே. [அஅ]

சார்ந்தருண்முனிவர்தம்மைப்பன்னியர்தாங்கள்கண்டே
கூர்த்தமெய்ப்புளகரும்பக்கூர்விழிபனிப்பமுன்போய்ச்

MAHAMAHOPADHYAYA

சேர்ந்தவர்தாளில்வீழ்ந்தார்திருத்தகுமுனிவோரெல்லாம்
வார்ந்தவோதியரைநோக்கிமகிழ்ந்தனர்புகல்கின்றாரே. [௮௯]

ஈனராமவுணர்நுங்களிறந்தவர்வயிற்றினுற்றே
மானநும்விரதந்தானேயாவிபெற்றிவண்வந்தோமான்
ஞானமார்விரதம்யாதுநவின்றுளீரியாவரென்னத்
தூனலமுடையமாதர்வணங்கினர்சொல்லுகின்றார். (௯0)

சங்கரன்விரதநன்னிற்சாம்பவவிரதநந்தி
யிங்கெமக்குபதேசித்தான்யாமிருந்தினிதுநோற்றே
மங்கதன்பயனைப்பெற்றேமென்றலுமருந்தவத்தோர்
பொங்கியமகிழ்ச்சியுற்றார்பொருந்துமாச்சிரமஞ்சார்ந்தார். (௯௧)

பன்னியர்விரதமாற்றப்பகருமுனிவரெல்லா
முன்னருந்தவங்கள்செய்தேயுற்றனருமையேயீயு
மின்னதோர்விரதமாற்றியிருத்தியென்றேவித்திங்கட்
சென்னியானமர்க்குச்சென்றான்றேவியப்படிசெய்தாளால். (௯௨)

அரிவையவ்விரதநோற்றபடகிலையாகிலநாதன்
றிரிபுரவிசயஞ்செய்துதேவியைவந்துசேர்ந்தான்
பரிபுரப்பதத்தாளையன்பதம்பணிந்துவகைகூர்ந்தாள்
புரியுமிவ்விரதமொப்பதிலையெனப்புகழ்ந்துற்றாளால். [௯௩]

ஆகையாற்றிருவேண்டுமனுட்டியென்றவடன்னோடு
மோகையான்முனிவன்சொன்னவுண்மையாற்புரிந்தானன்றே
வாகையான்முதலதேவர்வந்திலாவணங்கண்டே
தோகையாடியங்கொண்டுகபிலனைவணங்கிச்சொல்வாள். (௯௪)

விதிப்படியையசொல்விரதமீதனுட்டித்தேன்யான்
மதித்திடுந்தேவரின்னமவர்திடக்கண்டிலேனும்
கதித்தவமுனிவேயென்னகாரணமினியென்செயவேனா
றுதித்திடுதவருதேன்றாவென்றனடியரங்கூர்வாள். [௯௫]

அன்னவள்புகன்றயாற்றாந்தத்துவமறிந்தநீதி
நன்னயக்கபிலன்கேட்டுநவில்கின்றானினியாதே
சொன்னவைதவருதிப்போதுறுகின்றார்துயாஞ்சேரே.
லென்னும்போதத்திற்றேவருந்துமியிரட்டல்கோ ன்.	[௯௬]

ஆங்கெழுமுழக்கந்தேவவணங்கினரோடுஞ்செய்ய
பூங்கமலப்பெண்கேட்டாள்புள்ளரசோடுஞ்சொல்வீ
ளீங்கிதாரரவமென்றேபார்த்தியென்றியம்பலோடும்
பாங்குறுபதுமைதன்னைக்கபிலனைப்பணிந்துபோனான். [௯௭]

சென்றுதூரத்திற்கண்டான்றிரும்பினான்மகிழ்ச்சியோடு
மன்றுதான்றேவரெல்லார்வருகின்றார்களிப்பினென்று

மன்றலார்கமலப்பாவைமனமகிழ்கூரச்சொன்னான்
றுன்றினள்கபிலன்பாதந்தொழுதனடுத்துச்சொல்வாள். [௯௮]

அருந்தவமுனிவநீசொல்விரதத்தையாற்றறன்னாற்
றிருந்தியசெல்வம்பெற்றேனவ்விசுவாசந்தீர்ந்தேன்
மருந்தினுமினியபெம்மான்பூசையின்வரத்தினாலே
பொருந்தியதேவருய்ந்துபுகுகின்றார்புகுகின்றால். (௯௯)

திரிதிகைவிரதத்தீற்றசிவார்ச்சனைத்திறம்போலொன்றை
யறிகிலேனறிகிலேனானறிகிலேனறிகிலேனான்
மறிதருகரத்தான்பூசைவாய்த்தசஞ்சீவியாகிப்
பிறிதருதேவரெல்லாம்பிழைத்திவண்வருகின்றாரே. (௧௦௦)

ஐயவிவ்விரதமென்மையதிசயமதிசயந்தா
னுய்யவேயனுட்டித்தோர்களுறுபலத்தளவையுண்டோ
மைபறிதனலாவிமாண்டுளோர்வந்தாரென்றே
செய்யவள்புகன்றுநின்றாடேவர்வந்துற்றாரன்றே. [௧௦௧]

வந்தனர்கபிலனாதன்மலரடியலராற்பூசித்
தெந்தையேயுன்னாலுய்ந்தோமென்றனரிறைஞ்சிப்பின்னர்
சிந்தைசெய்ந்நீறுகண்டிதிகழ்திருமேனிப்பாச
பந்தனையகன்றஞானக்கபிலனைப்பணிந்துசொல்வார். (௧௦௨)

சம்புபத்தருக்குமேலாந்தலைவனைவணங்குகின்றோம்
வம்பவிழ்பூதிகண்டிவனைந்துளாய்வணங்குகின்றோ
மும்பருக்கும்பரானவொருவாததுவந்தேர்ந்துற்ற
தம்பிரானுன்னைப்போல்வார்தரணியிற்கண்டிலோமே. [௧௦௩]

யாங்களுய்ந்திடுதற்கேற்றவினியதோர்விரதமெங்கள்
பூங்குழன்மடவாராற்றப்புரிந்தெமையுய்யக்கொண்டா
யோங்குறுமிதனாற்போனவுயிருடனுடலும்பெற்றோந்
தீங்கிலாவிதனைச்சேடன்செப்பிடக்கேட்டுளோமே. (௧௦௪)

எந்தவாறுய்ந்தோம்யாமென்றியாரும்யோசனைகள்செய்தோ
மந்தணாநின்னான்மாதரரியநல்விரதமாற்ற
வந்தவாறிதுவாமெனவுமதித்துளோங்காலற்காய்ந்த
தந்தையார்பூசையாற்றிற்சமனையும்வெல்லலாமே. [௧௦௫]

இதந்தருங்கருணைஞானக்கபிலனேயாங்கள்சேரும்
பதங்களையடையுமாறுமுண்டுகொல்பகர்வாயென்ற
திதம்பெறுபிரமனாதிதேவர்க்குச்செப்புகின்றான்
சுதந்தரன்சிவன்றன்பூசைமகிமையார்சொல்வரன்றே. (௧௦௬)

அன்னதாற்கருணைவெள்ளத்தண்ணலைப்பூசையாற்றி
மன்னுயிர்சின்னாளிங்கேவள்ளறான்மனத்திலுன்னி

வின்னிலத்துயர்ந்திடாதாரிலையெனவிண்டுவாதி
பொன்னுலகத்தோர்பூவைமாரொடும்பூசித்தூற்றார். [௧௦௭

இருந்தனர்சின்னாள்செல்லக்கபிலனையிறைஞ்சிச்சொல்வார்
பெருந்திறலசுரனானபிரசண்டனகரமங்கிப்
பொருஞ்சுவாலையினாற்சூழ்பார்புகுந்துயிரிழந்துபோனே
மருந்தவவிரதந்தன்னாலாவிவந்தெய்தினேமால். (௧௦௮)

இனியவன்மதுரைகபோயாமுய்வதென்றெனவினாவும்
பணிவருநயனவிண்ணோர்ப்பார்த்தனன்கபிலன்சொல்வா
னினியவனாற்றல்சேனைநாலைக்கோரெல்லையுண்டோ
தனிமுதல்சிவன்றனன்பனவனையார்சமரில்வெல்வார். (௧௦௯]

கனவினுஞ்சிவன்றனன்பர்க்கலந்தரன்பூசைசெய்யு
மனமுடையவன்றனக்கேவர்த்திக்கும்பலங்கள்கண்டீ
ரனையவன்றன்னையாராற்றடைபண்ணலாகுமன்ன
முனைவனைவெல்லவல்லார்மூவுலகத்துமுண்டோ. [௧௧௦]

இப்பிரசண்டன்முன்னர்க்குலனுமிருடிகண்டீர்
தப்பிலாவிலிங்கங்கோடிதான்றினம்பூசைசெய்வான்
செப்பும்வெண்கஞ்சம்வில்வஞ்செண்பகமறுகுதும்பை
யொப்பில்பன்மலர்கள்கொண்டேயுறுதியிலருச்சிப்பானால். [௧௧௧]

ஆலயங்கோடிசெய்தேயிலிங்கமுமமையச்செய்தான்
சீலமாஞ்சைவாசாரச்சிவவித்தைபத்திசேர்ந்தோர்
கோலுறுஞ்சைவசீலர்கோடியரேவல்செய்வோ
ரேலுமங்கவனைக்கண்டேநடுக்கமதெய்தினீரால். (௧௧௨)

தாங்குறுசிவலின்னங்கடாமின்றியதிகளாகிப்
பாங்குறுமயன்பாற்போகிப்பருவரலிழைத்துளீரா
லீங்கிவர்தேவரென்றேயறிந்தனனிடர்கள்செய்வான். (௧௧௩)

மாற்றருங்கோபமுற்றேவளர்ந்தனனவன்றன்மெய்யை
யர்ற்றவும்பார்க்கவுங்கட்கச்சமதாயதனறே
கூற்றமும்வெருவுமன்னானசுரனுங்கொள்கையல்ல
னேற்றமாஞ்சிவன்றன்பூசையிருடியங்கவனாற்கண்டீர். (௧௧௪)

அவன்றபோபலத்தினாலேயக்கினிசிகரதானு
னுவன்றனக்குங்கடம்மேற்கோபமுமொழிவின்றாமா
லிவன்மனைமைந்தரோடுமிருங்கிளையோடுநாளுஞ்
சிவன்மகிழ்பூசைசெய்வான்சேனையுமவன்போனேசர். (௧௧௫]

செய்தவன்மேயதூயாச்சிரமம்பட்டினமதான
கொய்தவன்விரித்திருந்தகுலைசயுங்கிக்கோட்டையான

வெய்தவனுங்கடம்மையவமானம்விளைத்தாலன்றி
நொய்தவன்கோபமாறானதுவுநுந்தம்மைச்செய்தான். (௧௧௬).

இன்றீங்கிமாலைப்போதினிறையவன்கயிலைதன்னிற்
சென்றங்கட்கணங்களோடுமொருவனாய்ச்செறிவன்கண்டீர்
கொன்றைவேணியன்றன்பூசைகுறித்துமுளான்கயிலையல்லான்
மன்றநும்பதங்கடம்மைத்திரணமாமதித்திடானே. (௧௧௭)

உங்களையவமானஞ்செய்தொழிந்தனன்கோபமன்னான்
பொங்கிருங்கயிலைசேர்வனெனமுனிபுகலும்போதி
னங்கணாகாசவாணியறைந்ததுபிரசண்டன்றான்
றங்கியகிளைகளோடுஞ்சிவபதஞ்சார்ந்தானென்றே. (௧௧௮)

ஆரணனாதியானவமரர்கேட்டுளமகிழ்ந்தார்
காரணர்கபிலநாதர்கமலத்தாளருச்சித்தேத்தி
நாரணன்முதலோர்சொல்வார்முனிவனைநோக்கிநாதன்
பூரணவிரதந்தன்னாற்பொலிந்துளோமெனப்புகழ்ந்தார். (௧௧௯)

யாமுனதருளினாலேயெங்கடம்பதங்களெய்தப்
போமுறைபெற்றோமென்றேபுகழ்ந்தனர்விடையுங்கொண்டார்
தாமுறையுலகந்தன்னிற்சார்ந்தனர்கிளைகளோடு
மாமுதல்பூசைசெய்தேமன்னிவீற்றிருந்தாரன்றே. (௧௨௦)

அன்னதாற்பரமன்பூசையாற்றினோர்க்கணங்கேசெல்வ
மென்னதானெய்திடாதாலிச்சிவவிரதமேன்மை
தன்னையாங்கண்டோந்தேவகணங்களுந்தாங்கண்டாராற்
சென்னிவேணியனைத்தானேதேவாதிதேவனென்றும் (௧௨௧)

அகிலகாரணனுங்கர்த்தனவனெனுந்தாதையென்றும்
புகலரும்புரங்கள்செற்றோன்சுராசுரர்போற்றுந்தேவ
னகிலநாயகிதன்மோகநாயகனென்றும்வேத
மகமுனிவோர்கள்சொல்வார்மறைகளுமறையுமன்றே. [௧௨௨]

அவனதுமகிமைதன்னையறிந்தினிதுரைக்கமூன்று
புவனத்துமொருவருண்டோபொன்னடிப்பூசைசெய்வோன்
கவலைகூரவமிருத்துக்கடப்பவன்மூடனெனும்
பவனவன்றனையேபூசைசெயின்வாணிபதியாமன்றே. (௧௨௩)

எம்பிரான்மகேசன்சம்புவல்லபம்யாவர்தேர்வா
ரம்பைதன்காந்தன்பூசையாற்றினோனிந்திராணி
நம்புறும்பதியேயாவன்கமலைநாயகனுமாவன்
கம்பமில்பானுவங்கிகலாநிதியோனுமாவன். [௧௨௪]

பத்தர்க்குத்தருவதாவோன்பலதேவர்பரவுமீசன்
முத்தனேபதியலான்மற்றிலையெனமொழியும்வேத

மத்தன்றனுமம்பாவவடவிக்கோரங்கியாமாற்
சத்திபரும்பியாஞ்செஞ்சடாமுடிச்சம்புவின்னை. [கஉரு]

வாசுகிமுதலநாகமாமுடிமாணிக்கத்தின்
றேசுசேர்குண்டலத்தின்றிகழ்தருகாதினானை
யீசனைத்திருவின்கேள்வனிறைஞ்சியபதத்தினனைத்
தாசர்களிதயஞானத்தாமரையுறைகுவோனை. [கஉசு]

வித்தகன்றன்னையம்பைவிருப்பனைப்பிரதோடத்திற்
பத்தியாயருச்சிப்பேணப்படிநீயும்புரிதியென்றே
யுத்தமப்பன்னிபாகுஞ்சுகவாணியுவந்துகேட்பச்
சத்திபவிரதனுருந்தாபதன்புகன்றனன்றே. [கஉஎ]

நாற்பதாவதுசாம்பவவிரதச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கஎ௦௩.

நாற்பத்தோராவது.

சாம்பவவிரதவுற்பத்தியாபனச்சருக்கம்.

வேறு.

பண்ணுலவுமொழிப்பூவைபிமயப்பாவைபாகத்தானுகத்நாபரணம்பூண்டான்,விண்ணெருடுமனையெருடும்பாதலமும்போற்றும்விரைமலர்ச்செஞ்சேவடியான்வேணிநாத,னெண்ணுமிருவினையுடன்மும்மலமுநீக்கியிகபகாந்தந்தெனையாளுமீசனேசன், கண்ணுதலானடியரையஞ்சலிசெயாக்கைகழிபாக்கையொழியாக்கைகாக்கைதானே. [க]

விரையரசன்புதல்வரான்சைவன்சத்யவிரதன்சொல்சுகவாணிவிரும்பிக்கேட்டே, வாரமுடனேவணங்கிச்சொல்வாளம்பைமலையரசன்மகளாகவந்வாறு,மாரணியங்கவள்பரமசிவன்றன்றேவியானதுவுமவள்குழந்தையாய்வளர்க்கத், தாரணிதாங்கியவிமயவேந்தன்செய்ததவமுமென்கொலெனத்தலைவன்சாற்றுகின்றான். [உ]

ஆதிதனிற்பரமசிவனுலகந்தாங்கவரியகுலவரைகளுடனரசனுகச்சோதிபெறுமிமயவரைதனையுண்டாக்கச்சூழ்ந்தபுவிதாங்கினனுலவன்றனக்கே, மேதகையவரையுருவினுடனேதேவவியனுருவுமுளவவன்றனுதாரத்தாற், பூதலந்தாங்கியகூர்மன்றனக்கேபாரம்பூண்பதிலைவரைவேந்தில். [ங]

இறைவனுலமைத்தவாலயமொன்றுண்டாலிரத்நமயமாமிலிங்கமங்கொன்றேயு, மறைதருமவ்வாலயமேகாந்தமாகவதிந்ததனுலுமையுட

னவ்விலிங்கந்தன்னி, லுறைகுவனெம்பெருமானும்பர்நாதனுயர்வரை
நாயகனவனைநாள்கடோறு, மறைதருங்கூவிளங்கமலமுதலவாபவானப
லமலர்களுங்கொண்டருச்சிப்பானல். (௪)

பெருகியனைவேத்தியத்தோடுபசாரங்கள்பிதக்கணஞ்செய்திறை
ஞ்சுதலானந்தக்கூத்து, முரிமையொடும்புரிந்துநித்தமிஃவாறுற்றுமொ
ருநாண்மாலைப்பூசையமைத்தபின்ன, ரருமைபெறுமவ்விலிங்கந்தன்னி
ல்வெற்பினரசனாதரவுசெயுமன்புநோக்கிப், பரிவினுமைதனைப்பார்க்கு
ம்பிரியனனபரமனுன்பிரசன்னமாயினனல். [௫]

வரையரையன்மகிழ்ந்துதரிசித்தான்கூடவந்திடுந்தேவியைச்சிறுபெ
ண்ணுகக்கண்டான், பரைதனையேகுழந்தைப்பெண்ணுகக்கண்டபருவ
னைவேந்தனைச்சிவன்றன்பார்த்துச்சொல்வா, னுரையிவடானெவ்வுரு
விற்கண்டாயென்னவோதுவான்மனத்தினெடுவாக்கிற்கெட்டா, விரை
யிதழிபாயுனதுலீலையாலிம்மெல்லியடன்குழவியுருமேவினளால். (௬)

மணமில்லாக்கன்னியும்போற்காணுகின்றேன்மற்றிவளையொருநா
ளுங்கண்டேனல்லேன், மணவாத்தன்னியபானம்விரும்புகின்றுட்கை
தாய்தமைக்காணேன்வளருங்காலங், குணமாகவளர்ப்பவர்யார்சொல்வா
யென்னக்கொன்றைவேணியன்பகர்வான்குன்றவேந்தே, புணர்வாகுமி
வ்விலிங்கம்பூசையின்றிப்பொருந்தியதிப்போதுமகாபூசைசெய்தாய். ()

ஈங்கிதனான்மகிழ்ந்துபிரசன்னமானேமிவ்விடைத்தேவர்கள்சித்த
ரெய்தக்கூடா, தோங்குமிந்தவிலிங்கநீபூமிதாங்கற்குற்றசாதனமாகுமள
வில்லாத, பாங்குபெறுதவம்புரிந்தாயதனனந்தம்படிவங்காணுறப்பெற்
றுப்பாக்யவானீ, பூங்குழலீங்கிவடனைச்சீராட்டிநன்றாய்ப்போற்றிவளர்
த்திடுபூசைப்பலனிதாமே. (அ)

இவளைநீவணக்கத்தினெடுமுன்றனில்லிடைக்கொண்டேகுதியாலிவ
ளைப்பார்க்க, வுவகையினும்வருமளவும்புரப்பாயென்றேயுற்றவாலையைக்
காட்டிலிங்கத்தூடு, சிவபிரான்மறைந்தனனல்வெற்பின்வேந்தன்செ
ல்விதிருவுருவினைப்பார்த்ததிசயித்தே, தவமுறுமென்னன்னையிவடன்
னைப்போற்றுந்தன்மையெவ்வாறெனமேனைதனைச்சிந்தித்தான். (௯)

சிந்தனைசெய்திடும்போதின்மேனைவந்தாள்செல்விதிருவுருவினைப்
பார்த்திறும்பூதெய்தி, யிந்தவிளங்குழவிமின்னாள்யாவணீர்தாமிவடனை
யெய்திடத்தவங்கள்யாவைசெய்தீர், சுந்தரியிங்கிவடன்னைக் காணுந்
தோறுஞ்சொல்லரியவானந்தமுறுகின்றேனல், வந்தபரிசென்னெனவே
வினவலோடுவரையரையனிகழ்ந்தபடிவகுத்தானன்றே. (௧௦)

மலையரையன்றிருத்தேவிமேனைகேட்டேமனத்தினிலற்புதமெய்தி
யிந்தப்பேதை,யுலைவில்சிவசங்கற்பமதனான்வந்தவுலககலியாணியிவளெ

ன்றுவந்தா, டலைமைபெறுமைவகைசதுர்த்துமிகளார்ப்பச்சாம்பவியைக் கொண்டுமனைபுகுந்தார்கண்ட, கலைமடந்தைதிருமடந்தைமுதலாந்தேவகன்னியர்கள்வணங்கவந்துநிறைந்தாரன்றே. [௧௧]

சிட்டர்களாமிருடிகடந்தேவிமாருந்தேவமாதருங்கூடிச்சிவன்றேவிக்கே, மட்டவிழுமலர்கொட்டருச்சனைகள்செய்தார்மலையரசன்கண்டுமனமகிழ்ந்தான்மேனை, பொட்டெழுதிமையெழுதிக்குழந்தைப்பூண்கள்பூட்டிமஞ்சனநீராட்டியூட்டித், தொட்டிலின்மேல்வைக்கவுலகீன்றதாயைச்சுரர்மாதர்தாலாட்டத்தொடங்கினாரால். (௧௨]

தாரணியையீன்றவளேதாலோதாலோசயிலராசன்மகளேதாலோ தாலோ, வாரணிபுமுலைவிசாலாட்சியேகாமாட்சிமீனாட்சியேதாலோதாலோ, பூரணியேசங்கரியேதாலோதாலோ பூவைமொழிப்பாவையேதாலோதாலோ, வாரணியேயம்பிகையேயுமையேதாலோவகிலகலியாணியேதாலோலோ. (௧௩)

எனப்பலவும்புகழ்ந்துதாலாட்டினார்களியயவேந்துடனிமையோரெவருங்கேட்டே, மனப்பரிவுமிகப்புரிந்தாரன்றுதொட்டுவானவர்மாதரும்வரையேவாசமானார், தினப்படிவந்தனைசெய்வாரெவருங்கண்டுசிந்தைகளிகூரவேசரற்காலத்துப், பணப்பெருசுக்கிலபக்கப்பிறையேபோலப்பரைவளர்ந்தாளழகுபெறும்படிவங்கொண்டாள். (௧௪]

தேவிதனைத்தாயானமேனையோடுந்தேவமடமாதருஞ்சீராட்டநாளு, பூவியலுந்திருமேனிபொலியச்சோதிபுதிதுபுதிதெனவளர்ந்தபுதுமைநோக்கி, யாவியெனத்தாய்தந்தைகண்டேநாளுமன்புவளர்ந்திடமகிழ்ந்தாரரசனோக்கி, காவியங்கண்மனைவிதனையிவளையார்க்குக்கலியாணம்புரிதுமெனக்கவலைகூர்வான். [௧௫)

இவளுடையநடையுடைபாவனைகளெல்லா மிவ்வுலகமாதரைப்போலியல்வதன்றே, யவ்விதனிலிவண்மணந்தான்பெறவேவல்லோனார்கொலோபாக்கியவானறிகிலேனே, சிவனவனேயாகுமவனெங்கேயான்றான்றேடியேகொடுப்பதெங்கேயென்றுசொல்லிக், கவலையெனுங்கடற்குள்வீழ்ந்தழுந்தியுண்டிகண்ணுறக்கமின்றியேகலங்குற்றானால். (௧௬)

சறுவகலிபாணியாய்ச்சிவன்றன்பாகந்தனிலுறும்பவானிநிசரூபம்விட்டுப், பறுவதராசன்மனையின்வாலையாகிப்பயில்பவணம்பரன்பூசைப்பத்திதன்னா, லுறுவிரதத்தாலிறையையடைவேனென்றேயுறுதிபெறும்புத்திதனையுடையளாகி, மறுவிலன்புபெறுவிசயைசயையென்றோதுமனத்தினியதோழியரோடுரைசெய்வாளால். (௧௭)

மங்கைமீர்கங்கைநதிதீரந்தன்னில்வாசமுறவேண்டுநான்வருவீரென்ன, வங்கவர்தாந்தடைபுகலக்கேட்கில்லாளத்தனுமன்னையுமறுக்கில்லாளாகிச், செங்கனகச்சிவிகையின்மேலிவர்ந்துசென்றாள்செழுங்கம

லம்பூத்ததிரிபதகைக்கூலர், தங்கிளுளங்கிரவினிருடிமாதர்சாம்பவநல்விரதமநுட்டிப்பானுற்றார். (௧௯)

அண்டனளங்கவர்கடமையுமையாண்முன்னர்க்கடவுடிரிபுரவிசயன்றன்புகன்ற, வெண்டருநற்றிரிதிகையின்விரதந்தன்னை யிதயத்தி லெண்ணினுள்சேடியான, பண்டருமென்மொழிவிசயைதன்னைக்கூவிப்பன்னியரிங்கியர்புரியுநோன்பிதென்னே, கொண்டனரங்கவர்கள் பாற்சென்றுதேர்ந்துகூறெனவேவணங்கிவிடைகொண்டுபோனாள். [ ]

ஆங்கவர்பாற்சென்றுதவப்பன்னிமீர்காளநுட்டிப்பதெவ்விரதமென்றுகேட்டா, ளோங்குசவுபாக்கியசம்பத்துநல்குமுறுங்கைம்மைதவிர்த்திடுநல்விரதமீதாற், பாங்குடனேபரமசிவனுமைக்குமுன்னம்பகர்ந்தாலரனருளும்பரிசில்வேண்டி, யாங்களுமாதரிக்கின்றேங்கன்னிமாதரிவைசெயினற்கணவனலமெய்துவாரே. (௨௦)

சவுந்தரியவீரராமைந்தர்தம்மைத்தந்திவெர்கினைத்தவையாவையுமேசேர்வ, ருவந்திடுமைந்தருக்காமதேனுசிந்தாமணியெனவீதுதவுமெந்தப்பொருளுமென்ன, நியந்தவிர்வேதங்களெல்லாநிகழ்த்துமென்றுநிராகாரமுற்றிரவின்மணலாற்செய்த, சிவந்தருநல்லிலிங்கபூசனைதானன்பிற்செய்யிலெல்லாச்சித்திகளுஞ்சேருமென்றார். (௨௧]

அவர்கள்புகல்வார்த்தையெல்லாம்விசயைகேட்டேயம்பிகைபால்வந்திறைஞ்சியறைவாளம்மா, சிவனுகந்ததிரிதிகாவிரதந்தன்னைத்திருந்திழைபாரநுட்டிக்கமண்டபங்க, ணவமுறவேபுதுக்கியெங்கும்விதானிக்கின்றார்நாயகிநீயும்பொருள்கள்யாவுங்கொண்டே, கவலுறாதிநதவிரதத்தையன்பாற்கடவுளருள்பெறப்புரியக்கடவாயென்பாள். (௨௨)

நல்லவுரைசொல்லினையானங்கையின்றுநாமுமிந்தவிரதமநுட்டிக்கவேண்டும், வல்லமைசேர்நந்தாதையருகுசென்றுமற்றிதற்கு வேண்டுபொருள்கொணர்வாயென்றாள், வில்லனையபூருவினுள்சென்றுசொல்லவிரைந்துவரையரசன்விரதத்திற்கேய்ந்த, சொல்லருநற்பொருள்யாவுங்கொண்டுவந்தான்றூயதொருமண்டபமும்புதுக்கினனே [௨௩]

தந்தைதாயுடனுமையாள்விரதமாற்றிச்சங்கரனைப்பூசைசெய்தேயிரவுமுற்றுஞ், சிந்தைதனிற்றியானமுடனுபவாசத்தாற்றிருவிழிதுஞ்சுதலின்றியிருந்தாள்பின்னுள், வந்தவுடனருணவுதயத்திற்கங்கைமாநதிநீராடிநித்யபூசையாற்றி, முந்துமன்பின்விரதபூசனையுஞ்செய்தேமொழிதருபொன்வெள்ளிமுறங்கோடிதம்மின். [௨௪]

பல்வகையபூபங்கணிறைத்தநேகம்பசும்பொன்றக்கணைகடாம்பூலத்தோடு, கல்விபயிலிருடிகடம்பன்னிமார்கள்கைக்கொடுத்தேயனதானங்கருதிச்செய்து, நல்விரதந்தனைமுடித்துச்சிவார்ப்பணஞ்செய்நலம்பெற்றுத்தந்தையொடுந்தாயினேடுஞ், செல்வமிகுமாளிகையில்வந்துசேர்ந்தாடிருந்துதுயிறனின்மேனைகனவுகண்டாள். [௨௫]

கண்டகனவின்றிறந்தன்கணவனோடுங்கழறுகின்றனளம்புதல்விகாமற்காய்ந்த, புண்டரஞ்சேர்நுதல்விழியான்மடியின்மேவிப்புல்லுதல்கண்டேன்றுயில்போயெழுந்தேனென்று, தொண்டைவாய்மனைமேனைபுகன்றவாய்மைமதுங்கவரைவேந்தனறிந்துவகைசூழ்ந்தான், முண்டகமென்முகத்தாள்பின்மகட்குஞ்சொன்னாண்முத்தநகை நாணமுடன்முறுவல்பூத்தாள். [௨௬]

அந்தவமயந்தனின்மங்களசொரூபத்தன், ணலாரளவில்கணநாதரோடுஞ், சந்த்ரவட்டக்குடைகொடிசாமரங்களோடு சகலவரிசைகடழைப்பச்சார்ந்தார்கண்டு, சிந்தைமகிழ்வரையரசனெதிர்கொண்டோடித்திருவடியின்வணங்கினனுப்ஸ்தேனென்றுன், முந்துதன்மாளிகையைமணவறைபதாக்கிமுறைமையாலெழுந்தருளச்செய்தானன்றே. [௨௭]

வந்ததனையுமைவினவியிதுவேநல்லமணஞ்செய்யுமமயமென்றுமகிழ்ச்சிகூர்ந்தாள், சிந்தைகளித்திடுமிமவான்மனையிற்சேர்ந்தசிவன்றனைச்சிங்காதனத்தின்மிசையேவைத்துச், சந்தனகுங்குமகளபசுகந்தமாலைதண்பட்டாடைகள்சறுவாபரணவர்க்க, முந்துமதுவர்க்கநைவேதனமேயாதிமுறைமையிற்பூசனைபுரிந்தான்முறைமையாக [௨௮]

வரையரசன்மனைமேனைதன்மகட்கேமணக்கோலம்புரிந்திடமஞ்சனநீராட்டி, விரையுறுநன்சலவையொடுகலவைசேர்த்துவெண்பட்டுநவமணிப்பூண்விளங்கச்சாத்தி, யுரைபெறுநற்பூசைபுரிந்துவந்து நோக்கியோதுகின்றனரைக்கடங்காமகிமைபூண்ட, வரையரவருன்னைமணம்புணரவந்தாரளவற்றபாக்கியநீபெற்றாயன்றே. [௨௯]

அவர்தமக்கேயனுகூலவதியாய்நாளுமமர்ந்திடுதிதிரிதிகையாம்விரதந்தன்னை, யுவகையுடனனுட்டித்தாயாகையாலேயுற்றனையிப்பாக்கியமீதெவர்க்குங்கிட்டா, தவவிரதமிதன்மகிமையாலேயன்றோசங்கரனார்பிரசன்னராகவந்தார், நவவிரதசிகாமணியிங்கிதனைப்போலேநாட்டினுண்டோபலனுடனேநல்கத்தானே. [௩௰]

களபகத்தூரிகளணிந்தசுகந்தமாலைகமழ்மார்பர்சிவன்மடிமேலிருந்துகொண்டே, யளவிலானந்தமுடன்கந்துகந்தொட்டாடியாலிங்கனஞ்செய்தமர்தியென்றே, யுளமகிழ்ந்துநாய்மேனைசொன்னவாய்மையுவந்துநன்னாரமுதமெனவுண்டிருந்தா, டளமலர்ப்பெண்வாணியுமூழியங்கள்செய்யச்சார்ந்தனர்நன்முகூர்த்தம்வந்துசார்ந்ததன்றே. [௩௧]

அந்தவேளையினிறைவியிமையோர்மாதரங்கைகொடுத்தணைத்துவரவுண்ணான்மேவுஞ், சுந்தரஞ்சேரரியணையுளிடப்பாலுற்றுமெத்துமினாதத்துடன்வேதங்களார்ப்ப, முந்துமணச்சடங்கியற்றவிமயவேந்தன்முறைமையான்மகள்கையைச்சிவன்கைசேர்த்தே, தந்தனனென்றேயுதகம்வார்த்தான்முற்றுந்தந்தளித்துக்காத்தருளுந்தலைவனார்க்கே. [௩௨]

சங்கரிசங்கரன்மடிமேற்சரற்காலத்திற்றவளமுகிறடித்தெனவேதயங்கினாளா,லங்கவளைமணம்புணர்ந்தநலத்தினாலேயளவில்சுகானந்தவெள்ளமானானண்ணன், மங்கையேயெனச்சத்பவிரதர்சொன்னவார்த்தைசுகவாணியுளமகிழ்ந்துகேட்டுப், பொங்குமிந்தவிரதவுத்தியாபனந்தான்புகலுமெனமகிழ்ந்ததுவும்பொருந்தச்சொல்வார். (௩௩)

நவ்விவிழிபாயிதனைக்கேட்குந்தோறுநாடரியசுகவிருத்தியுண்டாங்கண்டா, யிவ்விரதஞ்ஷோடசந்தான்புரிந்தபின்னரிதனையுத்யாபனஞ்செய்யிற்சாங்கமாகுஞ், செவ்வியவவ்வெண்ணிரண்டாமுடிவுதன்னிற்றிரவியமுள்ளனயாவுஞ்சிறக்கக்கொண்டே, யவ்வியல்புசிவனைமுன்னஞ்சொன்னவாற்றாலதிகசிறப்பாப்பூசையமைத்துப்பின்னர். (௩௪)

பத்தினுடனிருமூன்றுமுறங்கடம்மிற்பலவகையபூபங்கணிறைத்துப்பைம்பொன், முத்தினுடன்மணிப்பணிவெண்பட்டினோடுமுலைமானார்புனையுமங்கியோடுசார்ந்தஞ், சித்தமகிழ்சிவபத்தராகுஞ்சைவசீலர்கையிற்றக்கணையினுடன்றாம்பூலம், வைத்தமைத்துப்போனகநன்மனைபசுக்கண்மற்றுளயாவையுங்கரவாதளித்தல்செய்தே. (௩௫)

இப்படியேவிரதவுத்தியாபனந்தானியற்றினினைத்தவையாவுமெய்துமென்றே, செப்பினரால்வேதமுணர்பெரியோரெல்லாந்தெரிவையரிங்கிவைபுரியிலிறந்துபோய, வொப்பருநற்கணவருமேவருவரீதேயொழியாதசெல்வங்கடருவதாகு,மைப்படிகட்கன்னியரும்புரியினல்லவாய்த்தமணவாளர்தமையடைவரன்றே. (௩௬)

இங்கிதற்குச்சந்தேகமில்லைமேலாமிவ்விரதமகிமையிப்படியேயாகுஞ், சங்கையிலாவிவற்றினொருகாதையுண்டாற்சவுபாக்யம்பெறலாகுங்கேட்டோர்க்கெல்லா,மெங்கள்பிரான்றேவசிகாமணிதான்முன்னமிசைத்துளான்றேவிக்கம்முறைமேயசொல்வான், மங்கையதுகேட்டியாற்றிகழும்பிரமாவர்த்தனமாம்பட்டினமொன்றதினோர்மன்னன். (௩௭)

அவனதுபாக்கியந்தனக்கேயளவோவில்லையத்தனார்பத்தனவனாயுளெல்லாஞ், சிவனதுபூசையிற்போதுபோக்கியுள்ளான்சித்தசுத்திபெற்றுளான்சிவநேசர்க்கே, யுவகையுடன்பூசனைதான்புரிவான்கோடியுயரிலிங்கப்பிரதிட்டையாலயங்க, ணவநவமாவமைத்தேயர்ச்சனைகள்செய்தானந்தவனம்பற்பலவுண்டாக்கினானே. (௩௮)

அரன்றனக்குப்பிரியமாம்பூசையெல்லாமாற்றுவானமரர்தொழப்பெற்றமேலோன், றிரமுறுபுத்திரர்சதம்பேருடையானன்னோர்சிவபத்தியான்மருவார்ச்செயங்கொண்டுள்ளா, ருரமுறுமங்கவர்சேனைக்களவோவில்லையுவன்றனக்குச்சுபஞ்சேரோர்பெண்ணுமுண்டால், வரமுறுமங்கவளிளமைப்பருவந்தன்னின்மனதிலன்பாய்ச்சிவலிங்கபூசைசெய்வாள்.

அன்னவட்கீன்றாய்விமலையென்னும்பேராளவளுஞ்சங்கரன்பூசைப்த்தியுள்ளாள் பன்னகபூடணன்பத்திபெறுந்தன்பெண்ணைப்பார்த்து

ரைப்பாளுனக்குநல்லபதிதான்மேவ, வென்னையாள்பரமசிவன்பூசைமா
றுதியற்றுநிசைவாசாரமியைந்துளாயான், மன்னியநித்தியவிரதத்துட
ன்விசேடமாகவேவள்ளலருச்சனைசெய்வாயே. (௬௦)

சிங்கமதியொழிந்துளதுகன்னித்திங்கட்டிரிதிகையாம்விரதந்தான்
சேர்ந்ததன்றே, துங்கமுறுசுக்கிலபக்கத்திலுற்றசோமவாரத்தினமும்வா
ய்த்ததாலோ, மங்களந்தந்திடுமிதனைமைந்தர்மாதர்மனமகிழ்ந்தேயாற்
றியுத்தியாபனந்தான், பங்கமிலாதியற்றிலளவற்றிடாதபாக்கியந்தந்திடு
ம்விரதமணியிதாமே. (௬௧)

இதனைநானியற்றுகின்றேனீயுமின்னேயெய்தருஞ்சோபனங்கள்பெ
றவநுட்டியென்றே, யுதவிடுந்தனன்னைசொலத்தனையைகேட்டேயுளம
கிழ்ச்சியுடனந்தக்காலந்தன்னிற், சிதைவிலாதவ்விரதமியற்றிவீரத்திற
த்துடனேசிவபத்தித்திடமும்பெற்ற, வதிகமாங்கணவனைத்தானடைய
வெண்ணியன்னமன்னாளன்னையுடனிருந்தாளன்றே. (௬௨)

இங்கிதற்பினவடனையேயீன்றதாதையென்சுதையாகியசுதைக்கே
யியைவதாக, மங்களமாங்கணவன்றானெங்கேயென்றுமாநிலமுற்றுந்
தேடிக்கிடைத்திடாமற், சங்கரன்றன்பத்திபெறுமணாளன் வாய்ப்பதரி
தெனவிசாரமுற்றுத்தனையையோடு, மெங்கடிருவெனும்வாலைத்திருவே
ஞாலமெங்கணுநின்றனக்கியன்றகணவற்காணேன். (௬௩)

பேருலவுமைந்துரகாரமுமேபெற்றபெருமையன்வந்திடவேண்டும
வையென்னென்றால், வீரன்சங்கரபத்தனுதாரன்லட்சு மீகரன்சுந்தர
னெனும்பேர்மேவலாகுந், தாரணியிலொருவனிவைபொருந்தத்தானே
சார்ந்திடுவ தொவ்வொருவர்க்கொவ்வொன்றுண்டா, லேருலவுமிவன்
வருமாறென்செய்வேனென்றிசைத்தனன்கேட்டேசுதைதாய்க் கிசைக்
கின்றாளால். (௬௪)

அன்னையேயென்னனீபுகலயான்செய்பரியவிரதந்தன்னாற்பெறும்பே
றாய, தென்னையேபகருதியாலென்னமேலோடுமீன்றதாய்விமலைதானியம்
புகின்றா, டன்னையேநிகர்தனையைவிரதமேன்மைசாற்றுதற்குத்தருமோ
வங்கங்களோடு, முன்னைவேதியர்மொழியின்படியேயாற்றின்முடியாதக
ருமமுமேமுடியுந்தானே. (௬௫)

அங்கமுடனியற்றிலையேற்கருமமொன்றுமாவதிலையவ்விரதந்தனக்
குமாதே, பங்கமுறாப்பலபுட்பமுதலவாயபல்பொருண்மற்றையர்க்கொ
டுசம்பாதியாமல், மங்களமாத்தன்கையாலமைத்தல்வேண்டுமேற்றிதுநித்
திரையுடனாகாரமின்றிச், சங்கையுறாதியற்றிடுதல்கடினஞ்சற்றுந்தவறா
தேநினைத்தபயன்றருங்கண்டாயே. (௬௬)

என்றுதாய் [illegible]
[illegible]யெந்தநன்றிபெறுங்குரவர்சொற்கேட்டியற்றவல்லேனனிதனற்பய

ண்பெறுவதெவ்வாறென்றே,யொன்றும்விசாரத்துடன்றன்சேடிமாரோடு
யர்கங்கைத்திரிவேணிசங்கமாகத், துன்றுபிரயாகைதனின்மூழ்கிப்பூசி
த்துப்பகாப்புடன்கண்டித்தொடையும்பூண்டாள். (௪௭)

பிரயாகேசனைப்பூசித்திருந்தாளாங்கட்பிருகுமாமுனிவன்வந்துநதி
யின்மூழ்கி, விரையார்வெண்ணீறுடனேயுருத்திராக்கமெய்க்கணிந்துகூ
விளமேமுதலவாய, வுரையாரும்பொருள்கொடுப்ரயாகையீச னுயர்பூ
சைபுரிந்துபிதக்கணமுஞ்செய்தே, தரையாரவீழ்ந்திறைஞ்சித்தோத்தி
ரங்கடான்செப்தோர்பாற்றருப்பாசனத்திருந்தான். (௪௮]

கருணையுருவாய்ச்சாந்தகுணத்தனாகிக்கடவுடிருநாமங்கள்செபங்க
ள்செய்தே, பிருகுமாமுனியுறைதல்கண்டுசென்றாள்பிரமாவர்த்தனபுர
த்திலரசன்பாவை, யுருகுமனபினாலெதிர்வீழ்ந்திறைஞ்சிநின்றேயுரைக்
கின்றாள்சிவபத்தர்க்குபர்நதமேன்மை, தருசைவமாமுனியேநினைத்த
யாவுந்தருவிரதமெவைதெரிந்துசாற்றுகென்றாள். [௪௯]

வளர்ந்துவளர்ந்தோங்குசுகமெதனாலெய்துமற்றதனையெனக்கருள்
